# என் இதய ரோஜாவே...

கலைவாணி சொக்கலிங்கம்



# என் இதய ரோஜாவே...

## கலைவாணி சொக்கலிங்கம்

அருண் பதிப்பகம்

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in

# என் இதய ரோஜாவே...

## 1

ரோஜாவே!
இரண்டே எழுத்தில் ஒரு
கவிதை உண்டா?
உண்டு!
உன் பெயரே கவிதைதானே!

"**கௌ**சல்யா சுப்ரஜா ராம பூர்வா...!" காதோரமாய்ப் பலமாக ஒலித்த சுப்ரபாதம் கேட்டுப் புரண்டு படுத்தான் ரகுராம். அறை முழுக்க வீசிய சாம்பிராணிப் புகையின் மணம் நாசியை நெருட சோம்பலாய்க் கண்களைத் திறந் தான்.

தலை குளித்து ஈர டவலைக் கொண்டையாக்கி யிருந்த பத்மாவதியின் முகம் தெரிய, "ம்மா! சவுண்டைக் கம்மி பண்ணுங்கம்மா. டிஸ்டர்பா இருக்கு!" என்றான் குப்புறப் படுத்துக் கொண்டே.

"டிஸ்டர்ப் பண்ணி உன்னோட தூக்கத்தைக் கலைக் கணும்னுதான் இவ்ளோ சவுண்ட் வெச்சிருக்கேன். எழுந்திரு கண்ணா. மணி ஆறு!" அறையின் மூலை முடுக்கு, கட்டிலின் அடியில் என்று சாம்பிராணியைக் காட்டிக் கொண்டே சொன்னாள் பத்மாவதி.

"ஏம்மா! இப்பவே எழுந்து என்ன பண்ணப் போறேன். ப்ளீஸ்மா! எய்ட் ஓ கிளாக் எழுந்தா போதும். நான் தூங் கணும்!" தலையணையை வாகாய் வைத்துக் கொண்டு சுகமாக உறங்க ஆரம்பித்த மகனைக் கண்டு, கையிலிருந்த சாம்பிராணிக் கரண்டியை மேஜைக்கடியில் வைத்து விட்டுக் கட்டிலை நெருங்கினாள் பத்மாவதி.

போர்த்தியிருந்த பெட்ஷீட்டை உருவி மடிக்க ஆரம் பித்தாள். தலையணையை எடுத்துத் தட்டிக் கட்டிலில் வைத்தாள். தூக்கம் கலையச் சிணுங்கலோடு எழுந்தான் ரகுராம்.

"என்னம்மா நீங்க, தூங்க விடாம? ஐ'ம் ஸோ டயர்ட்!" என்றவாறு கொட்டாவி விட்டுக் கொண்டே தாயை அருகே அமர்த்தி அவளது மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான்.

"ராஜா! நேற்றே அம்மா எத்தனை தரம் சொன்னேன். காலையில் எழுந்து குளித்து விட்டுக் கோயிலுக்குப் போக வேண்டும். விசேஷ பூஜைக்குச் சொல்லியிருக்கேன் என்று.



தூங்கப் போகும்போதுகூடச் சொன்னேனே! எழுந்திரும்மா. நாம எட்டு மணிக்குள்ள கோவில்ல இருக்கணும்!" - மகனை எழுப்பினார்.

"இன்னிக்கு என்னம்மா விசேஷம்? நான் எதுக்கு கோவிலுக்கெல்லாம்?" கண்களைத் திறவாமலே பேசிய மகனின் நெற்றியில் முத்தமிட்டாள் அன்னை.

"இன்னிக்கு செப்டம்பர் ஃபோர். எம் பிள்ளை இந்தப் பூமிக்கு வந்த நாள்."

சட்டெனக் கண்களைத் திறந்தான். "என்ன! இன்னிக்கு என்னோட பர்த்டேயா? அட அமாம். ஓ! மை ஸ்வீட் மம்மி. எனக்கும் சேர்த்து நீங்களே சாமிகிட்ட வேண்டிக்கங்க. எனக்கு நிறைய வொர்க் இருக்கு. அதோட நேற்றே ஃப்ரண்ட்ஸ்ங்கெல்லாம் பார்ட்டி கேட்டாங்க. நான் சீக்கிரம் போகணும்!" என்றவாறே எழுந்தான்.

"அந்தப் பேச்சே இருக்கக் கூடாது. இன்னிக்கு முழுக்க அம்மா சொன்னபடிதான் கேட்கணும். முதல்ல குளி. ட்ரெஸ் எடுத்து வெச்சிருக்கேன். போட்டுட்டு என்கூடக் கோவிலுக்கு வா. உன் பேர்லதான் பூஜைக்குச் சொல்லியிருக்கேன். நீ இல்லன்னா எப்படி? சீக்கிரம் குளிச்சிட்டு கீழே இறங்கி வா. உனக்காக யாரெல்லாம் காலையிலேயே வந்து வெயிட் பண்றாங்கன்னு பாரு!" என்றவாறே மகனைக் குளியலறைக்குள் அனுப்பினாள்.

"யாரும்மா வந்திருக்காங்க?"

"ம்... நீயே வந்து பாரு. எனக்கு நிறைய வேலை இருக்கு. ராஜா! கட்டில்ல துணி எடுத்து வெச்சிருக்கேன். அதைத்தான் போட்டுக்கணும். சூட், கோட் எதுவும் போட்டுட்டு

வந்து நிற்காதே!" அன்னையின் கண்டிப்பான உத்தரவில் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

பட்டு வேஷ்டியும் சட்டையும் புத்தம் புதிதாய் வீற்றிருந்தன.

"ம்மா! என்னது இது? எனக்கென்ன கல்யாணமா நடக்கப் போகுது. பட்டு வேட்டி எடுத்து வெச்சிருக்கீங்க. இதெல்லாம் சரிப்படாது."

"ஏன்டா சரிப்படாது. கோவிலுக்குப் போகும்போது வேஷ்டி சட்டை போட்டுக்கிட்டாத்தான் மங்களகரமா இருக்கும். லட்சணமாகவும் இருக்கும். பேசாம இதையே கட்டிட்டு வா!"

"ஏம்மா! இதைக் கட்டிட்டு எப்படிம்மா நடக்க முடியும்? கால் தடுக்கும்மா!"

"டேய்! இப்பவே கட்டிப் பழகுடா. அப்பத்தான் கல்யாணத்தப்போ சிரமம் இல்லாம நடக்க முடியும்."

"அதெல்லாம் அப்போ பார்த்துக்கலாம்மா. இன்னிக்கு பேண்ட், ஷர்ட் போட்டுக்கிறேன். பிளீஸ்மா!"

"ம்ஹூம். இதைத்தான் கட்டிக்கிற! வேறு எதுவும் போடக் கூடாது. உன்னை நம்ப முடியாது!" என்றவள் சுவரோடு அமைந்திருந்த கப்போர்டைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டவாறே அறையை விட்டு வெளியேறினாள்.

சலிப்பாய் முனகிக் கொண்டே குளிக்கத் தொடங்கினான். புன்னகையோடு படியிறங்கிக் கீழே வந்தவளை ஹாலின் சோபாவில் அமர்ந்திருந்த தணிகாசலமும், இருப்புக் கொள்ளாமல் நகத்தைக் கடித்தபடி உலவிக் கொண்டிருந்த கீர்த்தனாவும் எதிர்கொண்டனர்.



வேகமாகச் சென்று பத்மாவதியை நிறுத்தினாள் கீர்த்தனா.

"அத்தை! ராம் எழுந்தாச்சா. விஷ் பண்ணப் போகட்டுமா?" ஆவலாய்க் கேட்ட அண்ணன் மகளைப் பார்த்துச் சிரித்தாள் பத்மாவதி.

"கீர்த்திம்மா! என்ன அவசரம் உனக்கு. இப்பத்தான் அவனை எழுப்பிக் குளிக்க அனுப்பிட்டு வந்தேன். குளிச்சிட்டு வர எப்படியும் அரை மணி நேரமாகும். அதுவரை பொறுமையா இரும்மா. அத்தை உங்க எல்லாருக்கும் காபி எடுத்துட்டு வர்றேன். சரியா?"

"அட இரும்மா! முதல்ல ராம் வந்துடட்டும். எல்லாருமா சேர்ந்து இனிப்பே சாப்பிடலாம். ரெண்டு கிலோ பால்கோவா வாங்கிட்டு வந்திருக்கேன். சாயங்காலம் வெட்டுறதுக்குப் பெரிய கேக் ஆர்டர் பண்ணியிருக்கேன். இன்னிக்கு அவனை எங்கும் வெளியே அனுப்பக் கூடாது."

"அடப் போங்கண்ணா! அவன் இப்பவே வெளியே கிளம்பணும்னு சொன்னான். நான்தான் எப்படியும் கோவிலுக்கு வந்தே ஆகணும்னு சொல்லி வச்சிருக்கேன். அவனாவது வீட்ல நாள் முழுக்க இருக்கிறதாவது!"

"இருப்பான். நான் இருக்க வைப்பேன். அவன் வெளியே சுத்தவா நான் அதிகாலையிலே எழுந்து வந்து காத்துக் கிடக்கிறேன். வரட்டும் அவன்!"

"கீத்தும்மா. மாப்பிள்ளை கிட்ட கோபமா எதுவும் பேசிடாதே. இன்னிக்கு அவன் பொறந்த நாளாச்சே!"

"பின்னே என்னப்பா? எல்லா வருஷமும் நான்தான் முதல்ல விஷ் பண்ணணும்னு வந்து காத்துக் கிடப்பேன்.

அது அவனுக்கும் தெரியும். ஆனாலும் என்னிக்காவது காலையிலேயே எழுந்து வர்றானா? சோம்பேறி. நான் போய் எழுப்பலாம்னா அத்தை அலவ் பண்ணமாட்டாங்க!" - படபடவெனப் பொரிந்தாள் கீர்த்தனா.

சோஃபாவில் அமர்ந்து யாருடைய பேச்சிலும் குறுக்கிடாமல் அமைதியாய் அமர்ந்திருந்து நியூஸ் பேப்பரை வாசித்துக் கொண்டிருந்த கோசல்ராம் மெல்ல நிமிர்ந்து தன் வருங்கால மருமகளைப் பார்த்தார்.

காலையில் எழுந்து சிரமப்பட்டுச் செய்த முக அலங்காரமும் உடை அலங்காரமும் கலைந்து விடுமுன் உரியவன் பார்க்க வேண்டுமே என்ற அவசரமும் படபடப்பும் அவளிடம் இருந்தது நன்றாகவே தெரிந்தது. தலை, கண், புருவம், கன்னம், உதடு, முகம் என ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான வண்ணத்தைப் பூசியிருந்த விதமே எத்தனை மணி நேரத்தை அலங்காரத்திற்காகச் செலவழித்திருப்பாள் என்பது புரிய, ஒரு மௌனச் சிரிப்புடன் தன் முகத்தைச் செய்தித்தாளால் மறைத்துக் கொண்டார்.

"எல்லாம் இன்னும் ரெண்டு மாசம்தான் கீர்த்திம்மா! அப்புறம் அது உங்க அறை. நான் என்ன சொல்வேன்? நீயாச்சு... அவனாச்சு!" பத்மாவதி சொன்னதும் தணிகாசலம் உற்சாகமானார்.

"ஈஸ்வரமூர்த்தி என்னம்மா சொன்னார். ராமோட கிரகம் எல்லாம் முடிஞ்சு போச்சுல்ல. இனிமே தைரியமா கல்யாண ஏற்பாட்டைப் பண்ணிடலாமில்ல!"

"ஆமாண்ணா! முப்பது வயசோட அவனுக்கு உள்ள சனி தசை மாறிடுச்சாம். இன்னிக்கு முப்பத்தோரு வயசு



பொறக்குதில்ல. இனிமே எல்லாம் நல்லபடியா நடக்குமாம். இதுவரை உள்ள கெட்ட நேரமெல்லாம் நேத்தோட போயிடுமாம். அதனால இன்னிக்குக் குளித்துவிட்டுப் புத்தாடை அணிந்து அம்மன் கோவிலுக்குப் போய் இவன் பேர்ல அர்ச்சனை பண்ணிட்டு ஒன்பது சுமங்கலிகளுக்குப் புடவை, வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம் வெச்சு அவன் கையால கொடுக்கணுமாம்."

"வேற என்ன சொன்னார்?"

"இப்படிக் கொடுத்தா சீக்கிரமே கல்யாணம் கூடிடும்னு சொன்னார். இந்த வருஷமே தாராளமா கல்யாணத்தை வெச்சுடலாம்னு சொன்னார்."

தணிகாசலம் முகம் பூரிக்க நிம்மதியோடு சிரித்தார். "அவர் யாரு? ஜோதிட திலகமாச்சே! அவர் சொன்னா சரியாத்தான் இருக்கும்."

"அத்தை! கோவில்ல கொடுக்க புடவை எல்லாம் வாங்கியாச்சா?"

"ம்... நேத்தே நானும் ஹேமாவும் போய் வாங்கிட்டு வந்துட்டோம். வெறும் புடவை மட்டும் கொடுக்க வேண்டாமேன்னு பூ, பழம், மஞ்சள், குங்குமம், மஞ்சள் கயிறு எல்லாமே வாங்கிட்டு வந்திட்டோம். அதையெல்லாம் வெச்சுக் கொடுக்க ஒன்பது சில்வர் தட்டும் வாங்கிட்டோம். அப்படியே கொடுத்திடலாமே!"

"புடவை எவ்வளவுக்கு வாங்கினீங்க அத்தை?"

"எல்லாமே ஒரே விலைதாம்மா! ரெண்டாயிரத்து நூறு. ஒரே டிஸைன். கலர்தான் வேற வேற...!"

"அவ்வளவுக்கு ஏன் அத்தே வாங்கினீங்க. ஐந்நூறு ரூபா புடவை போதாதா?"

"இல்லம்மா! தானமா கொடுக்கிறதைச் சிறப்பா பண்ணிடணும். வாங்குறவங்க மனசும் நிறையணுமே!" சொல்லிக் கொண்டே மாடியைப் பார்த்தவள் அசந்து போனாள்.

பட்டு வேஷ்டியில் ரகுராம் மணமகன் போலவே காட்சியளித்தான். கால்களில் இடறிய வேஷ்டியை லேசாய்த் தூக்கிப் பிடித்துக் கொண்டு கவனமாய்ப் படியிறங்கி வந்தான் ரகுராம்.

கையோடு வைத்திருந்த பொக்கேயோடு கீர்த்தனா அவனை நெருங்க, தணிகாசலம் ஸ்வீட் பாக்ஸோடு வர, யாரையும் கவனியாமல் நேராகச் சென்று தந்தையின் பாதம் தொட்டு வணங்கினான்.

"அடடே! குளிச்சிட்டு வந்திட்டியாப்பா. நல்லா இரு. சந்தோஷமா இரு." பேப்பரைக் குறுமேசை மீது வைத்து விட்டு மகனைப் பற்றி எழுப்பினார் கோசல்ராம்.

சட்டைப் பையில் கைவிட்டு வாட்ச் எடுத்து மகனின் கைகளில் கட்டி விட்டார்.

"தேங்க்யூ டாடி! மாம்! விஷ் பண்ணுங்க!" அன்னையின் காலில் விழுந்தான்.

"உன் மனசு போல வாழ்க்கை அமையட்டும் கண்ணா. அம்மாவுக்குச் சீக்கிரமா பேரக் குழந்தைகளைப் பெத்துக் கொடு."

"இந்த அம்மாவுக்கு வேற நினைப்பே கிடையாது. அதான் நீங்க கொஞ்சி விளையாட ஹேமா ஒரு குட்டி



ரோஜாப்பூவைப் பெத்துக் கொடுத்திருக்காளே... உங்க ஆசை தீரக் கொஞ்ச வேண்டியதுதானே!"

"அதெப்படிடா! இன்னும் கொஞ்ச நாள்ல அவளை மாப்பிள்ளை வந்து கூட்டிட்டுப் போயிடுவாரே... அதுவரை தானே கொஞ்ச முடியும்!"

"ஆமா! ஹேமா எங்கே? குட்டிப்பய என்ன பண்றான்?"

"ராம்! இங்கே ரெண்டு உருவம் நிக்கிறதே... உன் கண்ல படலையா? உன் தங்கச்சியை மட்டும் தேடுறே?" கூடுமானவரை சிரித்தவாறே கேட்டாள் கீர்த்தனா.

அப்போதுதான் பார்த்தது போல், "ஓ கீர்த்தனா! ஸாரி. நான் கவனிக்கவே இல்லை. மாமா! எப்போ வந்தீங்க?" என்றான்.

"நாங்க வந்து ரெண்டு மணி நேரமாச்சுப்பா. பிறந்த நாள் வாழ்த்துக்கள்!" என்றவாறு கையிலிருந்த இனிப்பை எடுத்து ஊட்டினார்.

பூங்கொத்துக் கொடுத்து விட்டு அவன் கைகளைக் குலுக்கி வாழ்த்துச் சொன்னாள் கீர்த்தனா.

"இனிய பிறந்த நாள் வாழ்த்து அண்ணா!" என்றவாறு கையில் குழந்தையோடு வந்தாள் ஹேமா.

"தேங்க்யூடா! என் மருமகன் என்ன சொல்றான்?" என ஆவலாகக் குழந்தையை வாங்கினான்.

பிறந்து இரண்டே மாதமான ஆண் குழந்தை கொழுகொழுவெனப் பஞ்சுப் பொதிபோல் இருந்தது. வெண் பட்டுப் போல் இருந்த மிருதுவான கன்னத்தை வருடி, முத்தமிட்டான் ரகுராம்.

"டேய் குட்டிப் பையா! மாமாவுக்கு ஹேப்பி பர்த்டே சொல்லு. நம்ம கிஃப்ட் கொடுக்கலாமா?" என்றவாறே குழந்தையின் பிஞ்சுக் கையைப் பற்றி ரகுவின் கைகளைக் குலுக்க வைத்தாள்.

அந்த மென்மையில் குளிர்ச்சியில் சிலிர்த்துப் போனான். குழந்தையின் கைகளில் முத்தமிட்டான்.

"அண்ணா! இந்தா என்னோட ஸ்மால் கிஃப்ட்!" என்றவாறு அதைக் கையில் கொடுத்தாள் ஹேமா.

இடது கையால் குழந்தையை அணைத்துக் கொண்டு, வலது கையால் வாங்கிப் பார்த்தவன் பிரமித்துப் போனான். கண்ணாடியால் செய்யப்பட்ட சிவப்பு ரோஜா. அதனுள் திரவம் போல் அசைய அதில் இரு வெண்புறாக்கள், ஒன்றையொன்று கொஞ்சியபடி. புறாக்களின் அருகே ஒரு சிறிய வெண்மை நிற இதயம். அதில் ரகு என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது.

ஆர்வமாய் விழிகளை விரித்துத் தங்கையை நோக்கினான்.

"எக்ஸலெண்ட்! ரியலி சூப்பர்ப். எங்கே வாங்கினே ஹேமா? அற்புதமாய் இருக்கு!"

பத்மாவதி சலித்துக் கொண்டாள். "அதையேம்ப்பா கேட்கிறே. ஜவுளிக் கடையில கால்மணி நேரத்துல துணி எடுத்து முடிச்சிட்டோம். ஆனா இதை வாங்க மாம்பலத்தைப் பத்து முறை சுத்தி வந்திருக்கோம். ஒரு கடையைக் கூட விடல்ல. கடைசியா இதை வாங்கினா! விலை என்ன தெரியுமா? நாலாயிரம். இதை வாங்கினதுக்கு உனக்கு ஒரு மோதிரம் வாங்கியிருக்கலாமுன்னு சொன்னேன்."



"ஏம்மா! அண்ணன் கிட்ட என்ன மோதிரமா இல்லை. அண்ணனுக்கு ரோஸ்னா ரொம்பப் பிடிக்குமே! அதான் இதை வாங்கினேன். அண்ணா! உள்ளே இருக்கிற புறாவும் ஹார்ட்டும் ஒரிஜினல் பளிங்குக் கற்கள். எப்படிண்ணா இருக்கு?"

"வெரி நைஸ்! வெரி க்யூட்! குழந்தையைப் பிடி. நான் போய் என் ரூம்ல வெச்சிட்டு வர்றேன்," என்றவாறு தங்கையிடம் குழந்தையைக் கொடுத்து விட்டுக் கண்ணாடி ரோஜாவுடன் மாடியேறியவனைக் கொஞ்சம் கடுப்பாய்ப் பார்த்தாள் கீர்த்தனா.

அவனுக்கு ரோஜாப்பூவைப் பிடிக்கும் என்றுதான் இருப்பதிலேயே பெரிதான கடைக்குச் சென்று பலவகையான ரோஜாக்களைப் பல நிறங்களில் கேட்டு இந்தப் பூச்செண்டைத் தயாரிக்கச் சொல்லி வாங்கி வந்திருந்தாள்.

ஆனால் அதை ஒரு கணமாவது ஏறிட்டுப் பார்த்து ரசித்தானா? தங்கை ஏதோ ஒரு கண்ணாடி ரோஜாவைத் தந்துவிட்டாள் என்று அதைப் பத்திரப்படுத்த எத்தனை அக்கறையாய் ஓடுகிறான். சோபாவின் மீதிருந்த பூச்செண்டை வெறித்தாள்.

புத்தம் புதியதாய் வெள்ளையும் மஞ்சளுமாய் ஆரஞ்சும் ரோஜா நிறமும் இரத்தச் சிவப்பும் வெள்ளையில் சிவப்பு நிற அவுட்லைன் ரோஜாக்களும் மொத்தம் நூறு ரோஜாக்கள் கண்ணைப் பறித்தன. ஆனால் கேட்பாரற்றுக் கிடந்தன.

மகளின் முகம் போனதைப் பார்த்துப் பிறர் அறியா வண்ணம் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

"ரகு! மணி ஏழாகுது. வாப்பா கோவிலுக்குப் போகலாம்!" பத்மாவதி குரல் கொடுத்ததும் கீழே இறங்கி வந்தான்.

"அண்ணா! உனக்கு இந்த ட்ரெஸ் சூப்பரா இருக்கு. அம்மா வாங்கும்போதுகூடத் திட்டினேன். ஆனா நிஜமாவே உனக்கு அழகா இருக்கு."

"கிண்டல் பண்ணாதேம்மா! இதைக் கட்டிக் கொண்டு என்னால் நடக்க முடியலை. வரவர அம்மாவோட பிடிவாதம் அதிகமாகிட்டே போகுது!" என்றான் வேட்டியை இறுகக் கட்டிக் கொண்டே.

"தேவைப்பட்டா பிடிவாதம் பிடிக்கலாம்... தப்பில்லை!" என்றாள் கீர்த்தனா.

"அம்மா! காபி கூடத் தரமாட்டீங்களா? பசிக்குது."

"இதோப்பா! கொண்டு வந்திட்டேன்!" என்றவாறு அனைவருக்கும் காபி கொடுத்தாள் பத்மாவதி.

"ம்மா! கோவில் எவ்ளோ தூரம்? என்னால ரொம்ப நேரம் இருக்க முடியாது. சீக்கிரம் வந்துட்டு நான் ஆஃபிஸ் கிளம்பணும்."

"மொதல்ல கோவிலுக்குப் போகலாம். மற்றதெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். எல்லோரும் கிளம்புங்க!"

"அம்மா! புடவை, பூ எல்லாம் எடுத்து வெச்சாச்சா?" என்றாள் ஹேமா.

"எல்லாம் கார்ல இருக்கும்மா. நீ குழந்தையை டவல் வைத்துப் போர்த்திக்க. என்னங்க! நீங்க என்ன நின்னுட்டே இருக்கீங்க. கிளம்புங்க!"



"நான் எப்பவோ ரெடி! நீதான் இன்னும் தலையைக் கூட உலர்த்தாம இருக்கே!" கோசல்ராம் சொன்ன பிறகே உணர்வுக்கு வந்த பத்மாவதி, பதறி அவசரமாகத் தலையைத் துவட்டி உதறி நுனியில் முடிச்சிட்டு, துளி பூச்சூடிக் கொண்டு ஆயத்தமானாள்.

"அத்தை! நானும் ரகுவும் என்னோட கார்ல வந்திடுறோம்!" என்ற கீர்த்தனாவை ஆச்சர்யமாய்ப் பார்த்தான் ரகுராம்.

"நீ கோவிலுக்கு வர்றியா?"

"சாதாரணமா நான் கோவிலுக்குப் போறதில்லைதான். ஆனா இன்னிக்கு உனக்கு பர்த்டே ஆச்சே. அதனால வர்றேன்."

"இந்த டிரெஸ்ஸோடவா வர்றே?" லேசாய் முகம் சுழித்தான்.

"ஏன் இந்த டிரெஸ்ஸுக்கு என்ன?" தன்னையே குனிந்து பார்த்தாள்.

முழுவதும் கற்கள் பதித்த சுடிதார். கைகள் இல்லாமல் கொஞ்சம் இறுக்கமாகத் தைக்கப்பட்டிருந்தது. கழுத்தின் டிசைன்கள் மறைக்கப்பட்டு விடுமே என்பதற்காகத் துப்பட்டா போடாமலே வந்திருந்தாள். மிக மெல்லிய துணியினாலான பேண்ட் அவளது வடிவான கால்களை எடுத்துக் காட்டியது.

வெறுமையான கைகளில் முழங்கைக்கு மேலே கல் பதித்த ஒற்றை வங்கி. அதே கல் பதித்த மோதிரம். கம்மல், கழுத்தை ஒட்டிய கழுத்தணி. பார்க்கும் யாரையுமே மீண்டும் பார்க்கத் தூண்டும் அலங்காரம்தானே! இவன் மட்டும் ஏன் முகம் சுழிக்கிறான். மீண்டும் கேட்டாள் கீர்த்தனா.

"இந்த டிரெஸ் நல்லா இல்லையா ராம்? அழகாத்தானே இருக்கு."

"அழகா இருக்கிறதுக்கு மட்டும் டிரெஸ் போடுறதில்லை. நாம போடுற டிரெஸ் அடுத்தவங்களோட கவனத்தைத் திசை திருப்பக் கூடாது. அதுவும் நாம இப்போ போறது கோவிலுக்கு. நீ இப்படி வந்தா யாரும் சாமி கும்பிட மாட்டாங்க. உன்னைத்தான் பார்ப்பாங்க."

"யா! அதுதான் எனக்கு வேணும். எந்த இடத்திலேயும் நாம தனித்துத் தெரியணும் ராம். அப்பத்தானே நாம பிரபலமாவோம்!" அவள் அலட்சியமாகவே சொல்ல, பற்களைக் கடித்தவாறே அன்னையை நோக்கினான்.

"ஏம்மா! உங்க அண்ணன் பெண்ணிற்கு இதையெல்லாம் சொல்ல மாட்டீர்களா? என்னை மட்டும் சொன்னீர்களே மங்களம் அது... இதென்று...!"

பத்மாவதி அவஸ்தையாய் விழித்தாள். அவளுக்கும் இது பிடிக்கவில்லைதான். ஆனால் இதைக் கீர்த்தனாவிடம் சொல்ல முடியுமா! அப்படியே சொன்னாலும் அவள் கேட்பாளா? வீம்பிற்காகவேனும் இப்படியேதான் வருவாள். அதற்காகத்தான் எதுவும் சொல்லாமல் தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டாள் பத்மாவதி.

"அத்தையிடம் ஏன் பாய்கிறாய் ராம்! உடை என்பது அவரவர் விருப்பத்திற்குப் போட வேண்டும். அடுத்தவர் விருப்பத்திற்காகப் போட முடியாது. நீ இப்படி லேட் பண்ணினால் அங்கு பூஜையே முடிந்துவிடும். வா சீக்கிரம்!"

"அண்ணா! நான் ரெடி. காருக்குப் போகலாமா?" என்றவாறு வந்த ஹேமாவைப் பார்த்தான்.



இளம் ரோஜா நிறப் பட்டுப் புடவையும் அதற்குத் தகுந்தாற்போல் அளவான நகைகளும் தலையைப் பின்னலிட்டு மல்லிகையும் சூடியிருந்தாள். நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமம் பளீரிட்டது. குழந்தையை டவலால் பொத்திப் பாதுகாப்பாய் மார்போடு அணைத்தபடி நின்ற தங்கையைப் பார்த்து மனநிறைவோடு புன்னகைத்தான்.

"போலாம் டாட். கம்... கம்...!" என்றவாறு ஹெளியேறி கார் கதவைத் திறந்து விட்டான். முன் இருக்கையில் ஹேமா குழந்தையோடு அமர்ந்து கொள்ள, கோசல்ராம் பின் இருக்கையில் ஏறிக் கொண்டார்.

"அம்மா! நீங்க மாமாவோட வந்திடுங்க. நாங்க கிளம்புறோம்!" என்றவாறு அவன் காரைக் கிளப்ப, கீர்த்தனா அவமானத்தில் முகம் சிவந்து போனாள்.

## 2

ரோஜாவே!
நீ மலர்ந்து என்னை முகம் மலரச் செய்கிறாய்!
மணம் வீசி என் மனதை மயக்குகிறாய்!
உன் இதழ் விரித்து என்னைப்
புன்னகை சிந்த வைக்கிறாய்!

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் கோவிலில் கூட்டம் அதிகமாகவே இருந்தது. முத்துமாரியம்மன் சிரித்த முகத்தோடு அருள் பாலிக்க, அனைவரும் மனமுருகி வேண்டிக் கொண்டனர். கீர்த்தனாவின் முகம் மட்டும் கடுகடுவென்றிருக்க, ரகுராம் அவளைத் திரும்பியும் பாராமல் அம்பாளைத் தரிசித்துக் கொண்டிருந்தான்.

தந்தையை ஓரமாக நகர்த்திக் கொண்டு போனாள் கீர்த்தனா. "அப்பா! அவன் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கான். என்னை ரொம்ப இன்ஸல்ட் பண்றான். இவனைக் கட்டிட்டு எப்படி வாழ முடியும்?"

"அட என்னம்மா நீ...! கோவில்ல வந்து என்ன பேசுறே நீ. உன் மேலயும் தப்பு இருக்கு. காலையிலயே சொன்னேன். நல்லதா ஒரு பட்டுப் புடவை கட்டிக்கன்னு... கேட்டியா! உன் விருப்பத்துக்கு இப்படித் துணி போட்டுட்டு வந்தா?"

"அவன் விருப்பத்துக்கெல்லாம் என்னால மாற முடியாது."

"மாறித்தாம்மா ஆகணும். நீ மாறாம அவன் மாற மாட்டான். அவன் எப்பவுமே இப்படித்தான்னு உனக்குத் தெரியாதா? ஹேமா உன்னைவிடச் சின்னப் பொண்ணு. ஆனா எப்படி லட்சுமி கடாட்சமா வந்து நிக்கிறா. உன் துணியைப் பார்த்துட்டு நிறையப் பொண்ணுங்க முகத்தைச் சுழிக்கிறாங்க!"

"எல்லாம் சுத்தப் பத்தாம் பசலிங்க. அதுங்களுக்காக நான் இதைப் போடாம இருக்க முடியுமா? இது விலை என்ன தெரியுமா?"

"சரி... சரி... ஐயர் வந்துட்டாரு... வா! மத்ததை அப்புறம் பேசிக்கலாம்!" என்றவர் மகளை அழைத்துக் கொண்டு ரகுராமின் அருகே நிறுத்தினார். ஐயர் சில மந்திரங்களைச் சொல்லியவாறே அர்ச்சனை செய்து பெரிய ரோஜாப்பூ மாலையை அவன் கழுத்தில் போட்டு விட்டார்.



அர்ச்சனைத் தாம்பாளத்தை அவன் கையில் கொடுத்து விட்டு, "பிராகாரத்தை மூணு முறை சுத்திண்டு வாங்கோ...!" என்றார்.

"வாப்பா!" என அம்மா அழைக்க, அனைவரும் குடும்பமாய்க் கோவில் பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டு வந்தனர். முதல் சுற்று முடிந்ததும் கீர்த்தனாவும் தணிகாசலமும் நின்றுவிட, அண்ணனுடன் இணைந்து ஹேமா கையில் குழந்தையோடு முன்னே செல்ல, தாயும் தந்தையும் பின்னால் வந்தனர்.

கோவிலின் வலப்புறமாக நாகராஜா கோவில் அமைந்திருந்தது. அதில் வரிசையாய் நெய்யூற்றித் தீபம் ஏற்றியிருந்தனர். அதோடு முட்டையும் பாலும் ஏராளமான கிண்ணங்களில் ஊற்றி வைக்கப்பட்டிருந்தது. முட்டைக்காக வந்த காக்கா அதில் ஒரு கிண்ணத்தைத் தட்டிவிட அதில் இருந்த பால் வழிந்தோடிப் பாதையை அடைந்தது.

கையில் குழந்தையோடு வந்த ஹேமா அதைக் கவனிக்கத் தவறிக் காலை வைத்ததும் வழுக்கியது. எதிர் பாராத இந்தச் சறுக்கலில் பதறிச் சுதாரிக்கும் முன் கால் பிசகிவிட, "அம்மா... ஆ...ஆ...!" என்ற வீறிடலுடன் தரையில் விழுந்தாள் ஹேமா.

கையிலிருந்த குழந்தை துள்ளித் தரையில் விழும் முன் வளையல்கள் அணிந்த இரு மென்கரங்கள் குழந்தையை ஏந்திக் கொண்டன. கூடவே வந்த ரகு, பின்னால் வந்த பெற்றவர்கள் பதறும் முன் ஹேமாவைப் பற்றி எழுப்பினாள் அந்தப் பெண்.

"பார்த்துங்க! அடிபட்டதா? யாருக்குமே பொறுப்பு கிடையாது. குருக்கள் எத்தனையோ முறை சொல்வார்.

இந்த மாதிரி வழியில பாலை ஊற்றி வைக்காதீங்கன்னு. யாரும் கேட்பதில்லை. அடி ஒண்ணும் படலியே!" ஏதோ தனக்கே அடிபட்டாற்போல் அந்தப் பெண் பதறிக் கேட்டாள்.

ஹேமா அதற்குள் தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

"பரவாயில்லைங்க. அடிபடலை! ரொம்ப தேங்க்ஸ். நான் எனக்கு அடிபட்டதுக்காகக் கத்தலை. எங்கே குழந்தை கீழே விழுந்திடுமோன்னுதான் பயந்துட்டேன். ரொம்ப நன்றிங்க!" என நன்றியோடு குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"பார்த்துப் போங்க. குழந்தை பத்திரம்!" என்றாள் அந்தப் பெண் வெகு அக்கறையாய்.

அதற்குள் பத்மாவதியும் கோசல்ராமும் தங்கள் நன்றியைத் தெரிவிக்க, அவள் கூச்சமாய்த் தலை யசைத்தாள்.

ரகுராம் கண்கள் அந்தப் பெண்ணின் முகத்தை விட்டு நகரவில்லை. எத்தனை எளிமையான அழகு. இந்தப் பால் முகத்தில் எத்தனை கனிவு. மை தீட்டப்படாமலேயே கருமையாய் நீண்ட விழிகள். தலை குளித்து ஈரம் சொட்ட அதை முடிச்சிட்டு, அதில் முல்லைச் சரத்தைச் செருகி யிருந்தாள்.

பிறை நெற்றியில் சின்னதாய்ப் பொட்டிட்டுச் சந்தனமும் குங்குமமும் இட்டிருக்க, அது அவள் அழகை இன்னும் கூட்டியது. கழுத்தில் மெல்லியதாய் ஒற்றைச் செயின். கைகளில் கண்ணாடி வளையல்கள். சிவப்பு நிற லேசான ஜரிகையுடன் கூடிய பட்டுப் புடவை.



அதை நேர்த்தியாகக் கட்டியிருந்த விதமே அவள் மீது மரியாதையை ஏற்படுத்தியது.

பிடிவாதமாய்த் தன் கண்களைத் திருப்பிக் கொண்டு அவளிடம் நன்றி சொல்ல அவன் வாயைத் திறந்தபோது அந்தப் பெண் விலகிச் சென்றாள். உடன் வந்த மற்றொரு பெண் கையில் பூக்கூடை வைத்திருக்க, அதை வாங்கிக் கொண்டு அவர்கள் சென்று மறைய ஏமாற்றமாய் அவள் சென்ற திசையைப் பார்த்தான்.

"அம்மாடி! குழந்தையை எங்கிட்ட கொடு. நல்ல வேளை! அந்தப் பொண்ணு வந்தா... குழந்தை கீழே விழுந்திருந்தா என்ன ஆகியிருக்கும்? அந்த அம்பாள்தான் இந்தப் பொண்ணு உருவத்தில வந்து காப்பாத்தியிருக்கா. குழந்தையைக் கொடு!" என்றவாறு பத்மாவதி பேரனை வாங்கிக் கொண்டாள்.

"நானே ஒரு நிமிஷம் பதறிட்டேன். எப்படியோ புள்ளைக்கு ஒன்னும் ஆகிடல்லை. சரி வாங்க!" என்றார் கோசல்ராம்.

புடவையை நீவி விட்டுக் கொண்டே, "அண்ணா! போலாமா?" எனக் கேட்ட தங்கை அண்ணன் அசையாமல் நிற்கக் கண்டு அவனைப் பற்றி அசைத்தாள்.

"அண்ணா! போலாமா... என்ன கனவா?"

"ம்... ம்... சேச்சே! உனக்கு ஒன்னும் அடிபடலியேடா?"

"இல்லண்ணா! எனக்கு ஒண்ணுமில்லை. வா போலாம்!"

"ம்...!" என்ற ஒற்றைச் சொல்லோடு நடக்க ஆரம் பித்தாலும் கண்கள் அந்தப் பெண்ணைத் தேடின. கற்பக

விநாயகர் முன்பு, சனீஸ்வர பகவான் சந்நிதி முன்பு, முருகன் சந்நிதி முன்பு எனச் சுற்றிச் சுற்றி அலைந்த பார்வை ஏமாற்றமாய்த் திரும்பியது.

"அண்ணா! மூணுவாட்டி சுத்தியாச்சு. வா உள்ளே போலாம். தட்டை என்னிடம் தா!" என வாங்கிக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்த ஹேமாவைப் பின் தொடர்ந்தவனின் கண்கள் ஆனந்தமாய் விரிந்தன.

கோவிலில் கூட்டம் வெகுவாய்க் குறைந்து போயிருக்க, அந்தப் பெண் கர்ப்பகிரஹத்தின் முன் நின்று இருகரம் கூப்பி வணங்கிக் கொண்டிருந்தாள். கழுத்தில் போடப்பட்டிருந்த ரோஜா மாலை உதிர, சற்று வேகமாகச் சென்று அவள் முன்னே நின்றான் ரகுராம்.

ஒரு நிமிடம்... இரண்டு நிமிடம்... அவள் கண்களைத் திறக்கவேயில்லை. உலகை மறந்து சுற்றுப்புறம் மறந்து எதையோ வேண்டிக் கொண்டிருந்தாள். உதடு மட்டும் லேசாக முணுமுணுக்கவில்லை என்றால் அவளும் ஒரு சிலையாகவே தோன்றியிருப்பாள். மூடிய இமைகள் லேசாய்க் கசிந்தன. பார்த்துக் கொண்டே நின்றவனின் மனம் பதறியது.

"வந்துட்டேளா! பூஜை எல்லாம் முடிஞ்சது. இனிமே நீங்க பெண்களுக்குத் தானம் பண்ணுங்கோ!" என்றவாறு பிரசாதம் கொடுத்தார். அனைவரும் வாங்கிக் கொள்ள, அவள் கண்களைத் திறந்தாள். கசிந்திருந்த இமைகளை நாசூக்காக ஒற்றி எடுத்தவாறே பிரசாதம் வாங்கிக் கொண்டாள்.

"அக்கா வா! சனீஸ்வரருக்குத் தீபம் ஏற்றிவிட்டு வருவோம்!" உடன் வந்த பெண் அழைக்க, அந்தப் பெண்



அமைதியாய் நகர்ந்து சென்றாள். தன்னை ஒரு முறை யாவது திரும்பிப் பார்க்க மாட்டாளா என ஏக்கமாய் அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றான் ரகுராம்.

"அண்ணா! பார்த்தது போதும். கீர்த்தனாவைப் பார். பார்வையாலே உன்னை எரிச்சிடுவா போலிருக்கு!" அண்ணனிடம் மெதுவாய்க் கிசுகிசுத்தாள்.

சட்டைப் பையில் இருந்து செல்போன் கிணுகிணுத்தது. எடுத்துப் பார்த்தான்.

"ஹேமா! உன் ஹஸ்பன்ட்தான் போன்ல! பேசுறியா?"

"நீ பேசுண்ணா. உன்னை விஷ் பண்ணத்தான் போன் பண்ணியிருப்பார். நான் ஈவ்னிங் பேசிக்கிறேன்."

"ஓ.கே.!" என்றவாறு போனை ஆன் பண்ணிக் காதில் வைத்தான்.

"ஹலோ ஆனந்த்! எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன்டா. என்ன புதுசா மரியாதையெல்லாம் கொடுக்கிறே!"

"அப் போப்பா. நீ இந்த வீட்டு மருமகனாம். உன்னை டா போட்டுப் பேசக் கூடாதாம். அம்மா ஆர்டர் போட்டிருக்காங்க!"

"டேய்! மருமகனா வர்றதுக்கு முன்னாடியே நான் உன் நண்பன். அதனால எப்பவும் போலப் பேசு. மரியாதை கொடுத்து என்னை ஒதுக்கிடாதே!"

"தேங்க்ஸ்டா! எனக்கே கஷ்டமாத்தான் இருந்தது. சரி... டெல்லி எப்படி இருக்கு? குளிருதா இல்லை வெயிலா?"

"அதெல்லாம் இருக்கட்டும். மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே!"

"தேங்க்யூடா. தேங்க்யூ ஸோ மச்!"

"என்னடா! பஜார்ல நிக்கிறியா? ஒரே சவுண்டா இருக்கே! சரியா கேட்கலே?"

"இல்லைடா! கோவில்ல நிக்கிறேன். ஒன் செகண்ட். வெளியில வர்றேன்!" என்றவாறு கோவிலை விட்டு நகர்ந்து பெரிதாய் இருந்த அரச மரத்தடியில் வந்து நின்றான்.

"இப்பக் கேட்குதாடா? வெளியே வந்திட்டேன்."

"ம்... கேக்குது. அப்புறம் பர்த்டே எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு. என்ன அதிசயமா கோவிலுக்கெல்லாம் போயிருக்கே!"

"அதையேன்டா கேட்கிறே? அம்மாவுக்குத்தான் வேற வேலையே கிடையாதே! ஜோசியர் என்னவோ சொன்னாராம். அதுக்காக மார்னிங்கே எழுப்பிக் குளித்து இங்கே கூட்டிட்டு வந்திட்டாங்க. அதோட இப்ப என் கோலத்தைப் பார்க்கணுமே... பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை, அதோட கழுத்தில பெரிய ரோஜாப்பூ மாலை!"

"அப்படியே கல்யாண மாப்பிள்ளை மாதிரி இருக்கேன்னு சொல்லு. ம்... எப்படியும் நடக்கப் போறதுதானே!" மறுமுனையில் ஆனந்த் கேலியாய்ப் பேச, தன்னைக் கடந்து சென்ற இரண்டு பெண்கள் தன்னைப் பார்த்து ரகசியமாக ஏதோ தங்களுக்குள் பேசிச் சிரித்தவாறு போக, ரகுராம் குனிந்து தன் மாலையைப் பார்த்தான்.

முழங்கால் வரை தொங்கிய மாலை அவனுக்கே சிரிப்பை வரவழைக்க, போனைக் காதில் வைத்துக்



கொண்டே, மாலையைக் கழற்றிக் கையில் மடித்துப் போட்டுக் கொண்டபோது பழக்கமில்லாத வேஷ்டி அவிழ்ந்து சங்கடப்படுத்தியது.

ஒரு கையில் மாலை, காதில் போன், மறு கையில் வேஷ்டி எனத் திணறிய போது மீண்டும் அந்தக் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

"மல்லி! அந்தப் பக்கெட்ல தண்ணி பிடிச்சுக் கொண்டா. இதைக் கழுவி விட்டுடுவோம். வேற யாரும் வழுக்கி விழுந்திடக் கூடாதில்ல!" கையில் துடைப்பத்துடன் புடவையை லேசாய்த் தூக்கிப் பிடித்தவாறு அந்தப் பெண் சொல்ல, இன்னொரு பெண் வாளி நிறையத் தண்ணீரை எடுத்து வந்தாள்.

"அக்கா! உன்னோட பொறந்த நாளும் அதுவும் காலையிலேயே நல்ல காரியம் செய்யுற! பாவம் அவங்க. குழந்தையோட விழுந்து அடிபட்டிருந்தா... யப்பா!" சின்னப் பெண் உடலைக் குலுக்கினாள் பயத்தோடு.

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. இவளை நம்பிக் கோவிலுக்கு வர்றவங்களுக்கு எதுவும் ஆகாது. இவ கண் கண்ட தெய்வமாச்சே!"

உண்மைதான் என்பதாய் ரகுராமின் முகம் புன்னகைத்தது.

"ஆனாலும் அந்த ஜோடி ரொம்ப அழகுதான். இல்லைக்கா? அந்த மாப்பிள்ளையைப் பார்த்தியாக்கா? எவ்ளோ பெரிய மாலை போட்டுட்டு ராஜாவாட்டம் இருந்தாரு!"

"ஏய்! அவரைப் போய் மாப்பிள்ளைன்ற! அவங்களுக்குக் குழந்தையே பொறந்தாச்சு. குழந்தைக்குப் பேர் வைக்க வந்திருப்பாங்களோ?"

"இல்லைக்கா! கல்யாண நாளா இருக்கும். அதான் ரெண்டு பேருமே கல்யாண டிரெஸ்ல வந்திருக்காங்க. நீ பார்த்தியாக்கா அவரை?"

"மல்லி! ஊர் வம்பு பேசாதே. யாரோ எதுக்கோ கோவிலுக்கு வர்றாங்க... போறாங்க. எல்லாரையும் பார்த்துட்டு இருக்கக் கூடாது. தண்ணியை ஊத்து!" மூத்தவள் அதட்டியதும் நீரைக் கொட்டினாள் இளையவள். அடித்து அலசி விட்டுக் கொண்டிருந்தவளை நோக்கி நடந்தான் ரகுராம்.

"ரகு! என்னடா தூங்கிட்டியா? நான் பேசுறது கேட்குதா இல்லையா? ரகு... ரகு...!" ஆனந்தின் குரல் கேட்டது.

"ஆனந்த்! இங்கே சிக்னல் சரியா கிடைக்கலை. நான் வீட்டுக்குப் போனதும் பேசுறேன். பை!" என போன் கட் பண்ணி சட்டைப் பையில் போட்டான். இடது கையில் போட்டிருந்த மாலை நழுவ, தரையைச் சுத்தம் செய்து விட்டு நிமிர்ந்தவள் அந்த மாலையை ஏந்திக் கொண்டு நிமிர திடுக்கிட்டுப் போனாள்.

"ஹை! அதே மாப்பிள்ளை!" என்ற தங்கையை முறைத்து அடக்கினாள்.

"இல்லைங்க! நான் மாப்பிள்ளை இல்லை. அது என் தங்கை. அவளோட குழந்தை. நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க. எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை!" எனச் சின்னச் சிரிப்போடு அவன் சொல்ல, தங்கையை நெருங்கினாள் அவள்.

"யேய்! வாடி, போகலாம்!"



"ஏங்க! ஒரு நிமிஷம் நில்லுங்க. இன்னிக்கு என்னோட பிறந்த நாள்!"

"ஹை! எங்க அக்காவுக்குக் கூட இன்னிக்குத்தான் பிறந்த நாள்!"

"ஏய்! உங்கிட்ட யாராவது கேட்டாங்களா? வா பேசாம...!" தங்கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போய் விட்டாள். அவள் வெளியேறும் முன் மீண்டும் அவளைப் பார்த்துவிட வேண்டும் என்று அவன் நகர, மீண்டும் வேட்டி இடுப்பில் நிற்காமல் நழுவியது.

"ச்சே! இது வேற. நேரம் காலம் தெரியாமல் காலை வாரி விடுகிறது!" முணுமுணுத்துக் கொண்டே அதை இறுகக் கட்டியபோது அங்கே வந்தாள் கீர்த்தனா.

"எவ்வளவு நேரம்தான் போன் பேசுவே? அங்கே எல்லாரும் வெயிட் பண்றாங்க. வா சீக்கிரம்! அத்தை உன்னைத் தேடுறாங்க."

"நீ போ, வர்றேன்...!" என்றான் கடுப்பாய்.

"சும்மா வா ராம். நம்ம ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்குன்னு மத்தவங்க பார்க்கட்டுமே...!"

"சகிக்கலை...!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"கோவில்னா சுத்தமா வெச்சிக்க வேண்டாம். இப்படியா பாலைக் கொட்டி நாறடிப்பது... நாற்றம் குடலைப் புடுங்கறது. பார்க்க சகிக்கலை...!" இரு பெண்மணிகள் பேசிக் கொண்டே போக, பொங்கி வந்த சிரிப்பை மென்று கொண்டே நகர்ந்தான் ரகு.

தீர்த்தனாவின் முகம் அஷ்ட கோணலானது. கோபத்தை வெளியே காட்ட முடியாமல் அவன் பின்னால் சென்றாள்.

"என்னடா தம்பி! இவ்ளோ நேரமா போன் பேசுவே... இந்தா! இதை ஒவ்வொருத்தருக்கா கொடு!" எனப் புடவை, பூ அடங்கிய தட்டை நீட்டினாள் பத்மாவதி.

"அம்மா! நீங்களே கொடுங்கம்மா. அவ்வளவும் லேடீஸா இருக்காங்க!"

"நீதான்டா கொடுக்கணும். உனக்காகத்தானே இதைச் செய்யுறோம். சீக்கிரம் கொடு. எவ்ளோ நேரம் நிற்பாங்க!" அம்மா அவசரப்படுத்த அமைதியாய் ஒவ்வொருவருக்காய்க் கொடுக்க ஆரம்பித்தான்.

"அக்கா! பாரு! அந்த மாப்பிள்ளை போட்டிருந்த மாலை உன் கையில இருக்கு. நீ அவர்கிட்ட கொடுக்கலையா?" தங்கை கேட்ட பிறகே பார்த்தாள்.

"அட! ஆமாம். இதை எப்படி நான் கொண்டு வந்தேன்."

"நீதான் நிற்காம ஓடி வந்திட்டியே... அவர் என்ன நம்மைக் கடிச்சா தின்னுடுவார்!"

"ஏய்! இப்படியெல்லாம் பொது இடத்தில ஒரு ஆம்பிளைகிட்ட நின்னு பேசக்கூடாது. அதுவும் அந்த ஆளு யாருன்னே நமக்குத் தெரியாது. இப்படிக் கண்டவங்களோட நின்னு பேசலாமா? யாராவது பார்த்தா நமக்குத்தான் கெட்ட பேர்!"

"சரிக்கா! இது அவர் மாலையாச்சே! இதை எப்படிக் கொடுப்ப... வா அவங்க போயிருக்க மாட்டாங்கன்னு நினைக்கிறேன். குடுத்துட்டு வருவோம்!" கைப்பற்றி அழைத்த தங்கையிடம் மறுப்பாய்த் தலையசைத்தாள்.



"வேண்டாம். நான் வரலை. நீ வேணா போய்ப் பார்த்துக் கொடுத்திட்டு வா. நான் இங்கேயே நிற்கிறேன்."

"அக்கா! நம்ம பூக்கூடை குருக்கள் மாமாகிட்டதான் இருக்கு. போகும்போது பிரசாதம் வாங்கிட்டுப் போகச் சொன்னார். நான் மட்டும் போனா உன்னை எங்கேன்னு கேட்பார். பேசாம வா!" எனத் தங்கை முன்னே நடக்க கொஞ்சம் தயக்கமாய் அவள் பின்னால் சென்றாள்.

அனைவருக்கும் கொடுத்தது.போக எஞ்சியிருந்தது ஒரு தட்டு.

"சரியா ஒன்பதுதானே வெச்சேன். எப்படி ஒன்னு மீந்துபோனது!" யோசித்தாள் பத்மாவதி.

"அத்தை! வந்ததுல ஒரு பொண்ணு குழந்தை அழுதுன்னு போயிட்டா. அதான் இது மிச்சமாகிப் போச்சு. வேற யாராவது வர்றாங்களான்னு பாருங்க."

பத்மாவதி சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பெண்கள் தெரியவில்லை. ஒருசில ஆண்கள் வருவதும் போவதுமாக இருக்க, நடையைச் சாத்த ஆயத்தமான குருக்களை நெருங்கினாள்.

"சாமி!. ஒரு புடவைத் தட்டு மீதமாகிப் போச்சு. உங்க வீட்டுக்குக் கொண்டு போறீங்களா?"

"அடடா! அப்படிக் கொடுக்கக் கூடாதும்மா. எதுனா பொம்மனாட்டிங்க கையிலதான் கொடுக்கணும். அதுதான் பலன் கொடுக்கும். சித்த இருங்கோ!" எனப் பார்வையைச்

சுழற்றியவரின் கண்களில் அந்தப் பெண் பட்டுவிட உற்சாகமாய்க் குரல் கொடுத்தார்.

"குழந்தே! ரோஜா...! இப்படி வாம்மா!" ரகு தன் காதில் கேட்ட ரோஜா என்ற பெயரில் சட்டெனத் திரும்பியவனின் முகம் சூரியனாய்ப் பிரகாசித்தது. தன்னையும் மீறிப் புன்னகைத்தான்.

## 3

ரோஜாவே!
நீ மொட்டாக இருக்கும் போதும் அழகு
மலரத் துவங்கும் போதோ பேரழகு
இதழ் விரித்து மலர்ந்து சிரிக்கும்போது
கொள்ளை அழகு!

"அச்சச்சோ! அக்கா பாரேன். எல்லாரும் நம்மைத் தான் பார்க்கிறார்கள். போச்சு! எல்லாம் இந்த மாலையால் வந்த வினை. வாக்கா கொடுத்திட்டு வந்திடலாம். பொல்லாத மாலை. இதுக்குப் போயி குருக்கள்கிட்ட போய்ச் சொல்லிக் கொடுத்திட்டாரே இந்த ஆளு!"

"ஷ்ஷு! ஏன்டி அவரைத் திட்டுற. மாலையத் தூக்கிட்டுப் போனது நாம. அவர் என்ன பண்ணுவார். வெள்ளிக் கிழமையும் அதுவுமா பூஜை பண்ணின மாலையைத் தொலைச்சா அவங்க சங்கடப்பட மாட்டாங்களா? வா!" என மெல்லக் கூறிவிட்டுத் தங்கையோடு அவர்களை நெருங் கினாள் ரோஜா.

அனைவருமே புன்னகையோடு எதிர்கொள்ள, "வந்து... ஸாரி! மாலை எப்படியோ என் கைக்கு வந்திடுச்சு.



நான்தான் கொடுக்க மறந்திட்டேன். தப்பா எடுத்துக்காதீங்க. இந்தாங்க...!" எனப் பத்மாவதியிடம் மாலையை நீட்டினாள் ரோஜா.

"அட! இது எப்படிம்மா உங்கிட்ட வந்தது?" வியப்பாய்க் கேட்ட அன்னையிடம் அவசரமாய்ச் சொன்னான் ரகுராம்.

"அம்மா! நான்தான் போன் பேசும்போது கழட்டினேன். மிஸ்ஸாயிடிச்சு!"

குருக்கள் சிரித்தார். "பரவாயில்லை விடுங்க. ரோஜா! அது உன்கிட்டயே இருக்கட்டும். அவாளுக்கு வேற மாலை கொடுத்திடுறேன். தவறிய மாலையை எடுத்துக்கப்படாது. அதோட நல்ல நாளும் கிழமையுமா உனக்குச் சிவந்த ரோஜா மாலை கிடைச்சிருக்கு. இது ரொம்ப நல்ல சகுனம். சீக்கிரமே உனக்கு மாங்கல்ய பிராப்தம் கிடைக்கும். சேமமா இரு!" கை உயர்த்தி ஆசிர்வதித்தார்.

"இல்லை... இது... இவங்களோடது... நான் எப்படி?"

"இருக்கட்டும்மா... சாமி ஆசிர்வாதம் பலிக்கட்டும். நாங்க இந்தப் பூஜையைச் செய்ததே என் பிள்ளைக்கு நல்லபடியா திருமணம் நடக்கணும்னுதான். அதனால இந்தப் புடவையும் வாங்கிக்கங்கம்மா. எங்க நேர்த்திக் கடன். மறுக்காம வாங்கிக்க... கொடுடா...!" என்றாள் மகனைப் பார்த்து.

முகம் நிறைந்த புன்னகையோடு ரோஜாவிடம் தட்டை நீட்டினான் ரகு. தயக்கமாய்ப் பார்த்தாள். பட்டுப் புடவை பளபளத்தது. புடவை, பூ, பழம், மஞ்சள் குங்குமம் எல்லாம் பார்த்ததும் அவள் மனம் தடுமாறியது.

"வாங்கிக்கோ குழந்தே! இனி எல்லாம் நல்லதே நடக்கும். இந்த அம்பாள் உனக்குத் தர்றதா நினைச்சுக்கோ!" குருக்கள் சொல்ல ரோஜா முத்துமாரியம்மனைப் பார்த்தாள்.

கனிவான அம்மன் முகம் புன்னகைத்தாற்போல் தோன்றியது. அந்தப் புன்னகையில் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பதாகப் பட்டது அவளுக்கு. சிறுவயது முதலே செவ்வாய், வெள்ளிதோறும் பார்த்துப் பழகிய, பேசிய, திட்டிய முகமாயிற்றே. மனதிற்குள் அவளை வேண்டிக் கொண்டே, தயக்கமாய் இருகரங்களையும் நீட்டினாள்.

அவள் கையில் தட்டைக் கொடுக்கும் நொடியில் கீர்த்தனா தடுத்தாள்.

"அத்தை! சுமங்கலிப் பெண்களுக்குத்தானே கொடுக் கணும்னு சொன்னீங்களே! இவளைப் பார்த்தா கல்யாணம் ஆனவ மாதிரி தெரியலியே!" ஓரக் கண்ணால் ரோஜாவைப் பார்த்தவளின் கண்களில் பொறாமை பொங்கி வழிந்தது.

"தப்பில்லேம்மா! திருமணமாகாத கன்னிப் பெண் ணுக்குக் கொடுப்பது இன்னும் சிறந்தது. அதனால தயங்காம கொடுக்கலாம். நீங்க கொடுங்கோ...!"

"அப்ப எனக்குத் தர வேண்டியதுதானே! எனக்கும் தான் கல்யாணமாகலே! இரண்டாயிரத்து நூறு புடவையை அடுத்தவங்களுக்கு ஏன் சும்மா தூக்கிக் கொடுக்கணும்!" - கீர்த்தனா சொன்னதும் நீட்டிய கரத்தைச் சட்டென இழுத்துக் கொண்டாள் ரோஜா. முகம் அவமானத்தால் சிவந்து போனது.

"ஏம்மா! தானமா கொடுக்க வேண்டியதை அடுத்தவங் களுக்குத்தான் கொடுக்கணும். அப்பத்தான் வேண்டுதல்



பலிக்கும். உனக்கும் இவளுக்கும் கொடுக்கிறதா இருந்தா வீட்லயே கொடுத்திருக்கலாமே... கோவில் வரைக்கும் ஏன் வரணும்? அதனால கொஞ்சம் அமைதியா இரு. நீ கொடுப்பா!" என்றார் கோசல்ராம்.

அதற்குள் தங்கையின் கைகளில் இருந்த மாலையை வாங்கி ஹேமாவின் கைகளில் கொடுத்துவிட்டு நடக்க ஆரம்பித்திருந்தாள் ரோஜா.

"அம்மாடி! கொஞ்சம் நில்லும்மா. இதை வாங்கிட்டுப் போம்மா!" எனப் பின்னே வந்தாள் பத்மாவதி.

"மன்னிச்சிடுங்கம்மா! பட்டுப் புடவைக்கு நான் எப்பவும் ஆசைப்படுறதில்ல. கொஞ்ச நேரம் இருந்தா வேற யாராவது வருவாங்க. அவங்களுக்குக் கொடுத்திடுங்க. நாங்க வர்றோம்."

"ரோஜா! பெரியவாகிட்ட அப்படிப் பேசக்கூடாதும்மா. இந்தப் புடவையை உனக்குன்னு தர முடிவு பண்ணின பிறகு நீ வாங்காமப் போனா அது அவங்க மனசுக்குக் கஷ்டமா இராதா? இன்னிக்கு இந்தப் புள்ளையாண் டானுக்குப் பொறந்த நாளாம். சந்தோஷமா நேர்த்திக் கடனை முடிச்சிட்டுக் கிளம்பட்டுமே... நானும் இன்னொரு கோவிலுக்குக் கிளம்பணும். நாழியாறது!" என்றார் குருக்கள்.

"அக்கா! சும்மா வாங்கிக்கோ. உன்னோட பர்த்டேக்கு இந்த அம்மா தர்ற பரிசா இருக்கட்டும். கலர்கூட உனக்குப் பிடிச்ச கலர். நேற்று இந்தக் கரம்பச்சைக் கலர் பட்டுப் புடவைக்கு எத்தனை கடைக்குப் போனோம். கிடைக்கவே இல்லையே! இந்த அம்மன்தான் இதை உனக்குத் தர்றாங்கன்னு நினைச்சுக்க...!"

"ஷ்... சும்மா இருடி. வாயைத் திறந்தா மூட மாட்டியா?" அதட்டினாள்.

"ரோஜா! எங்க அண்ணன் எவ்வளவு நேரம்தான் தட்டை ஏந்திக்கிட்டே நிற்கும். பார்த்தா பாவமா இல்லையா? ப்ளீஸ்! வாங்கிடுங்களேன். அவனோ எப்ப வேட்டி அவிழுமோன்னு பயந்திட்டு இருக்கான்!" ஹேமா இலகுவாய்ச் சொல்ல, ரோஜா அவசரமாய்க் கைகளை நீட்டினாள்.

அதே நேரத்தில் ஒரு கல்யாண வீட்டினர் அம்மன் பாதத்தில் பத்திரிகை வைத்து விட்டுப் போக மேளதாளத்துடன் கோவிலினுள் நுழைய ரகுவின் கையிலிருந்து தட்டு ரோஜாவின் கைக்கு மாறியது.

இருவரின் கரங்களும் ஒரே நொடி உரசிக் கொள்ள, சட்டெனக் கைகளை இழுத்துக் கொண்டாள், குறுஞ் சிரிப்போடு ரகுராம் பார்க்க.

"நாங்க கிளம்பறோம். வாடி!" எனத் தங்கையோடு நடக்க ஆரம்பித்தாள்.

"ஒரு நிமிஷம்ங்க. மாலையை விட்டுட்டுப் போறீங்களே!" என்றவாறு ஹேமாவிடம் இருந்த மாலையை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

"இது எங்க சேரணுமோ அங்கேதான் சேர்ந்திருக்கு...!" அவளுக்கு மட்டும் கேட்கும் தொனியில் சொல்லிவிட்டுப் போனான். உடல் விதிர்விதிர்த்துப் போய்விட விடுவிடுவென நடக்க ஆரம்பித்தாள்.

கூடவே ஓடி வந்தாள் மல்லிகை. "அக்கா! என்ன சொன்னார்? ஏதோ ரகசியம் பேசினாரே!"



"மல்லி! வரவர உனக்கு வாய் அதிகமாகிப் போச்சு. எங்கே என்ன பேசணும்னு தெரியாது உனக்கு! இப்படியா மத்தவங்க முன்னாடி பேசுறது?"

"அக்கா! பேச்சை மாத்தாதே! அவர் என்ன சொன்னாரு? முதல்ல அதைச் சொல்லு."

"ம்... உங்கள் தங்கைக்கு வாய் அதிகம். கொஞ்சம் தட்டி வையுங்கள் என்று சொல்லிவிட்டுப் போகிறார்."

மல்லிகை நின்றாள். "அப்படியா சொன்னார்? அதற்கா உன் முகம் குங்குமம் மாதிரி சிவந்தது. அக்கா! என்னிடம் பொய் சொல்லாதே!"

"நீ வர்றியா? நான் போகட்டுமா? அம்மா தேடுவார்கள். நான் போகிறேன்!" என வெளிவாசலை அடைந்து மரத்தடியில் கிடந்த செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டு வேகமாய் நடக்க ஆரம்பித்தாள்.

"அக்கா! இரு. நீ மட்டும் முதலில் போனால் எனக்குத்தான் டோஸ் கிடைக்கும். நானும் வர்றேன்!" வேகமாய் வந்தாள் மல்லிகை.

கோவிலின் அருகே அமர்ந்திருந்த பூக்கார அம்மாள் வியப்பாய் நோக்கினாள்.

"என்னடி பொண்ணுங்களா? மாலை, பட்டுப் புடவைன்னு கைநிறையக் கிடைச்சிருக்கு. என்ன விசேஷம்?"

"இன்னிக்கு எங்க அக்காவுக்குப் பொறந்த நாளில்ல.. அதுக்காக கோவில்ல விசேஷ் பூஜை வெச்சு இதைக் கொடுத்தாங்க. அதான் வாங்கிட்டுப் போறோம். ஆயா! உன் பிறந்த நாளையும் சொல்லு. இதே மாதிரி ஜமாய்ச்சுடுவோம்!"

மல்லிகை உற்சாகமாகச் சொல்ல, அவளை அதட்டினாள் ரோஜா.

"ஏய் வாயாடி! சும்மா இருக்க மாட்டே! ஆயா! யாரோ ஒரு குடும்பம். அவங்க புள்ளைக்குச் சீக்கிரமே கல்யாணம் நடக்கட்டும்னு வேண்டினாங்களாம். அதுக்குப் பூஜை பண்ணிக் கொடுத்தாங்க."

பூக்கார அம்மாள் வெற்றிலை வாயோடு சிரித்தாள். "கண்ணு! இத்தினி வருஷம் இந்தக் கோவிலுக்கு நடையா நடக்கிறியே... உன் வேண்டுதல் பலிச்சிடப் போகுது பாரேன். இன்னிக்கு நல்ல நாளு. பூமாலை பட்டுப் புடவை எல்லாம் கிடைச்சிருக்கு. இனிமே உங்க கஷ்டமெல்லாம் மறைஞ் சிடும். போயிட்டு வாங்க ஆத்தா. உங்க அம்மா பார்த்தா சந்தோஷப்படுவா!"

பூக்கார ஆயா சொன்னது போல் அம்மா சந்தோஷப் படவில்லை. இது ஏது? எப்படி வந்தது? என ஆயிரம் கேள்வி கேட்டாள். அம்மாவின் கேள்விகளுக்கு மல்லி பொறுமையாய் நடந்ததை விவரிக்க, ரோஜா அமைதியாய்த் தன் அறைக்குள் நுழைந்து கட்டிலின் மீது தட்டை வைத்தாள். அதன் மீது மாலையை வைத்தாள்.

மனம் முழுக்க இனம் புரியாத இன்பம் நிறைந் திருந்தது. என்னவென்று சொல்ல முடியாத ஓர் உணர்வு. ஆனாலும் இதமான இன்பமான உணர்வு. அந்த மாலையை எடுத்து முகர்ந்தாள். பன்னீர் ரோஜாக்களின் மணம் நாசி வழியே சென்று இதயம் வரை மணத்தது.

"இது எங்க சேரணுமோ அங்கேதான் சேர்ந் திருக்கு!" அவன் குரல் காதில் மோதியது. காது மடல்கள்



குறுகுறுத்தன. புடவை மீதிருந்த பூவை எடுத்துத் தலையில் சூடிக் கொண்டாள். புடவையை எடுத்து வருடினாள். நல்ல கரும்பச்சை நிறத்தில் தங்கநிற ஜரிகையோடு கூடிய புடவை அது.

இன்று பிறந்த நாளிற்குக் கட்டுவதற்குப் புதிய புடவை வாங்க நேற்றுக் கடைவீதிக்குப் போனபோது கடை கடையாய் ஏறி இறங்கி இந்த நிறம் உள்ள புடவை கிடைக்கவேயில்லை. இன்று அதே புடவை, சந்நிதியில் அம்பாள் முன்னிலையில் மேளதாளத்துடன் தனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை இன்னும் நம்ப மனம் மறுத்தது.

பதட்டமும் உற்சாகமுமாகவே ஆடைகளை மாற்றி னாள். உள்ளே நுழைந்த சகுந்தலா மகளை உற்றுப் பார்த்தாள். இத்தனை வருடங்களாய்ப் பார்க்கும் முகம்தான். ஆனால் இன்று ஏதோ புதிய பொலிவு தெரிந்தது. இன்றோடு இருபத்து நான்கு வயது முடிந்து விட்டது. என்றாலும் குழந்தைத்தனமான முகம். எப்போதும் போல் ஆழ்ந்த அமைதி. ஆனாலும் இந்தப் பொலிவும் ஜொலிப்பும் புதிதாய் இருந்தது.

"என்னம்மா அப்படிப் பார்க்கிறீங்க? என்ன விஷயம்?"

"இல்லைம்மா! உன் முகத்துல ஏதோ தேஜஸ் தெரியுதே! அதான் பார்க்கிறேன்."

"ஆமாம்மா! என்னன்னு தெரியலை. ஆனா நாம பட்ட கஷ்டமெல்லாம் போயிட்ட மாதிரி தோணுதும்மா. இன்னிக்குக் காலையில இருந்து நடக்கிறதெல்லாம் நல்லதாவே நடக் குதும்மா. மனசு லேசான மாதிரி இருக்கு....!" மகளின் உற்சாகமான பேச்சைக் கேட்டு அமைதியானாள் சகுந்தலா.

"என்னம்மா! ஒண்ணுமே பேசாம இருக்கீங்க?"

"சரி. சாப்பிட வாங்க ரெண்டு பேரும்!"

"அப்பாவும் வரட்டும்மா. சேர்ந்தே சாப்பிடலாம்."

சகுந்தலாவின் முகம் மாறியது.

"இல்லை! இன்னிக்கு அப்பா வர நேரமாகும். சொல்லிட்டுத்தான் போனாங்க. நீங்க சாப்பிட வாங்க!" என்றவாறே நகர்ந்தாள்.

"அம்மா! நில்லுங்க. உங்களுக்குப் பொய் சொல்லத் தெரியாது. ஏன் முயற்சி பண்றீங்க. அப்பா எங்கே?"

"அதான் சொன்னேனே... அப்பா வர நேரமாகும்னு...!"

"பொய்! அப்பா காலையிலே மார்க்கெட் போகும் போதே எங்கிட்ட சொல்லிட்டுத்தான் போனாங்க. காலையில குளிச்சிட்டு கோவிலுக்குப் போயிட்டு வந்து ரெடியா இருங்க. அப்பா வந்ததும் சாப்பிட்டுட்டு வெளியே போகலாம்னு சொன்னாங்களே... அதுக்குத்தானே நாங்க ரெண்டு பேரும் லீவு போட்டுட்டு வீட்ல இருக்கோம்."

"அதெல்லாம் சரிதான். இப்பத்தான் வர நேரமாகும். புள்ளைங்களை சாப்பிட வைன்னு சொல்லி விட்டிருக் காங்க."

"அக்கா! அம்மா பொய் சொல்றாங்க. நம்ம அப்பா...!" கண்ணீரோடு தொடங்கிய மல்லிகையை அதட்டினாள் அம்மா.

"ஏய் வாயாடி! சும்மா இரு. எல்லாம் நானே சொல்றேன். முதல்ல சாப்பிடுங்க."



"சாப்பாடு இருக்கட்டும். என்னம்மா விஷயம்? முதல்ல அதைச் சொல்லுங்க. எனக்கு மனசெல்லாம் பதறுது!" தாயை உலுக்கினாள் ரோஜா.

அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீர் உடைத்துக் கொண்டு வெளியேற, மௌனமாய் அழுதாள் சகுந்தலா.

"நான் என்னம்மா பண்ணுவேன். அந்த முட்டாப்பய திரும்பவும் தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்ணிட்டானாம். ஆஸ்பத்திரியில இருந்து இப்பத்தான் போன் வந்தது."

"என்ன?" துல்லியமாய் அதிர்ந்தாள் ரோஜா.

"ஆமாம்மா! போன் வந்ததும் அப்பா கிளம்பிப் போயிட்டாங்க. இன்னிக்கு உனக்குப் பிறந்த நாளாச்சே. உனக்குப் பிடிச்சதா சமைச்சு வெச்சிருந்தேன். அப்பாதான் புள்ளைங்க வந்ததும் சாப்பிட வெச்சுட்டுக் கூட்டிட்டு வான்னு சொன்னாங்க."

தாயும் தங்கையும் அழ ரோஜாவின் முகம் இறுகியது. கோபமும் ஆத்திரமும் குடியேறியது. அணிந்திருந்த புதிய உடைகளைக் களைந்து வேறு உடைக்கு மாறினாள். தலையில் சூடிய பூச்சரத்தை எடுத்துப் போட்டாள். கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"அம்மா! வீட்டைப் பூட்டிட்டு வாங்க. நான் ஆட்டோ பிடிச்சுட்டு வர்றேன். மல்லி நீயும் வா."

ஏதோ பேச வாயெடுத்த அன்னை மகளின் முக இறுக்கத்தைக் கண்டு வாயை மூடிக் கொண்டாள். மளமள வென வீட்டைப் பூட்டிக் கொண்டு அவர்கள் வெளியேற, எதிர்வீட்டு அம்மாள் சிரிப்போடு எதிர் கொண்டாள்.

"என்ன ரோசா? பிறந்த நாள் கொண்டாடக் கிளம்பியாச்சா?"

"ஆமாம் பாட்டி. வீட்டைப் பார்த்துக்கங்க...!" என்று சொல்லிவிட்டுத் தெருவில் இறங்கி நடந்து பிரதான சாலையை அடைந்து வரிசையாய் நின்ற ஆட்டோக்களில் ஒன்றை அமர்த்திக் கொண்டு ஏறினாள். மற்றவர்களும் ஏறிக் கொள்ள ஆட்டோ வேகமெடுத்தது.

ரோஜா அப்போதும் பேசாமல் வர, மல்லிகைதான் மெல்லிய குரலில் கேட்டாள்.

"அக்கா! அண்ணனுக்கு எதுவும் ஆகியிருக்காதில்ல...!"

"ம்... ஒன்னும் ஆகியிருக்காது. அப்படி போறதா இருந்தா ரெண்டு வருஷம் முன்னாடியே போயிருப்பான். நம்மையெல்லாம் அனுப்பி விட்டுத்தான் அவன் போவான்!" ரோஜாவின் வார்த்தையில் சகுந்தலா வாயை மூடிக் கொண்டு அழுதாள். ரோஜாவின் மனம் கனத்தது.

"அம்மா! உங்கள் மனசைக் காயப்படுத்தணும்னு நான் பேசலம்மா. உங்கள் மகன் செய்யும் காரியம் என்னை அப்படிப் பேச வைக்கிறது... எத்தனை முறை நம்மை இப்படிக் கதறடிக்கிறான் அவன். எதற்காக அம்மா நம்மை சித்ரவதை பண்ணுகிறான். ஒவ்வொரு முறையும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறி வரும் வேளையில் இப்படிப் பைத்தியக்காரத்தனமாய் எதையாவது செய்து விடுகிறானே...?"

சகுந்தலா பதில் பேசாமல் அழ, மல்லிகை தாயின் தோளை அணைத்துக் கொண்டாள். ரோஜாவின் முகம் கடுப்பானது.



"தயவுசெய்து அழாதீங்கம்மா. உங்கள் மகனுக்காக ஏன் உங்கள் உடம்பை வருத்திக் கொள்கிறீர்கள்? ஏற்கெனவே அவனால் இழந்தது போதாதா? சொந்தத் தோட்டத்தையே அடகு வைத்துவிட்டு அதில் கூலி வேலையைச் செய்து வருகிறார் அப்பா.

எப்படியும் டாக்டராகி விடுவேன் என்று உயிரைக் கொடுத்துப் படித்தவள் கல்லூரிக்குள் கூட நுழைய முடியாமல் துணிக்கடையில் நாள் முழுதும் கால்கடுக்க நின்று உழைக்கிறாள்.

திருமணத்திற்காகச் செய்து வைத்த நகைகளை விற்று அவனுக்கு வைத்தியம் செய்துவிட்டு இப்போது நான் பார்மஸியில் நிற்கிறேன்.

அப்பா சொத்தை இழந்தார். இவள் படிப்பை இழந்தாள். நான் வாழ்க்கையை இழந்து தீராத பட்டப் பெயரையும் சுமந்து கொண்டு அலைகிறேன். ராசியில்லாதவளாம்! இவன் செய்த பிழையால்தானே என் திருமணம் நின்று போனது. இதில் நான் எப்படியம்மா ராசியில்லாதவளாகிப் போனேன்.

இத்தனை இழப்பையும் தாங்கிக் கொண்டு நம் நால்வரின் உழைப்பையும் உறிஞ்சிக் கொண்டு, திரும்பவும் இப்படியே ஏதாவது செய்து கொண்டிருந்தால் நான் என்னம்மா பேசுவது? நானும் மனுஷிதானே!" கண்ணோரம் வழிந்த நீரைச் சுண்டி எறிந்தாள்.

சில கணம் அமைதியாய் இருந்து விட்டுக் கேட்டாள்.

"இந்த முறை என்ன செய்தானாம் உங்கள் மகன்? மருந்தைக் குடித்தானா? பெட்ஷீட்டைச் சுருட்டிக் கழுத்தை

இறுக்கிக் கொண்டானா? இல்லே... பாத்ரூம் கழுவுற ஆசிட்டைக் குடிச்சானா? என்ன செய்தானாம்?"

சகுந்தலா கண்ணீரோடு நிமிர்ந்தாள். "ந... நரம்பை... அறுத்திட்டானாம்!"

"எ... என்ன?" அதிர்ச்சியாய்த் தாயைப் பார்த்தாள்.

"ஆமாம்மா! ராத்திரியே அறுத்துகிட்டானாம். நிறைய இரத்தம் வீணாகிப் போச்சாம். பொழைக்கிறதே கஷ்டம்னு சொல்றாங்க. எம்புள்ளை என்னை விட்டுப் போயிடுவான் போலிருக்கே...!" அம்மா பெரிதாய் அழ, ரோஜா தொய்ந்து போனாள்.

அவளையும் மீறிக் கண்கள் பொங்கி வழிந்தன.

# 4

ரோஜாவே!
நீ மலர்ந்து சிரிப்பதைப் பார்க்கும்
என்னால் நீ வாடி நிற்பதைப்
பார்க்க முடியவில்லை!
எனக்கே எனக்காக – நீ
இனி வாடாதே!

ரகுராம் போனில் வந்த செய்தியைக் கேட்டுப் பாதிச் சாப்பாட்டில் எழுந்துவிட, பத்மாவதி தடுத்தாள்.

"என்னப்பா! நீ இரண்டு பூரிகூடச் சாப்பிடலையே! அம்மா உனக்குப் பால் பாயசம் செய்திருக்கேன். சூடா இருக்கு. எடுத்துட்டு வர்றேன். அதுவரை ரெண்டு வடையாவது சாப்பிடு."



"ம்மா! வடை, பாயசம் எப்ப வேணா சாப்பிடலாம். ஆனா அங்கே ஒரு உயிர் போராடிட்டு இருக்குதாம். ஃபிரண்ட் போன் பண்ணான். நான் போயே ஆகணும்." அவசரமாய் எழுந்து வாஷ் பேஷினில் கை கழுவினான்.

"நீ எப்போ டாக்டர் ஆன ராம்? எனக்குத் தெரியாதே!" நக்கலாய்க் கேட்ட கீர்த்தனாவைப் பாராமலே மாடியேறினான். ஐந்தே நிமிடத்தில் ஜீன்ஸ், டீ-ஷர்ட்டில் இறங்கியவனை விழியெடுக்காமல் பார்த்தாள் கீர்த்தனா.

எந்த உடையும் இவனுக்கு அழகாகத்தான் இருக்கிறது. காலையில் பட்டு வேட்டியில் ஒரு அழகு என்றால் இந்த ஜீன்ஸில் இன்னும் அழகு. அதுவும் உடம்பை ஒட்டிப் பிடித்தாற் போலிருந்து டீ-ஷர்ட் அவனது வலிமையான உடம்பை அப்படியே காட்ட, பெருமூச்சு விட்டாள்.

ம்... இன்னும் எத்தனை காலம்தான் இவனைப் பார்த்து ஏங்குவதோ? இவன் என்ன ஜடமா? பார்வையாலும் பேச்சாலும் செய்கையாலும் எத்தனை முறை உணர்த்தினாலும் கண்டுகொள்ளவே மாட்டானா?

இலவு காத்த கிளிபோல் நான்தான் இவனுக்காக ஏங்கிக் கொண்டே இருக்கிறேன். இவன் மனதில் அப்படி என்னதான் இருக்கிறது?

"கீர்த்தனா! சாவியைக் கொடு!" இரண்டாவது முறையாக ரகுராம் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

கோவிலுக்குப் போய் வந்ததுமே கார் சாவியை எடுத்துத் தன் கைப்பையில் வைத்துக் கொண்டாள். இன்று முழுக்க அவனை வெளியில் விடாமல் தன் அருகிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவளது திட்டம்.

அவனையும் வைத்துக் கொண்டே இவர்களது திருமணத்தைப் பற்றிப் பேசி முடிவு பண்ண வேண்டும் என்பது தணிகாசலத்தின் திட்டம்.

இவர்களின் திட்டம் சாப்பாடு முடிந்தபின் ஆரம்பமாகும் என நினைத்த நேரம் பாழாய்ப் போன போன் வந்து காரியத்தையே கெடுத்து விட்டதே! இவனை இப்போது வெளியில் விட்டால் பிறகு இரவிற்கு முன் வீடு வந்து சேர மாட்டான்.

என்னதான் அத்தை வீடு என்றாலும் ரகுராம் இல்லாமல் அந்த வீட்டில் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. போர் அடிக்கும். அதனால் அவன் வரும் வரை இங்கு காத்திருக்கவும் முடியாது.

"கீர்த்தனா! உன்னிடம்தான் கேட்கிறேன். சாவியைக் கொடு. உன் விளையாட்டிற்கு இது நேரமில்லை. அங்கே ஓர் உயிர் துடித்துக் கொண்டிருக்கிறது. நான் உடனே போக வேண்டும்!" கடுமையாய்க் கூறியவனைப் பார்த்து உதட்டைச் சுழித்துச் சிரித்தாள்.

"என்ன உயிர் உயிர்ன்னு பறக்கிறே! நீ போன உடனே அவனுக்கு உயிர் வந்திடுமா? நீ என்ன கடவுளா? இல்லை டாக்டரா?"

"விளையாடாதே கீர்த்தனா! ஜி.ஹெச்ல ஒரு பேஷண்ட்டுக்கு அர்ஜெண்ட்டா ஓ பாஸிட்டிவ் இரத்தம் தேவைப்படுதாம். அது அண்ணன் குரூப் ரத்தம்தான். அதைக் கொடுக்கத்தான் அவசரமா சாப்பிடக்கூட நிற்காம கிளம்புறான். பேசாம சாவியைக் கொடுத்தனுப்பு...!" ஹேமா சீரியஸாய் சொல்ல போலியாய் அதிர்ந்தாள் கீர்த்தனா.



"என்ன, இரத்தம் கொடுக்கப் போகிறானா? அத்தே! உங்க பையன் எங்கே போறார் பார்த்தீங்களா? நீங்க பாலும் நெய்யுமா கொடுத்து வளர்த்த உடம்புல உள்ள இரத்தத்தை யாருக்கோ தானம் பண்ணப் போறாராம். காலையில புடவை தானம், மாலை தானம். இப்போ இரத்த தானமா? இவன் மனசில என்ன பெரிய கர்ணன்னு நினைப்பா?"

"கீர்த்தனா! அவன் எப்பவுமே இரத்த தானம் பண்றது தானே! இவன் ஃபிரண்ட் அங்கே டாக்டரா இருக்கிறதால யாருக்காவது அவசரமா இரத்தம் தேவைப்பட்ட உடனே போன் பண்ணுவான். இவன் போய் இரத்தம் கொடுத்திட்டு வருவான். இது எப்பவும் நடக்கிறதுதானே!" என்றாள் பத்மாவதி.

"இவன் ஃபிரண்ட் யாரு? ஓ! அந்தச் சாரதியா? அவனுக்கு ஒரு நாள் இருக்கு. பிளட் வேணும்னா பிளட் பேங்குக்குத்தானே போகணும். எதுக்கு ராமுக்குப் போன் பண்றான் இடியட்!"

"ஹேய்! லுக். இந்த மாதிரி வெட்டித்தனமா பேசிட்டு இருக்காதே. சாவியைக் கொடு. ஏற்கெனவே நான் டென்ஷனா இருக்கேன். கோபத்தில் அறைந்தாலும் அறைந்து விடுவேன். குடு சாவியை!" என உறுமியவன் அவள் சற்று மிரண்டதும் அவளிடமிருந்து கைப்பையைப் பறித்து அதைத் திறந்து சாவியை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினான்.

ஆத்திரமாக அவள் எழுந்து வருமுன் கார் வெளி யேறிப் பாய்ந்தது.

"அத்தே! எல்லாம் நீங்க கொடுக்கிற இடம்தான். இப்படியே இவன் ஊருக்கு ப்ளட் டொனேட் பண்ணிட்டு

இருந்தா இவன் உடம்புல என்ன இருக்கும். இவன் ஹெல்த்தியா இருந்தாத்தானே நாங்க சந்தோஷமா வாழ முடியும். இனிமே இப்படி எதுவும் பண்ணக்கூடாது. எனக்கு இது பிடிக்கல்லே!"

"ஆமாம்மா. அவன் சின்னப் பையன். நீதான் கொஞ்சம் எடுத்துச் சொல்லணும். இவனை இப்படியே விடக்கூடாது!" தணிகாசலமும் ஒத்துப் பாட!

"ஏன் மாமா? போன வருஷம் உங்க ஹார்ட் சர்ஜரிக்கு அண்ணன்தானே இரத்தம் கொடுத்தான். அப்போ உங்க கண்ணுக்கு கடவுளா தெரிஞ்சவன் இப்ப தப்பு பண்றதா தோணுதோ?" என்றாள் ஹேமா.

தணிகாசலம் தடுமாற, கோபமாய்த் திரும்பினாள் கீர்த்தனா.

"என் அப்பாவும் மத்தவங்களும் ஒண்ணா?"

"உயிர்ன்னு பார்த்தா எல்லாமே ஒண்ணுதான் கீர்த்தனா. எல்லாருமே ஒரே மாதிரிதான் மூச்சு விடுறோம். அந்த மூச்சு நின்னு போனா எல்லாமே முடிஞ்சு போயிடுது. இதுல கொஞ்சம் அந்நியம், ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன்ற வித்தியாசமே கிடையாது."

"ம்... நல்லா பேசக் கத்துக்கிட்ட. அப்படியே உன் அண்ணன் புத்திதான் உனக்கும்...!" அலட்சியமாய் நொடித்தாள்.

"இருந்த இடமும் வளர்ந்த இடமும் ஒண்ணுதானே!"

"ஆமா! ஹேமா, நீ எப்போ டெல்லி போகப் போறே! நீ வந்து நாலஞ்சு மாசம் இருக்குமே. ஏழாம் மாதம் தானே



வந்தே. குழந்தை பிறந்து மூணு மாசம் ஆகப் போகுதே. நீ பாட்டுக்கு இங்கேயே இருக்கே...!"

"குழந்தைக்கு இன்னும் தலையே சுமக்கலை. குழந்தையைக் குளிக்க வெக்கத் தெரியலை. அதோட அங்கே குளிர் ரொம்ப ஜாஸ்தியாம். மாப்பிள்ளைதான் இன்னும் ஒரு மூணுமாசம் போகட்டும்னு சொல்லியிருக்கார்!" என்றாள் பத்மாவதி.

"கஷ்டம்தான். நீ இங்கே ஜாலியா இருக்கே. அங்கே நீ இல்லாம உன் புருஷன் ரொம்பக் கஷ்டப்படுவாரு. பார்த்து ஹேமா! ட்ராக் மாறிடப் போறாரு!"

"ச்சீ...!" என்றவாறு கையை உதறிக் கொண்டு எழுந்தாள் ஹேமா.

"உன் புத்தி ஏன் இப்படி யெல்லாம் போகுது. பெத்தவங்களைப் பக்கத்தில வெச்சுக்கிட்டு பேசுற பேச்சா இது. நான்சென்ஸ். என்ன படிச்ச நீ! கொஞ்சமும் நாகரிகம் இல்லாம! இப்பத்தான் புரியுது. என் அண்ணன் ஏன் உன்னைக் கண்டாலே ஓடுறான்னு...!

அவன்கிட்டயும் இப்படித்தான் பேசியிருப்ப. அதான் உன்னைப் பார்த்தால் பேயைக் கண்டதுபோல ஓடுறான். இதோ பாரு கீர்த்தனா! எம் புருஷன் ஒன்னும் நீ பழகுற ஆம்பளைங்க மாதிரி இல்ல. பொண்டாட்டி பக்கத்தில இல்லன்னா உடனே வேற இடம் பார்க்கிற லோஃபர் இல்ல. ஒழுக்கமும் மானமும் பெரிசுன்னு நினைக்கிறவர். அதைவிட என்னை உயிரா நேசிக்கிறவர். இனிமே இந்த மாதிரி எதுவும் பேசிட்டுத் திரியாதே!" சுட்டு விரலை நீட்டி எச்சரித்தாள்.

பத்மாவதி பதறிப் போனாள். "ஹேமா! குழந்தை அழற மாதிரி இருக்கு. போய்ப் பார். தொட்டிலை நனைச்சுட்டானா?" என்றவாறு மகளை நகர்த்திக் கொண்டு போனாள்.

கீர்த்தனாவின் முகம் அவமானத்தால் கருகிப் போனது. இன்று காலை விடிந்ததில் இருந்தே அவமானம். காரில் அழைத்துப் போக மறுத்த ரகுவிடம், கோவிலில் மாமாவிடம், இதோ இப்போது ஊமைக்கோட்டான் போலிருக்கும் இவளிடம் எனத் தொடர்ச்சியாய்க் கிடைத்த அவமானம் அவளது மிருக குணத்தைத் தட்டி எழுப்பியது.

தனக்கு அண்ணியாய் வரப் போகிறவளிடம் ஒரு மரியாதை வேண்டாம். என்ன பேச்சுப் பேசுகிறாள்? நான் பழகும் ஆம்பிளைங்க மாதிரி இல்லையாமா? இருடி. என் சுயரூபத்தை உனக்குக் காட்டுகிறேன். போனால் போகிறது. இன்னொரு வீட்டிற்குப் போய் விடுகிறவள்தானே என்று உன்னைச் சும்மா விட்டால் என்னையே எடுத்தெறிந்து பேசும் அளவிற்கு வந்துவிட்டாயா?

என்ன சொன்னாய்? உன் புருஷன் உன்னை உயிராய் நேசிக்கிறானா? அந்த உத்தம புருஷன் அவன் வாயால் உன்னை என்ன சொல்லி விரட்டி விடுவான் என்று பொறுத்திருந்து பார். இந்தக் கீர்த்தனாவிடம் மோதினால் என்ன ஆகும் என்று உனக்குக் காட்டுகிறேன்.

உனக்கு நடத்தும் பாடத்தில் உன் அண்ணன் கதறிக் கொண்டு வருவான் பார் என்னிடம். இந்த ஜென்மத்தில் உன் அண்ணனுக்குத் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது என்னுடன்தான். அதைத் தடுத்தோ எதிர்த்தோ யார் குரல் கொடுத்தாலும் நசுக்கி விடுவேன்!" பற்களைக் கடித்துக் கொண்டே எழுந்தாள்.



"அப்பா! வாங்க போகலாம்."

"எங்கேம்மா?"

"நம்ம வீட்டுக்கு!"

"ஏம்மா! சாயங்காலம் கேக் வெட்டணுமே... கேக் ஆர்டர் பண்ணிட்டேன். ரகு வந்ததும் கேக் வெட்டினப்புறம் போலாம்."

"ரகுவா! வருவான். ஊருக்கெல்லாம் சேவகம் பண்ணிட்டு ஊர் அடங்கினப்புறம் வருவான். அப்போ கேக் வெட்டிட்டு பேய் நடமாடும்போது வீடு வந்து சேருங்க. நான் போறேன்."

"அட நில்லும்மா! நாம பேச வேண்டியது எதையுமே இன்னும் பேசலியே! அதுக்குள்ள போனா எப்படி?"

"பேச வேண்டிய ஆளே இங்கே இல்லையே! வேற யார் கூடப் பேசுறது? நீங்க வேணா உட்கார்ந்து உங்க ஆசைத் தங்கச்சிகிட்ட அன்போடு பேசிட்டு வாங்க. என்னால இங்க இருக்க முடியாது. நான் போறேன்."

தணிகாசலம் குரலைத் தணித்தார். "கீர்த்தும்மா! முதல்ல கோபத்தைக் குறை. கோபப்பட்டா வேலை நடக்காது."

"ம்... உங்க பேச்சைக் கேட்டுத்தான் அமைதியா இருந்தேன். காலையில இருந்து யார்கிட்டேயாவது கோபப் பட்டேனா! யார் என்ன சொன்னாலும் பொறுமையாதானே இருந்தேன். அதான் இதோ ஒருத்தி என்ன பேசிட்டுப் போனான்னு நீங்களும்தானே கேட்டீங்க. இவகிட்ட எல்லாம் அவமானப்படுற அளவுக்கு நான் தாழ்ந்து போயிட்டேனே!"

"சத்தமா பேசாதம்மா... யார் காதுலயும் விழப் போகுது!"

"அப்பா! நீங்க ஏன் இப்படிப் பயந்து சாகுறீங்க. நாம ஏன் இவங்களுக்குப் பயப்படணும்!"

"புரியாம பேசாதம்மா! நீ இங்க வந்து வாழப் போறவ. ஏற்கெனவே என் தங்கையைத் தவிர வேறு யாருக்கும் உன்னை ரொம்பவும் பிடிக்கவில்லை. ஏதோ கடமைக் காகப் பேசிப் பழகுகிறார்களே தவிர ப்ரியம் என்று சொல்ல முடியாது. அதுவும் உன்னைக் கட்டிக்கப் போறவன் உன்னிடம் நின்று ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை. இந்த அழகில் அவன் தங்கையிடம் ஏடாகூடமாகப் பேசி விட்டாய்!"

"அப்படி என்ன தவறாகப் பேசிவிட்டேன் நான்?"

"இதுதான்... இதைத்தான் விடு என்கிறேன். உனக்கு எதுவுமே தப்பாகத் தெரிவதில்லை. உடையிலிருந்து தலை அலங்காரம் வரை உனக்குச் சரியாகத் தோன்றுவது மற்றவர்களை முகம் சுழிக்க வைக்கிறது."

"அப்பா!" கோபமாய் வெடித்தாள் கீர்த்தனா.

"சும்மா சொன்னதையே சொல்லி வெறுப்பேற்றா தீர்கள். விஷயத்திற்கு வாருங்கள்."

"ரகுவிற்குத் தங்கை என்றால் உயிர். அவள் எது சொன்னாலும் கேட்பான். அதனால் அவளிடம் கோபத்தைக் காட்டாமல் அன்பாகப் பழகும்மா. அவள் சொன்னால் அவன் நிச்சயமாய் உன்னை மணக்கச் சம்மதித்து விடுவான்!" என்ற தந்தையை ஏளனமாய்ப் பார்த்தாள்.



"போயும் போயும் இவ தயவாலதான் எனக்கு வாழ்க்கை கிடைக்கணுமா?

என்னை என்ன ஒன்றும் புரியாத முட்டாள் என்று நினைத்தீர்களா?

நான் நினைத்தால் எப்போதோ அவனைத் தாலி கட்ட வைத்திருப்பேன். நீங்கள் எல்லோருமாய்ச் சேர்ந்துதான் ஜாதகம் சரியில்லை. கிரகம் சரியில்லை என்று நாளைக் கடத்தி விட்டீர்கள்!

அப்பா! உங்களுக்கு ஒரு மாதம் டைம் தர்றேன். அதுக்குள்ள எங்க கல்யாணம் நடந்தாகணும். இல்லே... நான் என் வழியில போய் அவனைக் கட்டிக்கிறேன். இப்ப நான் வீட்டுக்குப் போறேன்!"

"நான்... நானும் வரட்டுமா?"

"ரெண்டு தெரு தள்ளித்தானே இருக்கு. நானே போய்க்கிறேன். நீங்க எப்ப வேணா வாங்க!" என்றவாறு வெளியேற நடந்தவள் நின்றாள்.

ஹேமாவின் அறையில் நடந்த பேச்சைக் கேட்டுக் காதை உன்னிப்பாக்கினாள். ஹேமாவின் குரல் தெளி வாய்க் கேட்டது.

"அம்மா! நீங்க என்ன சொன்னாலும் சரி. இவ அண்ணனுக்குக் கொஞ்சமும் பொருத்தமா இருக்க மாட்டா. நீங்களா எதுவும் கற்பனை பண்ணி ஏமாந்து போயிடாதீங்க. முதல்ல அண்ணனிடம் தெளிவாய்க் கேட்டு விட்டு முடிவெடுங்கள். அண்ணன் வாழ்வைப் பாழாக்கி விடாதீர்கள்."

"என்னடி பெரிய வார்த்தையெல்லாம் பேசுகிறாய்!"

"உண்மைதானம்மா! ஒரு பெண்ணைப் பற்றித் தவறாகப் பேசக்கூடாதுதான். ஆனால் உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும். படிக்கும் காலத்தில் அப்படி இப்படி கண்டவனோடு அலைந்தாள். ஆனால் இப்போதும் அப்படியே சுற்றினால் எப்படி?"

"அது எல்லாம் அவ நண்பர்களாம். அவதான் சொன்னா!"

"எல்லாமே ஆண் நண்பர்கள்தான். இவள் விளையாட்டில் எத்தனை பேர் பைத்தியமாகித் திரிகிறார்கள் தெரியுமா? அதைப் பற்றி இவளுக்கு எந்தக் கவலையும் கிடையாது. இவ பேச்சை நம்பி ஒருத்தன் மாடியில இருந்து குதிச்சிட்டான்."

"நீ என்னடி சொல்றே? இதெல்லாம் உண்மையா?"

"ஆமாம்மா! நானே ஒரு முறை அவனை நேரில் பார்த்திருக்கேன். அதைப் பத்தி இவகிட்ட கேட்டா எவ்வளவு அட்சியமா பதில் சொல்றா தெரியுமா?"

"இதையெல்லாம் நீ ஏன் எங்கிட்ட சொல்லலை?"

"எப்படிச் சொல்ல? உன் அண்ணன் பெண்ணைப் பற்றி உன்னிடமே எப்படியம்மா சொல்வது? இப்போதுகூடச் சொல்லியிருக்க மாட்டேன். அண்ணன் திருமணப் பேச்சை எடுத்ததால் சொல்கிறேன். எனக்கு இதில் துளியும் விருப்பம் இல்லை. அண்ணனுக்கு விருப்பம் என்றால் செய்யுங்கள். இல்லையென்றால் அவனை வற்புறுத்த வேண்டாம்!" ஹேமா சொல்லச் சொல்ல, கீர்த்தனாவிற்குள் நெருப்பு கனன்றது.



எல்லாம் தெரிந்து கொண்டாயா? அதனால்தான் இத்தனை துணிச்சலாய் என்னிடமே சீறினாயா? விட மாட்டேன். உன்னை விடமாட்டேன். மனதில் சபதம் எடுத்துக் கொண்டு விடுவிடுவென வெளியேறினாள்.

காரை எடுத்துச் சீறிப் பாய்ந்து இரண்டே நிமிடத்தில் வீட்டை அடைந்தாள். கைப்பையைத் திறந்து தனது செல்போனை எடுத்தாள். அவசரமாக அந்த நம்பரை அழுத்திப் போனைக் காதிற்குக் கொடுத்தாள்.

"கிஷோர்! நான்தான். எனக்கு நீ ஒரு உதவி பண்ணணுமே... ஒருத்தன் வந்து கேட்டா... ஆமா! ஹேமா என்னோட லவ்வர்தான்னு சொல்லணும். இப்பவும் நாங்க மீட் பண்ணிப்போம்னு சொல்லணும். சொல்வியா?"

"கீத்துக்காக என்ன வேண்டுமானாலும் சொல்வான் இந்த கிஷோர். சொல் கீத்து! யார் வருவாங்க? என்னை எப்படித் தெரியும்?"

"அதெல்லாம் பிறகு சொல்கிறேன். நேரில் என்றில்லை... போனில் கேட்டாலும் சொல்லு. சரியா?"

"கண்டிப்பா கீத்து. உனக்காக இதைக்கூடச் செய்ய மாட்டேனா? என்ன பெயர் சொன்னாய்?"

"ஹேமா... ஹேமா.. நன்றாக மனப்பாடம் பண்ணிக் கொள். இப்ப போனை வெச்சிடு. எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு."

"ஓ.கே. பை. உம்மா!" என்ற முத்தத்துடன் அவன் போனை வைத்துவிட வெற்றிச் சிரிப்போடு போனை அணைத்தாள்.

"ஹேமா! உனக்குக் கெட்ட நேரம் ஆரம்பமாகிடுச்சுடி. என்னைப் பற்றிப் புகார் வாசிக்கிறியா? இனிமேல் பார். ஊரே உன்னைக் காறித் துப்பப் போகிறது!" கறுவிக் கொண்டே அடுத்த எண்ணை அழுத்தி உடனே அதை அழித்தாள்.

சட்டென போனைக் கழற்றி சிம்மை வெளியே எடுத்தாள். வேறு ஒரு சிம்மை எடுத்துப் போட்டு போனை மூடினாள். எண்களை அழுத்தினாள்.

மறுமுனையில் குரல் கேட்டதும் சட்டெனக் குரலைக் கடினமாக்கிக் கொண்டு பேசினாள்.

"ஹலோ! கேன் ஐ ஸ்பீக் டு மிஸ்டர் ஆனந்தன்?"

"யெஸ். ஸ்பீக்கிங். ஹு ஆர் யூ?" ஆனந்தின் குரல் கேட்டதும் நிமிர்ந்து, "மிஸ்டர் ஆனந்த்! உங்களுக்கு உங்கள் மனைவி வேண்டாமா?" என்றாள்.

"ஹேய்! யார் நீ? என்ன பேசுகிறாய்!" பதறினான் ஆனந்த்.

"நான் யார் என்பது முக்கியமில்லை. நான் என்ன சொல்கிறேன் என்பதுதான் முக்கியம்!" எனத் தொடங்கி மளமளவெனப் பேச ஆரம்பித்தாள்.



# 5

ரோஜாவே!
உன்னைப் பார்க்கும் போதெல்லாம்
புதிதாய்ப் பிறக்கின்றேன்!
உன் நிறமாய் உன் மணமாய்
உன் இதழ்களாய் மகரந்தமாய்
உன்னுடனே வாழ ஆசைப்படுகிறேன்!

**கை**யில் பெரிய பாண்டேஜ் கட்டோடு கட்டிலில் படுத்திருந்தான் அவன். தாமரைச் செல்வன். தாடை முழுவதும் அடர்ந்த காடாய்த் தாடி. பரட்டைத் தலை. குழி விழுந்த கண்கள். அதில் வெறுமை, வெறுப்பு. நிறமா அழுக்கா எனப் பிரித்தறிய முடியாத இருளடைந்த தேகம் நலிவுற்று இருந்தது.

கட்டிலின் அருகே இருந்த ஸ்டாண்டில் இரத்த பாட்டில் தலைகீழாகத் தொங்கியவாறு துளித் துளியாய் அவன் உடம்பிற்குள் இறங்கிக் கொண்டிருந்தது. கண்கள் திறந்தே இருந்தும் யாரையும் காணப் பிடிக்காமல் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தன. மல்லிகையும் சகுந்தலாவும் அவன் அருகே அமர்ந்து கொண்டு கண்ணீர் சிந்த, ரோஜாவும் மாணிக்கமும் மருத்துவர் முன் நின்றனர்.

"இதோ பாருங்கய்யா! இந்த ஹாஸ்பிடல்ல எழுநூறு பேஷண்ட்ஸ் இருக்காங்க. நாங்க உங்க புள்ளையை மட்டும் கவனிச்சிட்டு இருக்க முடியாது. உங்க பையன் விடிகாலை மூணு மணிக்குக் கையை அறுத்திட்டு இருக்கார். அந்த நேரம் எந்த நடமாட்டமும் இல்லாததால உடனே கவனிக்க முடியலை. விடிஞ்சதும்தான் தெரிஞ்சது. அதுக்குள்ள ஏகப்பட்ட பிளட் லாஸாகிடுச்சு."

"டாக்டர்! நேற்று எதுவும் நடந்ததா? திடீர்னு ஏ இப்படிப் பண்ணினான்?" ரோஜா தவிப்பாய்க் கேட்டாள்.

"அதை உங்க பிரதர் கிட்டதாம்மா கேட்கணும். ஏன்ன இங்கே யார் கூடவும் அவர் பேசுறதில்லை. எப்பவு அவருக்கு இதே சிந்தனைதானே! இந்த ஆறு மாசத்தி இது நாலாவது அட்டெம்ப்ட். வாழணும்ங்கிற எண்ண பேஷண்ட்டுக்கு இல்லை."

ரோஜாவின் பார்வை கட்டிலில் கிடந்தவனிடம் சென் மீண்டது.

"இதோ பாருங்கய்யா! இதுக்கு மேலே உங்க மகனை எங்களால பார்த்துக்க முடியாது. எத்தனை முறைதா இவரைக் கண்காணித்துக் கொண்டே இருந்து காப்பாற் முடியும்? நீங்களும் கூட இருக்கிறதில்லை!"

"இல்லய்யா! நான் பூ வியாபாரி. பகலெல்லாம் பூ பறிச்சிட்டு வந்து முழிச்சிருந்து அதைப் பிரிச்சு மூட் யாய்க் கட்டிப் பூ மார்க்கெட்ல கொண்டு போய்ப் போடணு மார்க்கெட்டுக்கு அதிகாலை ரெண்டு மணிக்கும் மூ மணிக்கும் போய் ஆகணும். வீட்ல பெண் குழந்தைகளை தனியா விட்டுட்டு என் மனைவியும் இங்கே வந்து தங் முடியாது."

"உங்க நிலைமை புரியுது. ஆனா எங்க நிலை யையும் நீங்க புரிஞ்சுக்கணும். இப்படி உங்க புள் எதையாவது பண்ணி உயிர் போயிடுச்சுன்னா நாங் பதில் சொல்லணும். கோர்ட், கேஸ்னு பிரச்சனை ஆகிடும் அதனால உங்க புள்ளையை நீங்க வீட்டுக்குக் கூட்டிட்டு போயிடுங்க."



"ஐயா! நீங்களே இப்படிச் சொன்னா எப்படி? நடக்க முடியாத பிள்ளையை வெச்சிட்டு நான் என்ன பண்ணுவேன்?" கண்ணீரோடு கேட்டார் மாணிக்கம்.

"ஐயா! நாங்க சொன்ன ஆபரேஷன் பண்ற வரை உங்க புள்ளையால நடமாட முடியாது. ஆபரேஷன் பண்ணும் அளவுக்கு அவர் உடம்பு ஹெல்த்தியா இல்லை. பிடிவாதமா சாப்பிடாம அடம் பிடிக்கிறார். மருந்து, மாத்திரை கொடுத்தா துப்பிடுறாரு. ஸோ... அவருக்குக் குணமாகி நடமாடும் எண்ணமே இல்லை. இப்படி ஒருத்தரை வெச்சிக்கிட்டு நாங்க என்ன பண்ண முடியும்?" சலிப்போடு சொன்னார் மருத்துவர்.

"டாக்டர்! அப்போ இவனால நடமாட முடியாதா டாக்டர்?" ரோஜாவின் தொண்டை அடைத்தது.

"அதுக்கு அவரும் ஒத்துழைக்கணும்மா. எங்களால மட்டும் ஒண்ணும் செய்ய முடியாது. இப்படியே போனா அவரால அசையக் கூட முடியாமப் போயிடும்."

கட்டிலை நெருங்கினாள். "கேட்டியா... கேட்டியா? ஏன்டா இப்படிப் பண்றே? உனக்காகப் பகலிரவா கண் முழிச்சுப் பாடுபடுற எங்களைவிட உனக்கு எவளோ ஒருத்தி பெரிசா போயிட்டா இல்ல... அவளுக்காக எத்தனை தரம்தான் எங்களைச் சாகடிப்பே... இதுக்கு ஒரேடியடியா நீ செத்துப் போயிடுடா...! ஒரே நாள்ல அழுது தீர்த்திட்டுப் போயிடுறோம். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமா நீயும் செத்து எங்களையும் ஏன் கொல்கிறாய்? போ. ஒரேயடியாய்ச் செத்துப் போ!" வெறி வந்தவளாய் அவனை அறைய ஆரம்பித்தாள்.

அப்போதும் அவனிடம் மறுப்போ அசைவோ இல்லை. கண்ணீர் மட்டும் கோடாய் வழிந்து தலையணையில் இறங்கியது.

கையில் பஞ்சை வைத்து மடக்கிப் பிடித்தவாறு வந்த ரகுராம் இந்தச் செய்கையைக் கண்டு பதறி ஓடிவர, மருத்துவர் வந்து தடுக்க, விடாமல் அடித்தாள் ரோஜா.

"யூ டாமிட்!" என அவளைப் பற்றித் திருப்பியவன் அதிர்ந்து போனான்.

ரோஜாவும்தான் திகைத்துப் போய் நின்றாள். விரிந்த கண்களில் அதிர்ச்சியும் ஏமாற்றமும் இயலாமையும் சேர்ந்து கொள்ள முகத்தை மூடிக் கொண்டு அப்படியே தரையில் மடங்கி அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

படுக்கையில் அசையாமல் கிடந்தவனுக்காக அந்தக் குடும்பமே அழ, ரகுராம் அதிர்ச்சியாய் மருத்துவரை ஏறிட்டான்.

"சாரதி! என்ன இது? இந்தப் பேஷண்ட்டுக்கு என்ன ஆச்சு?"

"ரகு! இது சூஸைட் அட்டெம்ப்ட் கேஸ். ஒரு முறை இல்லே... பலமுறை. எவ்வளவு ட்ரை பண்ணியும் பேசவும் மாட்டேங்கிறார். ரகு! இவங்க எல்லாம் இவன் வீட்ல உள்ளவங்க. அம்மா, அப்பா, தங்கைங்க... இவங்ககிட்ட கூட ஒரு வார்த்தை கூடப் பேசுறதில்லை. உனக்குத் தெரியுமா இவன் ஒரு இன்ஜினீயரிங் ஸ்டூடண்ட்."

"என்ன... படிச்சவனா இவன்! படிச்சிட்டு எப்படி இந்த முட்டாள்தனமான காரியம் பண்ணான்?"

"ஆமாண்டா! படிச்சு முடிச்சு வேலைக்குப் போற ஸ்டேஜ்ல ஒரு பொண்ணை விரும்பி ஏமாந்து அவ



சொன்னாங்கிறதுக்காக நாலாவது மாடியில இருந்து குதிச்சிருக்கான். அதில இவன் முதுகெலும்பு கைகால் எல்லாம் உடைஞ்சிருக்கு."

"மை காட்!" நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தான் ரகுராம்.

"இது நடந்து டூ இயர்ஸ் ஆகுது. கைகால் எல்லாம் சரியாகிப் போச்சு. முதுகெலும்பு மட்டும் இன்னும் குணமாகல்லே... அதுக்கான ட்ரீட்மெண்ட் எடுத்தா இவன் ஒத்துழைக்கிறதே இல்லே... மருந்து, மாத்திரை சாப்பிடுறதும் இல்ல. இதுல அப்பப்போ தற்கொலை முயற்சி வேற. ரொம்ப கஷ்டம்ப்பா! எங்களாலயே சமாளிக்க முடியலை. பாவம்! சின்னப் பொண்ணு. இது என்ன பண்ணும்?" பரிதாபப்பட்டான் சாரதி.

"அதுக்காக பிளட் ஏறிட்டு இருக்கும்போது இப்படி அடிக்கலாமா? ஊசி வேறு ஏதேனும் நரம்பில் செருகிக் கொண்டால் என்ன ஆகும்? எழுந்திருங்கள். ப்ளீஸ் அழாதீங்க!" சற்றுக் குனிந்து ரகு சொல்ல, ரோஜா கண்ணீரோடு நிமிர்ந்தாள்.

"இன்னிக்கு உங்க பர்த்டே இல்லே... அழக்கூடாது நீங்க. எழுந்திருங்க...!" ரகு சொல்ல, படுத்திருந்தவனின் கண்கள் அசைந்தன. விழிகளைத் திருப்பித் தங்கையைப் பார்த்தான். கண்களில் நீர் பெருகியது. உதடுகள் துடித்தன.

மல்லிகை ரோஜாவை எழுப்பினாள். "அக்கா! அம்மா! அண்ணன் அழறான், பாருங்களேன்... அழறான்!"

ரோஜா பதட்டமாய் எழுந்து நின்றாள். இரு கரங்களால் அண்ணனின் முகத்தை ஏந்திக் கொண்டாள்.

"அண்ணா! அண்ணா! ஏன்ணா இப்படிப் பண்றே? உனக்கு நாங்கள்லாம் இருக்கோம்ணா! எங்களைவிட உனக்கு அவதான் பெரிசா போயிட்டாளா? அவ உன்னை ஒரு விளையாட்டுப் பொருளாத்தானே நினைச்சிருக்கா. அது புரியாம இப்படி உயிரைவிட எத்தனை முறை ட்ரை பண்ணுவே? நீ எப்போ வீட்டுக்கு வருவேன்னு நாங்கள்லாம் தவம் இருக்கோமே...! அது தெரியலையா உனக்கு! பேசுண்ணா... ஏதாவது பேசுண்ணா!" கண்கள் நீரை வார்க்கக் கதறினாள்.

"ஏங்க! பதறாதீங்க! அழாதீங்க. மெதுவா பேசுங்க. பொறுமையா கேளுங்க. அவர் பேசுவார். சாரதி! இவர் பேரு என்ன?"

"தாமரைச்செல்வன்."

"மிஸ்டர் தாமரைச்செல்வன்! படிச்ச நீங்களே இப்படிப் பண்ணலாமா? உங்களைச் சுத்தி இத்தனை பேர் சிந்துற கண்ணீர் உங்களை அசைக்கலையா? ஏதாவது பேசுங்க."

"அண்ணா! பாருண்ணா... அக்கா எப்படி அழறா... இன்னிக்கு அவ பர்த்டே. உனக்கு நினைவில்லையா? நாமெல்லாம் எவ்வளவு சந்தோஷமா கொண்டாடுவோம். நீ எல்லாத்தையும் மறந்திட்டியா?" மல்லிகை கண்ணீரோடு கேட்டாள்.

அவன் மறுப்பாய்த் தலையசைத்தான். கைகள் நீண்டு ரோஜாவின் முகத்தை வருடின. சிரமமாய் வாய் திறந்து, "ஹேப்பி பர்த் டே டா செல்லம்!" என்றான்.

ரோஜாவின் கண்ணீர் நின்றது.



"அண்ணா! நீ பேசினியா? நீ... நீ... என்னோட பேசினியா? அம்மா... அப்பா... அண்ணன் பேசிட்டான். என்னோட பேசிட்டான். தேங்க்ஸ்ண்ணா... தேங்க்யூ ஸார்!" என ரகுராமைப் பார்த்துக் கைகூப்பினாள்.

"தங்கையோட கண்ணீரைப் பார்த்திட்டு எந்த அண்ணனாலும் பேசாம இருக்க முடியாதுங்க. நானும் ஒரு அண்ணன்தான்!" ரகு சொல்ல, சாரதி அவனைக் கட்டிக் கொண்டான்.

"பெரியவரே! இது என் பிரெண்ட் ரகு! உங்க பையனுக்கு ரத்தம் கொடுத்துக் காப்பாத்தினவன். ரகு! இது மாணிக்கம். பேஷண்ட்டோட அப்பா!"

"வணக்கம்யா! எம் புள்ளைக்கு உசுரு கொடுத்தது டாக்டரய்யா. உதிரம் கொடுத்தது நீங்க. நீங்க ரெண்டு பேருமே எனக்குத் தெய்வம்யா!"

"பெரிய வார்த்தை யெல்லாம் பேசாதீங்க. நான் சாதாரண மனுஷன்தான். ஒரு உயிருக்கு ஆபத்துன்னா உதவுறது மனித இயல்புதானே!"

"உங்களுக்குப் பெரிய மனசு தம்பி. ஆனா இந்தப் பையன் யாருக்காக உசுரைவிடத் துணிஞ்சானோ அந்தப் பொண்ணு இதுவரை ஒரு தரம்கூட வந்து பார்க்கலை தம்பி! இந்தக் கொடுமையைத் தாங்க முடியாமத்தான் இவன் திரும்பத் திரும்ப இப்படிப் பண்றான். எங்களைப் பத்தி நினைக்க மாட்டேங்கிறானே!"

ஆச்சர்யமாய்த் திரும்பித் தாமரைச்செல்வனைப் பார்த்தான் ரகு.

"என்ன? ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லையா? ஒருவேளை... ஒருவேளை... அந்தப் பெண்ணுக்குத் திருமணமாகி விட்டதோ... அதனால்தான் இவர் இந்த முடிவை எடுத்தாரோ?"

"கல்யாணமா? அவளா? ஹும்... இன்னும் எத்தனைபேர் வாழ்க்கையோடு விளையாடி அவர்களைப் பலிகொடுக்கத் திட்டம் போட்டுக் கொண்டிருக்காளோ! ஏன் ஸார் ஒருத்தனை உண்மையாவே விரும்புற பொண்ணு எனக்காக இந்த மாடியில இருந்து உன்னால குதிக்க முடியுமா? குதித்தால்தான் உன்னை நம்புவேன் என்று சொல்வாளா?" என்றாள் ரோஜா.

"ஓ! இது ஒன் ஸைட் லவ்வா?"

"அப்படியும் இல்லை. இது வேற மாதிரி! பொழுது போகாத எவளோ ஒருத்தி என் அண்ணனை ஒரு பொம்மையா நினைச்சி விளையாண்டுட்டு தூக்கி வீசிட்டா. இந்த முட்டாள் இன்னும் அது புரியாம அவளையே நினைச் சுக்கிட்டு இப்படி சாவோடு போராடிட்டு இருக்கான்."

"அப்போ நீங்க அந்தப் பொண்ணைப் பார்த்துப் பேசலாமே! இவரோட நிலைமையை எடுத்துச் சொல்லி...!"

"அவ யாருன்னே எங்களுக்குத் தெரியாது. அவ பேரு கூடத் தெரியாது. அண்ணனுக்கு நண்பர்களும் அதிகம் கிடையாது. இந்த விபத்து நடக்கும் போது கூட இருந்த சில பேர் சொல்லித்தான் எங்களுக்கே இந்த விஷயம் தெரியும். அதுவரை எங்களுக்கு எதுவுமே தெரியாது. இவனும் சொல்லலை."

"ஐயா! எம் புள்ளை பெரிய படிப்பு படிச்சி நல்ல வேலையில சேர்ந்து கைநிறையச் சம்பாதிக்கணும்னு என்



தோட்டம் துரவெல்லாம் வித்துப் படிக்க வெச்சேன். இப்ப என்னோட தோட்டத்திலேயே நான் காசு கொடுத்துப் பூப் பறிக்கிறேன். கூலி வேலைக்குப் போறேன். எம் புள்ளைங்க படிப்பை விட்டுட்டு வேலைக்குப் போகுதுங்க. என் மனைவி முதுகொடிய உட்கார்ந்து பூக் கட்டுறா. எங்க எல்லார் உழைப்பும் இவன் மருத்துவச் செலவுக்குத்தான் சரியாப் போகுது. அதைப் பத்திக்கூட கொஞ்சமும் யோசிக்காம இவன் இப்படிப் பண்ணினா... நாங்க என்ன செய்ய முடியும்?" தழுதழுத்தார் மாணிக்கம்.

ரகுராம் சாரதியிடம் திரும்பினான். "சாரதி! பேசாமல் இவரை மனோதத்துவ டாக்டரிடம் காட்டினால் என்ன? அவர்கள் இவர் மனதைத் திறந்து பேச வைத்து விடுவார்களே! இவர் பேசினாலே போதும். எல்லா வலிகளும் வெளியேறிக் குணமாகிவிடுவார் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?"

"அதற்கும் ட்ரை பண்ணலாம். ஆனால் இவர் உடல் நிலையைப் பார்த்துவிட்டு ஒரே சமயத்தில் இரண்டு ட்ரீட் மெண்டையும் இவர் உடம்பு தாங்காது என்று சொல்லி விட்டார் டாக்டர் ராஜேஷ். ஸோ... முதல்ல உடம்பைத்தான் குணமாக்கணும்."

"சரி! இப்ப இவரோட உடம்புக்கு என்ன பிராப்ளம்?"

"மாடியில இருந்து விழுந்ததுல முதுகெலும்பு ரொம்ப மோசமா அடிபட்டுப் போச்சு. கைகால் எலும்பு மாதிரி இல்லே முதுகெலும்பு. அதில ஏதும் பிரச்சனை என்றால் அது உயிரையும் பாதிக்கும். இல்லையென்றால் கோமாவில் போய் நிறுத்திடும். அதனால் இவருக்குப் பொறுமையாகத் தான் சிகிச்சை அளித்தோம்.

முதுகெலும்பு அடிபட்டதால அவரால எழுந்து உட்காரவோ, நடக்கவோ முடியாது. எல்லாமே படுக்கையில தான்." ரகு பதறினான்.

"மை காட். சாரதி! உனக்குப் புரியவில்லையா? இவரது தற்கொலை முயற்சிக்குக் காரணம் அந்தப் பெண்ணின் நினைவு இல்லை."

"பின்னே...!"

"இவருடைய இந்த நிலைதான் காரணம்!"

"என்ன சொல்கிறாய் ரகு? எனக்குப் புரியவில்லையே!"

"சாரதி! மிஸ்டர் தாமரைச்செல்வன் வாலிபர். நம்மை விட இரண்டு மூன்று வயதுதான் சின்னவராய் இருப்பார். இப்போ நாம நம்ம வீட்டுல குளிக்கும்போதோ உடை மாற்றும்போதோ நம்ம பேரண்ட்ஸ் கூடப் பார்க்க விரும்ப மாட்டோம் இல்லையா?"

"ஆமா! இது எல்லாருக்கும் இருக்கும் கூச்ச சுபாவம்தானே!"

"யெஸ்! அதற்கே கூச்சப்படும்போது இப்படி... எல்லாவற்றிற்கும் அடுத்தவரை எதிர்பார்ப்பது எத்தனை கொடுமை சாரதி. அதுவும் ஆண், பெண் என எல்லாம் நிறைந்த இந்த ஹாலில் ஒரு இளைஞன் இயற்கை உபாதைகளைச் சொல்லக் கூடத் தவிப்பானே... அதுவும் மற்றவர் முன்னிலையிலே... சொல்வதற்கே எனக்கு வேதனையாக இருக்கிறது. இவர் எவ்வளவு சங்கடத்தைத் தாங்கிக் கொண்டிருப்பார். அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல்கூட இந்த முடிவை எடுத்திருக்கலாமே!"



ரகுவின் கூற்றில் இருந்த உண்மையைக் கேட்டுச் சாரதி உட்பட அனைவருமே விழியை விரிக்க, தாமரைச் செல்வன் நன்றிப் பெருக்கோடு கண்ணீரும் சேர்ந்து கொள்ளத் தனது கரத்தை நீட்டி ரகுவின் கரத்தைப் பற்றிக் கொண்டான்.

ரகு, அந்தக் கரத்தை மென்மையாய்ப் பற்றிக் கொண்டு, அவனைப் பார்த்து மெலிதாய்ப் புன்னகைத்தான்.

"மிஸ்டர் செல்வன்! நான் சொல்வது சரிதானே... நிஜம்தானே!"

"ஆமாம்!" என்பதாய்த் தலையை ஆட்டினான்.

"என்னால முடியலை ஸார். அசிங்கமா இருக்கு. அருவருப்பா இருக்கு. நான் தப்பு செய்தவன்தான். ஆனால் இந்தத் தண்டனை ரொம்பக் கொடுமை ஸார். வயதானவர் களுக்குக்கூட இந்த நிலைமை வரக்கூடாது ஸார்!" குலுங்கி அழுதான்.

"நீங்கள் என்ன தப்பு செய்தீர்கள் செல்வன்! அழாதீர்கள்...!"

"இல்லை ஸார். தப்புத்தான். நான் செய்தது பெரிய தப்புதான். எங்க அப்பாவும் அம்மாவும் என்னைப் படிக்க வைக்க எவ்வளவோ கஷ்டப்பட்டாங்க. அது தெரிஞ்சு நானும் நல்லாத்தான் படிச்சேன். ஆனால் எல்லாமே... எல்லாமே மாறிப் போச்சு. அவளுக்கு வேணா பொழுது போகாம என்னோட விளையாண்டிருக்கலாம். ஆனால் என் சுயபுத்தி எங்கே போனது?

நான்தானே குடும்பச் சூழ்நிலை தெரிந்து விலகி யிருக்க வேண்டும். நான்தான் தப்பு செய்தேன்.

பெற்றவர்களை உடன் பிறந்த தங்கைகளை மறந்து அவளுடன் சுற்றியது என் தவறுதான். என் அன்பை பிரியத்தைச் சோதித்துப் பார்க்க அவளுக்கு என் உயிர் தேவைப்பட்டிருக்கிறது. அதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் கண்மூடித்தனமாய் இருந்திருக்கிறேனே...!

கல்லூரியில் எத்தனை பேர் என்னை எச்சரித்தார்கள். அவள் ஒரு புதைகுழி என்று. நான் கேட்கவில்லையே! இந்த உடம்பிற்கும் உயிருக்கும் என் தாய், தந்தை உதிரத்தைப் பாலாக்கி வியர்வையை உணவாக்கி ஊட்டி வளர்த்த உடம்பை எவளோ ஒருத்திக்காக உடைத்து நொறுக்கிக் கொண்டேனே... நான் பாவிதானே! அதனால் எனக்கு இந்தத் தண்டனை தேவைதான்!"

சகுந்தலா தன் மகனின் கண்ணீரைத் துடைத்தாள்.

"ராஜா! உனக்குத்தான் அவளைப் பற்றி இத்தனை தெரிந்திருக்கிறதே... பிறகும் ஏனப்பா இப்படிச் செய்தாய்? அம்மாவின் உயிர் பதறிப் போயிற்றே!" என்றாள் கனிவாய்.

"அம்மா! நான் அவளுக்காக என் உயிரைவிட நினைக்கலம்மா. நீங்க எல்லாரும் படுற கஷ்டத்தை என்னால தாங்க முடியல்லம்மா. மல்லிக்குட்டி எவ்ளோ ஆசைப்பட்டா டாக்டருக்குப் படிக்கணும்னு... இப்போ சேல்ஸ் கேர்ள் வேலைக்குப் போறாளே... இந்த ரோஜாச் செல்லம்! கணவன் குழந்தைகளோடு சந்தோஷமாக வாழ்ந்திருக்க வேண்டியவள்! என்னால்... என்னால்தானே இப்படி நிற்கிறாள்.

அப்பா! நீங்க எல்லாம் கஷ்டப்பட்டு உழைக்கிற பணம் முழுவதையும் நான் படுக்கையில் கிடந்தே அழிக்கிறேனே...!



என்னால் நீங்கள் யாரும் கஷ்டப்படக்கூடாது என்றுதான் ஒரேயடியாய்ப் போய்விட்டால் உங்கள் பாரம் தீரும் என்றுதான் முயற்சிக்கிறேன். ஆனால் மரணம்கூட என்னை வெறுக்கிறதேம்மா!"

"அப்படிச் சொல்லாதேப்பா! எங்களுக்குத் தலைமகன் நீ. நான் உன் தங்கைகள் எல்லோருமே உன்னை உயிராய் விரும்புவது உனக்குத் தெரியாதா? காசு என்னய்யா காசு! எம் புள்ளை எழுந்து நடமாடினா போதும்யா. அதுக்காக அப்பா எவ்வளவு வேணா செலவு பண்ணுவேன்யா!" என்றார் மாணிக்கம்.

சாரதி முன்னே வந்தான். "என்ன தாமரைச்செல்வன்! இதுக்காகவா தற்கொலைக்கு முயற்சி பண்ணீங்க? முதல்ல தெரியாம செய்த தப்பிற்கு மேலும் ஒரு தப்பைச் செய்கிறீர்களே! உங்கள் உடல்நிலை குணமாகி நல்லா சம்பாதித்து உங்கள் தங்கையைப் படிக்க வையுங்கள்.

பெரிய தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுங்கள். இத்தனை வருடமாய் உங்களுக்காக உழைத்துத் தேய்ந்த பெற்றோர்களை உட்கார வைத்துச் சாப்பாடு போடுங்கள். அதுதான் உங்கள் தவறுக்கு நீங்கள் செய்யும் பிராயச்சித்தம். அதை விட்டுட்டு அவர்களை மேலும் கஷ்டப்படுங்கள் என்பது போல் இப்படிக் கோழை போல் உயிரை மாய்த்துக் கொண்டால் எப்படி? நீங்கள் போய் விட்டால் உங்கள் குடும்பம் என்ன பாடுபடும் என்று நினைத்துப் பார்த்தீர்களா?"

"டாக்டர்! எனக்கும் தெரிகிறது டாக்டர். ஆனால் இப்படி நடமாட முடியாமல் படுக்கையில் கிடந்து அவர்கள்

உழைப்பை உறிஞ்சி வாழ எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு டாக்டர். என்னால அவங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லையே!"

"அப்படிச் சொல்லாதீர்கள் செல்வன்! மருந்து மாத்திரையைச் சாப்பிட்டால்தானே உடம்பு குணமாகும். நீங்கள் ஏன் சாப்பிடவில்லை?" ரகு கேட்க, தாமரைச் செல்வன் சாரதியை ஏறிட்டான். மீண்டும் ரகுவை நோக்கி

"இல்லை ஸார்! அதில மட்டும் என் உடம்பு குணமாகாது!" என்றான் விரக்தியாய்.

"ஏன்? ஏன் இப்படிச் சொல்றீங்க?"

சாரதி தயக்கமாய் ரகுராமைப் பார்த்தான். "ரகு அவர் சொல்றது உண்மைதான். இந்த மருந்து, மாத்திரை எல்லாம் அவர் ஹெல்த்திற்காகத்தான். அவருக்கு ஒரு மேஜர் ஆபரேஷன் செய்யணும். அதைத் தாங்கும் அளவிற்கு இவரது உடம்பு பலமா இருக்கணும். அதே சமயம் ஆபரேஷனுக்குக் குறைந்தது ரெண்டு லட்சமாவது ஆகும். ஆபரேஷனை இங்க பண்ண முடியாது. வெளியே வேற ஸ்பெஷலிஸ்ட் வெச்சுத்தான் பண்ண முடியும்!"

"ஓ! அப்ப பணம்தான் பிரச்சனையா? பணம் பிரச்சனை என்றால் அதைப் புரட்ட எத்தனையோ வழி இருக்கே... நிலைமையைச் சொல்லி தெரிஞ்சவங்ககிட்டே கேட்கலாம். பேப்பர்ஸ்ல விளம்பரம் கொடுக்கலாம்."

"பணம் மட்டும் பிரச்சனை இல்லைடா!"

"பின்னே?"



"அது... அது வந்து... இது முதுகெலும்பில பண்ற ஆபரேஷன். குணமாக சான்ஸ் கொஞ்சம் கம்மிதான். குணமாகவும் செய்யலாம்! இல்லேன்னா...!"

"இல்லேன்னா...!" என்ற ரகு சாரதியின் பதிலில் ஆடிப் போனான்.

## 6

ரோஜாவே!
நீ இதமாய் மலர்ந்து
சிரித்தாலும் இந்தச் சூரியன்
உன்னைத் தன் நெருப்புக்
கதிர்களால் எரிக்கின்றானே!
அதற்காகவே அந்தச் சூரியனை
வெறுக்கிறேன் நான்!

கணினி முன்பாக அமர்ந்திருந்த அந்த அழகான ஆனந்த் தன் நெற்றியை விரலால் கீறிக் கொண்டான். காதிற்குக் கொடுத்திருந்த கைப்பேசியில் இன்னும் அந்தப் பெண் பேசிக் கொண்டே இருக்க, ஆனந்தின் முகம் கடுத்தது.

"இதோ பாருங்கள்! நீங்கள் யாராக இருந்தாலும் சரி. என்னுடைய வேலையைக் கெடுக்க வேண்டாம். நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன். போனை வைத்துவிட்டு வேறு ஏதேனும் வேலை இருந்தால் போய்ப் பாருங்கள்!"

"மிஸ்டர் ஆனந்த்! அவசரப்பட்டு போனை வைத்து விடாதீர்கள். இங்கு என்ன நடக்கிறது என்றே தெரியாமல் வேலைதான் முக்கியம் என்று நீங்கள் இருந்தால் இனி உங்கள் மனைவி உங்களுக்கில்லை!" கீர்த்தனா கரகரப்பாகவே சொல்ல, ஆனந்தின் குரல் உஷ்ணமானது.

"யூ டாமிட்! யார் நீ? என் மனைவியைப் பற்றி நீ ஒன்றும் பேச வேண்டாம். அவளைப் பற்றி எனக்குத் தெரியும்!"

"என்ன தெரியும் ஆனந்த்! உங்களுக்கு என்ன தெரியும்? ஹேமாவை உங்களுக்குத் தெரியும் முன்பே எனக்குத் தெரியும். அவளைப் பற்றி இந்த ஊருக்கே தெரியும்!"

"என்ன தெரியும் உனக்கு!" கோபமாய்க் கேட்டதும் கீர்த்தனாவின் முகம் புன்னகைத்தது. மாட்டிக் கொண்டான் பயல் என வெற்றிச் சிரிப்போடு கதையளக்க ஆரம்பித்தாள்.

"அவளோட கடந்த காலம் ரொம்ப மோசமானது. அதையெல்லாம் உங்ககிட்ட சொல்லாம மறைச்சித்தான் அவளை உங்க தலையில கட்டிட்டாங்க. நீங்க நல்லா ஏமாந்திட்டீங்க!"

"ஏய்! உனக்கு வெட்கமாக இல்லை. ஒரு பெண்ணைப் பற்றி இப்படிப் பேசலாமா? உனக்கு இதுதான் வேலையா? இப்ப அவள் என் மனைவி. என்னில் சரி பாதி. அவளைப் பற்றி எதுவும் பேசாதே!"

"மண்ணாங்கட்டி! இந்த மாதிரி டயலாக் எல்லாம் விடாம சொல்றதைக் கேளு மிஸ்டர். இங்கே அவள் தன்னோட வீட்ல இருந்துகிட்டு என்ன ஆட்டம் போடுறா தெரியுமா? கிஷோர் வீட்டுக்கே வந்திடுறான். இதெல்லாம் உன் மாமியார் வீட்ல யாரும் கண்டுக்கிறதே கிடையாது தெரியுமா!"

"என்ன உளர்ற? அது யார் கிஷோர்?"



"என்னைக் கேட்டா? உன் பெண்டாட்டிகிட்ட கேளு. அப்படியே அதிர்ந்திடுவா. இது ஆறேழு மாசமா நடக்குது. எனக்குத்தான் இதைக் கண்டாலே மனசு கொதிக்குது. நீ எவ்வளவு நல்லவன்னு தெரியும் எனக்கு. அதான் உன் காதில போட்டு வெக்கிறேன். வேலை வெட்டின்னு அங்கேயே உட்கார்ந்திருந்தா உன் லைஃப்பே போயிடும். சீக்கிரமா வந்து அவளையும் கூட்டிட்டுப் போயிடு. உன் நல்லதிற்குத்தான் சொல்றேன்."

மரியாதை காற்றில் பறந்து போக அவள் தீவிர மாகப் பேசிக் கொண்டே போக, மறுமுனையில் ஆனந்த் அவசரமாக யோசித்தான்.

'பேசுவது யாராக இருக்கும்? யாராக இருந்தாலும் அவர்களது நோக்கம் ஹேமாவின் மீது வீண் பழி சுமத்தி அவள் பெயரைக் கெடுப்பதுதான். இது யார் என்று கண்டுபிடிப்பதைவிட பிரச்சனை பெரிசாக வளர்வதைத் தடுப்பதுதான் மிக முக்கியம். இவள் சொல்வதை நான் நம்பவில்லை யென்றால் இவள் பேச்சை நிறுத்தப் போவதில்லை.

மீண்டும் மீண்டும் ஏதேனும் பேசி மேலும் மேலும் தன் மனைவியைத் தரக்குறைவாக விமர்சிப்பாள். இவள் வாயை அடைக்க வேண்டும். அதற்கு இவள் சொல்வதை நம்புவதாகக் காட்டிக் கொள்ள வேண்டும்.'

"என்ன பேச்சையே காணோம். நான் சொல்றதுல நம்பிக்கை இல்லையா! வேண்டுமானால் இன்னொன்று சொல்லவா!" கீர்த்தனா கேட்க, பதட்டமாய் மறுத்தான் ஆனந்த்.

"வேண்டாங்க. நீங்க சொல்றதை நான் நம்புறேன்."

'ஹப்பாடா!' என்ற பெருமூச்சு விட்டாள் கீர்த்தனா. 'ஹேமா! இனி உன் கதி அதோ கதிதான்!' மனசுக்கு எக்காளமிட்டாள்.

"ஆனால்... நீங்கள் சொல்வதை அப்படியே என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆதாரம் இல்லாமல் நான் எப்படி நம்ப முடியும்?" மறுமுனையில் ஆனந்த் கேட்க உற்சாகமாய்ச் சொன்னாள்.

"எனக்குத் தெரியும். நீங்க என்ன சாதாரண ஆளா? படிச்ச அறிவாளி. கம்ப்யூட்டர்ல புலி. இதெல்லாம் யோசிச்சுத்தான் கஷ்டப்பட்டு அவன் போன் நம்பரை கண்டுபிடிச்சி வெச்சிருக்கேன். சொல்லட்டுமா?"

"ம். சொல்லுங்க...!" என்றவாறு பேனாவை எடுத்து அருகே இருந்த பேப்பரில் அவள் சொன்ன செல் நம்பரை குறித்துக் கொண்டான். கோபத்தில் முகம் இறுகியது. இத்தனை துணிவாய் ஒருவனது தொலைபேசி எண்ணை தருகிறாள் என்றால் விசயம் விபரீதமாய்ப் போகிறது என்று உணர்ந்து கொண்டான்.

"கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. இது அவன் நம்பர்தான்னு எப்படித் தெரியும். உங்களுக்கு அவனைத் தெரியுமா?"

"சேச்சே! எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது. உங்க மேலே உள்ள அக்கறையால ரொம்பக் கஷ்டப்பட்டு கண்டுபிடிச்சேன். நீங்க என்னை நம்பணுமேன்னுதான் தந்தேன்."



"ரொம்ப நன்றி. கட்டினவ மேல உள்ள நம்பிக்கையால கண்மூடித்தனமா இருந்திட்டேன். நீங்க என் கண்ணைத் திறந்திட்டீங்க. இனிமே நான் என்ன பண்றது? எனக்குக் குழப்பமா இருக்கே!"

நெற்றியில் அறைந்து கொண்டாள் கீர்த்தனா. என்ன படித்தான் இவன்! போட்டுக் கொடுப்பவளிடமே ஐடியா கேட்கிறானே! முட்டாப் பயல்! இவனுக்கு எப்படி அவ்ளோ பெரிய கம்ப்யூட்டர் கம்பெனியில் பெரிய பதவியையும் கொடுத்து மாதம் முக்கால் லட்சம் சம்பளமும் கொடுக்கிறார்கள். சரியான மாங்காய் மடையனாக இருக்கிறானே! இருக்கட்டும். நமக்கு நல்லதுதான்.

"என்ன ஆனந்த்? குழந்தை மாதிரி கேட்கிறீங்க! தப்பு செய்றது உங்க மனைவி. அவளுக்கு என்ன தண்டனை கொடுக்கணும்னு நான் சொல்ல முடியுமா? இதுவே நீங்க படிக்காத தற்குறியா இருந்தா அவளைத் தெருவில் இழுத்துப் போட்டு அடிக்கலாம். ஊரைக் கூட்டி நியாயம் கேட்கலாம்!"

'ஓஹோ! அந்த எண்ணமெல்லாம் உனக்கு இருக்கிறதா?' ஆனந்தின் பற்கள் நறநறத்தன.

"ஆனால் நீங்கள் படித்தவராயிற்றே! அதனால் டீஸன்ட்டா பிஹேவ் பண்ணுங்க. சொல்லிப் பாருங்க. திருந்தினால் உங்ககூட அழைச்சுட்டுப் போயிடுங்க. இல்ல இப்படித்தான் இருப்பேன்னு சொன்னா இருக்கவே இருக்கு கோர்ட்! நீங்கதான் ஜம்முன்னு ஹேண்ட்ஸமா இருப்பீங்களே! உங்களுக்கு என்ன, வேற பெண்ணா கிடைக்காது. எது செய்தாலும் உடனே செய்யுங்க ஆனந்த்!"

"ரொம்ப அவசரமோ?"

"எல்லாம் உங்க நல்லதுக்குத்தான் ஆனந்த் தப்பு நடக்குதுன்னு தெரிஞ்ச உடனே அதைச் சரி பண்ணிடணும். அதுக்குத்தான் சொல்றேன்."

"உங்களுக்குத்தான் எம் மேல எவ்வளவு அக்கறை உங்களை நேர்ல பார்த்து நன்றி சொல்லணும்ங்க நீங்க யாரு? உங்க பேர் என்ன?" ஆனந்த் குழைவாய்க் கேட்டதும் போனை கட் பண்ணினாள் கீர்த்தனா. மளமள வென சிம்மைக் கழற்றி எறிந்தாள்.

நிம்மதியாய் மூச்சு விட்டாள். ஹேமா! நாளைக்கு வர்றேன்டி. உன் முகம் எப்படி இருக்குதுன்னு நான் பார்க்கணுமே. என் மீதா சேற்றை வாரியிறைத்தாய் இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் புருஷனும் மாமியார் மாமனாரும் உன் மீது சாணியையே அள்ளி வீசப் போகிறார்கள். அப்போ நீ எப்படி இருப்பே? உன் அண்ணனுக்கு இந்தப் பிறந்த நாளை ஜென்மம் முழுக்க மறக்க முடியாதுடி!

பெரிய கண்ணாடியின் முன் வந்து அமர்ந்தாள். தனது அலங்காரங்களைக் கலைக்க ஆரம்பித்தாள். மனம் வெம்பியது. மூன்று மணி நேரமாய் உட்கார்ந்து செய்த அலங்காரம். இதற்காகவேனும் ஒருமுறை பார்த்தானா ராம். இடியட்! ஜடம். வெறும் ஜடம். முணுமுணுத்தவாறு நகைகளைக் கழற்றினாள்.

போனை வைத்த ஆனந்த் சில நிமிடம் கண்களை மூடி யோசித்தான். இது யாருடைய வேலையாக இருந்தாலும் முதலில் ஹேமாவை எச்சரிக்க வேண்டும். விஷயம் பெரியவர்கள் வரை போய்விட்டால் அசிங்கமாகி விடும். அதற்குள் இதைக் கண்டுபிடிக்க வேண்டும். ரகுவிடம்



சொன்னால் எப்படியும் கண்டுபிடித்து விடுவான். இந்த எண்ணுக்குரியவன் யாராக இருக்கும்?

இன்னொருவன் மனைவியைப் பற்றிக் குறை சொன்னவள் மிகத் துணிச்சலாக இந்த எண்ணைத் தருகிறாள் என்றால் இந்தப் போனுக்குரியவன் நிச்சயமாய் போன் செய்தவளின் கையாளாகத்தான் இருக்க வேண்டும். முதலில் இவனைப் பிடித்தால் அவள் சுலபமாக மாட்டி விடுவாள்.

எதற்காக இந்தப் போன் வந்தது? திருமணமாகி இரண்டு வருடம் கழித்தே ஹேமா உண்டானாள். தலைப் பிரசவம் என்பதால் அதோடு தூரமாய் இருப்பதால் ஏழாம் மாதமே சீமந்தம் செய்து அழைத்துப் போயினர். அது முடிந்து குழந்தையும் பெற்று மூன்று மாதமாகும்போது திடீரென்று இந்தப் போன் வரக் காரணம் என்ன?

திருமணத்திற்கு முன்பே தனக்கு ஹேமாவைத் தெரியும் என்பதோ... ஹேமாவின் அண்ணன் ரகு தன்னுடைய நெருங்கிய நண்பன் என்பதோ நிச்சயம் இவளுக்குத் தெரிந்திருக்காது என்றே தோன்றியது.

ஆனால் இவள் தன்னைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறாளே! தன் உருவம், படிப்பு வேலை சம்பளம் வரை தெரிந்து வைத்திருக்கிறாள் என்றால் நிச்சயம் இவள் யாரோ அல்ல. நம் குடும்பத்திற்கு அல்லது ஹேமாவிற்குத் தெரிந்த பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். உறவினராகக் கூட இருக்கலாம்.

அப்படி உறவினராக இருந்தால் ஏன் ஹேமாவைப் பற்றித் தரக்குறைவாய்த் தன்னிடம் பேச வேண்டும். கோர்ட்

வரை செல்ல ஆலோசனை கூறும் அளவிற்கு ஹேமாவை வெறுப்பது யார்? ஏன்?

மூளையைக் கசக்கிப் பிழிந்து விடை வராமல் போகவே, தனது செல்லை எடுத்துத் தனக்கு வந்த எண்ணைத் தொடர்பு கொண்டான். கனத்த மவுனம் மட்டுமே பதிலாய் வந்தது. உடனே புரிந்து போய்விட மனைவியைத் தொடர்பு கொண்டான்.

குழந்தையைத் தூங்க வைத்துக் கொண்டிருந்த ஹேமா, செல் சிணுங்கியதும் அவசரமாய் எடுத்தாள். கணவனின் அழைப்பு என்றதும் புன்னகையோடு ஆன் செய்து காதிற்குக் கொடுத்தாள்.

"என்னங்க! இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க. லஞ்ச் பிரேக்கா?" மனைவியின் குரலில் மற்றதெல்லாம் மறந்துவிட இதயம் லேசானது.

"ம்! ஆமாண்டா. நீ சாப்பிட்டியா? பையன் என்ன பண்றான்?"

"தூங்குறான். இப்பத்தான் தூங்க வெச்சேன். அத்தை மாமால்லாம் எப்படி இருக்காங்க? நீங்க எப்படி இருக்கீங்க?"

"நேத்து நைட் உங்கிட்ட பேசும்போது எப்படி இருந்தோமோ அதே மாதிரிதான் இப்பவும் இருக்கோம்."

"சரி, ஈவ்னிங்தானே பேசுவீங்க. என்ன இப்போ பண்றீங்க? புள்ளை நினைவு வந்திடுச்சோ சாருக்கு...!" குறும்பாய்க் கேட்டாள் ஹேமா.

"ஏன்? பொண்டாட்டி ஞாபகம் வரக்கூடாதா? உடனே உன்னைப் பார்க்கணும் போல இருக்குடா!"



"என்ன? மதியமே ரொமாண்டிக்கா பேச ஆரம்பிச்சிட்டீங்க. பக்கத்துல யாரும் இல்லையா?"

"எல்லோரும் சாப்பிடக் கிளம்பிட்டாங்க. தனியாத்தான் இருக்கேன்."

"அதான் மூடு மாறுது. போங்க... போய்ச் சாப்பிடுங்க."

"ஏன்டி விரட்டுற? என்னைப் பார்க்கணும்னு தோணலையா உனக்கு?"

"தோணாமலா இருக்கும். எப்பவும் உங்களைப் பார்த்திட்டுத்தான் இருக்கேன். இதோ இப்பக்கூட உங்களைப் பார்த்திட்டுத்தான் இருக்கேன்."

"ஏய்! எனக்குத் தெரியாம உன் அண்ணன் உனக்கு ஏதாவது ரகசிய கேமரா செட் பண்ணின செல் வாங்கித் தந்திட்டானா? நான் வாங்கித் தந்த போனைத் தூக்கி வீசிட்டியா?"

"ஆளைப் பாரு. தூக்கி வீசுவாங்களா? இது நீங்க தந்த பர்ஸ்ட் கிஃப்ட் ஆச்சே. எத்தனை கோடி தந்தாலும் இதை யாருக்கும் கொடுக்க மாட்டேன். நம்ம ரூம்ல இருக்கிற நம்ம ஜோடி போட்டோவைப் பார்த்திட்டுப் பேசுறேன்."

"அதானே பார்த்தேன். ஆமா கிஃப்ட்னு சொன்னதும் தான் ஞாபகம் வருது. ரகு பர்த்டே எப்படிப் போகுது? கேக் கட் பண்ணினானா? வீட்ல இருக்கானா?"

"இல்லங்க. காலையில கோவிலுக்குப் போயிட்டு வந்தோம். சாப்பிடும் போதே சாரதி அண்ணாகிட்ட இருந்து போன் வந்தது. ஏதோ அவசரமா பிளட் வேணும்னு கேட்டாங்களாம். உடனே கிளம்பிட்டான். இன்னும் வரலை!"

"எப்போ போனான்?"

"காலையில பத்து மணிக்கு முன்னாலேயே போயிட்டான். இன்னும் மதியச் சாப்பாட்டுக்குக்கூட வரலை!"

"சரி... வேற எதுவும் விசேஷம் உண்டா அங்கே?"

"விசேஷம்னா இனிமேத்தான். அண்ணன் கல்யாணம் தான்!"

"கன்ஃபர்ம் பண்ணியாச்சா! எங்கிட்ட யாருமே சொல்லலை!"

"ஏங்க! உங்களுக்குத் தெரியாமலா நடக்கும். அம்மாவுக்குத்தான் இன்னிக்கே முடிந்தாலும் அந்தக் கீர்த்தனாவை அண்ணனுக்குக் கட்டி வெச்சிடுவாங்களே அவன்தான் பிடி கொடுக்காம போறான். எப்படியும் இன்னும் ரெண்டு மாசத்தில கல்யாணம் பண்ணிடணும்னு சொல்றாங்க!"

"ஹேமா! அங்கே வேற எதுவும் பிரச்சனை இல்லையே!" கணவனின் கேள்வியில் துணுக்குற்றாள் பதட்டமானாள்.

"என்னங்க! என்ன பிரச்சனை? ஏன் கேட்கிறீங்க?"

"ஷ்... பதறாதே! சும்மாதான் கேட்கிறேன். உன் ஃபிரண்ட்ஸ், ரிலேடிவ்ஸ் யாரும் நம்ம வீட்டிற்கு வந்தாங் களா? இல்லை... நீ யார் வீட்டிற்காவது போனியா?"

"என்னங்க! என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் கல்யாணமாகி ஒவ்வொரு திசைக்குப் போயிட்டாங்க. நான் இந்தக் குட்டிப் பையனை வெச்சிக்கிட்டு எங்கே போறது? பத்து நிமிஷத்துக்கு ஒரு வாட்டி நனைச்சுடுறான். உடனே அழ



ஆரம்பிச்சுடுவான். இவனைக் கவனிக்கவே எனக்கு ட்வெண்டி ஃபோர் ஹவர்ஸ் போதலை. இதுல நான் எங்கே வெளியே போறது?"

"ரொம்பச் சுட்டித்தனம் பண்றானா? போனை அவன் காதில வை. அம்மாவைத் தொந்தரவு பண்ணாதேன்னு சொல்றேன்."

"ஆமாமா! இவர் சொன்னதும் அவர் கேட்பாரு. அப்படியே நீங்கதான். சரியான வாலு!"

"ஏய்! பக்கத்திலே இல்லேன்ற தைரியத்திலே பேசுறியா?"

"இருந்தாலும் இப்படித்தான் பேசுவேன். சரி... எப்போ வர்றீங்க? உங்களைப் பார்க்க எங்களுக்கு ஆசையா இருக்கு!"

"ம்... வர்றேன்டா! நெக்ஸ்ட் வீக்ல வரலாம்னு இருக்கேன்."

"என்ன? நிஜமாவா! ஏங்க... இதை முதல்ல சொல்லாம மத்தக் கதையெல்லாம் பேசிட்டு இருக்கீங்க. என்னிக்கு வர்றீங்க?" துள்ளலாய்க் கேட்டாள் ஹேமா.

"கன்ஃபர்ம் பண்ணிட்டு சொல்றேன்டா. குழந்தையைப் பார்த்துக்க. உன் உடம்பையும் கவனிச்சுக்க. வேளா வேளைக்குச் சாப்பிடு."

"சரிங்க. நீங்களும் சரியா சாப்பிடுங்க."

"ம்... நான் அப்புறம் போன் பண்றேன். ஆமா! நம்ம வீட்டுக்கு இன்னிக்கு யாருமே வரலையா? உங்க அண்ணனுக்கு விஷ் பண்ண...!"

"ம்... வந்தாங்க... வந்தாங்க...!" சலிப்பாய்ச் சொன்னாள்.

"யார் யாரெல்லாம் வந்தாங்க?" பரபரப்பாய்க் கேட்டான்.

"வேற யாரு வருவாங்க? எல்லாம் ரெகுலர் கெஸ்ட்தான். எங்க மாமாவும் அவரோட பொண்ணும்தான்!"

"என்ன ஹேமா! வாய்ஸே சரியில்லையே?"

"ம்ப்ச்! ரொம்ப அப்செட்டாக்கிட்டாங்க அந்தக் கீர்த்தனா! நான் ரொம்ப டென்ஷனாகிட்டேன்."

எதிர் முனையில் அதிர்ந்தான் ஆனந்த்.

"என்னாச்சு ஹேமா! எதுவும் பிரச்சனையா? அவளோட சண்டை போட்டியா? என்ன பிரச்சனை! சீக்கிரம் சொல்லு."

"ஏங்க! நீங்க பதறுற அளவுக்குப் பெரிய பிரச்சனை இல்லைங்க. அவ கொஞ்ச நாளாவே ஒரு மாதிரி அசிங்கமா பேசுறாங்க. இன்னிக்கும் அப்படியே பேசினாளா? அதான் கோபம் வந்திடுச்சு. கத்திட்டேன். வாயை மூடிட்டுப் போயிட்டா!" என்றவாறு காலையில் நடந்தவைகளைச் சொன்னதும் பதறிப் போனான்.

"என்ன ஹேமா! நீ ஏன் அவகிட்ட வாயைக் கொடுக்கிறே?"

"என்னங்க நீங்க! அவ மட்டும் இப்படிப் பேசலாமா? இதுகூடப் பரவாயில்லை. அன்னிக்கு அண்ணனை வைத்துக் கொண்டே இதைவிட அசிங்கமாப் பேசினா. எனக்குச் சொல்லவே அசிங்கமா இருக்கு!"



"வேண்டாம் ஹேமா! அவ அல்ட்ரா மாடர்ன் கேர்ள். அவளுக்கு இந்தப் பேச்செல்லாம் அசிங்கமாத் தெரியாது. நமக்குப் பிடிக்கலைன்னா நாமதான் விலகிடணும். அவகிட்ட இந்த மாதிரியெல்லாம் பேச வேணாம். என்ன இருந்தாலும் அவ உன் அண்ணனுக்கு மனைவியா வரப் போறவ. அவளை முறைச்சிக்காதே!"

"ம்க்கும்...! மாமாவும் அம்மாவும்தான் இதையே சொல்லிட்டுத் திரியுறாங்க. இப்ப நீங்களுமா? எல்லாருமா சேர்ந்து எங்க அண்ணனைப் புதைகுழியில தள்ளிடாதீங்க. நான் விடமாட்டேன்!"

"ஹேமாம்மா! சொன்னாக் கேள். நீ பேசியதற்கு அவள் எதுவும் பதில் பேசவில்லையா?"

"அம்மா என்னை நிற்கவே விடவில்லை. ரூமுக்குள்ளே கூட்டிட்டு வந்திட்டாங்க. அவ எப்போ போனான்னே தெரியாது."

"ஓ.கே. இப்ப நான் சொல்றதை மட்டும் கேள். நான் வர்ற வரைக்கும் நீ எங்கிட்ட போன்ல பேசுறது யாருக்கும் தெரிய வேண்டாம். கூடுமானவரைக்கும் வெளியே இருந்து யாரும் வந்தா அமைதியாவே இரு. யாராவது உன்கிட்ட என்னைப் பத்தியோ நம்மைப் பத்தியோ ஏதேனும் துருவிக் கேட்டா உடனே எனக்குப் போன் பண்ணிச் சொல்லு!"

கணவன் சொல்லிக் கொண்டே போக உண்மையாகவே ஹேமா கலவரமானாள். முகம் பயத்தில் வெளிறியது.

"என்னங்க! என்னவெல்லாமோ சொல்றீங்க? எனக்குப் பயமா இருக்கே! எதுவும் பிரச்சனையாங்க. சொல்லுங்க!"

"இல்லைடா! அப்படியெல்லாம் எதுவும் இல்லை!"

"இல்லை. எதுவோ இருக்கு. சொல்லுங்க. எதுவா இருந்தாலும் சொல்லிடுங்க!"

"அதான் சொல்றேனில்ல...! பயப்படுறதுக்கு ஒண்ணுமே இல்லை. ஒரு சின்னக் குழப்பம். அதான்!"

"என்ன குழப்பம்?" பயமாகவே கேட்டாள்.

"சொன்னா நீ கேலி பண்ணிச் சிரிப்பே?"

"அதெல்லாம் மாட்டேன். முதல்ல சொல்லுங்க."

"விட மாட்டியே ஹேமா! இன்னிக்கு அதிகாலையில ஒரு கனவு!"

"கனவா! என்ன கனவுங்க?"

"நாம ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கணும்னு யாரோ திட்டம் போடுறாங்க. நம்மைப் பிரிக்கணும்னு பிளான் பண்றாங்க!"

"ஐயோ! அதிகாலையில காணும் கனவு பலிக்குமாமே!"

"அப்படி யெல்லாம் எதுவும் கிடையாது. வீணா கற்பனை பண்ணிக்காதே! நம்மைப் பிரிக்க யாராலும் முடியாது. நான் ஏன் உங்கிட்ட இதைச் சொல்றேன்னா நீ யார்கிட்டயும் என்னைப் பத்தி ஆஹா... ஓஹோன்னு சொல்லாதே... கண்ணு பட்டுடும்!"

"பரவாயில்லிங்க. நீங்ககூட இதெல்லாம் நம்ப ஆரம்பிச்சிட்டீங்க!"

"பார். நான் சொல்வதை மட்டும் கேள். அநாவசியமாய் யாரிடமும் வாக்குவாதம் செய்யாதே. சரியா? அதேபோல்



யாரும் எதையும் விசாரித்தால் உடனே எனக்குப் போன் பண்ணு. நான் ரகுவிடம் பேசிக் கொள்கிறேன்."

"எனக்கு ஒண்ணும் புரியலையே! உங்களைப் பத்தி என்ன விசாரிப்பாங்க?"

"சில விஷயங்கள் புரியாமல் இருப்பதுதான் சரி. கண்டதையும் யோசித்து இருக்கும் கொஞ்சூண்டு மூளையையும் வீணாக்கிவிடாதே!"

"என்ன? எனக்கு கொஞ்சூண்டு மூளையா? உங்களுக்கு...!"

"ஓ.கே.! நமது ஆராய்ச்சியை இரவில் வைத்துக் கொள்வோம். நைட் பேசுறேன். இப்போ ஒன்னு தந்துட்டு வை!"

"என்ன ஒன்னு?"

"வழக்கமா தர்றதுதான்டி!"

"அதெல்லாம் தர முடியாது."

"சரி, நான் தர்றேன். வாங்கிக்கோ. ம்மா... ம்மா... வைக்கட்டுமா?"

"ம்...!"

"பைடா...!" என்றவாறு போனை வைத்து விட்டான் ஆனந்த்.

ஹேமா அமைதியாய் எழுந்து அறைக்குள்ளே நடை போட்டாள். யார் விசாரிப்பார்கள்? இவர் என்ன சொல்கிறார்? இவருக்கு இதே வேலைதான். எதையாவது சொல்லிப் பயமுறுத்திவிட்டு பிறகு போன் செய்து நன்றாகக்

குழம்பினாயா என்று கேலி செய்வதுண்டு. இன்று அப்படித்தான் இருக்குமோ?

இயல்பாகவே எண்ணிய போதும் மனம் கொஞ்ச நெருடத்தான் செய்தது. அதற்கு மேலும் அவளைச் சிந்திக் விடாமல் குழந்தை சிணுங்கியது. தன் நினைவுகளை புறந்தள்ளிவிட்டுக் குழந்தையிடம் ஓடினாள்.

ஆனந்தால் வேலையில் ஒன்ற முடியவில்லை முகம் தெரியாத அந்தப் பெண்ணின் பேச்சினில் இருந் கபடத்தை எண்ணியே மனம் குழம்பித் தவித்தது.

ஹேமா சொல்வதை வைத்துப் பார்த்தால் அந்த கீர்த்தனாவாக இருக்குமா? அவளாக இருந்தால் த சொந்த அத்தை மகளையே அந்நிய ஆடவனோ சம்பந்தப்படுத்திப் பேசுவாளா? அதையும் என்னிட சொல்வாளா?

இருக்காது. இது வேறு யாரோ! பேப்பரில் குறித் வைத்திருந்த போன் நம்பரைப் பார்த்தான். பேசாம இவனுக்குப் போன் பண்ணிப் பார்த்து விடுவோம என எழுந்த எண்ணத்தை உடனே அழித்தான். அப்படி செய்தால் ஹேமாவை நானே சந்தேகித்தது போலா விடுமே...! ஒரு நாளும் அந்தத் தவறைச் செய்யக் கூடாது

பேசாமல் ரகுவிடம் சொல்லி முடிவெடுப்போம் என் முடிவுடன் நண்பனின் கைப்பேசி எண்களை அழுத் விட்டுத் தொடர்பு கிடைக்கக் காத்திருந்தான்.



# 7

ரோஜாவே!
நீ சரியென்று சொன்னால்
உனக்கு உயிர்கொடுக்கும் வேராக...
உன்னைத் தாங்கும் கிளையாக...
உன்னைப் போர்த்திக் கொள்ளும் இலையாக...
மாறிவிட எனக்குச் சம்மதம்!

“சாரதி! நீ என்ன சொல்றே?” நம்ப முடியாமல் கேட்ட ரகுவைப் பார்த்துத் தலையசைத்தான் சாரதி.

“ஆமாண்டா. இது கொஞ்சம் ரிஸ்க்தான். கண்டிப்பா குணமாகி எழுந்து நடமாடுவார்னு சொல்ல முடியாது. சில சமயம் நினைவு திரும்பாமலே உயிரிழக்கவும் வாய்ப்புண்டு. இல்ல... இப்படியே எந்த அசைவும் இல்லாமலே கடைசி வரை இருக்கவும் வாய்ப்புண்டு.”

“ம்ப்ச்! உறுதியாகச் சொல். உயிர் பிழைக்க முடியுமா... முடியாதா?”

“சான்ஸ் இருக்கு. பட்! முடிவு எதுவா இருந்தாலும் நாம ஒத்துக்கணுமே!” சாரதி பெருமூச்சோடு சொல்ல, தாமரைச்செல்வன் புன்னகைத்தான்.

“கேட்டீங்களா சார்! இதுக்காகத்தான்... இதுக்காகத் தான் நான் இந்த முடிவை எடுத்தேன். கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்து ஆபரேஷன் பண்ணி நான் பொணமா வாழுறதை விட இப்பவே செத்துப் போயிடுறேன் ஸார். என்னால யாருக்கும் எந்தப் பயனும் இல்லை ஸார்!”

மாணிக்கம் மகனருகே வந்தார். “அப்படிச் சொல்லாத ராஜா. நீ நம்ம குடும்பத்துக்கு வேணும் ராசா. எங்களுக்குக்

கொள்ளி போட நீ வேணும்யா. எங்க காலத்துக்குப் பிறகு இந்தப் புள்ளைங்க ஆதரவில்லாம நிக்குமே. நீதானய்யா அதுங்களுக்கு ஒண்ணுன்னா கூட நின்னு தாங்கணும். இப்படிப் பேசாதய்யா!"

தந்தையின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"அப்பா! என்ன மன்னிச்சிடுங்கப்பா. வயசுக் கோளாறுல நல்லது எது கெட்டது எதுன்னு தெரியாம இப்படிப் பண்ணிட்டேம்பா! தோட்டத்திற்கு முதலாளியா இருந்த உங்களைக் கூலிக்காரனா ஆக்கிட்டேனே...! கல்யாணத்துக்கு நின்னவளை ஒத்தை மரமா நிக்க வெச்சிட்டேனே... என்னை மன்னிச்சிடுங்கப்பா!" கைகளைப் பற்றிக் கொண்டு கதறினான்.

சாரதியின் முகம் புன்னகைத்தது. "ரகு! இனி இவர் பிழைத்துக் கொள்வார். எனக்கு நம்பிக்கை இருக்கு!" என்றான் கண்கள் மின்ன.

"எப்படிடா இவ்வளவு உறுதியாச் சொல்றே?"

"ஆமாண்டா! எப்பவுமே நாங்க கொடுக்கிற ட்ரீட் மெண்ட் நோய்க்கு மட்டும்தான். அது குணமாகணும்னா பேஷண்ட்டுக்குத் தன்னம்பிக்கையும் உற்சாகமும் இருக்கணும். அதோ அந்தப் பெட்டைப் பாரேன்!" என மூன்றாவதாய் இருந்த கட்டிலைக் காட்டினான்.

வயதான பெரியவர் ஒருவர் கால்களை நிமிர்த்தியும் மடக்கியும் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார்.

"அந்தப் பெரியவர் பத்து நாளைக்கு முன்னால கீழே விழுந்து கால் எலும்பு பிசகி இங்கே கொண்டு வந்து



சேர்த்தாங்க. வலி உயிர் போகும். நடக்கவே முடியாது. ஆனா இவர் என்னால முடியும் டாக்டர்! நான் சீக்கிரம் வீட்டுக்குப் போயிடுவேன். என் பேத்தி நான் கதை சொல்லாம தூங்க மாட்டா. எனக்கு மருந்து, மாத்திரை கொடுங்க. சீக்கிரம் குணமாகட்டும்னு சொல்வார். இதே வேறு யாராவது பயந்தவர்கள் என்றால் காலைக் கீழே ஊன்றவே மாட்டார்கள்.

பிறகு மாவுக்கட்டு அது இதென்று எப்படியும் இரண்டு மாதமேனும் இழுத்தடித்து விடுவார்கள். இவர் நாளை டிஸ்சார்ஜ் ஆகிறார். எப்போதும் ஏதாவது பயிற்சியைக் காலுக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பார். இவரது நம்பிக்கைதான் இவரை எழுந்து நடமாட வைத்திருக்கிறது.

இதே நம்பிக்கையும் திடமும் தாமரைச்செல்வனிடம் இருந்திருந்தால் எப்போதோ குணமாகி ஓடியிருப்பார். இத்தனை நாளாய் அவரது மனம் அவரைப் பேச விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது. இன்றுதான் முதன் முதலாய் வாய் திறந்து பேசுகிறார். அவரது வேதனை கண்ணீராக வெளியேறி விடுகிறது. இனி அவர் மனம் திடமாகி விடும். வாழவேண்டும் என்ற எண்ணம் தானாக வந்துவிடும்!" சாரதி சொன்னதும் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான் தாமரைச்செல்வன்.

"யெஸ் டாக்டர்! இத்தனை நாளாய்ப் பைத்தியக் காரனாய் இருந்துவிட்டேன். இனி நான் வாழ வேண்டும். என் குடும்பத்திற்காகத்தான் வாழ வேண்டும். உழைக்க வேண்டும். என் தங்கைகளுக்கு நல்லபடியான வாழ்க் கையை அமைத்துக் கொடுக்க வேண்டும். என்னைக் குணமாக்குங்கள் டாக்டர்! நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன்."

"குட்! இப்படித்தான் இருக்கணும். கவலைப்படாதீங்க மாத்திரை. மருந்துகளைச் சரியாச் சாப்பிட்டுட்டு நல்ல ரெஸ்ட் எடுங்க. மத்ததை நான் பார்த்துக் கொள்கிறேன் சீக்கிரமே ஆபரேஷன் பண்ணிடுவோம்!"

"டாக்டர்! ஆபரேஷன் பண்ணினா எம்புள்ளை பொழைச்சிடுவானா?" எனக் கேட்ட சகுந்தலாவைப் பார்த்து மென்மையாய்ப் புன்னகைத்தான்.

"நம்பிக்கைதாம்மா வாழ்க்கை. நாமளும் நம்புவோம் தினமும் ரோட்ல எத்தனையோ விபத்து நடக்குது. ப உயிர்கள் போகுது. அதுக்காக யாரும் கார்லயே பைக்லயோ போகாமலா இருக்காங்க. புதுசு புதுசா எந்த ர வாகனம் வந்தாலும் வாங்கி ஓட்டத்தானே செய்றாங்க பார்க்கலாம்... பயந்துகிட்டே இருக்கிறதைவிட ஆபரேஷனை பண்ணிப் பார்த்துடலாமே!"

"அதுதான்டா சரி. சாரதி! நீ ஆபரேஷனுக்கு டே ஃபிக்ஸ் பண்ணு. நான் நம்ம ஃப்ரெண்ட்ஸ்ங்ககிட்டயு சொல்லி அமௌண்ட்டை கலெக்ஷன் பண்ணிக் கொண் வர்றேன். எவ்வளவு ஆகும்னு சொல்லிடு. அப்பத்தான் ஈஸியா இருக்கும்!" என்றான் ரகு.

"தம்பி! உங்களுக்கு எதுக்குய்யா சிரமம்?"

"இல்லைங்க. ஒரு பேஷண்ட்டுக்கு எங்களால முடிஞ்ச உதவி. ஆபரேஷன் செலவைப் பத்தி நீங்க கவலைப்ப வேண்டாம். உங்க புள்ளை குணமாகி நடக்கட்டும். அவரோ படிப்புக்கு நானே வேலை போட்டுக் கொடுத்திடுறேன் இல்லேன்னா தனியா ஏதும் கன்ஸ்ட்ரக்ஷன் பண்றத இருந்தாலும் ஓ.கே. என்னால முடிஞ்ச உதவியை நான் செய்வேன்."



தாமரைச்செல்வனின் கண்கள் குளமாகின. "யார் ஸார் நீங்க? எனக்காக எத்தனை உதவி செய்றீங்க. உங்களை மாதிரி நல்லவங்களும் உலகத்தில இருப்பாங் கன்னு நினைக்காம இந்த உலகத்தையே வெறுத்தேனே! நீங்க... நீங்க கடவுள் ஸார்!" கைகூப்பினான்.

"நோ... நோ... பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க. செல்வா! முதல்ல உடம்பு குணமாகட்டும். அப்புறம் நீங்க வாழ்ந்து காட்டுற வாழ்க்கைதான் எங்க எல்லாருக்குமே சந்தோஷத்தைத் தரும்."

"நிச்சயமா ஸார். என்னால என் குடும்பம் இழந்ததைப் பல மடங்கு திருப்பிக் கொடுப்பேன் ஸார்!" என்றான் தீவிரமாக.

அதே நேரம் சட்டைப் பையினுள் இருந்த செல்போன் கீதம் இசைக்க, எடுத்துப் பார்த்தவன், "டெல்லியில இருந்து என் தங்கையின் கணவர் பேசுகிறார். நீங்க உடம்பைப் பார்த்துக்கங்க. நான் நாளை வருகிறேன். வரட்டுமா?" என அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு நடந்தவாறே போனில் பேசினான்.

"சொல்லுடா! என்ன திரும்பவும் பண்ணியிருக்க. ரொம்ப பிஸியா இருப்பியே...! இன்னிக்கு என்ன ஃப்ரீயா இருக்கியா?" பேசிக் கொண்டே வந்து காரில் ஏறினான்.

"மச்சான்! இப்ப நீ எங்கே இருக்கே? ட்ராவல் பண்ணிட்டு இருந்தால் காரை ஓரமாய் நிறுத்திவிட்டுப் பேசு. விஷயம் ரொம்ப முக்கியம். இடைஞ்சல் இல்லாமல் பேச வேண்டும்!" ஆனந்த் நேரிடையாகவே விஷயத்திற்கு வந்ததும் காரை உசுப்பியவன் நிறுத்தினான்.

"என்னடா! எனி ப்ராப்ளம்?"

"ம்... இப்ப நீ எங்கே இருக்கே? பிளட் கொடுத்து முடிச்சிட்டியா?"

"வீட்டுக்குப் போன் பண்ணியிருந்தியா? சொல்லு என்ன விஷயம்?"

"மச்சான்! ஒரு சின்னப் பிரச்சனை. அதை எப்படி சொல்றதுன்னுதான் குழப்பமா இருக்கு!" தயங்கினான் ஆனந்த்.

"என்னடா! வேலை செய்யுற இடத்தில எதுவு பிரச்சனையா? எதுவா இருந்தாலும் சொல்லு!"

"இல்லடா... எனக்கு இப்ப கொஞ்சநேரம் முந்தி ஒ போன் வந்தது. ஒரு பொண்ணு பேசினா...!"

"என்னடா நடக்குது அங்கே? என் தங்கை அங்கே இல்லை யென்று ஆட்டம் போடுகிறாயா? ராஸ்கல் தொலைத்து விடுவேன்!"

"விளையாடாதே ரகு! போன் பேசியவள் என்ன சொன்னாள் என்று தெரிந்தால் இப்படி விளையாட மாட்டாய் நீ!"

"சரி... சொல்லு. என்ன சொன்னாள்?"

"ஹேமாவைப் பற்றி... கொஞ்சம் மோசமாய்...!"

"என்ன? என்னடா சொன்னே?" குரலை உயர்த்தினான் ரகு.

"பார்த்தியா? முதல்ல கோபப்படுறதை விடு. நான் சொல்வதை முழுமையாகக் கேள். அதற்குப் பிறகு இதைப்



பற்றி முடிவெடுக்கலாம். எனக்குத் தலையே வெடிச்சிடும் போல இருக்கு!" என்றவன் மளமளவென போனில் வந்த செய்தியை ஒன்று விடாமல் ஒப்பித்தான்.

உஷ்ணமாய் நிமிர்ந்தான் ரகு. "டாமிட்! யாருடா? யாருடா அவ? என் தங்கையைப் பற்றி இப்படிப் பேசியது!"

"அதை நீதான் ரகு கண்டுபிடிக்க வேண்டும். நிச்சயமாய் அவள் நமக்குத் தெரிந்த பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். எதற்காக இந்த வேலை செய்கிறாள் என்று கண்டுபிடி. யாரென்று தெரிந்தவுடன் எனக்குப் போன் பண்ணு. நான் உடனே கிளம்பி வருகிறேன். நாம் இருவருமாய்ச் சேர்ந்து அவளுக்குப் போதிய மரியாதையைச் செய்து விடலாம்."

"ஆனந்த்! நீ... நீ... இது எதையும் நம்பவில்லையே!"

"என்னடா கேள்வி இது? என் மனைவியைப் பற்றி எனக்குத் தெரியும். ஏதோ ஒரு போக்கத்தவ சொன்னான்னு ஹேமாவை நான் சந்தேகப்படுவது என்னையே நான் அவமதிப்பது போலாகும். கட்டிய மனைவியைச் சந்தேகப் பட்ட அந்த ஸ்ரீராமனையே விமர்சிப்பவன் நான். அதே பிழையைச் செய்வேனா?"

"நன்றி நண்பா! நான் ஒரு கணம் திணறி விட்டேன்."

"ரகு! அவ யாரு எதற்காகப் போன் பண்ணினாள் என்பதைவிட இதற்கு மேல் பிரச்சனை பெரிதாகிவிடக் கூடாது என்றுதான் நான் அவள் சொன்னதை நம்பியது போல் தலையாட்டினேன். ஒருவேளை நான் நம்பவில்லை யென்றால் வீட்டுப் போனிற்கு போன் செய்து அம்மாவிடம் இப்படி ஏதேனும் உளறிவிடுவாளோ என்ற பயமும் எனக்கு வந்துவிட்டது."

"செய்வாள். உன்னிடமே இத்தனை அளந்தவள் பெரியவர்களிடம் இதைவிட அதிகமாகவே சொல்லி யிருப்பாள். சொல் ஆனந்த். என்ன செய்யலாம்?"

"ரகு! முதல்ல அந்தக் கிஷோரோட போன் நம்பர் தர்றேன். குறிச்சுக்க...!" அவன் சொல்லச் சொல்ல, ரகு குறித்துக் கொண்டான்.

"முதல்ல அவனைப் பிடி. நீ போடுற போடுல அவனே ஆளைச் சொல்லிடுவான். அப்படிச் சொல்லலைன்னு வை. ஹேமாகிட்ட யாராவது என்னைப் பத்தி அக்கறையா விசாரிக்கிறாங்களான்னு கவனி. ஈஸியா புடிச்சிடலாம்."

"ஏன்டா! இது... உண்மையான நம்பரா இருக்குமா?"

"இருக்கலாம். இல்லேன்னா இவ்வளவு தைரியமா தருவாளா? இந்தக் கிஷோரும் எதுக்கும் துணிந்தவ னாத்தான் இருப்பான். எதுக்கும் ஜாக்கிரதையாய் இரு. ஹேமாகிட்ட லைட்டா வேற விதமா சொல்லியிருக்கேன். நீ வேற எதையும் சொல்லிடாதே. பயந்திடுவா!"

"சரிடா! எங்கிட்ட சொல்லிட்டேல்ல. நான் பார்த்துக் கிறேன். நீ தைரியமா இரு. ஹேமாகிட்ட எப்பவும் போல போன் பண்ணிப் பேசு. இல்லேன்னா என்னவோ ஏதோன்னு பதட்டப்படுவா!"

ரகு பேசிக் கொண்டிருக்கும்போதே தூரமாய்க் கீர்த்தனாவின் கார் வந்து நின்றது.

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். இது அத்தை, மாமாவிற்குக் கூடத் தெரிய வேண்டாம். ரகு! கேர்ஃபுல்லா டீல் பண்ணு!"



"கவலைப்படாதே மாப்பிள்ளை! இன்னும் ரெண்டே நாள்ல கண்டுபிடிச்சிடுறேன். நீ தைரியமா வேலையைப் பாரு. லீவு கிடைத்தால் கிளம்பி வா. போனை வை. நான் அந்தக் கிஷோருக்கு ட்ரை பண்றேன்."

"சரிடா! எந்தத் தகவல் கிடைத்தாலும் போன் பண்ணிடு. ஜாக்கிரதை. நான் அப்புறமாய் போன் பண்ணு கிறேன்."

"ஓ.கே. டா பை! வெச்சிடு!" என்றவாறு போனைக் கட் செய்தான். கிஷோரின் நம்பருக்கு டயல் செய்து போனைக் காதிற்குக் கொடுக்க, "நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் எண் தற்சமயம் பிஸியாக இருப்பதால்..." என்ற பதிலில் சலித்துக் கட் பண்ணினான்.

மீண்டும் முயற்சித்து அதே பதில் வர, கோபமாய் ஆஃப் பண்ணினான். பதட்டத்தில் கீர்த்தனாவின் கார் உள்ளே நுழைவதைக் கவனிக்கவில்லை.

வீட்டுக்குப் போகலாம். பிறகு முயற்சிக்கலாம் என்ற முடிவுடன் காரை ஸ்டார்ட் செய்ய, பக்கவாட்டில் இருந்து அந்தக் குரல் கேட்டது.

"மாப்பிள்ளை ஸார். ஒரு நிமிஷம். போயிடாதீங்க...!" குரல் கொடுத்துக் கொண்டே மல்லிகை ஓடி வந்தாள். சின்னச் சிரிப்போடு காரை நிறுத்திவிட்டுக் கதவைத் திறந்தான்.

"கதவைத் திறக்க வேண்டாம். வெளியே நின்னு பேசினா யாராவது பார்த்தா தப்பா நினைப்பாங்க."

"சரி. காரில் ஏறு!" எனப் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டான்.

"ஐயய்யோ! வேண்டாம். வேண்டாம். நீங்க உள்ளே இருங்க. நாங்க சும்மா வெளியே நின்னு பேசிட்டுப் போயிடுறோம்!" என்றாள் பதட்டமாய்.

"நாங்களா! யாரு நீங்க?" என்றவாறு மல்லிகையின் பின்னே எட்டிப் பார்த்தவனின் முகம் புன்னகை பூத்தது.

ரோஜா தயக்கமாய்ச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"இப்படிப் பார்த்திட்டே பேசினாத்தான் ஏதோ தப்பு பண்றாங்கன்னு தோணும். நாம ஒண்ணும் தப்பாப் பேசலையே! சும்மா சாதாரணமா பேசுங்க. என்ன விஷயம்?" என்றான் மென்மையான குரலில்.

"சொல்லுக்கா! நீதானே சொல்லணும். ம்... சொல்லு!" தமக்கையிடம் கிசுகிசுத்தாள் மல்லிகை.

"என்ன? என்ன பெரிய ரகசியம்? சும்மா சொல்லுங்க."

"வந்து?.. ரொம்ப தேங்க்ஸ் ஸார். எங்க அண்ண னுக்கு பிளட் கொடுத்து அவன் உயிரைக் காப்பாத்தி யிருக்கீங்க... அப்புறம்...!" தயக்கமாய் ரோஜா கூற,

"ம்...! அப்புறம்?" என்றான் குறும்பாய்.

"அவனைப் பேச வெச்சிருக்கீங்க. இப்போ தைரியமா இருக்கான். நம்பிக்கையா பேசுறான்...! ரொம்ப தேங்க்ஸ் ஸார்!"

"இந்த ஸார் மோரெல்லாம் வேண்டாம். நான் ரகுராம். ரகுன்னும் கூப்பிடலாம். ராம்னு கூப்பிட்டாலும் ஓ.கே.!"

ரோஜா நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டு உடனே பார்வையைத் திரும்பிக் கொண்டாள். அவளது முகம்



தயக்கத்திலும் பதட்டத்திலும் சிவந்த ரோஜாவாக மாறி யிருந்தது. பனித்துளி போல் நெற்றியில் சில வியர்வைத் துளிகள். அதுகூட அழகாகத்தான் இருந்தது.

"அவ்வளவுதானே! நான் போகட்டுமா?" ரகுவின் கேள்வியில் இருவருமே ஏமாற்றமாய் ஏறிட்டார்கள்.

"என் பேரை நான் சொன்னேன். உங்க பேரைச் சொல்லவில்லையே!"

"என் பெயர் மல்லிகை. என் அக்கா ரோஜா!"

"மல்லிகை! உன் அப்பா பூந்தோட்டக் காவல்காரரா? பிள்ளைகளுக்கெல்லாம் பூக்களின் பெயரை வைத்திருக் கிறாரே! ஆனால் பொருத்தமாய்த்தான் வைத்திருக்கிறார்."

மல்லிகை வியந்தாள். "பொருத்தமாகவா எப்படி? எப்படி?"

"கள்ளம் கபடமில்லாமல் நீ சிரிக்கும் சிரிப்பு மல்லிகைப் பூப்போல இருக்கு. உன் அக்காவின் முகம் அப்படியே ரோஜாப்பூதான். உன் அண்ணனின் மனம் தாமரைப்பூ!"

"ஸார்! நீங்க நிறையப் படிச்சிருக்கீங்களா?" மல்லிகை ஆர்வமாய்க் கேட்க, தங்கையை இடித்தாள் ரோஜா.

"போதும் வா. உன் கச்சேரியை ஆரம்பிச்சுடாதே!" கிசுகிசுத்தாள்.

"எங்க அக்கா எப்பவுமே இப்படித்தான் ஸார். அவளும் பேசமாட்டா. என்னையும் பேச விட மாட்டா. சரி சார்! நாங்க போறோம். திரும்பவும் ரொம்ப நன்றி ஸார்!"

"இருக்கட்டும். நான் காலையில வந்து பார்க்கிறேன். இனி உங்கள் அண்ணனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவரைத் தேற்றி எழ வைப்பது என் பொறுப்பு!"

நன்றியோடு நிமிர்ந்தாள் ரோஜா. "போதும்! அவன் எங்களுக்குத் திரும்பக் கிடைத்தால் போதும். இந்த உதவியை எங்கள் உயிருள்ள வரை மறக்க மாட்டோம். வர்றோம்...!" என்றவள் அதற்கு மேல் நில்லாமல் தங்கையைப் பற்றிக் கொண்டு வேகமாய்ப் போய் விட்டாள்.

ஒரு நிமிடம் அமைதியாய் இருந்தான் ரகுராம். மனதில் எழுந்த புத்துணர்ச்சியை மீறி ஹேமாவின் நினைவு வந்தது. சட்டெனக் காரை உசுப்பி எடுத்துக் கிளம்பினான்.

அவனது காரைப் பார்த்துக் கொண்டிருந்த கீர்த்தனாவின் முகம் தகித்தது. சாரதியைப் பார்த்து எச்சரித்துவிட்டுப் போக வேண்டும் என உள்ளே வந்த கீர்த்தனா தன் காரை விட்டு இறங்கும் முன்பே ரகுவைப் பார்த்து விட்டாள். அவன் போகட்டும் எனக் காரை விட்டு இறங்காமலே உட்கார்ந்திருந்து பார்த்தவளின் கண்களில் ரோஜாவும் மல்லிகையும் வந்தது... பேசியது... அனைத்தும் விழுந்துவிட, கொதித்துப் போனாள்.

'நான் ஒருத்தி உனக்காகக் காத்திருக்க, நீ என்னை விட்டு விலகி ஓடியது இவளுக்காகத்தானா? எத்தனை நாட்களாய் இது நடக்கிறது.

இவள்! இன்று காலையில் கோவிலில் பார்த்தவளாயிற்றே. இந்தப் பிச்சைக்காரியைப் பார்க்கத்தான் பிளட் கொடுக்கிறேன் என்று சாப்பிடாமல் எழுந்து ஓடிவந்தானா?



இவளிடம் தானே அந்தப் புடவையைக் கொடுத்தான். அதோடு தன் கழுத்தில் உள்ள மாலையையும் கொடுத்தானே. அப்போ இதெல்லாம் தற்செயலாக நடக்கவில்லையா! எல்லாமே திட்டமிட்டுத்தான் நடக்கிறதா? இவளைக் கோவிலுக்கு வரச் சொல்லி விட்டுத்தான் என்னுடன் வராமல் விலகி ஓடினானா?

விட மாட்டேன். விட மாட்டேன். எத்தனை அவமானம்! எத்தனை அலட்சியம். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டது எதற்காக? இவனை அடையத்தானே! இவனை இன்னொருத்திக்கு விட்டுக் கொடுப்பதா? முடியாது. என்னால் முடியாது. என்னைப் பற்றி இழிவாகப் பேசியதற்கே ஹேமாவிற்கு அத்தனை பெரிய தண்டனை என்றால்... இவளுக்கு?

என் வாழ்க்கையைப் பறிக்கத் துடிக்கும் இவளைச் சும்மா விடலாமா? ரகு என்னைத் தவிர இன்னொருத்தியைப் பார்ப்பதையே என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இவள்... ரகுவையே மடக்கிவிட்டாளே!

ரகுவின் பார்வையும் பேச்சும் புன்னகையும் எரியும் நெருப்பில் எண்ணெய்யை ஊற்றியது. கண்கள் தீப்பிழம்பாய் மாறின. முகம் குரோதமாய் ஆனது. பார்ப்பவர்கள் மிரண்டு விடும் ஆங்காரம். ஆவேசம்!

இன்று யார் முகத்தில் விழித்தேன். பார்ப்பவள் எல்லாம் என் எதிரியாகி விடுகிறாளே! பாவத்தின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறதே! எது நடந்தாலும் இவளை என் ரகுவின் அருகே நெருங்கவிடக் கூடாது. மீறி நெருங்கினால் உருத் தெரியாமல் அழித்துவிடுவேன். பற்களை நறநறவெனக் கடித்தாள் கீர்த்தனா.

எதையும் ஆராயாமல் அவள் எடுத்த முடிவே அவர்களைச் சேர்க்கப் போகிறது என்பதை அறியாமல் மனதிற்குள் திட்டம் தீட்ட ஆரம்பித்தாள்.

# 8

ரோஜாவே!
உன்னில் முட்களும் உண்டு!
சிலர் உன்னை ரசிக்கிறார்கள்!
உன் முட்களை வெறுக்கிறார்கள்!
ஆனால் நான்...
உன்னோடு சேர்த்து உன் முட்களையும்
விரும்புகிறேன்!

**கா**ரை விட்டு இறங்கியதும் ஓடி வந்தாள் ஹேமா. "அண்ணா! அவர் உனக்குப் போன் பண்ணினாரா? எதுவும் சொன்னாரா?"

"யாரும்மா? ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்க? முதல்ல உள்ளே போவோம். வா! ரொம்பப் பசிக்குது!" - என்ற ரகு தங்கையை அழைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

"வந்துட்டியா? ஏன்டா வெளியில போனா சீக்கிரம் வரமாட்டியா? இரத்தம் கொடுத்தா உடம்பு சோர்ந்து போயிடுமாமே! வா. முதல்ல சாப்பிடு!" என மகனை அமர வைத்துச் சாப்பாடு பரிமாறினாள் பத்மாவதி.

அவனருகே அமர்ந்து கொண்டாள் ஹேமா. "சொல்லுண்ணா! உன் மாப்பிள்ளை போன் பண்ணி னாரா?" ஹேமா ஆர்வமாய்க் கேட்க, வாயிலிருந்த சாப்பாட்டை விழுங்கியவாறே அவசரமாய் யோசித்தான்.



அந்தக் கிஷோர் கிடைத்து உண்மையைக் கண்டறியும் வரை யாரிடமும் எதையும் சொல்லிவிடக் கூடாது. குறிப்பாக இவளுக்கு எதையும் தெரியவிடக் கூடாது. வீணாக ஏன் தன் தங்கையைக் கலங்கடிக்க வேண்டும்?

"நான் கேட்கிறது உன் காதில் விழலையா? சொல் லுண்ணா!" அண்ணனின் தோளைப் பற்றி அசைத்தாள்.

"ஆமாம்மா! பசியில காது அடைத்து விட்டது. ம்... என்ன கேட்டே?"

"அவர் உனக்குப் போன் பண்ணினாரா? எதுவும் சொன்னாரா?"

"ம்... பண்ணினார். பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னார்."

"அதுதான் தெரியுமே. அதுக்கப்புறம் போன் பண்ணலையா?" என்றாள் ஏமாற்றமாய்.

"ஏய் வாலு! அவன் எப்பவுமே டியூட்டி ஹவர்ஸ்ல பேச மாட்டான்னு உனக்குத் தெரியாதா? என்ன புதுசா கேட்கிறே?" சாப்பிட்டவாறே கேட்டான்.

"ஆனா எங்கிட்ட பேசினாருண்ணா. ரொம்ப நேரம் பேசினாரே!" என்றவளின் தலையில் வலிக்காமல் குட்டினான்.

"அறிவிருக்கா உனக்கு? நீ யார்? அவனோட ஒய்ஃப். ஒய்ஃப்கிட்ட பேசக் காலம் நேரமா பார்ப்பாங்க. உன் நினைவு வந்திருக்கும். வேலையை ஒதுக்கி வெச்சுட்டு பேசியிருப்பான். அதை நினைச்சுச் சந்தோஷப்படாம என்னை ஏன் சி.ஐ.டி. மாதிரி விசாரிக்கிறே? சாப்பிட விடு!"

"ஐயோ அண்ணா! இன்னிக்கு வேற மாதிரி பேசினார் அண்ணா. ஏதோ கனவு அது இதுன்னு சொன்னார். நான்...!"

"சரிதான். முத்திப் போச்சு போலிருக்கு!"

"என்னண்ணா முத்திப் போச்சு?" புரியாமல் கேட்டாள்.

"ம்! உன் மேல உள்ள பைத்தியம் முத்திப் போச்சு. அம்மா! இவ வந்து நாலஞ்சு மாசம் ஆச்சே. இவளை ஊருக்கு அனுப்ப வேண்டாமா?"

"அனுப்பணும்ப்பா! ஆனா இவளுக்குக் குழந்தையை இன்னும் குளிப்பாட்டத் தெரியலையே! மருந்து ஊத்தக் கூடத் தெரியலை!"

"அம்மா! அதெல்லாம் அவ மாமியார் பார்த்துப்பாங்க. அவங்களும் பெரியவங்கதானே! பேசாம ஒரு நல்ல நாளா பாருங்க. நாமளே கொண்டு போய் விட்டுட்டு வந்திடலாம்!"

"ஏன்டா அவசரப்படுறே? ஒரு ரெண்டு மாசம் இருக் கட்டுமே... அஞ்சாம் மாசம் கொண்டு போய் விடுவோம்."

"அவசரம் எனக்கில்லம்மா! உன் மருமகனுக்கு... இப்பவே இவ இல்லாம சரியாத் தூங்காம... சரியா சாப்பிடாம... உடம்பைக் கெடுத்திட்டு இருக்கான். அப்புறம் தாடியை வளர்த்துகிட்டு தேவதாஸ் மாதிரி அலையறதுக் குள்ள இவளை அனுப்பிடுவோம்!"

"அண்ணா! எங்கிட்ட அடி வாங்காதே...!"

"ரகு! அவளை அனுப்புறதுல பிரச்சனை இல்லப்பா. எப்படியும் ரெண்டு மாசத்தில உனக்குக் கல்யாணம் வைக்கணும். அப்புறம் அதுக்கு இவ வரணுமே!



குழந்தையை வெச்சிட்டு அலையக்கூடாதுப்பா... அதான் கல்யாணம் முடிஞ்சதும் அனுப்பலாம்னு பார்த்தேன்!" - சமயம் பார்த்துப் பத்மாவதி திருமணப் பேச்சை எடுத்தாள்.

"ஆமாண்ணா! அவரும் இதையேதான் சொன்னாரு... நீ அதுக்குள்ள என்னை விரட்டணும்னு பார்க்காதே. நெக்ஸ்ட் வீக் எங்களைப் பார்க்க வர்றேன்னு சொல்லியிருக்கார்."

"அதானே! பத்து நாளைக்கு ஒரு வாட்டி வராம அவனால இருக்க முடியாதே!"

"என்னைச் சொல்றே! நீ எப்படி இருக்கப் போறேன்னு பார்க்கிறேன்?" ஹேமா ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

"ஏன்? எனக்கென்ன? நான் எப்பவும் போலத்தான் இருக்கேன்."

"இப்போ இருப்பே! நாளைக்குக் கல்யாணமாகி அண்ணியும் குழந்தை பெத்துக்க அம்மா வீட்டுக்குப் போவாங்கள்ல. அப்போ நீ என்ன பண்ணுவேன்னு பார்க்கத்தானே போறேன். தினமும் போறியா? இல்லே... மாமியார் வீட்லயே டேரா போட்டுடுவியா?"

"ஏய்! சும்மா இரு!" என்றவாறு தனக்குள் சிரித்துக் கொண்டான் ரகுராம்.

தங்கையின் பேச்சில் ரோஜாவின் நினைவு வந்தது. அவளே தனக்கு மனைவியாக வந்தால் எப்படியிருக்கும்? இதோ இருக்கும் ஆதிநகர்தானே! இருபது நிமிடப் பயணம். தினமும் இருவேளை போய் வரலாம். இல்லையென்றால் பிரசவத்திற்கு அவள் குடும்பத்தை நம் வீட்டிற்கே அழைத்து வந்துவிடலாம். ம்... அதுதான் சரி. தன்னால் நான்கைந்து

மாதங்கள் அவளைப் பிரிந்திருக்க முடியாது. இங்கேயே வைத்துக் கொள்ள வேண்டும்.

"அவன் ஏன்டி மாமியார் வீட்ல போய் இருக்கணும். என் மருமகளுக்கு நானே பிரசவம் பார்த்துக் கொள்வேன். அவளுக்கு நான்தானே பார்க்கணும். எங்க அண்ணிதான் இப்போ இல்லையே! நான்தானே முன்னே நின்னு எல்லாம் செய்யணும்."

பொங்கி வந்த உற்சாக ஊற்று சட்டென வடிந்துவிட பதறி நிமிர்ந்தான் ரகு.

"அம்மா... அம்மா! என்ன சொல்றீங்க நீங்க!" கேட்கும்போதே தடுமாறினான்.

"நம்ம கீர்த்தனாவைப் பத்தித்தான்டா சொல்றேன். அவதானே என் மருமக. தாயில்லாத பொண்ணு. நான் தானே பார்த்துக்கணும்."

கையை உதறிக் கொண்டே எழுந்தான். "ஏன்டா எழுந்திட்டே?"

"பிடிக்கலை!" என்றவாறு கைகளைக் கழுவினான்.

"ஏன் பிடிக்கலை! உனக்குப் பிடிக்குமேன்னு நானே செய்த புலாவ்டா. நீ விரும்பிச் சாப்பிடுவியே! ரவா கேசரியைத் தொடவே இல்லையே!"

"நான் பிடிக்கலைன்னு சொன்னது கல்யாணத்தை!" என்ற அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள் ஹேமா.

"ஏண்ணா கல்யாணம் வேண்டாம்? உன் வயசுப் பையன்க எல்லாம் கல்யாணம் பண்ணிக் குழந்தைங் களோட வாழுறாங்க. என் ஹஸ்பண்ட், சாரதி அண்ணா எல்லோருமே உன் குரூப்தானே!"



"நான் கல்யாணம் வேண்டாம்னு சொல்லலை!"

"பின்னே?" என்றவாறு மகனின் முன்னே வந்தாள் பத்மாவதி.

"நீங்க சொல்ற பொண்ணு வேண்டாம்மா. எனக்குப் பிடிக்கலை!" முகத்தைத் திருப்பிக் கொண்டவனின் முகவாயைப் பற்றித் திருப்பினாள்.

"ஏன்டா பிடிக்கலே?" மிரட்டலாய்க் கேட்டாள்.

"ம்ப்ச்! பிடிக்கலைன்னா பிடிக்கலை. விட்டுடுங்க... இந்தப் பேச்சை இனி யாரும் எடுக்க வேண்டாம்!" என நகர்ந்தவனைப் பிடித்து நிறுத்தினாள்.

"அப்படியெல்லாம் விட முடியாது. இது என்ன சின்னப்புள்ளை விளையாட்டுன்னு நினைச்சியா? கிட்டத் தட்ட பதினைஞ்சு வருஷமா நான் முடிவு பண்ணினது. உனக்குக் கீர்த்தனாதான் மனைவி."

"அம்மா! இது ஒண்ணும் விளையாட்டு இல்ல! என் வாழ்க்கை. இதை நான்தான் முடிவு பண்ணணும்!" கோபமானான் ரகுராம்.

"ஓஹோ! உங்க வாழ்க்கையா? ஏன்டா! நீ பொறந்ததுல இருந்து நீ என்ன சாப்பிட்டா உன் உடம்புக்கு ஒத்துக்கும்... நீ என்ன ட்ரெஸ் போட்டா நல்லா இருப்பே... நீ என்ன படிச்சா உன் லைஃப் நல்லா இருக்கும்னு பார்த்துப் பார்த்துச் செய்தவ நான். இப்போ நீ வளர்ந்திட்ட... அதனால உங்க வாழ்க்கையை நீங்களே தீர்மானிச் சிடுவீங்க. அப்படித்தானே! அப்போ நீங்க வளர்ற வரைக்கும்தான் நாங்க தேவை. இனிமே தேவையில்லை!"

பதறித் தாயின் வாயை மூடினான் ரகு. "ம்மா! இல்லம்மா! எந்த ஒரு புள்ளைக்குமே கடைசி வரைக்கும் பெத்தவங்களும் அவங்களோட அன்பும் வேணும்மா. எங்களோட ஒவ்வொரு வளர்ச்சிக்குப் பின்னால நீங்க இருந்து ஆசிர்வதிக்கணும்மா... எங்களுக்கு ஒரு கஷ்டம்னா மடியில தாங்கிக் கொள்ள நீங்க வேணும்மா...!"

"பின்னே ஏன்டா அப்படிச் சொன்னே?"

"இல்லைம்மா! நான் சொல்ல வந்ததை நீங்க புரிஞ்சுக்கலை!"

"நீதான்டா புரிஞ்சுக்கலை. உங்கப்பா தொழில்ல ஏற்பட்ட நட்டத்தால நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம். நீயும் இவளும் சின்னப்புள்ளைங்க. உங்களை வெச்சிக்கிட்டு எங்களால சாகவும் முடியலை. எல்லாப் பக்கமும் நெருக்கடி. உங்க அப்பாகிட்ட இருந்த பார்ட்னர்ஸ் எல்லாரும் பணத்தைக் கேட்டு நெருக்கினாங்க. அப்போ மட்டும் என் அண்ணன் தன் பணத்தைக் கொடுத்து உதவலைன்னா இப்போ நாம யாரும் இப்படி வாழ்ந்திருக்க முடியாது. இந்தக் காரு, பங்களா, அந்தஸ்து, பெரிய இடத்துச் சம்பந்தம் இதெல்லாம் கிடைச்சிருக்காது."

"மாமா ஒண்ணும் சும்மா பணத்தைத் தூக்கிக் கொடுத்திடலையே! அப்பாவோட தொழில்ல பங்குதாரரா சேர்த்துக்கச் சொல்லித்தானே பணம் கொடுத்தாங்க. இப்போகூட மாமா சும்மா வீட்லதான் இருக்காங்க. ஆனா நானும் அப்பாவும் எப்பவும் போல அவங்க பங்குக்குரிய பணத்தை ஒரு பைசா பாக்கியில்லாம கொடுத்திட்டுத்தானே வர்றோம்."



"புரியாம பேசாதடா! உங்க அப்பா என் அண்ணன் கொடுத்த பணத்தை வாங்கிக்க தயங்கினார். அதனாலதான் எங்க அண்ணன் அந்த ஐடியாவையே சொன்னார். இப்பவும் எங்க அண்ணன் நீங்க தர்ற பணத்துக்காகக் காத்து நிற்கலை. என் அண்ணனைப் பற்றி எதுவும் சொல்லாதே!"

"அம்மா! நான் மாமாவைப் பற்றி ஒரு குறையும் சொல்லவில்லை அம்மா. மாமா நல்லவங்கதான். நான் மறுக்கலை. ஆனா கீர்த்தனா...?"

"ஏன் அவளுக்கென்ன? தாயில்லாமல் வளர்ந்த பிள்ளை. அதனால செல்லம் கொஞ்சம் அதிகம்தான். ஆனால் அதில் என்ன குறை வந்தது? நீ கூடத்தான் உன் தங்கையைத் தலையில் வைத்துக் கொள்கிறாய். உன் அப்பாகூட உனக்கு ஒன்று என்றால் எங்களையெல்லாம் தூக்கி எறிந்து விடுகிறார். இது ஒன்றும் தப்பில்லையே! அவரவர் அன்பைக் காட்டுவதில் என்ன தவறு?"

"நான் அதைச் சொல்லவில்லை அம்மா. ஹேமாவையும் அவளையும் ஒன்றாய் நிறுத்திப் பாருங்கள். உங்களுக்கே புரியும்!"

"ஹேமா எப்போதும் சிம்பிளாய் இருப்பாள். அதற்காக எல்லோரும் அப்படியா இருப்பார்கள். அவ விருப்பத்திற்கு அலங்காரம் செய்கிறாள். இதெல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம். உனக்கெதுக்கு அதெல்லாம்?"

"அம்மா! பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் தப்பில்லை. ஆனால் அந்த அலங்காரம் அடுத்தவர் கண்களை உறுத்தாத மாதிரி இருக்கணும். முகம் சுழிக்க வைக்கக்கூடாது."

"அறியாத வயதில் அப்படி இருப்பாள். நீதான் அவளிடம் நாசுக்காகச் சொல்லித் திருத்த வேண்டும். நீ சொன்னால் கேட்பாள்."

"எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள். நான் சொன்னால் அவள் கேட்பாளா?" மகனின் கேள்வியில் சற்றுத் தடுமாறினாள் பத்மாவதி.

"நீ... நீ... கேட்க வைக்க வேண்டும்!" என்றாள் சமாளித்தவாறு.

பெருமூச்சு விட்டான் ரகு. "இல்லம்மா! கல்யாணம்றது இரண்டு மனசு ஒத்துப் போய் சந்தோஷமா வாழுறது. இதுல நீ பெரியவனா நான் பெரியவனான்னு போர் நடக்கக் கூடாது. தப்பு செய்யிறவங்களுக்கு தப்பு இதுன்னு சொன்னா புரியும். ஆனா வேணும்னே பிடிவாதமா இருக்கிறவங்களை ஒண்ணும் செய்ய முடியாதும்மா. இன்னிக்குக் காலையில கோவிலுக்கு எப்படி வந்தா? நம்ம வாயைத்தானே அடைத்தாள். துணியை மாற்றினாளா?"

"அதெல்லாம் கல்யாணமானதும் சரியாகிடும்."

"ம்... இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் பல பேரோட வாழ்க்கை வீணாப் போயிடுது. அதே மாதிரி என் வாழ்க்கையும் ஆகணும்னு நீங்க ஆசைப்பட்டுட்டீங்க!"

"என்னடா பேசுறே நீ? எந்தத் தாயாவது தன்னோட புள்ளையோட வாழ்க்கையை வீணாக்க ஆசைப்படுவாளா?" பத்மாவதியின் உதடு துடித்தது.

"மாட்டாங்கதான். ஆனா புரிஞ்சுக்க மறுக்குறீங்களே! உங்களுக்கே கீர்த்தனாவைப் பத்தி நல்லாத் தெரியும். நான் பிக்னிக் போனப்போ ஹேமாவுக்கு மட்டும் கிஃப்ட் வாங்கிட்டு



வந்திட்டேன்னு ஆர்ப்பாட்டம் பண்ணி நம்ம கண்ணு முன்னாடியே அதை உடைச்சா. அதில பட்ட காயத்தோட தழும்பு இன்னும் இவ நெத்தியில இருக்கு.

"காலேஜுக்கு போறப்போ என்கூட வண்டியில வரணும்னு சொன்னாள். நான் மாட்டேன்னு ஹேமாவைக் கூட்டிட்டுப் போனேன். என்னை வெறுப்பேத்துறதா நினைச்சிட்டு வெறும் டிரவுசர் பனியனோடு ஒரு தறுதலையோட பைக்கில் கட்டிப் பிடித்துக் கொண்டு என் கண் முன்னே போனாள்.

"பார்க்கும் போதெல்லாம் ஏதாவது ஆண்களுடனே சுத்தித் திரியிறவளை மணக்க எவன் விரும்புவான்? எனக்கு எப்பவுமே அவளது செயல்பாடுகள் பிடிப்பதில்லை. மாமாவோ நீங்களோ அவளை மாற்ற முயற்சிக்கவில்லை. மாற்றவும் முடியாது. அவளை மணந்து நான் எப்படியம்மா சந்தோஷமா வாழ முடியும்?" - பரிதாபமாய்க் கேட்ட மகனைப் பார்த்துக் கலங்கிப் போனாள் பத்மாவதி.

மகன் சொன்னது அனைத்தும் உண்மைதான். மகன் அறிந்தது நூற்றில் ஒரு பங்குதான். மற்றதைத் தன் அண்ணன் மகளுக்காகப் பத்மாவதியே மறைத்திருந்தாள். இதமாய் அறிவுரை சொல்லும்போதெல்லாம், "யாருக்காகவும் எதற்காகவும் நான் மாறமாட்டேன்... அத்தே! ஆயிரம் நண்பர்கள் இருந்தாலும் நான் உங்கள் மகனைத்தான் கட்டுவேன். இதில் எந்த மாற்றமும் இல்லை. ஏன்னா ரகு ஒரு ஜென்டில்மேன். அவனை மாதிரி ஆண்களோடுதான் வாழ்க்கை அமைய வேண்டும். ஆனால் அதற்காக அப்படி ட்ரெஸ் பண்ணாதே! யாரோடும் பேசாதே என்றும் யாரும் எனக்கு அட்வைஸ் பண்ண வேண்டாம். எனக்கு அது பிடிக்காது!" என முகத்திற்கு நேராய்ச் சொல்லி விட்டாள்.

அன்றிலிருந்து அவளுக்கு அறிவுரை கூறுவதை நிறுத்திவிட்டாள் பத்மாவதி. ஆனால் திருமணமானதும் சரியாகிவிடும் என்றுதான் நினைத்திருந்தாள். இன்று மகன் கேட்ட கேள்வியில் தடுமாறிப் போனாள். இவள் மாறுவாளா? யாரையும் மதிக்காதவள் தாலியை மட்டும் மதிப்பாளா என்ன?

அதோடு இப்படித் தவறாக எடுக்கப்படும் முடிவுகளால் தான் அதிகமான திருமணங்கள் முறிந்து போகின்றனவோ! பத்மாவதிக்குத் தன் மகனைப் பற்றி நன்றாகவே தெரியும். தங்கமான பிள்ளை. படிக்கும் போதோ... இல்லை இப்போதோ ஒருபோதும் பெண்களின் பின்னால் சுற்றுவ தில்லை. கெட்ட நண்பர்களின் சகவாசம் கிடையாது. தவறான வழியில் செல்வதும் இல்லை. அதனால் அவன் திருமணத்திற்கு மறுக்க வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதில் உறுதியாக இருந்தாள்.

ஆனால் தன் ஒரே பிள்ளையின் வாழ்வு பாழாகிவிடக் கூடாதே என்ற அச்சமும் எழுந்தது. மகனின் வார்த்தையை ஏற்றுக்கொண்டால் தன் அண்ணனிடம் கொடுத்த வார்த்தையைக் காப்பாற்ற முடியாதே!

தொழிலில் முடங்கிக் கிடந்தபோது கோசல்ராமைப் பற்றித் தூக்கிவிட்டது தன் அண்ணன்தான். அப்போதே தங்கையிடம் சொன்னார். "பத்மா! இந்தப் பத்து லட்சம் எனக்குப் பெரிசில்லம்மா. என் சொத்தெல்லாம் எம் பொண்ணுக்குத்தானே. அவ வந்து வாழப்போறது உன் வீடு. நீங்க நல்லா இருந்தாத்தானம்மா எம் பொண்ணு சந்தோஷமா வாழ முடியும். தாயை இழந்தவளுக்கு நீ இன்னொரு தாயா இருப்பே! என் காலத்துக்குப் பிறகும்



நம்ம சொந்தம் விட்டுப் போயிடக் கூடாதுன்னு நினைக் கிறேன். நீ என்னம்மா சொல்றே?" என்ற தமையனிடம் தைரியமாகச் சொன்னாள் பத்மாவதி.

"கவலைப் படாதே அண்ணே! என் மகன் ரகுவிற்குத்தான் கீர்த்தனா. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். அவள் என் மருமகள்...!" என வாக்களித்தாள்.

சமீபத்தில் இதயத்தில் அடைப்பு ஏற்பட்டுத் தணிகாசலம் துன்பப்படுவதைக் காணச் சகியாமல் ரகுவும் அவன் தந்தையுமாய் அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து கூடவே இருந்து பார்த்துக் கொண்டனர்.

ஆபரேஷன் தியேட்டருக்குப் போகும் முன்னால் தங்கையின் கைகளையும் தங்கையின் கணவரின் கைகளையும் பற்றிக் கொண்டு கேட்டபோது, "ரகுவுக்குச் சம்மதம் என்றால் தனக்கும் சம்மதம்!" எனக் கோசல்ராம் கழன்றுகொள்ள, அப்போதும் பத்மாவதிதான் தைரியம் சொல்லி அனுப்பினாள்.

அவர் குணமாகி எழுந்தவுடன் திருமணப் பேச்சைத் தொடங்கி ரகுவின் ஜாதகத்தைப் பார்த்தபோதுதான் இந்த ஜாதகத்தில் தோஷம் இருக்கு. முப்பது வயது முடியும்போது எல்லாம் சரியாகிவிடும். சுக்கிர திசை ஆரம்பமாகும். திருமணம் கூடி வரும். அதுவரை திருமணத் தடை நீங்காது என ஒரே போடாகப் போட்டுவிட்டார் ஜோசியர்.

அதனால் இதுவரை அந்தப் பேச்சு எடுக்கப்படாமலே இருந்தது. ஆனால் இன்று மகன் வருவதற்குச் சற்று முன்பு வரை தங்கையிடம் தணிகாசலம் சொல்லிவிட்டுத்தான் சென்றிருந்தார். பத்மாவதியும் பேச்சைத் தொடங்கினாள்

தான். ஆனால் முடிவு இப்படி வரும் என்று அவள் நினைக்கவில்லையே!

தாயின் மௌனம் கண்டு ஹேமா அம்மாவைத் தொட்டாள். "அம்மா! சின்ன வயசுல இருந்தே எங்களுக்கு நல்லது எதுன்னு பார்த்துப் பார்த்துச் செய்த நீங்க கடைசி வரை யாரோட வாழப் போறோமோ அந்தத் துணையைப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டாமா? இது என்ன துணிமணியா? வேண்டாம் என்றால் கழற்றி எறிவதற்கு... வாழ்க்கைம்மா! கடைசி வரை வாழப் போறது அண்ணன்... அவனுக்குப் பிடிக்காததை அவன் தலைமீது கட்டலாமா?" என்றாள் மெதுவாக.

பத்மாவதியிடம் அசைவில்லை. "மாமாவைப் பத்தி கவலைப் படாதீங்கம்மா. மாமா நல்லவர். அவர் பெண்ணைப் பற்றி அறிந்தவர். அதோடு அண்ணன் மீது ரொம்ப அன்புள்ளவர். புரிந்து கொள்வார்."

பத்மாவதி திகிலாய் மகளைப் பார்த்தாள். "நான் மாமாவுக்காகப் பயப்படலம்மா! கீர்த்தனாவை நினைச்சித் தான் பயப்படுறேன்."

"ஏம்மா?" என்றான் ரகு.

"இல்லப்பா! அவளை மறுத்திட்டு நீ எப்படி இன்னொரு பெண்ணை மணக்க முடியும்? அவள் விடுவாளா? அவளைப் பற்றித் தெரியாதா உனக்கு?" சொல்லும்போதே அன்னையின் குரல் நடுங்கிற்று. பரிவாய்த் தாயின் தோளை அணைத்துக் கொண்டான்.

"அம்மா! அதைப் பத்தி யெல்லாம் நீங்க கவலைப் படாதீங்க. நான் என்ன உடனேயா கல்யாணம் பண்ணிக்கப்



போறேன். முதல்ல கீர்த்தனாவுக்குக் கல்யாணம் பேசுவோம். அவ கல்யாணம் பண்ணிட்டுப் போன பின்னால எனக்குப் பார்க்கலாம். உடனே மாமாகிட்ட இதைப் பத்திப் பேசுவோம்."

"இருப்பா. வேற ஒரு கல்யாணத்துக்கு அவ ஒத்துப்பாளா?"

"ஒத்துக்க வைக்கணும்மா. அவ டேஸ்ட்டுக்கு ஏத்த மாதிரி பார்க்க வேண்டியதுதான். இவளை மாதிரி அலையுறவன்தாம்மா இவளுக்குச் சரி!" என்றாள் ஹேமா.

"வேண்டாம் ஹேமா! அப்படிப் பேசாதே. அவ யாரை வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளட்டும் அம்மா. என்னை விட்டு விட்டால் போதும். எனக்கேற்ற பெண் பிறந்திருப்பாள் தானே! எளிமையாய் இருந்தாலும் கண்ணுக்கும் மனதிற்கும் இனிய பெண்ணாய் அமைந்தால் போதும்மா! அதை விட வேறென்ன வேணும்!" சொன்ன ரகுவின் முகம் பிரகாசித்தது.

"டேய் அண்ணா! என்ன உன் முகத்தில தௌஸன்ட் வால்ட் பல்ப் எரியுது. நீ பேசுறதைப் பார்த்தா என் வருங்கால அண்ணியைப் பார்த்திட்டே போலத் தெரியுதே! ஹூஸ் தட் லக்கி கேர்ள்? எனக்கு மட்டும் சொல்லு!" எனக் குறும்பாய்க் கேட்ட தங்கையை விட்டு விலகி ஓடினான்.

அவனைத் துரத்தியபடி ஹேமா ஓட, பத்மாவதியின் வயிற்றுக்குள் பிரளயம் நடந்தது. 'பிள்ளைகள் சொல்வது போல் இது எளிதாக முடியக் கூடிய பிரச்சனைதானா?' நினைப்பே பயமுறுத்தியது.

# 9

ரோஜாவே!
பூக்களுக்குள் புகைச்சல்!
மல்லிகை சொல்கிறது. உன்
நிறம் தனக்கு இல்லையே என்று!
தாமரை கேட்கிறது. உன் மனம்
அதற்கு இல்லையாம்!
முல்லை சொல்கிறது. உன் இதழ்கள்
தனக்கு இல்லையே என்று!

குழந்தையை மென்மையாய் ஒற்றியெடுத்துத் தலையைத் துவட்டி பவுடரை ஒற்றிக் கொண்டிருந்த ஹேமாவை எத்தனை முறை உற்றுப் பார்த்தாலும் அவள் முகத்தை வைத்து எதையும் கண்டு கொள்ள முடியாமல் திணறினாள் கீர்த்தனா.

எப்போதும் போல் இயல்பான அழகு முகம். எவ்வித ஒப்பனையும் இன்றியே பளபளப்பாக இருந்தது. மாசு மருவற்ற திருத்தமான முகம். அதில் எப்போதும் குடியிருக்கும் புன்னகை. ஹேமா ரொம்ப அழகுதான். அதனால்தான் அந்த ஆனந்த் இவளைக் கண்டதும் விழுந்து விட்டான். என் மனைவியைப் பற்றி எனக்குத் தெரியும் என்று எகிறினானோ!

ஆனால் அதன் பிறகு நம்பி விட்டானே! நம்பியிருந்தால் இந்த நேரம் இந்த வீடு போர்க்களமாக அல்லவா இருக்க வேண்டும். இத்தனை அமைதியாய் இராதே! இவள் முகத்திலும் எந்த வருத்தமும் இல்லையே!

"என்ன கீர்த்தனா! அப்படிப் பார்க்கிறே?" என்றாள் குழந்தையின் கன்னத்தில் கண்மையால் பொட்டிட்டவாறே. சட்டெனக் கலைந்தாள் கீர்த்தனா.



"ம்...! ஹேமா! உன் முகத்தில முன்னைவிட ஜொலிப்பு கூடுதலா தெரியுதே! ஸ்பெஷலா ஏதேனும் கிரீம் போடுறீயா?"

"சேச்சே! கண்ட கிரீம்லாம் போடுறதில்லப்பா நான்... சீக்கிரமே தோல் சுருங்கிடும். வயதான தோற்றம் வந்திடும். நான் எப்பவும் போல சந்தன சோப் மட்டும்தான் யூஸ் பண்றேன். மஞ்சளும் பூசுறேன். அவ்வளவுதான்!"

தன் வறண்ட முகத்தை ஒரு முறை வருடிக் கொண்டாள் கீர்த்தனா.

"மஞ்சள் பூசுவியா? பாட்டி மாதிரி தெரியப் போறே!"

"அங்கதான் மிஸ்டேக் பண்ற கீர்த்தனா! மஞ்சள் ஒரு கிருமிநாசினி. அதைப் பூசுறதால தேமல், படைன்னு எதுவும் வராது. முகப்பருகூட நெருங்காது. முன்ன உள்ள பெண்களைப் பாரேன். அறுபது வயசானாக்கூட அவங்க முகம் ரொம்ப அழகா மின்னும். ஆனா இப்ப உள்ள கேர்ள்ஸ் பாரேன். முகத்தில என்னென்ன கிரீம் டி.வி. விளம்பரத்தில வருதோ அதையெல்லாம் பூசிக்கிட்டு கொஞ்ச நாள்லயே முகமெல்லாம் எண்ணெய் வடிஞ்சுகிட்டு காய்ந்து போய் இருபத்தைஞ்சு வயசுலேயே முதுமையை எட்டிப் பிடிச்சுடுறாங்க.

மஞ்சள் பூசுனா ரொம்ப கேலியா பார்க்கிறாங்க. இதுல உள்ள மகத்துவம் தெரிஞ்சும் அதை ஏத்துக்க மாட்டாங்க. நீ கூட கண்ட கண்ட கிரீம் போடுறதைக் குறைச்சுக்க கீர்த்தனா! இன்னும் கல்யாணமே ஆகல்ல. அதுக்குள்ளே உன முகத்தில முதிர்ச்சி தெரியுது!" அக்கறையாய்ச் சொன்னவளைப் பார்த்து முகம் கடுத்தாள்.

"உன்னைவிட ரெண்டு வயசுதான் பெரியவ நான். நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணிகிட்ட. நான் லைஃபை நல்லா என்ஜாய் பண்ணிட்டுக் கல்யாணம் பண்ணலாம்னு இருக்கேன். ஆமா, அத்தை எங்கே காணோம்?" பேச்சை மாற்றினாள்.

"அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க. இன்னிக்குப் பிரதோஷம் இல்ல...!"

"ஓ! உன் அண்ணன்?" என்றாள் கண்களால் தேடியவாறே.

"அண்ணன் சீக்கிரமாவே ஆஃபிஸ் போயாச்சு. அண்ணனுக்குத் தெரிஞ்ச யாரோ ஹாஸ்பிடல்ல இருக்காங்களாம். அவங்களுக்கு ஆபரேஷன் பண்ண ஹெல்ப் பண்றேன்னு சொல்லியிருக்கானாம். அது விஷயமா ஃப்ரெண்ட்ஸைப் பார்க்கணும்னு காலையிலேயே கிளம்பிட்டான். சாப்பிடக் கூட இல்லை!"

கீர்த்தனாவின் முகம் கறுத்தது. 'இவ்வளவு அவசர மாகக் கிளம்பிப் போய் விட்டானா? அவள் நினைப்பு அப்படி இழுக்கிறதோ! இதை இனியும் வளரவிடக் கூடாது. இவனிடம் பேச முடியாது. அவளைத்தான் பார்க்க வேண்டும். இதமாய்ப் பேசிப் பார்க்கலாம். சரிப்படவில்லையென்றால் நம் ஆயுதத்தை எடுக்க வேண்டியதுதான். பார்த்தால் பசு போலத்தான் தெரிகிறாள். பேசியே விலக்கிவிடலாம். நேற்று அவள் பின்னே சென்று வீட்டைப் பார்த்தாயிற்று. இனி நேராக வீட்டில் போய்ப் பேசிவிட வேண்டும். ரகு தனக்குச் சொந்தமாகப் போகிறவன். தேவையில்லாமல் அவனை நெருங்காதே என எச்சரிக்க வேண்டும்.'



"கீர்த்தனா! என்னாச்சு உனக்கு? அடிக்கடி ப்ரீஸாகிடுறே?"

"அது யாரு ஹேமா? உன் அண்ணனுக்கு ரொம்பத் தெரிஞ்சவங்களா?"

"இல்லே! ப்ளட் கொடுக்கப் போனானில்லே... அப்பத்தான் பார்த்தானாம். முதுகெலும்புல ஏதோ ஆபரேஷன் பண்ணணுமாம். அந்த ஃபேமிலி கொஞ்சம் கஷ்டப்பட்டது போல! அதான் ஹெல்ப் பண்ணலாம்னு சொன்னான்."

மனதின் ஓரம் கொஞ்சம் நிம்மதி பரவியது. இவள் சொன்னது போல் இருந்தால் சரி. ரொம்ப பயந்து போனேனே! ஆனாலும் அவள் ஏன் அவனிடம் வந்து தனியாகப் பேசினாள். எதையும் முளையிலேயே கிள்ளி யெறிய வேண்டும்.

"எவ்வளவு செலவாகுமாம்? கேட்டியா நீ!"

"இரண்டுல இருந்து மூணு லட்சம் வரை ஆகுமாம்...!"

"இவ்வளவுதானே! இதை ரகுவே கொடுத்து விடலாமே! எதற்காக மற்றவர்களிடம் போய்க் கையேந்த வேண்டும்? ரகு கணக்குப் பார்க்க மாட்டானே செலவு செய்ய...!"

"இதே கேள்வியைத்தான் நானும் கேட்டேன். அந்தக் குடும்பம் நமக்கு யாரென்றே தெரியாது. திடீரென்று போய் லட்சக்கணக்கில் பணத்தைக் கொடுத்தால் சந்தேகம் வராதா என்கிறான். அதோடு இவன் நண்பர்கள் எல்லோரும் பலமுறை இப்படி உதவியிருக்கிறார்கள்தானே! அதனால் அந்த வழியாக உதவி செய்தால் சந்தேகமும் வராது தயக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொள்வார்கள் என்கிறான்

பணத்தைக்கூடச் சாரதி அண்ணா மூலம்தான் கொடுக்கப் போகிறானாம். நான்கூட என் பங்கிற்கு இருபதாயிரம் கொடுத்தேன்!" என்றாள் ஹேமா.

இதுதான் ரகு. எதைச் செய்தாலும் அதை ஒருவர் மனம் ஏற்றுக்கொள்ளும் விதமாய் இதமாய்ச் செய்வான். பெண் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் ஒரு இளைஞன் வந்து அறிமுகமானதும் லட்சக் கணக்கில் செலவு செய்தால் மிரண்டு தயங்கத்தானே செய்வார்கள். யார் இவன்? எதற்காக நமக்கு இதைச் செய்கிறான் என்ற வீண் சந்தேகமும் வரும்தான்.

இது அப்படி இல்லையே! உதவிக் குழு மூலமாக டாக்டர் உதவியோடு பணம் கிடைத்தால் தாராளமாக ஏற்றுக் கொள்வார்களே! ரகு ரகுதான். புத்திசாலி! திறமைசாலி. அதனால்தானே அவனை விடாமல் துரத்த வேண்டி யிருக்கிறது. பிடி கொடுக்க மாட்டேன் என்கிறானே... பிடித்துக் காட்டுகிறேன்.

"சரி கீர்த்தனா! குழந்தைக்குத் தூக்கம் வந்திடுச்சு. நீ இரு. நான் போய்த் தூங்க வைக்கிறேன்!" எனக் குழந்தையைத் தோளில் போட்டவாறு எழுந்தாள் ஹேமா.

"நானும் கிளம்ப வேண்டியதுதான். சரி, உன் பையனுக்கு இன்னும் பேர் வைக்கலையா? உன் புருஷன் இன்னுமா பேரை செலக்ட் பண்ணலை?"

"இன்னும் முடிவாகலையாம். பொறுமையா வைக்க லாம்கறாரு!"

"ம்... போன் பண்றாரா? வேலை வேலைன்னு உன்னை மறந்திடப் போறாரு!" குழந்தையைக்



கொஞ்சியவாறே கீர்த்தனா கேட்டதும் துணுக்குற்றாள் ஹேமா. தினமும் கேட்பவள்தான். இன்றும் கேட்கிறாள். அவ்வளவுதான். தன்னையே தேற்றிக் கொண்டு,

"அதையேன் கேட்கிறே? மூணு நாளாச்சு அவர் என்கூடப் பேசி. ஏன்னே தெரியலை?" என்றாள் முகத்தைச் சோர்வாய் வைத்துக் கொண்டே.

கீர்த்தனாவின் முகம் பளீரிட்டது. நான் போட்டது இங்கே புகைய ஆரம்பித்திருக்கிறது. முதலில் கிஷோரைப் பார்க்க வேண்டும். அவனுக்குப் போன் வந்திருந்தால் விஷயம் சக்சஸ். பார்த்துவிடலாம்.

"சரி ஹேமா! நான் கிளம்புறேன். நீ அத்தை வந்தால் சொல்லிடு!" என்றவாறு வெளியேறினாள்.

கீர்த்தனாவின் முகம் திடீரென மாறியதே! என் கண்ணுக்குத்தான் அப்படித் தோன்றியதா! இல்லை, உண்மையாகவே அவள் முகம் மாறியதா? ஆனால் இவள் எதையும் துருவிக் கேட்கவில்லையே! எப்போதும் கேட்பது போல் ஒரு வார்த்தை கேட்டாள். வேறு ஒன்றும் பேச வில்லை. நாமாக எதையும் கற்பனை செய்து கொள்ளக் கூடாது.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது சரிதான் போலிருக்கிறது. தன்னையே கடிந்து கொண்டு கதவைப் பூட்டிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்து குழந்தைக்குப் பசியாற்றினாள். குழந்தை மெல்ல மெல்ல உறங்க ஆரம்பித்தது.

கீர்த்தனா கிஷோரின் நம்பருக்கு முயற்சித்து அது கிடைக்காமல் போகவே சலித்துப் போய் நேராக அவனைச்

சந்திக்க அவனது வீட்டிற்கே சென்றபோது அவன் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியேறத் தயாராய் நின்றான்.

குறுந்தாடியும் நிகோடின் படிந்த கறுத்த உதடுகளும் கிறங்கிப் போய் இருந்த சிவந்த கண்களுமாய் நின்ற கிஷோர் எல்லாவிதக் கெட்ட பழக்கங்களும் எனக்கு உண்டு என்பதைச் சொல்லாமல் சொன்னான். அணிந்திருந்த ஆடையில் ஒரு நேர்த்தி இல்லாமல் அலட்சியம் தெரிந்தது. அழுக்கேறிய ஜீன்ஸ் பாண்ட்டும் ஆங்கில எழுத்துக்களால் கிறுக்கப்பட்டிருந்த பனியனுமாய்த் திரும்பிய அவன் கீர்த்தனாவைப் பார்த்ததும் உற்சாகமாய் விசிலடித்தான்.

"வாவ்! கீத்து! உனக்கு ஆயுசு நூறு. இப்பத்தான் உன்னைப் பார்க்க கிளம்பிட்டு இருக்கேன். நீயே வீடுதேடி வந்திட்டே. கம்... கம்...! உள்ளே வா!" பூட்டிய வீட்டை அவசர மாய்த் திறந்தான்.

"வேண்டாம் கிஷோர்! கார்ல வா. உங்கிட்ட பேசணும்."

"ஏன் வீட்ல இருந்தே பேசலாமே! எந்த டிஸ்டர்ப்பும் இல்லாம ஜாலியா பேசலாம்!" ஜொள் விட்டவாறே அவன் சொல்ல, கீர்த்தனா சுற்றுமுற்றும் பார்த்தாள்.

வரிசையாய் ஆறு விடுகள். அனைத்திலும் வாடகைக்குக் குடியிருக்கும் குடும்பங்கள். தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டும் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டும் இருந்த பெண்களின் பார்வையில் ஒரு ஏளனமும் வெறுப்பும் தெரிந்தது. இவர்களின் முன்னிலையில் இவன் வீட்டிற்குள் நுழைவதா?

வீட்டுக்கார அம்மாள் அடிக்கடி தன் காதுபடவே முனகுவாள். "வீடு வாடகைக்கு விட்டா இந்தக் குடிகாரப் பய



அதை லாட்ஜா மாத்திடுவான் போலிருக்கு. குடும்பம் நடத்துற இடம் மாதிரியா இருக்கு இது! காலி பண்ணவும் மாட்டேங் கிறான். இப்படி குடி கூத்தின்னு இருந்தா விளங்குமா! மொள்ள மாறிப்பய! வேலை கிடைச்சதும் காலி பண்ணு வானாம். இவனுக்கு எப்போ வேலை கிடைக்க... இவன் எப்ப வெளியேற? எல்லாம் நம்ம கெட்ட நேரம்! பொறம் போக்குகளுக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்திட்டு அதுக அடிக்கிற கூத்தைக் காணவேண்டியிருக்கு!"

கீர்த்தனா வரும்போதெல்லாம் கேட்கும் வார்த்தைகள் தான். அதற்காகவே போனில் பேசி வரவழைத்து வெளியே சந்திப்பது வழக்கம். இன்று போன் தொடர்பு கிடைக்காததால் நேரில் வர வேண்டியதாகியது.

கிணற்றடியில் இருந்து மீனைக் கழுவிக் கொண் டிருந்தாள் அந்த அம்மாள். "ஹும்...! இவனுங்களைச் சொல்லி என்ன பிரயோஜனம்! இவளுங்க வர்றாளுங் களே... இதுகளைப் பெத்து ஊர்மேய உடுறாளே இவ ஆத்தாளைச் சொல்லணும். ஊர் மேயுற கழுதையோட காலை உடைச்சு வீட்ல போட வேண்டியதுதானே!" சத்தமாகவே முணுமுணுத்தாள்.

"ஆயோவ்! ஓவரா பேசுற... அப்புறம் வீடு முழுசா இருக்காது உனக்கு... சொல்லிட்டேன்!" ஒற்றை விரலை நீட்டி கிஷோர் எச்சரிக்க கப்பென வாயை மூடிக் கொண்டாள் அவள்.

"சீக்கிரம் வந்து தொலை!" என்றவாறு காரில் ஏறி அமர்ந்தாள் கீர்த்தனா. அவனும் ஓடி வந்து ஏறிக் கொள்ள, கார் புறப்பட்டுச் சீறிப் பாய்ந்தது.

"இதுக்குத்தான் உன் வீட்டுப் பக்கமே நான் வர்றதுக்கு விரும்பலை. முதல்ல வீட்டை மாத்து. நல்லதா டீஸண்டா ஒரு ப்ளாட் பாரு. வாடகை எவ்வளவு என்றாலும் பரவா யில்லை. இந்த மாதிரி தொந்தரவு இல்லாம இருக்கும்!" கோபமாய்ப் பொரிந்தாள்.

"கீத்து! நானா மாட்டேங்கிறேன். பத்தாயிரம் வாடகை கேட்கிறான் கீத்து. நான் எங்கே போவேன்?"

"நான் தர்றேன். சீக்கிரமாவே வீட்டை மாத்து. அசிங்கமா இருக்கு."

"சொல்லிட்டேல்ல... இன்னும் பத்தே நாள்ல மாத்திடுறேன். தேங்க்ஸ் கீத்து. என்ன திடீர்னு எனக்காக இவ்ளோ செலவு பண்றே?"

"கேள்வி கேட்காதே கிஷோர். எனக்கு அது பிடிக்காது."

"சரி... கேட்கலை. இப்போ எங்கே போறோம்? எனக்குப் பசிக்குது. ஏதாவது ஹோட்டலுக்குப் போவோமா?"

"ம்.. ஆமா... உன் போனை என்ன பண்ணித் தொலைத்தாய்? லைனே கிடைக்க மாட்டேங்குது. எத்தனை வாட்டி ட்ரை பண்றது?"

"கீத்து! போன் எப்படியோ தண்ணியில விழுந்திடிச்சு கீத்து. பார்ட் பார்ட்டா கழற்றிக் காயவெச்சும் சரியாகல்ல... இப்போ ரிப்பேருக்குக் கொடுத்திருக்கேன்."

"என்னிக்குத் தண்ணியில போட்டே?" கோபமாய்க் கேட்டாள்.

"அதான் அன்னிக்குச் சொன்னியே... ஏதோ ரமாவோட லவ்வர்னு யார் கேட்டாலும் சொல்லுன்னு... அன்னிக்குத்தான்! நீ பேசின கொஞ்ச நேரத்திலேயே பக்கெட்ல விழுந்திடுச்சி."



"நாசமாப் போச்சு! குடிகார நாயே! எப்பவும் தண்ணியில மிதக்காதேன்னு சொன்னாக் கேட்கிறியா? உன்னை நம்பிப் பொறுப்பைக் கொடுத்தேன் பார். என்னைச் சொல்ல வேண்டும்!" நெற்றியிலறைந்து கொண்டாள்.

"என்ன கீத்து இப்படி சொல்றே? கை கால் கழுவக் குனியும்போதுதான் விழுந்தது. நான் ஒன்றும் குடித்து விட்டுப் பொறுப்பில்லாமல் போடவில்லையே!"

"வாயை மூடுடா. உன்னைப் பத்தி எனக்குத் தெரியாது? குடிபோதையில் நான் சொன்ன பேரே உனக்கு நினைவில்லை. தலைகீழாகச் சொல்கிறாய். இதேபோலத் தான் போனையும் தண்ணீரில் போட்டிருப்பாய்!"

"எனக்கா நீ சொன்ன பெயர் நினைவில்லை. ரமாதானே!"

"முட்டாள்! அவள் பெயர் ஹேமாடா! ஹேமா ஹேமான்னு நூறு வாட்டிச் சொல்லிப் பழகிக்கோ!"

"கீத்து! அந்த ஹேமா ஆள் எப்படி இருப்பா? சூப்பரா இருப்பாளா?"

"அறைந்து பல்லைக் கழற்றிவிடுவேன் ராஸ்கல். அவள் என் நாத்தனார். அவள் யாரென்றே உனக்குத் தெரிய வேண்டாம். தெரிந்து கொள்ள முயற்சித்தால் தொலைத்து விடுவேன். நான் சொன்னதை மட்டும் செய். வேறு ஏதாவது தில்லுமுல்லு செய்தால்... என்னைப் பற்றித் தெரியுமில்லே?"

"தெரியும்ப்பா...! நல்லாத் தெரியும். நான் இனிமே வாயைத் திறக்கலை!" என வாயை மூடிக் கொண்டான்.

கீர்த்தனாவிற்கே கொஞ்சம் சங்கடமாக இருந்தது. ரொம்ப அவசரப்பட்டு விட்டோமே! சின்னப் பெண். கோபத்தில் சில வார்த்தைகளைப் பேசிவிட்டாள். அவளுக்கு இந்தத் தண்டனை அதிகம்தானோ! கொஞ்சம் யோசித்துச் செயல்பட்டிருக்கலாம். அத்தனை அவசரமாய் ஆனந்திற்குப் போன் செய்திருக்கக் கூடாது. நிதானமாய்ச் சிந்தித்து இருக்கலாம். அவள் வாழாவெட்டியாய் வந்து நின்றால் தனக்குத்தானே நஷ்டம். தங்கையை வைத்துக் கொண்டு திருமணமே வேண்டாம் என்று விடுவானே ரகு!

அன்று பேசியதை அன்றே ஹேமா மறந்திருப்பாளோ! இன்று எவ்வளவு சகஜமாய்ப் பேசினாள். என்ன இருந் தாலும் ரகுவின் தங்கை ஆயிற்றே! அவளை எப்படிப் பழி வாங்கத் துடித்தேன்! சில கண கோபம் எவ்வளவு பெரிய அபாயத்தைச் செய்ய வைத்து விடுகிறது.

இதில் இவனைத் துணைக்கழைத்தது பெரிய தவறு. இவன் போன் நம்பரை வேறு கொடுத்து விட்டோமே! இந்தப் பிரச்சனையைக் கொஞ்சம் ஆறப் போடலாம். முதலில் ரகுவின் பிரச்சனைதான் முக்கியம். அதிலும் இதிலுமாய்க் காலை வைத்துக் கொண்டு மாட்டிக் கொள்ளக் கூடாது.

ஹேமாவினால் தனது திருமணத்திற்குத் தடை ஏற்பட்டால் அவளைக் கவனித்துக் கொள்ளலாம். அதுவரை இதைக் கிளற வேண்டாம். கிஷோருக்குப் போன் செய்து பார்த்துவிட்டு ஆனந்த் இது ஏதோ வதந்தி என விட்டு விடுவான். அப்படியே சந்தேகித்தாலும் அது அவர்கள்



கவலை! அதைப்பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். இப்போதைய வேலை ரகுவைக் கண்காணிப்பதுதான்!'

"கிஷோர்! போன் எப்போ கிடைக்கும்?"

"இன்னும் ரெண்டு நாள்ல வரச் சொல்லியிருக்கான். முன்னூறு ரூபா கேட்கிறான் ரிப்பேருக்கு!"

"உனக்கு அந்தப் போன் வேண்டாம்!"

"என்ன? என்ன கீத்து சொல்றே?" வியப்பாய்க் கேட்டான்.

"நான் வேற போன் வாங்கித் தர்றேன். பழசை தூக்கிப் போட்டுடு. புது நம்பர் மாத்திடுவோம்."

"கீத்து! நிறைய நல்லது பண்றியே! ஏன் புது நம்பர் யாருக்கும் கொடுக்கப் போறியா? நான் என்ன சொல்லணும்?"

"இல்லே கிஷோர்! அந்தப் பிரச்சனை இருக்கட்டும். இப்ப அதைவிடப் பெரிய பிரச்சனை எனக்கு இருக்கு. நான் அதைக் கவனிக்கணும். அதனால அதைப்பற்றிப் பிறகு பேசிக்கலாம். தேவைன்னா உன்னைக் கூப்பிடுறேன்!" என்றவாறே காரை ஒரு ஹோட்டலின் முன் நிறுத்தினாள்.

இறங்கி இருவருமாய் உள்ளே நுழைய, ரகு தன் நண்பனோடு வெளியே வந்தான்.

கிஷோர் எப்போதும் போல் கீர்த்தனாவை உரசிய படி வர, ரகுவின் முகம் கடுத்தது. பார்வையில் அனல் தெறித்தது.

முதலில் திடுக்கிட்டதும், சட்டெனச் சுதாரித்துக் கொண்டாள் கீர்த்தனா.

"ஹாய் ராம்! நீ எங்கே இங்கே?"

"ம்.. காத்து வாங்கலாம்னு வந்தேன். வாடா போலாம்!" என்றவாறு போய்விட, கேலியாய்ச் சிரித்தான் கிஷோர்.

"முட்டாள்! காத்து வாங்க பீச்சுக்குத்தான் போகணும். இவன் என்ன ஹோட்டலுக்கு வந்திருக்கான். கீத்து! நீ என்னைத் தண்ணியில மிதக்கிறேன்னு சொன்னியே! இவன் தண்ணியிலே ஊறினவன் போலிருக்கே!" அலட்சியமாய்ச் சொன்னவனைப் பளாரென அறைந்தாள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், பரிமாறிய சிப்பந்திகள், பில் செலுத்தும் இடத்தில் இருந்தவர்கள் என அனைவரும் பார்க்க கிஷோர் குன்றிப் போனான். அவன் முகம் கறுத்தது.

"யாரை மரியாதை இல்லாமல் பேசுகிறாய்? என் ராமை முட்டாள் என்கிறாயா? பல்லை உடைத்து விடுவேன். மரியாதையாய்ப் பேசு. அவன் என் கணவனாகப் போகிறவன்!" என்றாள் சத்தமாய்.

கிஷோரின் மனதிற்குள் இருந்த மிருகம் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது. 'நீ இட்ட வேலைகளைச் செய்து கொண்டு நீ பேசும் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டு நான் நாய் மாதிரி உன் பின்னே சுற்றிக் கொண்டிருப்பேன். நீ நோகாமல் அவனைக் கட்டிக் கொள்வாயா? இதற்கா இத்தனை வருடமாய் நீ என்ன சொன்னாலும் மானம் கெட்டுப் போய் உன் பின்னே அலைகிறேன்! நீ உன் திமிர், உன் பணம், உன் சொத்து, இந்த உடம்பு எல்லாமே எனக்குத்தான்டி நீ தலைகீழாய் நின்றாலும் என்னைத் தவிர இன்னொருவனை உன்னை நெருங்க விடமாட்டேன். நீ எனக்குத்தான்!' மனதிற்குள் சூளுரைத்தான் கிஷோர்.



"சரி... சரி... சாப்பிட வா!" எதுவுமே நடவாதது போல் முன்னே சென்றாள் அவள்.

மனம் முழுக்க வன்மத்துடன் அவள் பின்னே சென்றான்.

## 10

ரோஜாவே!
எனக்கொரு வரம் கொடு!
உன்னைச் சுற்றிலும் முட்களாய்
இருந்து உன்னைப் பாதுகாத்து
என் ஜென்ம சாபல்யம்
அடைந்து கொள்கிறேன் நான்!

**கோ**விலில் ஒலிக்கும் பக்திப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே மளமளவென வேலைகளை முடித்துக் கொண்டிருந்தாள் ரோஜா. சாப்பாட்டை கேரியரில் அடைத்துக் கூடையில் வைத்தாள். பிளாஸ்கில் காபியை ஊற்றி இறுக மூடிவைத்தாள். சமையலறையை ஒதுக்கிச் சுத்தம் செய்து விட்டுப் புழக்கடையில் நின்று ஈரக்கூந்தலைத் துவட்டினாள்.

துணிகளைக் காயப் போட்டுக் கொண்டிருந்த மல்லிகை, "அக்கா! வேலை முடிஞ்சதா... கிளம்பலாமா?" எனக் கேட்டாள்.

"எல்லாம் ரெடி! நீ சீக்கிரமா தலையைப் பின்னு. இப்ப கிளம்பினாத்தான் சரியா இருக்கும். ஹாஸ்பிடல்ல போய்ச் சாப்பாட்டைக் கொடுத்திட்டு நாம வேலைக்குப் போயிடணும்!" சொல்லிக் கொண்டே வீட்டினுள் நுழைந்து அவசரமாகத் தலையை வாரினாள்.

தானும் ஒரு சீப்பை எடுத்துக் கொண்டு கூந்தலைச் சிக்கெடுத்துக் கொண்டே, "அக்கா! பேசாம இன்னிக்கு லீவு போட்டுடலாமா! நாமளும் ஆபரேஷன் முடியுற வரைக்கும் ஹாஸ்பிடல்லயே இருப்போம்!" என்றாள் ஆவலாய்.

"ம்ஹூம்... ஏற்கெனவே ரெண்டு நாள் லீவு போட்டிருக்கோம். இன்னிக்குப் போட வேண்டாம். எப்படியும் ஆபரேஷன் முடிஞ்சு வார்டுக்குக் கூட்டிட்டு வர ஈவ்னிங் ஆகிடும். அதுவரை சும்மா ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்திட்டு டென்ஷனா ஏன் நிக்கணும். நேரமும் போகாது. வேலைக்குப் போயிட்டு ஈவ்னிங் நேரே ஹாஸ்பிடல் வந்திடு. நானும் வந்திடுறேன். அப்புறமா சேர்ந்தே வீட்டுக்கு வந்திடலாம். என்ன?"

"ம்...!" அரை மனதோடு தலையாட்டினாள் மல்லிகை.

"என்ன ம்...! சீக்கிரம் கிளம்பு. ரெண்டு இட்லி சாப்பிட்டுப் போலாம்."

"ம்ப்ச்! வேண்டாங்க்கா! எனக்குப் பசிக்கவே இல்லை. மனசெல்லாம் சந்தோஷமா இருக்கு. நம்ம அண்ணன் பழையபடி நம்மோட இருப்பான்றதே பெரிய ஆறுதல். பசி தூக்கம் எல்லாம் பறந்து போச்சு."

"அதுக்காகச் சாப்பிடாம போவியா! எத்தனை மணி நேரம் நிற்ப நீ! பசியோட போனா மயக்கம் வரும்டி. வா சாப்பிடு!" தங்கையை இழுத்து அமர வைத்து ஆளுக்கு இரண்டு இட்லிகளைச் சாப்பிட்டு விட்டு அவசரமாய்ப் பவுடரை ஒற்றி ஆடைகளை மாற்றிவிட்டுச் சாப்பாட்டுக் கூடையையும் கைப்பையையும் எடுத்துக் கொண்டு வெளியே வரும்போது வீட்டு முன் அந்தக் கார் வந்து நின்றது.



இருவரும் திரும்பிப் பார்க்க காருக்குள்ளிருந்து அவள் இறங்கினாள். ரோஜா குழப்பமாய் நோக்க, மல்லிகை தமக்கையின் காதில் கிசுகிசுத்தாள்.

"அக்கா! இவ யாருன்னு தெரியுதா உனக்கு? அதான் அன்னிக்கு கோவில்ல பார்த்தோமே! மாப்பிள்ளை சார் ஃபேமிலியோட இருந்தாளே!"

"உனக்கு எப்படி ஞாபகம் இருக்கு மல்லி?"

"இவளை மறந்தாலும் இவளோட மேக்கப்பை மறக்க முடியாது. கலர் கலரா வந்து நிக்கிறா பாரு. ஆமா, இவ ஏன் நம்ம வீட்டுக்கு வர்றா?"

தங்கையின் கிசுகிசுப்பில் வந்தவளை நிமிர்ந்து பார்த்தாள் ரோஜா. நீல நிற மிடி. முழங்கால் வரை மட்டுமே நிற்க, கொலுசு போடாத கால்கள்... உயரமான செருப்போடு ஒய்யாரமாய் நின்றது... கைகளில் நீலநிற பேண்ட். தலையை வாரிப் பின்னலிடாமல் காற்றில் பறக்க விட்டிருந்தாள். கற்றை முடியில் ஒரு கொத்து மட்டும் நீலநிறமாக கலரிங் செய்யப்பட்டிருந்தது.

இமைகளின்மீது ரோஜா நிறம், கன்னத்தில் செந்நிறம், இதழ்களில் சிவப்பு நிறம்... என அந்தப் பெண்ணின் முகம் வானவில் போலப் பல நிறமாய்த் தோன்றியது. இவள் எப்படி இந்த முகத்தைக் கழுவிச் சுத்தம் செய்வாள். இந்தப் பெயிண்ட் போகுமா? கூந்தல் கெட்டுவிடாதா? என்று கவலைப்பட்டாள் ரோஜா.

"ஹலோ! நான் யாருன்னு தெரியுதா?" கேட்ட குரலில் மென்மையைவிடக் கரகரப்பும் கர்வமும் தொனித்தது.

மல்லிகையை அடக்கிவிட்டு, "ஸாரி! நீங்க யாருன்னு தெரியலையே?" என்றாள் ரோஜா.

"என்னை ராம்தான் இங்கே அனுப்பினார்."

"ராமா? யார் ராம்? நீங்க அட்ரஸ் மாறி வந்திட் டீங்களோ?"

"ரகுராம். உங்க ஃபேமிலியில யாருக்கோ ட்ரீட் மெண்ட்டுக்குப் பணம் தர்றேன்னு சொல்லியிருந்தானே... அந்த ரகுராம்!"

"ஓ! அவர் அனுப்பினாரா! வாங்க. உள்ளே வாங்க. என்ன விஷயம்?" என்றவாறு உள்ளே சென்றாள் ரோஜா. பின்னால் வந்த தங்கையிடம் கூடையைக் கொடுத்து, "மல்லி! நீ அம்மாவுக்குச் சாப்பாடைக் கொடுத்திட்டு அப்படியே கடைக்குப் போயிடு. நான் இவங்க கிளம்பினதும் நேரே பார்மஸிக்குப் போயிடுறேன். இந்தா காசு, வெச்சுக்க. ஆட்டோ பிடிச்சுப் போ. அப்பத்தான் சீக்கிரம் போக முடியும்!" எனத் தங்கையை விரட்டினாள்.

மல்லிகை சென்றதும், "உட்காருங்க... என்ன விஷயம்! நீங்க யாரு? உங்களை ஏன் அனுப்பினார்? அதுவும் வீட்டிற்கே!" படபடவெனக் கேட்டவளை நிதானமாய்ப் பார்த்தாள் கீர்த்தனா.

ஈரம் படிந்த தலையும் அவசரமான முகஒப்பனையும் கூட இந்தப் பெண்ணிற்கு எத்தனை பாந்தமாய் இருக்கிறது. இந்தப் புடவை மிஞ்சிப் போனால் முந்நூறு ரூபாய் இருக்குமா? இவளுக்காகவே நெய்தது போல் என்ன அம்சம்! அழகு என்பது இயற்கையாக இருக்க வேண்டுமோ! எத்தனை மணிநேரம் அலங்கரித்தாலும் இந்த அழகு நமக்கு வர மாட்டேன் என்கிறதே!



ரோஜா தவிப்பாய் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள். "எக்ஸ்கியூஸ் மீ! நான் வேலைக்குப் போகணும். டயமாகுது. நீங்க வந்த விஷயத்தைச் சொன்னீங்கன்னா கேட்டுட்டுக் கிளம்பிடுவேன்!" என்றாள்.

"வேலையா? எங்கே கலெக்டர் ஆபீஸ்லயா?" கேள்வியில் நக்கல் தொனித்தது.

"ட்ரை பண்ணியிருந்தா அங்கேயே வேலை கிடைச்சிருக்கும். ஆனா அவசரத்திற்கு பார்மஸியிலதான் வேலை கிடைச்சது!" என்றவளைப் பார்த்து மிரண்டு போனாள் கீர்த்தனா.

கோழிக்குஞ்சு போல் இருந்து கொண்டு என்னை வாருகிறாளே! இவளிடம் கொஞ்சம் எச்சரிக்கையாகத்தான் பேச வேண்டும்.

"பார்மஸியிலா? கடையிலா நிற்கிறாய்? நீ புறப்பட்ட தோரணையைப் பார்த்து ஏதோ கவர்ன்மென்ட் ஜாப் என்று நினைத்தேன்."

"இதைச் சொல்லத்தான் வந்தீர்களா?"

"என்ன நீ? எதற்கெடுத்தாலும் திமிரா பதில் சொல்றே? உன்னை மாதிரி ஆட்கள் பணிவாய்ப் பேசினால்தான் காரியம் நடக்கும்."

"என்ன காரியம் நடக்க வேண்டும்? யாரிடம் பணிய வேண்டும்?" ஒரு மாதிரியான குரலில் கேட்டாள் ரோஜா.

"எங்களிடம்தான். எங்களிடம் பணிவாய் நடந்தால் தானே எங்களால் முடிந்த உதவியைச் செய்ய முடியும். உதவி என்று கையேந்தினால் என் ராம். அதுதான் உன் ரகுராம்... உயிரையே கொடுத்து விடுவான்!"

"நாங்கள் யாரிடமும் உதவி செய்யுங்கள் என்று கையேந்தவில்லையே!"

"பிறகேன் என்னிடம் மூன்று லட்சம் கொடுத்து விட்டான். ஏதோ ஆபரேஷன் என்றானே... நான்தான் வீடு மாறி வந்துவிட்டேனா...! நீதானே ரோஜா?"

"ஆமாம்...!"

"அப்போ அட்ரஸ் சரிதான். ராம் பணம் தந்துவிட்டான். இந்தா!" என ஒரு கவரை நீட்டினாள்.

"அவர் இல்லையா? இன்று ஹாஸ்பிடலுக்கு வந்திடுவேன் என்றாரே!" ரோஜாவின் முகம் ஏமாற்றமடைய, கீர்த்தனாவின் மனம் வெகுண்டது.

"அவரை என்ன உன்னைப் போல் ஜவுளிக்கடையிலும் மருந்துக் கடையிலும் சம்பளத்துக்கு நிற்பவர் என்று நினைத்தாயா? நினைத்தவுடன் லீவு போட்டுட்டு ஓடி வர! ஆமாம்! நீங்கள்லாம் யாரு அவருக்கு? ரத்த சம்பந்தமா? இல்லே பூர்வீகச் சொந்தமா? ஏதோ பாவப்பட்டதுகளுக்குப் பண உதவி செய்தா அவரே வந்து தந்தாத்தான் வாங்கு வீங்களோ! நிலைமைக்குத் தகுந்து ஆசைப்படுங்க!" என்றாள் கடுப்பாய்.

"நாங்க என்ன அப்படி ஆசைப்பட்டோம்! மரியாதை யாய்ப் பேசுங்கள்!" சீறினாள் ரோஜா.

"அடடா! இந்த ரோஷத்திற்கொன்றும் குறைவில்லை. இதைக் கையேந்தும் முன் காட்டியிருக்க வேண்டும். ஒரு ஏமாளி கிடைத்தால் போதுமே! உடனே ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டுக் காரியத்தைச் சாதித்து விடுவீர்கள். அவர்



யார்? எவர்? அவருக்கென்று குடும்பம் உள்ளதா என்று யோசிப்பதில்லை. என்ன ஜென்மங்களோ? இவரைச் சொல்ல வேண்டும்!" கீர்த்தனாவின் பேச்சில் திணறிப் போனாள் ரோஜா.

இவள்... இவள்... அவர் மனைவியாக இருப்பாளோ! ச்சே! சிரித்த முகமும் மென்மையான பேச்சுமாய் இருப்ப வருக்கு இந்த ராட்சஸியா மனைவியாக வாய்த்தாள்? பாவம்தான்! ஆனால்.. அன்று அவன் தனக்குத் திருமண மாகவில்லை என்றல்லவா சொன்னான். அவன் தாய்கூடச் சொன்னார்களே! ஒரு மாதத்திற்குள் திருமணமாகி விட்டதா என்ன?

"என்ன கல்லு மாதிரி நிற்கிறாய். பணம் வேணுமா வேண்டாமா?"

"நீங்கள் யாரென்று சொல்லவே இல்லையே! நான் உங்களிடம் பணம் கேட்கவும் இல்லையே!"

"நானா? நான் அவரது மனைவியாகப் போகிறவள்!"

"அடேங்கப்பா! மனைவி ஆவதற்கு முன்பே இத்தனை ஆர்ப்பாட்டமா! நான்கூடத் திருமணமாகிவிட்டது என்றுதான் நினைத்தேன்."

"இப்படி ஏதாவது சனியன்க இடையில வந்திடுது. அதனாலதான் எங்கள் திருமணம் தள்ளிப் போகுது. இதோ பார். இந்த உதவி இதோட முடியட்டும். பிறகும் மருந்து, மாத்திரை வாங்கப் பணம் வேணும்... அது இதென்று வந்து நிற்காதே! அடுத்த மாதமே எங்களுக்குத் திருமணம். இப்படி வெட்டிச் செலவு செய்தே எங்கள் பணம் கரைந்து விடுகிறது!" சிடுசிடுத்தாள்.

"தேவையில்லை. உங்கள் பணம் உங்களிடமே இருக்கட்டும். கல்யாணச் செலவிற்கு உதவும். எங்கள் அண்ணனுக்கு நாங்களே பணத்தை ஏற்பாடு செய்து கொள்கிறோம். நீங்க கிளம்புங்க."

"ஏய்! என்ன விளையாடுகிறாயா? இது ஒண்ணும் மூணு ரூபா இல்லே... புரட்டுவதற்கு! மூன்று லட்சம்!"

"பரவாயில்லை! மானத்தை விட்டு உங்களிடம் கையேந்தி எங்கள் அண்ணன் வாழ்வதைவிட அவன் படுக்கையிலேயே இருக்கட்டும். எங்களால் எப்போ முடியுமோ அப்போ ஆபரேஷன் பண்ணிக்கிறோம்."

அலட்சியமாய்த் தோளைக் குலுக்கினாள் கீர்த்தனா. "ஓ.கே. லாபம்தான்! பட் ஒன் திங். என்னிடம் பெரிய வீராப்புப் பேசிட்டு ரகுவிடம் போய்க் கண்ணீர் விட்டு ஏமாற்றலாம் என்று நினைக்காதே! பிறகு நான் பொல்லாத வளாகி விடுவேன்."

"கவலைப்படாதீர்கள். அந்த மாதிரி மாயமெல்லாம் செய்து எங்களுக்குப் பழக்கமில்லை. போய் உங்கள் ரகுவிடம் சொல்லுங்கள். இனிமேல் உதவி செய்கிறேன் பேர்வழி என்று யாருடைய வாழ்க்கையிலும் விளையாட வேண்டாம் என்று!" என்றாள் இறுகிய குரலில்.

"ஹும்... பணக்காரப் பசங்க அப்படி இப்படித்தான் இருப்பாங்க. நீங்கதான் ஒதுங்கிப் போகணும். ஒருத்தனைப் பார்த்த உடனே ஒட்டிப்பீங்களா அட்டை மாதிரி!"

"ஸ்டாப் இட். நீங்க கிளம்பலாம். உங்க அளவுக்குக் கீழே இறங்க வேண்டாமுன்னு பார்க்கிறேன். வெளியே போங்க."



"சாப்பாட்டுக்கு வழியில்லாட்டியும் பேச்சுக்குக் குறைவில்லை. நான் இப்ப போறேன். இனி ரகுவைப் பார்த்தாலோ பேசினாலோ மீண்டும் வருவேன். தனியாக இல்லை. முக்கியமான நபர்களோடு வருவேன். அதன் பிறகு இந்தத் தெருவில் குடியிருக்க முடியாது. வரட்டுமா?" என்றவாறு கையிலிருந்த பணத்தைத் தன் கைப் பையினுள் வைத்துக் கொண்டு டக் டக் என நடந்து வெளியேறினாள்.

ரோஜாவின் மனமும் முகமும் குன்றிப் போக, நாற்காலியில் அமர்ந்தாள். தண்ணீரை எடுத்து மூச்சு விடாமல் குடித்தாள். அப்போதும் படபடப்பு அடங்கவில்லை. இவள் யார்? இவளுக்கும் தனக்கும் என்ன விரோதம்? ஏன் இப்படித் தன் இதயத்தைச் சல்லடையாக்கி விட்டுப் போகிறாள். அந்த ரகுவின் முகத்தைக்கூட நான் நிமிர்ந்து பார்க்கவில்லையே! நாங்களா அவனை ஒட்டிக் கொண்டோம். பணம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசிவிடலாமா?

வேண்டாம். அவனும் வேண்டாம். அவன் செய்யும் உதவியும் வேண்டாம். அங்கே அம்மா இவனை எதிர் பார்த்துக் காத்திருப்பார்களே! இன்று ஆபரேஷன் என்று அண்ணனும்தான் எத்தனை உற்சாகமாய் இருந்தான். போச்சு... எல்லாம் போச்சு!

பணம் இல்லையென்றால் ஆபரேஷன் இல்லை. அண்ணன் மனமுடைந்து போவானோ! பழைய நிலைக்கே திரும்பி விடுவானோ! நினைக்கையில் கண்கள் கசிந்தன. தன்னம்பிக்கையோடு எழுந்தவனை மீண்டும் சாய்த்து விடுவோமோ!

முதலில் ஹாஸ்பிடலுக்கப் போகலாம் என்று எழுந்தாள். முகத்தைச் சீராக்கினாள். எதுவும் நடக்காதது போல் இயல்பாய் வெளியேறிக் கதவைப் பூட்டிக் கொண்டு மருத்துவமனையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். வழியில் இருந்த கடையில் இருந்த தொலைபேசியில் ஒற்றை ரூபாய் நாணயத்தைப் போட்டு பார்மஸிக்குப் போன் செய்து இன்று தன்னால் வேலைக்கு வர இயலாது எனப் பணிவாய்க் கூறி விடுப்பு எடுத்துக் கொண்டு வேகமாய் நடையை எட்டிப் போட்டாள்.

தெருமுனையில் இருந்த தன் காருக்குள் இருந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த கீர்த்தனாவின் மனம் வேகமாகக் கணக்குப் போட்டது. இப்போது ஹாஸ்பிடலுக்குத்தான் போகிறாள். ஏற்கெனவே அங்கு ரகு காத்துக் கிடக்கிறான். இவள் அவனைப் பார்த்து விட்டால் எப்படியும் தன்னைப் பற்றிச் சொல்லுவாள். ஒரு நான்கு நாட்களாவது அவன் இவள் கண்ணில் படவில்லை என்றால் நான் சொன்னதை நம்பித் தானாகவே விலகி விடுவாள்.

ரோஷக்காரியாகத்தான் இருக்கிறாள். இதை எதிர் பார்த்துதானே வந்தேன். இப்போது போட்ட தூபம் போதும். இனி இவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனால் ரகு! ரகுவை எப்படி விலக்கிவிட முடியும்?

இப்போதெல்லாம் வீட்டில் இருப்பதைவிட மருத்துவ மனையில்தானே தவம் கிடக்கிறான். முகத்தில் முன்பைவிட அதிகமான பூரிப்புத் தெரிகிறது. தங்கையுடன் கிசுகிசுப்பாய்ப் பேசிக் கொள்கிறான். ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. தன்னை விட்டு விலகி வெகுதூரம் போக ஆரம்பித்து விட்டான்.



அதற்குக் காரணம் ஏன் இந்த ரோஜாவாக இருக்கக் கூடாது. நான்கு நாட்களாய்க் கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக் கண்காணித்ததில் தன் எண்ணம் சரியே என்று தோன்றியது. அக்கா, தங்கை இருவருமே மாலையில் ஹாஸ்பிடலில் ஆஜராகிவிடுகின்றனர். வாசலில் வந்து அழைத்துப் போவது ரகு. அப்போது அவன் முகத்தில் எத்தனை ஒளி!

தூரத்தில் இருந்து பார்த்தே கொதித்துப் போனாள் கீர்த்தனா. எப்பவுமே மருத்துவமனையும் நோயாளிகளின் வேதனையான ஓலங்களும் மருந்து நெடியும் அவளுக்கு அலர்ஜி. அதனால் உள்ளே போக விரும்பியதில்லை. உள்ளே போனால் ரகுவின் கண்களிலோ சாரதியின் கண்களிலோ பட்டுவிடக் கூடுமோ என்ற அச்சமும் ஒருபுறம் தடுத்தது.

அதனால் வெகு அவஸ்தையாய் அவள் காரிலேயே காத்திருக்க, இரவு எட்டு மணிக்குத்தான் தாயும் மகள்களும் வெளியே வருகிறார்கள். அப்போதும் ரகு வீடு திரும்புவ தில்லை. இவன் என்ன அந்த நோயாளிக்கு மருத்துவம் பார்க்க என்றே அவதரித்தானா? நல்லவேளை, நோயாளி ஒரு ஆண் என ஆறுதல் அடைந்தாலும் நோயாளியின் தங்கை ஒரு அழகான பெண் என்பதில் வயிறு எரிந்தது.

தான் பயப்படுவதுபோல் ஏதேனும் ஆகிவிட்டால் என்னாவது என்றுதான் இன்று வந்து ரோஜாவைச் சீண்டிக் கோபத்தையும் வெறுப்பையும் கிளப்பி விட்டாள். இப்போது ரகுவை அங்கிருந்து இவள் போகுமுன் கிளப்ப வேண்டும். இவள் போகும்போது அவன் அங்கு இருக்கக் கூடாது. என்ன செய்யலாம்?

நெற்றியைத் தட்டி யோசித்தவள் சட்டென ஒரு எண்ணம் தோன்ற, தனது செல்போனை எடுத்து ரகுவின் எண்ணுக்கு டயல் செய்தாள். இரண்டு முறை லைன் கிடைக்காமல் மூன்றாவது முறையாக ரிங் போயிற்று.

# 11

ரோஜாவே!
முட்கள் உன் கவசமாக இருக்கலாம்!
அதற்காக அவை என்
இதயத்தைக் குத்திக் கிழிப்பது
எந்த வகையில் நியாயம்?

"மிஸ்டர் செல்வா! நீங்க எதுக்கும் பயப்படாதீங்க. தைரியமா போய் ஆபரேஷன் முடிச்சிட்டு வாங்க. எல்லாம் சரியாகிடும்!" தாமரைச்செல்வனின் கரங்களைப் பற்றி அழுத்தினான் ரகு.

"தேங்க்யூ ஸார். நான் வர்ற வரைக்கும் இருப்பீங்களா ஸார்! எனக்கு மயக்கம் தெளியும்போது உங்க முகத்தைத் தான் பார்க்கணும்னு ஆசைப்படுறேன். உங்களைப் பார்த்தாலே ஒரு புத்துணர்வும் தன்னம்பிக்கையும் வருது ஸார்!"

"கண்டிப்பா இங்கேதான் இருப்பேன். அதுக்காகவே எல்லா வேலையையும் அப்பாகிட்ட தள்ளி விட்டுட்டு வந்திருக்கேன். நீ ஆபரேஷன் முடிஞ்சு வர்ற வரைக்கும் சாப்பிடக்கூட நகரமாட்டேன். சரியா!"

மாணிக்கமும் சகுந்தலாவும் கண் கலங்கினர். "தம்பி! நீங்க யாரோ எவரோ? ஆனா எங்க கண்ணுக்கு அந்தக்



கடவுளாத்தான் தெரியுறீங்க. கடவுள் மனுஷ ரூபத்தில வர்றது உண்மைதான்யா. எம்புள்ளையைக் காப்பாத்த அந்த ஆண்டவன் உங்க ரூபத்துல வந்திருக்கார். எங்க சாமி நீங்க!"

"ஐயோ! அதுக்காகப் போட்டோவில மாலை போட்டு ஊதுபத்தி ஏத்திக் கும்பிட ஆரம்பிச்சிடாதீங்க."

சகுந்தலா பதறினாள். "தம்பி! அப்படி அபசகுனமா பேசாதீங்க."

"பார்த்தீங்களா! சும்மா ஒரு வார்த்தைதான் சொன்னேன். அதுக்குள்ளே ஒரு தாயா உங்க மனம் பதறுது பார்த்தீங்களா? இந்த அன்புதாம்மா கடவுள். எல்லார் மனசிலயும் கடவுள் இருக்கார். நாம நல்லதையே நினைக்கிற வரைக்கும் நம்ம கூட இருப்பார். எப்போ நாம பாதை மாறிப் போறோமோ அப்போ அவரும் வெளியேறிவிடுவார். நான் செய்தது சாதாரண உதவி. இதைப் போயி பெரிசு பண்ண வேண்டாம்."

"அம்மா! எனக்கு ரோஜாவைப் பார்க்கணும் போலிருக்கு."

"சாயந்திரம் வந்திடுவாப்பா. நர்ஸ்ங்க வந்தாச்சு. எய்யா தைரியமா இரு. கடவுளை வேண்டிக்கோ!" மகனின் முகத்தை வருடி நெற்றியில் முத்தமிட்டாள்.

இரண்டு நர்ஸ் இரண்டு வார்டு பாய்கள் வந்து தாமரைச்செல்வனை ஸ்ட்ரெச்சரில் ஏற்ற, கொஞ்சம் பயமாய் ரகுவின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"நான் பொழைச்சிடுவேனா ஸார். திரும்பி வருவேனா?"

"அதிலென்ன சந்தேகம் செல்வா! எட்டு டாக்டர்ஸ் பத்து நர்ஸ். எல்லா மருந்து மாத்திரைகளும் இருக்கு. கூடவே அம்மா அப்பாவோட ஆசியும் கடவுள் துணையும் இருக்கு. தைரியமா போங்க. கண்கலங்கக் கூடாது!" கூடவே நடந்து பேசிக் கொண்டே வந்தான் ரகு.

பெற்றவர்கள் கண்ணீரோடு பின்னால் வர ஆபரேஷன் தியேட்டர் வாசலை அடைந்ததும் அனை வரையும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். ரகுவின் கைகளிலிருந்து தன் கையை விடுவித்துக் கொள்ள, உள்ளே நுழைந்ததும் கதவு சாத்தப்பட்டது.

"தம்பி! இது பெரிய ஆஸ்பத்திரியா இருக்கே? செலவு ரொம்ப ஆகுமோ!" என்றார் மாணிக்கம்.

"நீங்க கவலைப்படாதீங்கய்யா! உங்க பையன் ரொம்ப லக்கி. அவருக்காக நான் கேட்டதும் எல்லோருமே அவங்களால முடிஞ்ச பணத்தைத் தந்திட்டாங்க. ஆபரேஷன் பீஸ் கட்டினது போக இன்னும் ஒன்றரை லட்சம் கையில இருக்கு. மத்த மருந்து செலவுக்கும் ஹாஸ்பிடல் பீஸுக்கும் இது தாராளமா போதும்!"

"இங்கே எத்தனை நாள் இருக்கணும்பா!"

"ஒரு வாரம் இருந்தா போதும். கட்டுப் பிரிச்சு எல்லாம் நார்மல்னா பழைய ஹாஸ்பிடலுக்குப் போயிடலாம். நல்லா குணமானதும் வீட்டுக்குப் போயிடலாம்."

ரகு சொல்லிக் கொண்டிருந்தபோது போன் மணி யடித்தது. எடுத்துப் பார்த்துவிட்டு எரிச்சல் பட்டான். இவள் ஏன் இப்போது போன் பண்ணுகிறாள்?



போனைக் காதிற்குக் கொடுத்தான். மறுமுனையில் அழுகையோடு பேசினாள் கீர்த்தனா. "ராம்! நீ எங்கே இருக்கே ராம்?"

"நான் ஹாஸ்பிடல்ல இருக்கேன். என்ன விஷயம்?"

"ரகு! நான் பாண்டிச்சேரியில ஒரு ஃபிரண்டோட கல்யாணத்துக்காக இன்னிக்குத்தான் வந்தேன். அப்பா கிட்ட இருந்து போன் வந்தது. அப்பாவுக்கு ரொம்ப நெஞ்சு வலிக்குதாம்."

"என்ன நெஞ்சுவலியா?" உண்மையாகவே பதறிப் போனான்.

"ஆமா! தையல் போட்ட இடமெல்லாம் வலிக்குதாம். ரொம்பத் துடிக்கிறார். நான் உடனே கிளம்பி வர்றேன். நீ அதுக்குள்ள அப்பாவை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போயிடுறியா? எனக்கு ரொம்ப பயமா இருக்கு!" விம்மி அழுதாள்.

"நோ! நோ! மாமாவுக்கு ஒண்ணும் ஆகாது. நான் ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போறேன். நீ சீக்கிரமா வந்து சேர்!" எனப் போனைக் கட் பண்ணினான்.

"என்ன தம்பி! யாருக்கும் உடம்பு முடியலையா?" சகுந்தலா பதறினாள்.

"ஆமாம்மா! என் மாமா ஹார்ட் பேஷண்ட். இப்போ நெஞ்சுவலியில வீட்ல தனியா துடிக்கிறாங்களாம். அவங்க பொண்ணுதான் போன் பண்ணினா. நான் உடனே போகணும்."

"போங்கய்யா... போங்க. அதுதான் முக்கியம். இங்க நாங்க பார்த்துக்கிறோம். முதல்ல மாமாவைக் கவனிங்க...!" மாணிக்கமும் பதறினார்.

"மாமா நிலைமை எப்படி இருக்குன்னு தெரியலை! ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணச் சொன்னாங்கன்னா நான்தான் கூட இருந்தாகணும். லேசான வலின்னா நான் வந்திடுவேன். கொஞ்சம் சீரியஸ்னா கூட இருப்பேன். நீங்க செல்வாவைக் கவனிச்சிக்குங்க."

"சரிப்பா... நீங்க கிளம்புங்க!"

சட்டெனப் பைக்குள் கையை விட்டுக் கத்தையாய்ப் பணத்தை எடுத்து மாணிக்கத்தின் கையில் வைத்தான். "மருந்து, ஊசின்னு எழுதித் தருவாங்க. வாங்கிக் கொடுங்க. பார்த்துக்குங்க. நான் அப்பப்போ ஹாஸ்பிடல் நம்பருக்குப் போன் பண்ணிக் கேட்டுக்கிறேன். வரட்டுமா?" என அவசரமாக விடைபெற்று காரில் ஏறிக் கொண்டு புறப்பட்டு அவன் வெளியேறிய சில நொடிகளில் உள்ளே நுழைந்தாள் ரோஜா.

கண்ணீரைச் சுண்டியெறிந்தாள் கீர்த்தனா. மாமாவுக்கு என்றதும் பயந்துவிட்டான். இந்நேரம் புறப்பட்டு இருப்பான். அலட்சியமாய்ச் சிரித்தபடி தன் தந்தையைத் தொடர்பு கொண்டாள்.

"அப்பா! நான் சொல்றதை ஏன் எதுக்குன்னு கேட்காமச் செய்யுங்க. இப்ப ரகு வருவான். அவன் கார் சத்தம் கேட்டதும் நெஞ்சைப் பிடிச்சிகிட்டு தரையிலே படுத்துக்குங்க. தத்ரூபமாத் துடிக்கணும். உங்க துடிப்பைப் பார்த்து ரகு மிரண்டு போயிடணும். வேற எந்த எண்ணமும் வராம உங்ககூடவே அவன் இருக்கணும். ஒரு வாரத்திற்கு



அவனை எங்கும் விடக்கூடாது. நான் சாயங்காலமா வந்து பார்க்கிறேன். நான் பாண்டிச்சேரியில இருக்கிறதா சொல்லியிருக்கேன். யாரும் கேட்டா நீங்களும் இதே பதிலைச் சொல்லுங்க. உளறிக் கொட்டிக் காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்."

"எதுக்கும்மா இதெல்லாம்! இப்ப நீ எங்கே இருக்கே?" வருத்தமாய்க் கேட்டார் தணிகாசலம்.

"நான் இங்கே பக்கத்திலேதாம்ப்பா இருக்கேன். நான் சொன்ன மாதிரி நீங்க நடிங்க. மத்ததெல்லாம் பிறகு நேரில் வந்து சொல்கிறேன். எனக்கு ரகு கிடைக்க வேண்டும் என்றால் நீங்கள் இதெல்லாம் செய்ய வேண்டும்!" என்றாள் உறுதியாக.

"ஏன், ரகு என்ன செய்தான்? எதற்கு அவனுக்குப் பொய்யான தகவல் கொடுத்தாய்?"

"அப்பா! சொன்னதை மட்டும் செய்யுங்கள். உங்கள் மருமகன் என்னை விட்டு வேறு திசைக்குத் திரும்பியிருக்கிறான். அவனை நம் பிடிக்குள் வைக்கத்தான் இந்த நாடகம். ஒரு வாரம் அவன் உங்களைவிட்டு நகரவிடக் கூடாது. எதையாவது சொல்லி இந்த வாரமே எங்களுக்கு நிச்சயம் செய்ய வேண்டும். அப்போதான் அவன் என்னை விட்டு ஓடமாட்டான். நிச்சயம் செய்தாலும் சரி. ஹாஸ்பிடல்ல வெச்சே கல்யாணம் பண்ணினாலும் சரி... எனக்கு ரகு வேணும். புரியுதா? போனை வைங்க. அவன் இப்ப வந்திருவான்!" என போனை கட் செய்தாள்.

போனை வைக்கவும் தோன்றாமல் அப்படியே நின்றார் தணிகாசலம்.

என்ன பெண் இவள்? இவள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பெற்ற தகப்பனையே நடிக்கச் சொல்கிறாளே! தன் மகள் வாழ்வு முக்கியம்தான். அவளது விருப்பத்தை நிறைவேற்றுவது தன் கடமைதான். ஆனால் அதற்காகப் பொய்யாய் நடித்து அனைவரையும் பதறச் செய்து மிரட்டி நிச்சயிக்க வேண்டுமா?

ஆண்பிள்ளை இல்லாத தனக்கு மகனாய் இருந்து பார்த்துக் கொள்வான் ரகுராம். ஹார்ட் சர்ஜரி பண்ணும் போது கூடவே இருந்து கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொண்டது அவன்தான். பெற்ற மகளாய் இருந்து இவள் என்ன செய்தாள்? ஒருமுறை ஒரே ஒருமுறையாவது வந்து பார்த்தாளா?

"ஹாஸ்பிடல் ஸ்டெத் எனக்கு அலர்ஜி டாடி. நீங்க வீட்டுக்கு வந்தப்புறம் பார்த்துக்கிறேன். அதான் அத்தையும் ரகுவும் கூட இருக்கிறார்களே!" எனப் போனில் கூறியதோடு சரி. வராமலே இருந்து விட்டாள்.

இரவில்கூடத் தகப்பனும் மகனும் தூங்காமல் இருந்து பார்த்துக் கொண்டனர். ரகுவிற்கு இயல்பாகவே மாமாவின் மீது ப்ரியம் அதிகம்தான். அதையே இவள் தன் விளை யாட்டிற்குப் பயன்படுத்துகிறாளே! உத்தமமான பிள்ளை ரகு. தன் மகள் அவனுக்குப் பொருத்தமாய் இருப்பாளா? பொருத்தமில்லாதவர்கள் வாழ்க்கையில் இணைந்தால் அந்த வாழ்க்கை இனிதாய் அமையுமா?

இப்போதே யார் சொல்லையும் மதியாமல் அலையும் மகள் தன் மருமகனின் சொல் கேட்டு நடப்பாளா? மகளுக்காகப் பரிந்து கொண்டு ரகுவின் வாழ்வை நானே சீரழிக்கலாமா? இது தவறல்லவா! நினைக்கையில்



தணிகாசலத்திற்கு உண்மையாகவே நெஞ்சின் ஓரத்தில் வலித்தது.

"உங்கள் மருமகன் என்னை விட்டு வேறு திசைக்குத் திரும்பியிருக்கிறார்!" மகளின் வார்த்தை காதில் ஒலித்தது. அப்படியென்றால் ரகுவின் மனதில் ஏதேனும் பெண் இருக்கிறாளா? கீர்த்தனாவின் மீது அவனுக்கு ஈடுபாடு இல்லை என்பது அனைவரும் அறிந்ததே! கீர்த்தனாவுக்கும் தெரியும். அவர்கள் இருவருக்கும் எண்ணம் செயல்பாடுகள் எல்லாமே வெவ்வேறுதான். என்றும் இணையாத துருவங் கள்தான்.

இதைப் புரிந்தும் ரகுவை மகள் விடுவதாக இல்லை. அப்படி ஒரு வெறி அவன் மீது! இயல்பாகவே மனதில் அன்பு இருந்தால்தானே வாழ்வு இனிக்கும். வெறுப்பாலும் வெறியாலும் ஒருவனைக் கட்டிக் கொண்டு எப்படி வாழ முடியும்? இதை ஏன் உணர மறுக்கிறாள்? இவள் தனக்கு மகளாய்ப் பிறக்காமலே இருந்திருக்கலாம்.

இவள் சொன்னது போல் ரகுவின் மனதில் இன்னொரு பெண் இருந்தால் அவனை மிரட்டிப் பணிய வைத்து இவளை மணமுடிக்கச் சொல்வது பச்சைத் துரோகம் அல்லவா! பெற்ற பிள்ளையாய்த் தன்னைப் பார்த்துக் கொள்பவன். தன் உதிரத்தை எனக்களித்து என் உயிரைக் காப்பாற்றியவன். அவனுக்கு என்னால் எப்படி இந்தத் துரோகத்தைச் செய்ய முடியும்?

ஓரமாய்த் தோன்றிய வலி இதயம் முழுவதையும் ஆக்கிரமிக்க தணிகாசலம் வலி தாளமுடியாமல் துடித்தார். அறுவைச் சிகிச்சைக்குப் பின் எதற்கும் கலங்கக் கூடாது.

எதையும் நினைத்து வருத்திக் கொள்ளக் கூடாது என்ற மருத்துவர்களின் ஆலோசனையை இந்தச் சில நாட்களாய் அவர் கடைப்பிடிக்கவில்லை.

மகளைப் பற்றிச் சிந்திப்பதே வேதனைதானே! இன்று அதுவே அவளுக்கு எமனாகியது. உடல் முழுக்க வியர்த்து ஊற்ற நெஞ்சைப் பற்றிக்கொண்டு தரையில் சரிந்தார்.

மகளின் விருப்பமா? மருமகனின் சந்தோஷமான வாழ்க்கையா என்ற கேள்வி பூதாகரமாகத் தோன்றி இதயத்தைக் கசக்கிப் பிழிய வலி தாளாமல் கண்களில் நீர் வழிந்தது. கடைசி மூச்சுக்குத் திணறினார். ஆறுதலுக்குக் கூட யாருமில்லாமல் தரையில் புரண்டார். உயிர் போகும் நிலையில் ரகுவின் காரின் ஓசை கேட்டு விழிகளைத் திறந்தார்.

காற்றாய்ப் பறந்து வந்தான் ரகு. "மாமா! மாமா! என்னாச்சு மாமா! நெஞ்சு வலிக்குதா? ஏதாவது மாத்திரை இருக்குதா?" தணிகாசலத்தைப் பற்றித் தூக்கினான். அவர் பேச்சு வராமல் திணற, "சரி மாமா! ஹாஸ்பிடலுக்குப் போயிடலாம். பயப்படாதீங்க. கொஞ்சம் பொறுத்துக்கங்க!" என்றவாறு காருக்கு ஓடினான்.

பின் இருக்கையில் கிடத்தியதும் ரகுவின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

"என்ன மாமா? எதுவும் வேணுமா? ரிப்போர்ட்டை எடுக்கணுமா?" என்றவாறு அவரருகே குனிந்தான். அவன் முகத்தைப் பற்றிக் கொண்டு ஆசை தீரப் பார்த்துக் கொண்டார். அந்தக் கண்களில் ஆவலும் அன்பும் நிறைந்திருந்தன.



"என்ன மாமா! காரை எடுக்கிறேன். ஹாஸ்பிடலுக்குப் போகலாம்!" என்றவனிடம் மறுப்பாய்த் தலையசைத்தார்.

"ரகு! ரகு! நீதான் எனக்குக் கொள்ளி போடணும். நான்... உன்னை... வேறு எதையும் கேட்டுச் சங்கடப்படுத்த மாட்டேன். நீ நல்லவன். நீ நல்லா வாழணும். அதுக்கு நான் தடையா இருக்க மாட்டேன்!"

"மாமா! எந்த நேரம் என்ன பேசுறீங்க? ஹாஸ்பிடலுக்கு...!"

"இல்லை ரகு. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு. நீ எனக்குக் கொள்ளி வெப்பியா?" கண்கள் செருகக் கேட்டார்.

"கண்டிப்பா மாமா! நீங்க வாழ்ந்து முடிஞ்சு போறப்போ நான் உங்க கடைசிக் காரியம் எல்லாத்தையும் செய்வேன். உங்க மகனா இருந்து உங்களை வழியனுப்பி வைப்பேன். அதில எந்தச் சந்தேகமும் வேண்டாம்!"

"போதும்ப்பா! இது போதும்." அதற்காகவே காத்திருந்தது போல இமைகளை மூடிக் கொள்ளத் தலை துவண்டது. அதுவரை துடித்துக் கொண்டிருந்த அவரது உடல் அசைவற்றுப் போனது.

"மாமா! மாமா! என்னாச்சு? மாமா! கண்ணைத் திறங்க. மாமா! நான் பேசுறது கேட்குதா? மாமா! பேசுங்க மாமா! கண்ணைத் திறந்து பாருங்க!" உடலும் உள்ளமும் பதற, தணிகாசலத்தின் கன்னத்தைத் தட்டினான். உடலை அசைத்தான்.

எந்தவித மறுப்பும் சொல்லாமல் அவரது உயிரற்ற உடல் துவண்டு சரிந்தது. ரகு இடிந்து போனான். ஒரு கணம் மூச்சு விடவும் மறந்து போனான். அதெப்படி? சில நொடியில்

ஒருவர் மரணித்துவிட முடியுமா? தன்னிடம் பேசி வாயைக் கூட மூடவில்லையே! அதற்குள் எப்படி உயிர் பிரியும்?

"ஐயோ! எத்தனை நேரம் வலியில் துடித்தாரோ! கடைசியில் என் கையில் அல்லவா உயிர் போயிற்று. என்னால் காப்பாற்ற முடியவில்லையே! மாமா! உங்களை இந்தப் பாவியால் காப்பாற்ற முடியவில்லையே!" தணிகாசலத்தைக் கட்டிக் கொண்டு ரகு கதறினான்.

அவனது குரல் கேட்டு அக்கம் பக்கத்தவர் கூட ஆரம்பித்தனர். தணிகாசலத்தின் மரணச் செய்தி காட்டுத் தீயாய்ப் பரவ ஆரம்பித்தது.

மருத்துவமனைக்குள் நுழைந்து தன் அண்ணன் இருந்த அறைக்குள் நுழைந்த ரோஜா திடுக்கிட்டாள். படுக்கை வெறுமையாய் இருக்க, பெற்றவர்களையும் காணாமல் துடித்தாள். ஆபரேஷனுக்குப் பணம் கட்டாததால் திருப்பி அனுப்பி விட்டார்களா? பதட்டமாக வெளியேறி, எதிரே வந்த நர்ஸை நிறுத்திக் கேட்டாள்.

"சிஸ்டர்! இந்தப் பெட்ல தாமரைச்செல்வன்னு ஒரு பேஷண்ட் இருந்தாரே! அவரை எங்கே?"

"அவருக்கு ஆபரேஷன் நடந்திட்டு இருக்கு. அவங்க பேரண்ட்ஸ் வெளியே வெயிட் பண்ணிட்டு இருக்காங்க!" என்றவாறு அவள் விலக,

"ஆபரேஷனா? எப்படி? சிஸ்டர்! ஆபரேஷன் தியேட்டர் எங்கேயிருக்கு?"

"தர்ட் ஃப்ளோர்ல லாஸ்ட்ல இருக்கு. கதவுல போர்டு இருக்கும்."



"தாங்க்யூ சிஸ்டர்!" என வேகமாய் மாடியேறினாள். இது எப்படிச் சாத்தியம்? அவள் தந்த பணத்தை நான் வாங்கவில்லையே! பிறகெப்படி? ஒருவேளை அவளே கொண்டு வந்து கட்டியிருப்பாளோ? ம்ஹும்... பணம் வேண்டாம் என்றதும் லாபம்தான் என்றவள் ஹாஸ்பிடலைத் தேடி வந்து பணத்தைக் கட்டுவாளா என்ன?

பணம் கட்டாமல் ஊசிகூடப் போட மாட்டார்களே! பிறகெப்படி ஆபரேஷன் பண்ணுவார்கள்? யோசனையோடு மூன்றாவது மாடியை அடைந்து பெற்றவர்களைக் கண்டதும் மூச்சு வாங்க நின்றாள்.

"என்னம்மா! வேலைக்குப் போறதா மல்லி சொன்னாளே! போகலையா? இப்படி மூச்சு வாங்குது! முதல்ல உட்கார். தண்ணி குடிக்கிறியா?" என மகளை வரிசையாய்ப் போடப்பட்டிருந்த இரும்பு நாற்காலியில் அமர வைத்தாள் சகுந்தலா.

"அம்மா! எப்படி ஆபரேஷன் பண்ண ஒத்துக்கிட்டாங்க. பணம் எப்படிக் கட்டுனீங்க?" என்றாள் மூச்சு வாங்கியவாறே.

"நாம கட்டலையேம்மா! அந்தத் தம்பி நேத்தே கட்டிடுச்சே! கட்டின பிறகுதானே இங்கே வரச் சொன்னாங்க."

"நேத்தே பணத்தைக் கட்டியாச்சா? எவ்வளவுன்னு தெரியுமாம்மா?"

"எவ்வளவுன்னு தெரியலைம்மா. ஆனா எல்லாப் பணத்தையும் கட்டியாச்சு. இனிமே மருந்து, மாத்திரை மட்டும்தான் நாம வாங்கணும்னு சொன்னார். அதுக்குக் கூடப் பணத்தைத் தந்துட்டுத்தான் போனார்!" என்றார் அப்பா.

"பணம் தந்துட்டுப் போனாரா? எப்போ?"

"இவ்வளவு நேரம் இங்கேதாம்மா இருந்தார். அண்ணன் கூடவே இருந்து பேசிட்டு இருந்தார். அண்ணனை உள்ளே கொண்டு போன பிறகுதான் அவருக்குப் போன் வந்தது. அவங்க மாமாவுக்கு நெஞ்சு வலியாம். அதான் அவசரமாய்ப் புறப்பட்டுப் போனார். இப்ப ஒரு அஞ்சு நிமிஷம்தான் ஆச்சு!"

ரோஜாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன நடக்கிறது இங்கே? அவள் என்னவென்றால் இங்கெல்லாம் வர அவனுக்கு நேரம் கிடையாது. என்னிடம்தான் பணத்தைக் கொடுத்துவிட்டான் என்றாள். இங்கே இவன் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு இப்போதுதான் போயிருக்கிறான். அதுவும் அவசரமாய் போன் வந்ததால்!

பிறகேன் அவள் தன்னைத் தேடி வந்து அத்தனை இளப்பமாய்ப் பேசி விட்டுப் போக வேண்டும். வருத்தம் இருக்கத்தானே செய்யும்! திருமணம் நடக்க வேண்டிய சமயம் இப்படி அடுத்தவர்களுக்காக ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருந்தால் கோபம் வராதா? அந்தக் கோபத்தை அவனிடம் காட்ட முடியாமல் தன்னிடம் வந்து எரிந்து விழுந்திருக்கிறாள்!

ஆனால் அவள் பேசியது அதிகம்தான். பணம் படைத்தவர்களுக்குத் தங்களை விட எளியவர்களைக் கண்டால் இளப்பமாய்த் தோன்றுவது இயல்புதானே! இனியொரு முறை அவள் நம் வீட்டைத் தேடி வரும்படி நடந்து கொள்ளக்கூடாது. இவர் இங்கு வந்தால்தானே அவள் நம்மைத் தேடி வருவாள்? அவர் வந்தால் செய்த உதவிக்கு நன்றி சொல்லிவிட்டு அவரைத் தவிர்த்துவிட



வேண்டும்! வீணாக ஏன் அடுத்தவளின் மனவருத்தத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்!

"என்னம்மா அமைதியாயிட்டே! ஆமா, காலையில வீட்டுக்கு யாரோ வந்தாங்களாமே! யாரும்மா அது? மல்லி சொன்னாளே!"

"ம்? அதுவா! அது... ரகுவோட மனைவியாகப் போறவளாம். அடுத்த மாசம் கல்யாணமாம். அதைச் சொல்லிட்டுப் போக வந்தாளாம்!"

"கல்யாணமா? அந்தத் தம்பி சொல்லவே இல்லையே!"

"அம்மா! அவங்க யாரோ எவரோ! ஏதோ நமக்கு ஹெல்ப் பண்ணினாங்க. அவ்வளவுதான். அதுக்காக அவங்க குடும்ப விஷயத்தை யெல்லாம் நம்மகிட்ட சொல்லணும்னு எதிர்பார்க்கக்கூடாது. இனிமே அவர் வந்தா சும்மா வர வேண்டாம். நாங்களே சமாளிச்சிப்போம்னு சொல்லுங்க."

"என்னம்மா இப்படிச் சொல்றே? அந்தப் புள்ளை செய்த உதவியை ஏத்துகிட்டு தேவை முடிஞ்சதும் தூக்கி யெறியுற மாதிரி பேசுறியே. இது தப்பு!" - அதட்டினார் மாணிக்கம்.

"இல்லப்பா! நான் விஷயத்தோடதான் சொல்றேன். அவருக்குக் கல்யாண வேலை ஆயிரம் இருக்கும். அதை யெல்லாம் விட்டுட்டு நமக்காக ஏன் மெனக்கெடணும். அந்தப் பொண்ணு ரொம்ப வருத்தப்பட்டா. கல்யாணமே நின்னு போயிடுமோன்னு வீட்ல எல்லோரும் பயப்படுறாங் களாம்!"

"ஐயோ! இந்தப் பாவம் நமக்கெதுக்கு? ஏங்க! அந்தப் புள்ளைக்கு ரொம்ப நல்ல மனசு. நம்மால அது வாழ்க்கை ஏன் பாழாகணும்? கல்யாண விஷயம் தடைப்படக் கூடாதுங்க. அப்புறம் கூடி வர்றது எவ்வளவு கஷ்டம்னு நமக்குத்தான் தெரியுமே!" என்றாள் சகுந்தலா மகளைப் பார்த்துக் கொண்டே.

ரோஜா கசப்பாய்ப் புன்னகைத்தாள். "அதாம்மா சொல்றேன்! நம்ம கெட்ட நேரம் அவரையும் பிடிச்சுக்க வேண்டாம். இனிமே அவர் வந்தா சொல்லிடுங்க. அதோடு அண்ணனுக்கு ஆன செலவைக் கணக்குக் கேளுங்க. நாம கொஞ்சம் கொஞ்சமா திருப்பிக் கொடுத்திடலாம்."

"சரிம்மா! நீ சொல்றதுதான் சரி. அந்தப் பொண்ணு எப்படி இருந்தா? இந்தப் புள்ளைக்கு ஏத்த பொண்ணு தானா? நல்ல குணமானவளா இருக்காளா?" – அன்னையின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

நிச்சயமாய்ப் பொருத்தமாக இருக்க மாட்டாள். அழகென்ன அழகு. புற அழகு என்றுமே நிரந்தரம் இல்லாதது. ஆனால் மனம்... அதுவும் கூட அவளுக்கு அழகில்லையே! மென்மையோ கனிவோ இல்லாத மனம் எப்படி அழகாய் இருக்கும்? இது அவன் கவலை. நமக்கென்ன என இருக்கவும் முடியாமல் திணறினாள்.



# 12

ரோஜாவே!
இதமான தென்றலில் அசைந்தாடுகிறாய்
புயல் வீசும்போது போராடுகிறாய்!
என் மனதிற்குள் வந்துவிடு
உன்னைப் பொக்கிஷமாய்ப் பொத்தி
வைத்துக் கொள்கிறேன்!

கீர்த்தனா சிலையாய் அமர்ந்திருந்தாள். ஒப்பனை யற்ற அவள் முகத்தைப் பார்க்கையில் பரிதாபமாய்த்தான் இருந்தது. தாயும் தந்தையும் இல்லாத நிலை எத்தனை கொடுமை! தாயாய், தந்தையாய்ப் பார்த்துக் கொண்டவர் அப்பா. இப்போ அவரும் தன்னுடன் இல்லையென்ற உணர்வே கொன்றது. பிரம்மாண்டமான பங்களாவின் தனிமை அச்சுறுத்தியது.

இன்று நடந்தது போலத்தான் தோன்றியது. ஆனால் இன்றோடு பதினாறாம் நாள் காரியமும் முடிந்து போயிற்று. இதுவரை கூடவே இருந்தவர்கள் இனி அவரவர் வேலையைக் கவனித்துக் கொண்டு போய் விடுவர். இனித் தனக்கென யார் இருக்கிறார்கள்? ஆற்றுவாரும் தேற்றுவாரும் இன்றி அநாதையாய்க் கிடந்து தன் உயிரும் பிரிந்து விடுமோ!

பயத்தில் உடல் ஒருமுறை நடுங்கியது. புகைப்படத்தில் ரோஜா மாலையோடு தணிகாசலம் புன்னகைத்தார். தந்தையைப் பார்க்கும்போது மீண்டும் கண்கள் கசிந்தன. "அப்பா! என்னைச் சமாளிக்க முடியாமல் சகிக்க முடியாமல் போய் விட்டீர்களா? அப்படி என்ன அவசரம் உங்களுக்கு? என்னைப் பற்றிக் கவலைப்பட்டீர்களா? இனி என் நிலை

என்ன? இனி யார் என்னை ரகுவிற்கு மணம் பேசி முடிப்பார்!

நீங்கள் இருந்தால்தானே அத்தையிடம் பேச முடியும். இனி யார் பேசுவது? அத்தனை வருத்தத்திலும் கீர்த்தனாவின் மனம் சந்தோஷமாகத்தான் இருந்தது. இந்த இரண்டு வாரத்தில் ஒரு நாள் கூட ரகு இந்த வீட்டை விட்டு எங்கும் நகரவில்லை. நகர முடியவில்லை.

அப்பாவின் இறுதிச் சடங்கு, மறுநாள் காரியம், மூன்றாம் நாள் விசேஷம் என அனைத்தையும் அவனே முன்னின்று செய்தான். விஷயம் கேள்விப்பட்டு வந்த ஆனந்த் கூட எவ்வளவு ஒத்தாசையாய் நின்றான். இந்த ஹேமாகூட குழந்தையை வைத்துக் கொண்டு தன்னுடனே இருந்து ஆறுதல் சொன்னாளே! அவளுக்கா நான் தீங்கிழைத்தேன்?

அவள் கணவனைப் பற்றிச் சொன்னதும் ஏற்பட்ட இயல்பான கோபம். அதற்காக நான் செய்த செயல் எவ்வளவு பெரிய பாவம். நல்ல காலம் கிஷோரின் போன் ரிப்பேரானது. இல்லையென்றால் பிரச்சனை விஸ்வரூபம் எடுத்திருக்கும். எல்லாம் என் அவசரப் புத்தியாலும் வக்கிர புத்தியாலும் வந்த வினை.

இதில் மட்டுமா அவசரம் காட்டினேன். அந்தப் பெண் ரோஜாவிடம் கூடத்தான் மல்லுக்கு நின்றேன். ஏதோ அவளுக்காகத்தான் ரகு உருகிப் போய்க் கிடக்கிறான் என்ற நினைப்பில் ஏதேதோ பேசிவிட்டேன். இல்லை அப்படி எதுவும் இல்லை.

அப்படி எதுவும் இருந்திருந்தால் அவளுக்குக் கோபமோ கண்ணீரோ வந்திருக்கும். அழவில்லையே



அவள்! திருப்பிக் கேட்டாளே தவிர திருமணம் என்ற வார்த்தையில் உடைந்து போகவில்லையே!

ரகுவும்தான் இதோ என் வீட்டிலேயே பழியாய்க் கிடக்கிறானே! வருவோர் போவோரிடம் பேசி அனுப்புவது, அலுவலகக் கணக்கு வழக்குகளைக் கவனிப்பது, சட்ட பூர்வமான நகல்களைக் கீர்த்தனாவின் பேரில் மாற்றுவது எனச் சகல வேலைகளையும் கவனித்துக் கொண்டு இங்கு தானே இருக்கிறான். இனி நான் ஏன் பயப்பட வேண்டும்?

என் ரகு எனக்குத்தான். என்னைக் கண்டாலே விலகி ஓடியவனை என்னோட இருக்க வைத்து விட்டார் அப்பா. அப்பா இறந்த பிறகும் நல்லதையே செய்திருக்கிறார். போதும். இது போதும். இனி என் ரகுவைப் பிரிக்க யாராலும் முடியாது."

"கீர்த்தனா! இதுல ஸைன் பண்ணு. மாமா பேர்ல இருந்த டாக்குமெண்ட்ஸெல்லாம் உன் பேர்ல மாத்தி யிருக்கோம். படிச்சுப் பார்த்திட்டு ஸைன் பண்ணு!" என்ற வாறு சில பேப்பர்களையும் பேனாவையும் நீட்டினான்.

மௌனமாய் வாங்கிக் கையெழுத்திட்டாள். நெருக்க மாய் நின்ற ரகுவின் அருகாமை அவளை மயக்கியது. ரகுவிற்கே உரிய மணம் நாசியைத் தீண்ட கீர்த்தனாவின் வேட்கை அதிகரித்தது.

போன் ஒலிக்க அதை எடுத்து, "யாரு? இதோ ஒரு டென் மினிட்ஸ்ல வர்றேன். கொஞ்சம் முக்கியமான வேலையா இருக்கேன். ம்... வந்திடுறேன்!" என ரகு பேச அவனை ஏக்கமாய் நிமிர்ந்து பார்த்தாள்.

சரியாகச் சவரம் செய்யாமல் அலட்சியமாக இருந்த போதும் கம்பீரமாகவே இருந்தான். ஆண்மை ததும்பிய அவனது வலிய கரம் பேப்பர்களைச் சேகரிக்க, போனைக் காதில் வைத்துக் கொண்டே அவள் கையெழுத்திட்டதைக் குனிந்து சரிபார்த்தான்.

அந்த அண்மையில் சுற்றியிருப்பவர்களை மறந்து ஆவேசமாக அவனைக் கட்டிக் கொண்டாள் கீர்த்தனா. "ரகு! என்னை விட்டுப் போயிடாதே ரகு. எனக்குப் பயமா இருக்கு. என்னை விட்டுட்டுப் போயிடாதே. எனக்கு அப்பா நினைப்பாவே இருக்கு ரகு! என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடாதே!" என்றவாறு இறுகக் கட்டிக் கொண்டாள்.

ரகு இந்தத் திடீர் அணைப்பில் திகைத்துப் போனை நழுவ விட்டான். கையிலிருந்த பேப்பர்கள் பறந்தன. தந்தை இறந்த நாள் முதல் யாரிடமும் பேசாமல் அழுதுகொண்டே இருந்தவள்... இவளை எப்படிக் கடிந்து கொள்வது?

தயக்கமாய் அவளை விடுவித்தான். "கீர்த்தனா! பிளீஸ் அழாதே! மாமாவின் இழப்பு பெரிய வருத்தம்தான். அதற்காக இப்படி அழுதுகொண்டே இருப்பாயா? கண்ட்ரோல் யுவர் செல்ஃப்!" என்றான் இதமாய்.

அப்போதும் அவள் அவனை விடுவதாய் இல்லை. அணைப்பின் வலிமை அதிகமானது. முள்மேல் நிற்பதைப் போல் உணர்ந்தான் ரகு. தவிப்பாய் அன்னையைத் தேடித் தன்னை மீட்குமாறு கண்களால் இறைஞ்சினான்.

அண்ணன் மகளின் நிலை கண்டு பத்மாவதியும் கண்ணீர் வடிக்க, ஆனந்த் ஹேமாவைப் பார்வையால் அழைத்தான். சட்டெனப் புரிந்து கொண்டவள் கணவனிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு கீர்த்தனாவின் தோளைப் பற்றித் திருப்பித் தன் தோளில் சாய்த்து அணைத்துக் கொண்டாள் ஹேமா.



ஒரு பெரிய விடுதலை உணர்வுடன் தங்கையிடம் பார்வையால் நன்றி உரைத்துவிட்டு விலகி பேப்பர்களை எடுத்து அடுக்கினான். போனை எடுத்துத் தந்த ஆனந்துடன் ஏதோ பேசிக் கொண்டே அவன் வெளியேறிவிட, கீர்த்தனாவின் மனம் என்னும் பிசாசு மீண்டும் சீறி எழுந்தது.

ரகுவை நெருங்குவதே பெரிய விஷயம். இதில் கிடைத்த வாய்ப்பைக் கெடுத்து விட்டாளே...! சதிகாரி. அண்ணனைத் தொட்டதும் உனக்குப் பற்றிக் கொண்டு வருகிறதோ! கோபமாய்ப் பற்களைக் கடித்தாள்.

அதை அறியாத ஹேமாவோ, "கவலைப்படாதே! கீர்த்து. அதான்... நாங்க எல்லாம் இருக்கோமே. உன்னைத் தனியா விட்டுடுவோமா?" என ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அதற்காகவே காத்திருந்தாற்போல் ஒரு அம்மாள் வாயைத் திறந்தாள். "ஏன் பத்மா! உன் அண்ணனும் போன பிறகு இந்தப் புள்ளை தனியா இந்த வீட்ல எப்படி இருக்கும். பேசாம உன் வீட்டிற்குக் கூட்டிட்டுப் போயிட வேண்டியது தானே! எப்படியும் உன் வீட்லதான் வாழப் போறது. அதை இப்பவே கூட்டிட்டுப் போயிட வேண்டியதுதானே!"

கீர்த்தனாவின் அழுகை சட்டென நின்றது. அத்தையின் பதிலுக்காக அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

"நான் என்ன சொல்றது? ஒத்தைப் புள்ளையைப் பெத்துத் தனியா விட்டுட்டுப் போயிட்டார் என் அண்ணன். அதுக்காக நானும் அப்படியே விடமுடியுமா? காரியம் முடிஞ்சதும் என் வீட்டிற்குக் கூட்டிட்டுப் போயிடுறேன்!" கண்களைத் துடைத்துக் கொண்டே பத்மா சொல்ல, கீர்த்தனாவின் மனம் துள்ளியது.

ரகுவுடன் ஒரே வீட்டில்... நினைப்பே இன்பமாக இருந்தது. அவளது முகத்தைப் பார்த்த ஹேமா வேதனையாய் முகத்தைச் சுருக்கினாள். தந்தையின் இழப்பைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் இருக்கிறாளே! என்ன பெண் இவள்?

நான்கு தெரு தள்ளியிருந்தபோதே அண்ணன் பாடு பெரிய கஷ்டம். இப்போது கூடவே இருந்து கொண்டால்... ரகு என்ன செய்வான்? இத்தனை பேர் முன்னிலையிலேயே அவனைக் கட்டியணைத்தவள் தன் வீட்டில் சும்மா இருப்பாளா? அண்ணன் மீது வெறி அதிகமாகத்தானே செய்யும்? பிறகெப்படி இன்னொருவனை மணக்கச் சம்மதிப்பாள்?

"நாளைக் கடத்தாம சீக்கிரமா இதுகளுக்குக் கல்யாணத்தை முடிச்சிடு பத்மா. சின்னஞ்சிறுசுகளை ஒரே வீட்டில் வெக்கிறதும் தப்புதான். நாளைக்கு ஒரு பேச்சு வந்திடக் கூடாதில்ல! நல்ல நாளா பார்த்துக் காரியத்தைக் கவனி!"

பத்மாவதி இதற்கு என்ன பதில் சொல்வது என்று திணற, "பாட்டி! இது கருமாதி நடக்கிற வீடு. இப்பவா கல்யாணத்தைப் பத்திப் பேசுறது! எங்கே என்ன பேசறதுன்னு வேண்டாம். பேசாம இருங்க. எப்போ எது



நடக்கணும்னு இருக்கோ அப்போ நடக்கும்!" என வெடுக்கெனக் கூறினாள் ஹேமா.

கீர்த்தனாவின் முகம் நாகமாய்ச் சீறியது. லேசாய் இளகிய மனம் கடினமாய் மாறி இறுகியது. ஹேமாவின் மேல் வன்மம் தோன்றியது. திருமணப் பேச்சை எடுக்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் தடை விதிப்பதே இவள் வேலையாகிப் போச்சே! இவள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்!

இப்போதுதானே இவள் பாவம் என்று மனமிரங் கினேன். இவள் என்னிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளாமல் இருக்க மாட்டாளா? இவளைச் சும்மா விடலாமா? - கண்களில் காழ்ப்புணர்ச்சி தெறிக்க அவள் பார்த்த பார்வையில் பத்மாவதி அரண்டு போனாள். அவசரமாய் மகளருகே வந்தாள்.

"ஹேமா! உங்க அண்ணனும் மாப்பிள்ளையும் இன்னும் சாப்பிடல்ல. போ... போய் ஏதாவது சாப்பிட வை!" என அனுப்பினாள்.

அவளது வயிற்றுக்குள் பிரளயம் நடந்தது. இந்தப் பெண்ணின் கண்களில் எத்தனை வெறி! என் மகளைப் பார்வையாலே பொசுக்கிவிடுவது போல் பார்க்கிறாளோ! கல்யாணத்தைப் பற்றிப் பேச வேண்டாம் என்றதற்கே இவள் கண்ணில் கொலை வெறி தெரிகிறதே!

இந்நிலையில் தன் மகனின் எண்ணம் தெரிந்து விட்டால் சும்மா இருப்பாளா? ஐயோ! நினைப்பே பயமுறுத்தியது. இப்போதைக்கு இவளிடம் அதையும் சொல்லக்கூடாது. ஹேமாவையும் மருமகனுடன் அனுப்பிவி

வேண்டும். மகனின் திருமணம் எப்போது நடக்குமோ அப்போது வந்தால் போதும். கீர்த்தனாவை விட்டு விலகி இருப்பதே தன் மகளிற்கு நல்லது என்ற எண்ணம் வந்தது.

"ஆனந்த்! நீ என்ன சொல்றே?" வியப்பாய்க் கேட்டான் ரகு.

"ஆமா ரகு! நான் போன் பண்ணும்போது அவன் அட்டெண்ட் பண்ணினான். நீதானே கிஷோர்ன்னு கேட்டதும் ராங் நம்பர்னு சொல்லிட்டுக் கட் பண்ணிட்டான்."

"எப்போ? நான் பண்ணினபோதெல்லாம் ஸ்விட்ச் ஆஃப்னு வந்ததே! நீ எப்போ பண்ணினே?"

"நீ சொன்ன உடனே நானும் பண்ணினேன். பத்து நாளா இதே பதில்தான் கிடைச்சது. போன வாரம் சும்மா பண்ணிப் பார்க்கலாமேன்னு பண்ணினேன். லைன் கிடைச்சது. அவன்தான் பேசினான்."

"இஸிட்! என்ன சொன்னான்?"

"இரண்டு மூன்று முறை பண்ணினேன். ராங் நம்பர்னு கோபமாப் பேசிட்டு வெச்சிட்டான். அவன் எனக்கு வேணும் ரகு. என் மனைவியைப் பற்றித் தாறுமாறாய்ப் பேசியவளை நான் கண்டுபிடிக்கணும். அதற்கு ஒத்துப் போன இவனது எலும்புகளை எண்ண வேண்டும். இரண்டு மாதங்களேனும் படுக்கையை விட்டு அவன் எழாதபடி அவன் உடம்பைப் புண்ணாக்க வேண்டும். அதற்காகத்தான் நான் லீவு போட்டுவிட்டு வந்தேன்."

"ஓ! ஸாரிடா! மாமா டெத் ஆனதுல நான் அவனை மறந்தே போயிட்டேன். டைமே கிடைக்கலை!"



"பரவாயில்லடா! எனக்கு இன்னும் ஒரு வாரம்தான் லீவு இருக்கு. அதுக்குள்ள நாம அவனைக் கண்டு பிடிக்கணும்."

"கண்டுபிடிச்சிடலாம். நானே வெறியோடதான் இருக்கேன்."

"அதுக்கு முன்னே உனக்கு ஒரு அட்வைஸ். சொன்னா தப்பா எடுத்துக்கக் கூடாது."

"உனக்கில்லாத உரிமையா? சொல்லுடா. என்ன விஷயம்?"

"ரகு! நான் கேட்பதற்கு மறைக்காமல் பதில் சொல். நீ கீர்த்தனாவை விரும்புகிறாயா? அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?"

"சேச்சே! என்ன பிதற்றல் இது. எனக்கு அப்படி எந்த ஐடியாவும் இல்லை."

"அப்போ அவளை விட்டுக் கொஞ்சம் விலகியே இரு. அவகிட்ட நெருங்காம இருப்பதுதான் உனக்கு நல்லது. புரிகிறதா?"

"புரியுதுடா. எப்பவுமே அவளை விட்டு ஒதுங்கித்தான் இருந்தேன். இப்போ மாமாவோட இறப்பால நான்தான் எல்லாத்தையும் கவனிக்க வேண்டியிருக்கு. அவளும் இடிஞ்சு போய் இருக்காளே!"

"இல்லடா! அவ கண்ல வேஷம் தெரியுது. அப்பா இறந்தது இழப்பா இருக்கலாம். ஆனா அதைவிட உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அவ கண்ல ஒரு பேராசை. அதை வெறின்னுகூடச் சொல்லலாம். அது அதிகரிக்குது."

"ம். எனக்கும் இன்னிக்குத்தான் புரியுது."

"அதான் சொல்றேன். நீ சீக்கிரமா ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிடு. அதுதான் உனக்கு ஸேஃப்!"

"நீ என்ன சொல்லுற ஆனந்த். கல்யாண வயசுல அவளை வெச்சிகிட்டு நான் எப்படிக் கல்யாணம் பண்ணுறது? அது தப்பில்லையா?"

"என்ன தப்பு. அவ என்ன உன் தங்கையா? இல்லையே! பிறகேன் அவளைப் பற்றித் தயங்க வேண்டும். இதோ பார்! சாவு நடந்த வீட்டில் உடனே திருமணம் பேச முடியாது. ஸோ... நீ பேசாம உன் கல்யாணத்தைப் பத்தி முடிவெடு. நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா வேற வழியில்லாம அவளும் யாரையாவது மேரேஜ் பண்ணித்தானே ஆகணும்."

"அதெல்லாம் சரிதான்டா. ஆனாலும்..."

"தோ பாரு ரகு. ஒருத்தர் பார்வையை வெச்சே அவங்களைப் பத்தி என்னால கணிக்க முடியும். இந்தக் கீர்த்தனாவால நிச்சயமா உனக்கு ஆபத்து இருக்கு. அவ எப்படியும் உன்னைத் தன் கணவனா ஆக்கிடுவா. உனக்கு விருப்பம்னா எனக்கும் ஓ.கே.!"

"சேச்சே! என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? அவள் மீது எனக்கு எப்போதுமே ஈடுபாடு கிடையாது. வெறுப்புதான் வருகிறது."

"அப்போ நான் சொல்றதைச் செய். எவ்வளவு சீக்கிரமா முடியுமோ அவ்வளவு சீக்கிரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணிடு. நாங்க உன் கல்யாணத்தை முடிச்சு வெச்சிட்டே கிளம்புறோம். என்ன சொல்றே?"



"என்னடா இப்படி அவசரப்படுத்தறே! கல்யாணம்னா சும்மாவா? பொண்ணு பார்க்கணும். பொண்ணு வீட்ல ஒத்துக்கணும். நிச்சயம் பண்ணணும். பத்திரிகை அடிக்கணும். ஊரைக் கூட்டி விருந்து கொடுக்கணும்."

"எனக்கு இதெல்லாம் தெரியாதா? முதல்ல பொண்ணு பார்ப்போம். மத்ததெல்லாம் ஈஸியா தானா நடக்கும். சொல்லு! உனக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும்? நானே பார்க்கிறேன்!" ஆனந்த் உற்சாகமாய்க் கேட்க அவசரமாய் மறுத்தான் ரகு.

"வேண்டாம்... வேண்டாம்! பொண்ணெல்லாம் நீ பார்க்க வேண்டாம்."

"நான் பார்க்க வேண்டாமா? அப்போ நீயே பார்த்திட்டியா!" ஆவலாய்க் கேட்டவனைப் பார்த்து அவஸ்தையாய்ச் சிரித்தான் ரகு.

"மச்சான்! சொல்லு. உன் சிரிப்பே சொல்லுதே! என் தங்கையைப் பார்த்து விட்டாயா? எங்கே பார்த்தாய்? எப்படிப் பார்த்தாய்?"

"உனக்கு ஏதுடா தங்கை?"

"ஏய்! உன் மனைவிதான் என் தங்கை. சீக்கிரமாய்ச் சொல். எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்."

"சத்தமா பேசாதேடா! வீட்ல யாருக்கும் தெரியாது. எனக்கேகூட இப்பத்தான் இந்த எண்ணம் வந்தது. இது சரியான்னே புரியலை!"

"விஷயத்தைச் சொல்லுடா. என் தங்கை எப்படி இருப்பா?"

"ம். எனக்கும் இன்னிக்குத்தான் புரியுது."

"அதான் சொல்றேன். நீ சீக்கிரமா ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிடு. அதுதான் உனக்கு ஸேஃப்!"

"நீ என்ன சொல்லுற ஆனந்த். கல்யாண வயசுல அவளை வெச்சிகிட்டு நான் எப்படிக் கல்யாணம் பண்ணுறது? அது தப்பில்லையா?"

"என்ன தப்பு. அவ என்ன உன் தங்கையா? இல்லையே! பிறகேன் அவளைப் பற்றித் தயங்க வேண்டும். இதோ பார்! சாவு நடந்த வீட்டில் உடனே திருமணம் பேச முடியாது. ஸோ... நீ பேசாம உன் கல்யாணத்தைப் பத்தி முடிவெடு. நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா வேற வழியில்லாம அவளும் யாரையாவது மேரேஜ் பண்ணித்தானே ஆகணும்."

"அதெல்லாம் சரிதான்டா. ஆனாலும்..."

"தோ பாரு ரகு. ஒருத்தர் பார்வையை வெச்சே அவங்களைப் பத்தி என்னால கணிக்க முடியும். இந்தக் கீர்த்தனாவால நிச்சயமா உனக்கு ஆபத்து இருக்கு. அவ எப்படியும் உன்னைத் தன் கணவனா ஆக்கிடுவா. உனக்கு விருப்பம்னா எனக்கும் ஓ.கே.!"

"சேச்சே! என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? அவள் மீது எனக்கு எப்போதுமே ஈடுபாடு கிடையாது. வெறுப்புதான் வருகிறது."

"அப்போ நான் சொல்றதைச் செய். எவ்வளவு சீக்கிரமா முடியுமோ அவ்வளவு சீக்கிரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணிடு. நாங்க உன் கல்யாணத்தை முடிச்சு வெச்சிட்டே கிளம்புறோம். என்ன சொல்றே?"



"என்னடா இப்படி அவசரப்படுத்தறே! கல்யாணம்னா சும்மாவா? பொண்ணு பார்க்கணும். பொண்ணு வீட்ல ஒத்துக்கணும். நிச்சயம் பண்ணணும். பத்திரிகை அடிக்கணும். ஊரைக் கூட்டி விருந்து கொடுக்கணும்."

"எனக்கு இதெல்லாம் தெரியாதா? முதல்ல பொண்ணு பார்ப்போம். மத்ததெல்லாம் ஈஸியா தானா நடக்கும். சொல்லு! உனக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும்? நானே பார்க்கிறேன்!" ஆனந்த் உற்சாகமாய்க் கேட்க அவசரமாய் மறுத்தான் ரகு.

"வேண்டாம்... வேண்டாம்! பொண்ணெல்லாம் நீ பார்க்க வேண்டாம்."

"நான் பார்க்க வேண்டாமா? அப்போ நீயே பார்த் திட்டியா!" ஆவலாய்க் கேட்டவனைப் பார்த்து அவஸ்தையாய்ச் சிரித்தான் ரகு.

"மச்சான்! சொல்லு. உன் சிரிப்பே சொல்லுதே! என் தங்கையைப் பார்த்து விட்டாயா? எங்கே பார்த்தாய்? எப்படிப் பார்த்தாய்?"

"உனக்கு ஏதுடா தங்கை?"

"ஏய்! உன் மனைவிதான் என் தங்கை. சீக்கிரமாய்ச் சொல். எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்."

"சத்தமா பேசாதேடா! வீட்ல யாருக்கும் தெரியாது. எனக்கேகூட இப்பத்தான் இந்த எண்ணம் வந்தது. இது சரியான்னே புரியலை!"

"விஷயத்தைச் சொல்லுடா. என் தங்கை எப்படி இருப்பா?"

"ஆனந்த்! நீ காலண்டர்ல லக்ஷ்மி படத்தைப் பார்த்திருக்கியா?"

"என்னடா சம்பந்தம் இல்லாமல் கேள்வி கேட்கிறாய்?"

"ஷ்! கேட்டதற்குப் பதில் சொல். பார்த்திருக்கியா இல்லையா?"

"உன் தங்கைதான் அறைக்கொன்றாக மாட்டி வைத்திருக்கிறாளே! பார்க்காமலா இருப்பேன். பட்டும் நகையுமாய் அம்சமாய் தாமரைப் பூவில் அமர்ந்திருப் பார்களே அந்த லக்ஷ்மியைத்தானே கேட்கிறாய்?"

"ம்... அந்த லக்ஷ்மி நகைகள் அணியாமல் சிம்பிளாய் இருந்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் அந்தப் பெண் இருப்பாள்."

"ரகு! அசத்திட்டேடா! யார் அது? எங்கே இருக்கிறாள்?"

"வீடு தெரியாதுடா. பேர் ரோஜா. பெயரைப் போலவே அழகா இருப்பா. அவளை முதன் முதலா என் பிறந்த நாளன்று முத்துமாரியம்மன் கோவில்லதான் பார்த்தேன். என்னவோ தெரியலைடா! அந்த முகம் எனக்கு மறக்கவே இல்லை!" கண்கள் கனவில் மிதக்க ரகு லயித்துப் போயிருந்தான்.

"ஓ! அந்தப் பொண்ணா? எனக்குத் தெரியும்டா. நீ அன்னிக்கே அப்படிப் பார்த்தியே! அப்பவே எனக்கு டவுட்தான். ஏங்க! நான் சொன்னேனே... நம்ம புள்ளையைக் கீழே விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டாள் என்று. அந்தப் பெண்தான். அண்ணா! எனக்கு டபுள் ஓ.கே.!"



என்றவாறு இரவு உடையுடன் வந்து அவர்களுடன் அமர்ந்து கொண்டாள் ஹேமா.

"ஏய் நீ எப்போ வந்தே? ஏன் வந்தே?" ரகு பதட்டமானான்.

"ஹலோ பிரதர்! இது நம் வீடு. இந்த மொட்டை மாடியை மட்டும் உனக்கு யார் எழுதித் தந்தது? நான் மட்டும் இல்லை. அங்கே பார்!" என ஹேமா கைநீட்ட சகுந்தலாவும் கோசல்ராமும் வந்தனர்.

பதறி எழுந்தான் ரகு. "பதறாதே அண்ணா! உன் மனசைத் திறந்து பேசணும்னுதான் உன்னிடம் பேச இவரை அனுப்பினேன். நாங்களும் அப்போதே இங்கு வந்துவிட்டோம். எல்லாம் கேட்டு விட்டோம். அதனால் சும்மா நேரத்தை வீணாக்காமல் மேட்டருக்கு வா. அண்ணிக்கு உன்னைப் பிடித்திருக்கிறதா?"

"ஏய் முடிவே பண்ணிட்டியா? எனக்குப் பிடித்திருந்தால் போதுமா? அவர்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டாமா?"

"எம் புள்ளையை யாருப்பா வேண்டாம்னு சொல் வாங்க!" கோசல்ராம் மகனின் தோளை அணைத்துக் கேட்டார்.

"இல்லப்பா! ஏற்கெனவே அந்த வீட்டுப் பையன் ஏதோ ஒரு பெண்ணால ஏமாற்றப்பட்டுச் சாவோட விளிம்பு வரை போயிட்டு வந்திருக்கான். இப்போக்கூட ஹாஸ்பிடல்லதான் இருக்கான். ஹேமா! அன்னிக்கு பிளட் கொடுத்தேனே, அது அவனுக்குத்தான். அவனோட ஆபரேஷனுக்குத்தாம்பா பணம் கட்டினேன்."

"எல்லாமே நல்லதுதானப்பா செய்திருக்கிறாய். பிறகெப்படி உன்னை அவர்களுக்குப் பிடிக்காமல் போகும்?"

"அதற்குச் சொல்லவில்லை அப்பா. நானாக விரும்பிப் போவதாகச் சொல்ல வேண்டாம். நீங்களாகப் போய்ப் பெண் கேளுங்கள். அன்று கோவிலில் பார்த்துப் பிடித்துப் போனதாகச் சொல்லுங்கள். நான் அந்தப் பொண்ணை விரும்பியது அவர்களுக்குத் தெரிய வேண்டாம்."

"ஏம்ப்பா?"

"இல்லம்மா! அந்தப் பையன் ஏமாந்ததில் அவர்கள் எல்லோருக்குமே காதல் என்ற வார்த்தையே வேம்பாக இருக்கிறது. இதில் என் விருப்பத்தைச் சொன்னால் அது வெறுப்பையே தேடித் தரும். அதனால்தான் சொல்கிறேன். பெரியவர்கள் போய்ப் பேசினால் அவர்களும் சந்தோஷமாகச் சம்மதிப்பார்கள்தானே!"

"ம்... நல்லா தேறிட்ட அண்ணா! எவ்வளவு யோசிக்கிறே! நீங்க என்னப்பா சொல்றீங்க?"

"இதுல நான் என்னம்மா சொல்றது? எம் புள்ளை சொல்லுற மாதிரியே செஞ்சிட வேண்டியதுதான். இது அரேஞ்ச்டு மேரேஜ் மாதிரியே இருக்கட்டுமே!"

"நல்ல ஐடியா மாமா! அப்பத்தான் அவங்களுக்கும் நம்ம மேலே ஒரு மரியாதை வரும். மனசில எந்த வருத்தமும் இருக்காது. ரகு! எல்லா ஆண்களுமே உன்னைப் போல் முடிவெடுத்து விட்டால் எந்தப் பெற்றோர்களும் தங்கள் பெண்களை நினைத்துப் பயப்படவோ வேதனைப்படவோ அவசியம் இல்லை."



"நீங்க கூடத்தான் இதே டெக்னிக்கை யூஸ் பண்ணினீங்க. இவன் உங்க ஃபிரெண்ட் ஆச்சே. உங்களை மாதிரிதான் இருப்பான்!" கணவனை இடித்தாள் ஹேமா.

அவர்களின் அன்யோன்னியத்தைக் கண்ட ரகுவின் முகம் மாறியது. "ஹேமா! நீ... நீ மாடிக்கு எப்போ வந்தே?" தொண்டை அடைக்கக் கேட்டான் ரகு.

"ம்! நீயும் உன் ஃபிரெண்டும் ஒரு ராங் நம்பரைப் பத்திப் பேசினீங்களே! அப்பவே வந்துட்டோம்!" ஹேமாவின் பதிலில் துள்ளி நிமிர்ந்தான்.

# 13

ரோஜாவே!
உன் அழகால் கவரப்பட்டு
உன்னைச் சுற்றி வரும் வண்டு
அல்ல நான் - உன்னுடனே
வாழ்ந்து உன்னுடனே மடிந்துவிடும்
உன் மகரந்தம் நான்!

"ஹேமா! நீ என்ன சொல்றே?" அதிர்வாய்க் கேட்ட தன் அண்ணனைப் பார்த்து இயல்பாய்ச் சிரித்தாள் ஹேமா.

"நீ ஏன் பயப்படுறே அண்ணா! என்னைப் பற்றி என் கணவருக்குத் தெரியும். என் கணவரைப் பற்றி எனக்குத் தெரியும். ஸோ... யார் என்ன சொன்னாலும் நாங்க கலங்க மாட்டோம்."

"இந்த ஓட்டை வாய் உன்னிடம் உளறினானா?"

"கணவன் மனைவிக்குள் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது அண்ணா. என்னைக் கேட்டா இதை அப்படியே

விட்டுடுறதுதான் பெட்டர். யாரோ வேலை வெட்டி இல்லாதவ பண்ணின போனுக்கு நாம ஏன் முக்கியத்துவம் கொடுக்கணும்? நம்ம மனசு வீணா கஷ்டப்படணுமா?" ஹேமாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்களாய் நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே தலை யாட்டினர்.

"என்ன சும்மா தலையாட்டுறீங்க. வாங்க முதல்ல சாப்பிட்டுப் படுக்கலாம். நாளைக்குக் காலையில நாம எல்லாரும் பொண்ணு பார்க்கப் போறோம். ம்... ம்... எழுந்து வாங்க!" ஹேமா எழுந்து மற்றவர்களை எழுப்ப, சிரிப்போடு எழுந்து கொண்டனர்.

"ஹேமா! நான் எப்பவும் போல வேலைக்குப் போறேன். நீங்க போங்க. அவங்க சொல்ற சம்மதத்திற்குப் பிறகு நாம போகலாம். அதுக்கு முன்னால அவங்க வீட்டைக் கண்டுபிடிக்கணும். அதோட நான் இன்னும் ஹாஸ்பிடலுக்குப் போய் அவங்களைப் பார்க்கணும். மாமா இறந்தப்புறம் என்னால அவங்களைப் போய்ப் பார்க்க முடியலை. டைம் கிடைக்கும்போது சாரதிக்கு போன் பண்ணி விசாரிச்சிட்டு இருக்கேன். எதுக்கும் நான் காலையில ஹாஸ்பிடலுக்குப் போய்ப் பார்த்திட்டு உங்களுக்குப் போன் பண்றேன். அதுக்கப்புறம் நீங்க கிளம்புங்க!" என்ற மகனை நெருங்கினாள் பத்மாவதி.

"தம்பி! இ... இதெல்லாம் சரியா வருமா?" தாயின் குரலில் கலவரம் தெரிந்தது.

"அம்மா! எனக்கு அந்தப் பொண்ணை ரொம்ப பிடிச்சிருக்கும்மா. அன்னிக்கு ஆண்டவன் சந்நிதியில் மேள தாளத்தோட அவ கையில பூ, புடவையைக் கொடுத்தேனே!



அப்போதே அவதான் என் மனைவின்னு முடிவு பண்ணிட்டேன். ஆனா அவ ஃபேமிலியோட பிராப்ளம் தெரிஞ்சதும்தான் என் மனசுல உள்ள எண்ணத்தை ஒதுக்கி வெச்சிட்டு முதல்ல அவ அண்ணனைக் காப்பாத்தற முழு முயற்சியில இறங்கினேன். இன்ஃபாக்ட் அதுல சக்சஸும் ஆகிட்டேன்."

"அப்போ அந்தப் புள்ளை பொழைச்சிக்கிட்டானா?"

"நேற்றுதாம்மா சாரதி சொன்னான். செல்வா இப்போ நல்லா தேறிட்டான். கூடிய சீக்கிரமே நடமாட ஆரம்பிச்சிடுவான்னு சொன்னான். போய்ப் பார்க்கத்தான் டயம் கிடைக்கலை. நாளைக்கு முதல்ல அவனைப் போய்ப் பார்க்கணும்."

"அப்போ நானும் உன்னோட வர்றேன். எனக்கும் ஒரு வேலை இருக்கு!" என்றான் ஆனந்த்.

"உங்களுக்கு என்னங்க வேலை?"

"சாரதி எனக்கும் நண்பன்தான். அதோட உன் வருங்கால அண்ணியை நான் மட்டும் பார்க்க வேண்டாமா?"

பத்மாவதியின் மனம் கலங்கித் தவித்தது. பிள்ளைகள் அனைவரும் அந்தப் பெண்ணையே முழுமனதோடு ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அப்படியானால் கீர்த்தனாவின் நிலை? எத்தனையோ வரன் வந்த போதெல்லாம் ரகுராம்தான் எனக்கு வேண்டும் என அத்தனை பேரையும் ஒதுக்கியவள், தன் மகன் மீது அளவு கடந்த நேசம் வைத்திருப்பவள். அவள் எப்படி இதற்குச் சம்மதிப்பாள்?

சம்மதிப்பது இருக்கட்டும். முதலில் இதை நடக்க விடுவாளா? தன் மகன் இன்னொரு பெண்ணை

விரும்புவது தெரிந்தால் சும்மா இருப்பாளா? நினைவே வயிற்றைப் பிசைந்தது. கணவனை மெல்ல அழைத்தாள்.

"என்னங்க! எது நடந்தாலும் கீர்த்துக்குத் தெரியாமல் நடக்கட்டும்ங்க. எனக்கு என்னவோ பயமா இருக்கு."

மனைவியின் பயத்தைப் பார்த்துச் சிரித்தார் கோசல்ராம்.

"என்ன பத்மா! இப்படிப் பயப்படுறே? அவ என்ன பேயா பிசாசா?"

"அதுக்கில்லங்க! நமக்குத்தான் அவ குணம் தெரியுமே... அதான்!"

"அது உன் அண்ணன் செய்த தவறு. தாயில்லாப் பெண் என்று செல்லம் கொடுக்க வேண்டியதுதான். அதற்காக மகள் செய்வது சொல்வது எல்லாமே சரி என்று தலையாட்டி ஏற்றுக் கொள்வது முட்டாள்தனமல்லவா?"

"அவ பிடிவாதக்காரி. அவள் சொன்னதைக் கேட்கவில்லையென்றால் வீட்டையே ரெண்டாக்குவாள். சாப்பிடாமல் பட்டினி கிடப்பாள். அந்தப் பயம் அண்ணனுக்கு!"

"பத்மா! பெண் பிள்ளையோ ஆண் பிள்ளையோ தட்டிக் கொடுத்து வளர்க்கவும் வேண்டும். அவர்கள் வழி தவறி நடந்தால் தட்டிக் கேட்கவும் வேண்டும். சரி எது தவறு எது என்று நாம்தானே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்."

கணவனிடம் வாதாடிப் பயன் இல்லை என்று தெரிந்ததும் மகனிடம் வந்தாள் பத்மாவதி. "கண்ணா! உனக்குக் கீர்த்தனாவை ஏம்ப்பா பிடிக்கலை. பெற்றவர்களை



இழந்து தனி மரமாய் நிற்கிறாள். நம் வீட்டில் வந்து அவள் வாழ வேண்டும் என்று மாமா எத்தனை ஆசைப்பட்டார்!"

தாயின் தோளைப் பற்றி அமர வைத்தான். "அம்மா! மாமா தனக்கு ஒரு நல்ல மருமகன் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கலாம். கீர்த்தனாகூடத் தனக்கு ஒரு நல்ல கணவன் கிடைக்க ஆசைப்பட்டிருக்கலாம். ஆனால் நான் மட்டும் ஆசைப்படக் கூடாதாம்மா?"

"என்னப்பா இப்படி கேட்கிறே?"

"உண்மைதாம்மா. கீர்த்தனா மேலே எனக்கு எப்பவுமே ஈடுபாடு கிடையாது. ஒழுக்கம் என்றால் என்ன என்று கேட்பவள். நினைத்தபோதெல்லாம் ஒவ்வொரு ஆணுடன் சுற்றுபவளை எப்படியம்மா என்னால் விரும்ப முடியும்?"

மகனின் கேள்வியில் தடுமாறிப் போனாள் பத்மாவதி. அன்னையின் கையை எடுத்துத் தன் மடிமேல் வைத்துக் கொண்டான் ரகு.

"அம்மா! தினம் ஒரு பொண்ணு பின்னாலே அலையுற லோஃபர்கூட கல்யாணம்னு வரும்போது தனக்கு வரப்போற மனைவி உத்தமமான பொண்ணா இருக்கணும்னு நினைப்பான். நான் உங்க பிள்ளை. உங்க வளர்ப்பில் எல்லா நற்பண்புகளையும் கற்றுக் கொண்ட பிள்ளை. நான் அப்படி எதிர்ப்பார்ப்பது தப்பாம்மா! அதோடு நான் ஒன்றும் கீர்த்தனாவை ஆசை காட்டி மோசம் செய்யவில்லையே! அவள் நம் வீட்டிற்கு வந்தாலே நான் விலகி வெளியேறி விடுகிறேனே! அப்போதே என் மனதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா?"

நிதானமாய்க் கேட்ட மகனின் கேள்வியில் வாயடைத்துப் போனாள். மகன் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் உண்மைதானே! பெற்றவளாகிய நான்தானே எம் பிள்ளையை - அவன் மனதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். என் அண்ணன் மகள் மனதை அறிந்து கொண்ட என்னால் என் பிள்ளையின் மனதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

திருமணம் ஒன்றும் சாதாரண விஷயமில்லையே! வாழ்வின் இறுதி வரை நிழலாய்த் தொடரும் பந்தம் ஆயிற்றே! அந்த உறவு மனதிற்குப் பிடித்தமானதாக இருந்தால்தானே வாழ்வு இனிமையாய் இருக்கும். பிடிக்காதவளை மணந்து கொண்டு என் பிள்ளை துன்பப்படலாமா? அதை என்னால காண முடியுமா? பெற்றவர்களுக்காகக் கட்டிக் கொண்டு வெட்டிக் கொண்டு போகும் எத்தனையோ இணைகளைப் பார்த்திருக்கிறோமே! அந்த நிலை தன் மகனுக்கும் வர வேண்டுமா?

மனம் பதறி மறுப்பாய்த் தலையசைத்தாள். அன்னையின் முகவாட்டத்தைக் கண்டவன் பரிவாய்த் தாயின் முகம் வருடினான்.

"அம்மா! உங்களுக்கு ரோஜாவைப் பிடிக்கவில்லையென்றால் விட்டுவிடலாம் அம்மா. ஆனால் வேறு ஒரு பெண்ணை மணக்க எனக்குத் துளியும் விருப்பம் கிடையாது. எனக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்று வருடக்கணக்காய்த் தவிக்கிறீர்கள்! உங்களுக்குச் சம்மதம் என்றால் என் ரோஜாவைப் பேசி முடியுங்கள். இல்லையென்றால் என்னை விட்டுவிடுங்கள். கடைசிவரை இப்படியே இருந்து விடுகிறேன்!"



"ஐயோ!" பதறித் தன் மகனின் வாயை மூடினாள்.

"என் பிள்ளையைக் குழந்தை குடும்பமாகப் பார்க்க நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். நீ என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்?"

"அப்போ பேசாம அண்ணன் சொன்ன பெண்ணையே பாருங்கள் அம்மா. அண்ணன் இத்தனை உறுதியாய் இருக்கும்போது நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்? நாங்கள் இருக்கிறோம். தைரியமாய்ச் சம்மதம் சொல்லுங்கள். ஜமாய்த்து விடுகிறோம்!" என்றாள் ஹேமா.

பத்மாவதியின் முகம் புன்னகைத்தது. "உங்களுக்கு எது விருப்பமோ அதைச் செய்யுங்கள். உங்கள் சந்தோஷம் தான் என் சந்தோஷம்."

அனைவரும் கைதட்டி ஆர்ப்பரித்தனர். "ஆனால் ஒன்று...!" என்று சொன்னதும் அனைவரும் அமைதியாகிவிட,

"பத்தே மாதத்தில் எனக்கொரு பேரக்குழந்தையைப் பெற்றுத் தந்துவிட வேண்டும்!" என்றதும், "ஹோ!" எனக் கத்தினர்.

தங்கையும் அண்ணனும் அன்னையைக் கட்டிக் கொள்ள, ஆனந்த், "அப்போ சீக்கிரமே நம்ம வீட்ல மேளச் சத்தம் கேட்கப் போகுது. ஹேமா! கல்யாண வேலை தலைக்கு மேலே கிடக்கு. சீக்கிரம் வந்து சாப்பாடு போடு. சாப்பிட்டுத் தூங்கலாம். விடிந்ததும் உன் அண்ணியைப் போய்ப் பார்க்க வேண்டும்!" என்றான்.

"ஆமாம்... ஆமாம்!" என்றவள் உற்சாகமாய் மாடியை விட்டு இறங்க, பெற்றவர்களும் சிரிப்போடு இறங்கினர்.

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டனர். "ரகு! நாளைக்கு நமக்கு ஒரு வேலை இல்லை. ரெண்டு வேலை இருக்கு!" என்றான் தீவிரமாய்.

ரகுவின் முகம் மாறியது. "நிச்சயமாடா! காலையில ஹாஸ்பிடல்ல செல்வாவைப் பார்த்திட்டு அடுத்து நாம போற இடம் அந்தக் கிஷோர் இடத்தைத் தேடித்தான். நீயே அவனை விட்டாலும் நான் விடுவதாக இல்லை. என் தங்கையைப் பேசியவளையும் விடுவதாக இல்லை."

"ஆமாண்டா! எப்போ போன் பண்ணினாலும் ராங் நம்பர்ன்றானே! பிறகெப்படி அவனை நாம கண்டுபிடிக்க முடியும்?"

"முடியும். இப்போ பார். அவன் நம்பரைக் கொடு!" என்றவாறு தன் செல்போனை எடுத்தான். ஆனந்த் எண்களைச் சொல்ல, அதை அழுத்திப் போனைக் காதிற்குக் கொடுத்தான். ரிங் போயிற்று.

"ரிங் போகுதுடா! யார் எடுக்கிறாங்கன்னு பார்ப்போம்!" என ரகு சொல்லி முடிக்கும் முன் எதிர்முனையில் குரல் கேட்டது.

"ஹலோ! யாருங்க?"

"ஹலோ! கிஷோர்தானே நீங்க. நான் ரகு பேசுறேன்."

"ஹலோ! நான் கிஷோர் இல்லை. ராங் நம்பர். போனை வையுங்க!"

"ஸார்... ஸார்...! போனை வெச்சிடாதீங்க. ரொம்ப அவசரமான செய்தி. கிஷோர் இந்த நம்பர்தான் தந்தான். அவனைப் பார்க்கவே முடியல்லை. ஆனா உங்க குரலைக் கேட்டா கிஷோர் குரல் மாதிரி தெரியலையே!"



மென்மையாய்ப் பணிவாய் ரகு கேட்க, மறுமுனையில் பேசியவன் சலித்துக் கொண்டான்.

"ஆமா சார். இது கிஷோர் போன்தான். பட் நான் கிஷோர் இல்லை. நான் செல்போன் சர்வீஸ் சென்டர் வெச்சிருக்கேன் சார். இந்த ஃபோன் தண்ணியில விழுந்திருச்சுன்னு கொண்டு வந்து ரிப்பேர் பண்ணச் சொன்னான். நானும் சரி பண்ணி வெச்சேன். அந்தப் பயலைக் காணவே இல்லை. போனுக்கு மேலே போன் வந்து டார்ச்சர் பண்ணுது!"

"ஓ! ஸாரி ஸார். நானும் சேர்ந்து உங்களைத் தொந்தரவு பண்ணிட்டேன். விஷயம் ரொம்ப சீரியஸ் சார். நாங்க அவனைப் பார்த்தே ஆகணும். அவன் வீடு எங்கே இருக்குன்னு தெரியுமா ஸார்?"

ரகு வரிசையாய்ப் போட்ட ஸாருக்குப் பலன் இருந்தது. "அவன் இங்கே அடிக்கடி வருவான் ஸார். ஆனா அவன் வீடு சரியா தெரியாது. சேலையூர் பக்கத்திலே ஏதோ ஏரிக்கரைத் தெருவில இருக்குன்னு சொல்வான். மத்தப்படி நான் அவன் வீட்டுக்கெல்லாம் போனதில்லை."

"தேங்க்யூ ஸார். இந்தத் தகவல் போதும் ஸார். நான் அவன் வீட்டைக் கண்டுபிடிச்சிடுவேன்."

"அது ரொம்ப சுலபம் ஸார். அந்த ஏரியாவில அவன் ரொம்ப பிரபலம். யாரைக் கேட்டாலும் சொல்லிடுவாங்க."

"ஓ... அவ்ளோ பெரிய ஆளா அவன்!"

"மண்ணாங்கட்டி... ஒன்னாம் நம்பர் பொறுக்கி சார் அவன். ரெண்டு நாளா ஒரே போன்தான் வந்திட்டே இருக்கு.

அவ்வளவும் பொண்ணுங்ககிட்ட இருந்துதான் வந்தது. உங்களோட சேர்த்து ரெண்டே ரெண்டு பேர்தான் ஆம்பிளைங்க. ரொம்ப மோசமானவன் ஸார். எப்பவும் ஏதாவது ஒரு பொண்ணு கூடதான் சுத்திட்டே இருப்பான்."

"அடடா! அப்போ அவனை வீட்ல போனா பார்க்க முடியாதா?"

"காலையில போனா பார்க்கலாம் ஸார். போதை தெளிஞ்சு அவன் வீட்டை விட்டு வெளியேற எப்படியும் பத்து மணியாகிடும். எதுக்கும் காலையில போயிடுங்க ஸார். என்ன ஸார்? எதுவும் பொண்ணு மேட்டரா?"

"சேச்சே! இது வேற மேட்டர். கொஞ்சம் கொடுக்கல் வாங்கல். அதான் தேடினேன். ஓ.கே. ஸார்! இவ்வளவு பொறுமையா பேசினதுக்கும் இத்தனை தகவல் தந்ததற்கும் நன்றி ஸார்!" என்றவாறு போனைக் கட் பண்ணினான்.

ரகுவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஆனந்த்தை ஏறிட்டான். தகவல்களை ஒப்பித்துவிட்டு, "ஸோ! நாளை காலை முதல் வேலையாய் நாம இந்தக் கிஷோர் வீட்டுக்குப் போறோம்!" என்றான்.

"ஹாஸ்பிடலுக்குப் போயிட்டுப் போலாம் ரகு."

"நோ... நோ...! ரோஜா ஃபேமிலியை எப்ப வேணா பார்த்துக்கலாம். ஆனா இவனைக் காலையிலேயே போனாத்தான் பிடிக்க முடியும். இவனை முதல்ல பிடிக்கணும் ஆனந்த்!"

"ஓ.கே.டா! நாம போறது வீட்ல யாருக்கும் தெரியக் கூடாது. முக்கியமா ஹேமாவுக்கு...!" என்ற நண்பனிடம் மறுப்பாய்த் தலையசைத்தான் ரகு.



"இல்லை... நாளைக்கு நம்மோட சேர்ந்து ஹேமாவும் வரணும்!"

அதிர்வாய் நிமிர்ந்தான் ஆனந்த். "மச்சான்! நீ என்ன சொல்றே?"

"யெஸ். நாளைக்கு ஹேமாவையும் கூப்பிட்டுப் போறோம். இன்ஃபாக்ட் ஹேமாவை வைத்தே அவன் வாயைத் திறக்க வைக்கப் போகிறோம்!"

"நீ என்ன சொல்றே? எனக்கு எதுவும் புரியல்ல!"

"நாளைக்குக் காலையில எல்லாம் புரியும். வா. கீழே போவோம். இல்லன்னா ஹேமா கரண்டியைத் தூக்கிக் கொண்டு மேலே வருவாள்!" என்றவாறு கீழே இறங்க ஆரம்பித்தான் ரகு.

எதுவும் புரியாவிட்டாலும் தன் நண்பன் எது செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை யோடும் நாளை கிஷோரைப் பார்த்ததும், அவனை எப்படிப் புரட்டி எடுக்க வேண்டும் என்ற ஆவேசத்துடனும் நண்பனைப் பின்தொடர்ந்து இறங்கினான் ஆனந்த்.

# 14

ரோஜாவே!
உன்னில் பல நிறமுண்டு!
மஞ்சள் ரோஜா அவள் முகம்!
வெள்ளை ரோஜா அவள் மனம்!
ஆரஞ்சு ரோஜா அவள் கன்னம்!
சிவப்பு ரோஜா அவள் இதழ்கள்!

**“அ**ண்ணா! நீயாவது சொல்லேன். நாம் இப்போது எங்கே போகிறோம்? குழந்தையை அம்மாவிடம் விட்டுவிட்டு என்னை மட்டும் ஏன் வரச் சொன்னாய்? இவர்தான் வாயைத் திறக்க மறுக்கிறார். நீயாவது சொல்லேன்!” ஹேமா பொறுமையின்றிக் கேட்க, காரை ஓட்டிக் கொண்டிருந்த ரகு மெல்லச் சிரித்தான்.

“பொறும்மா! இதோ வந்துவிட்டோம். இரு, விசாரிக்கிறேன்!” என்றவாறு காரை ஓரமாய் நிறுத்தி, தண்ணீர்க் குடத்தோடு சென்ற பெண்ணை அழைத்தான்.

“ஏம்மா! இங்கே கிஷோர் வீடு எங்கேன்னு சொல்ல முடியுமா?”

அந்தப் பெண் ரகுவை ஒருமாதிரியாய்ப் பார்த்துவிட்டு, “அதோ அந்தக் காம்பவுண்ட்ல உள்ள கடைசி வீடு!” எனக் கைகாட்டிவிட்டுப் போனாள்.

ஹேமாவின் முகம் வெளிறியது. “அண்ணா! இது என்ன வேலை? எதற்காக இப்படி வம்பைத் தேடிப் போகிறாய்? முதலில் காரை நிறுத்து.”

அருகில் அமர்ந்திருந்த ஆனந்த் மனைவியை லேசாய் அணைத்துக் கொண்டான். “ஹேமா! எனக்கு அவனைப் பார்க்கணும்! நான்தான் உன் அண்ணனிடம் கேட்டேன்!” என்றவனை நம்ப முடியாமல் பார்த்தாள் ஹேமா.



“அப்போ! உங்களுக்கு எம் மேல நம்பிக்கை இல்லையா?” கேட்கும்போதே கண்கள் கலங்கின.

“ச்சீ! அசடு. உன்னைப் போய்ச் சந்தேகப்படுவேனா? யார் சொல்லி இவன் ஆடுகிறான் என்று நாம் கண்டுபிடிக்க வேண்டாமா? இவன் வெறும் அம்புதான். எய்தவளைக் கண்டுபிடிக்கத்தான் இந்த முயற்சி. இவனை வைத்துத்தானே அவளைப் பிடிக்க வேண்டும்.”

“அதற்காக என்னை ஏன் இங்கெல்லாம் அழைத்து வருகிறீர்கள்? நான் எதற்கு அவனைப் பார்க்க வேண்டும்?” முகத்தைச் சுழித்தாள்.

“அது உன் அண்ணன் ஏற்பாடு. என்னிடம் கேட்காதே!”

“சொல்லு அண்ணா. நான் எதற்கு?” தங்கையின் கேள்விக்குப் பதில் கூறாமல் காரை ஓரமாய் நிறுத்திப் பூட்டிவிட்டு இறங்கினான் ரகு.

“ஹேமா! நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்கோ. இப்போ நாங்க உள்ளே போகப் போறோம். சரியா பத்தே நிமிஷத்துல நீ அங்கே வா. எங்களைத் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாதே! அவனைப் பார்க்க வந்தது போல் வா. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். வாடா மாப்பிள்ளை!” என்றதும் ஆனந்த் காரை விட்டு இறங்கினான்.

“என்னங்க... இது! இதெல்லாம் எதுக்கு? எனக்குப் பயம்மா இருக்கு!” எனக் கணவனின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"ஆறடி உயரத்தில் நாங்க ரெண்டு பேர் உனக்குப் பாதுகாப்பா இருக்கோம். பின்னே என்ன பயம் உனக்கு? தைரியமா வா. நாங்க இருக்கோம்!" மனைவியின் கைகளை ஆதரவாய் அழுத்திவிட்டு நகர்ந்தான் ஆனந்த்.

இருவருமாய் வரிசையாய் வீடுகள் இருந்த தெருவில் இறங்கி நடக்க, பதட்டமாய் காரினுள் அமர்ந்திருந்தாள் ஹேமா.

கடைசி வீட்டின் முன் சென்று நின்ற ரகு முதலில் கதவைத் தட்டினான். நான்கு முறை தட்டிய பின்னரே உள்ளே இருந்து தூக்கக் கலக்கமான குரல் கேட்டது.

"யாரது? காலங்கார்த்தாலே...!" கொட்டாவியோடு கேட்டான் கிஷோர்.

"ம்... உன் மச்சான் வந்திருக்கேன். கதவைத் திறடா!" ரகுவின் குரலில் மறுநிமிடமே கதவு திறந்தது.

கண்களைக் கசக்கியவாறு கலைந்த தலையுடன் நின்ற கிஷோரைப் பார்த்ததுமே அவன் யார், எப்படிப்பட்டவன் என்பதை நண்பர்கள் துல்லியமாய்க் கணித்துவிட, வந்தவர்களைப் புதிதாய்ப் பார்த்தான் கிஷோர்.

"யார் நீங்க? உங்களை நான் பார்த்ததே இல்லையே?"

"உள்ளே போய்ப் பேசுவோமா! உங்களிடம் நிறையப் பேச வேண்டும் என்று இவர் டெல்லியில் இருந்து வந்திருக்கிறார். வா ஆனந்த்!" என உரிமையாய் அவர்கள் வீட்டினுள் நுழைய, குழப்பமாய் ஓடிவந்தான் கிஷோர்.

"ஸார்! யார் ஸார் நீங்க? போலீஸா? எதுக்கு ஸார் என் வீட்டுக்கு வந்திருக்கீங்க. சொல்லுங்க ஸார்!"



பதட்டமாய்க் கேட்டவனுக்குப் பதில் சொல்லாமல் வீட்டைச் சுற்றிப் பார்த்தவாறே நின்றனர் இருவரும்.

"சொர்க்கம் மதுவிலே!" எனச் சத்தமாகப் பாடி அழைத்தது அவனது மொபைல். அவசரமாக அதை எடுத்தவனிடமிருந்து பறித்தான் ஆனந்த்.

"அட! புது போன் வாங்கிட்ட போலிருக்கு. அதான் பழைய நம்பர் ராங் நம்பரா போச்சா! இது ரொம்ப காஸ்ட்லியா இருக்கும் போலிருக்கே... எப்போ வாங்கினே?"

"அது... அது என் ஃபிரண்டு வாங்கித் தந்தது ஸார்!"

"ஃபிரண்டுன்னா யாரு? பாய் ஃபிரண்டா? கேர்ள் ஃபிரண்டா?"

"அதெல்லாம் நீங்க ஏன் ஸார் கேட்கிறீங்க? நீங்க யாரு? முதல்ல அதைச் சொல்லுங்க."

"ம்... சொல்லிட்டாப் போச்சு. ஆமா ஹேமான்னு உனக்கு யாரையும் தெரியுமா?" அவனைக் கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டான் ரகு.

கிஷோரின் முகம் நொடியில் மாறியது. இது கீர்த்தனா சொன்ன பெயரல்லவா! இந்தப் பிரச்சனையை விட்டுவிடு என்றாளே! இவர்கள் எப்படி மோப்பம் பிடித்து வந்தார்கள்? இப்போது இவர்களிடம் என்ன பதில் சொல்வது? கீர்த்தனாவிடம் போன் பண்ணிக் கேட்கலாமா? இவர்கள் முன்னிலையில் கேட்கவும் முடியாதே! அவன் தடுமாறிக் கொண்டிருக்கும்போதே முகத்தில் இடித்தான் ஆனந்த்.

"என்னடா! பதிலையே காணோம். யோசிக்கிறியா?"

கிஷோர் சமாளித்துக் கொண்டான். "சேச்சே! இதில யோசிக்க என்ன இருக்கு! ஹேமா என்னோட லவ்வர்!" என்றான் இயல்பாய்.

இருவரின் தாடைகளும் இறுகின. கிஷோர் அலட்சியமாய் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

"அமா! நீங்க ஏன் என் சொந்த விஷயத்திலே தலையிடுறீங்க? நீங்க யாரு ஹேமாவோட அண்ணனா?"

"ஆமா! நான் அவ அண்ணன்தான்."

"ம்... சொல்லியிருக்கா... என் அண்ணன் பெரிய ரௌடி. நம்ம விசயம் தெரிஞ்சா என்னைக் கொன்னுடுவாரு... அதுக்குள்ளே நம்ம கல்யாணம் பண்ணிடுவோம்னு நச்சரிக்கிறா!"

நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஏன் ஸார்! பார்த்தா படிச்சவர் மாதிரி தெரியுறீங்க. இப்படியா முரட்டுத்தனமா நடந்துக்கிறது! இப்ப என்ன என்னை மிரட்டிட்டுப் போக வந்தீங்களா?"

"சேச்சே! ஹேமா என் ஒரே தங்கை. அவ விருப் பத்துக்கு நாங்க தடை சொல்வோமா? அதான் சம்பந்தம் பேசலாம்னு வந்தோம்!" ரகு இயல்பாய்ச் சொல்ல, கிஷோர் ஆடிப்போனான்.

இது அவன் எதிர்பாராதது. யாராவது கேட்டால் ஹேமா என் லவ்வர் என்று சொல் என்று கீர்த்து சொன்னாள். அந்த ஹேமா கறுப்பா சிவப்பா என்றுகூடத் தெரியாது. ஏதேனும் மிரட்டுவார்கள் என்று எதிர்பார்த்தால்



சம்பந்தம் பேச வந்திருக்கிறோம் என்கிறார்களே! கிஷோர்! உனக்கு மச்சம்டா. பார்த்தா பெரிய இடம் மாதிரி தெரியுது. உட்டுடாதே! ஜென்மத்திற்கும் உட்கார்ந்து சாப்பிடலாம்.

கண்களில் பேராசை மின்ன, "அடடே! மச்சான். உட்காருங்க. ரெண்டு பேரும் முதல்ல உட்காருங்க. நான் ஒரு மடையன். உங்களை நிக்க வெச்சே பேசிட்டு இருக்கேனே... உட்காருங்க!" நாற்காலியில் கிடந்த அழுக்குத் துணிகளை எடுத்து வீசிவிட்டு அமரச் சொன்னான்.

"இருக்கட்டும். ஹேமாவை இனிமே எப்போ பார்ப்பீங்க?"

"ஏன் சார்?" கலவரமாய்க் கேட்டான்.

"இல்ல... இந்தச் சந்தோஷமான விஷயத்தை நீங்களே சொன்னா அவ சந்தோஷப்படுவாளே...! அதான் கேட்டேன்."

"ஐயோ! மச்சான். நீங்க கடவுள். என் கடவுள்!"

"அதிருக்கட்டும். அவளை எப்போ பார்க்கப் போவீங்க?"

"நான் ஒரு போன் பண்ணினா போதும் ஸார். உடனே என்னைத் தேடி வந்திடுவா. நான்னா அவ்ளோ ஆசை அவளுக்கு!"

ஆனந்தின் பற்கள் அரைபட்டன. "சரி! அவளுக்குப் போன் பண்ணு. நாங்களும் பார்த்திட்டே போறோம்!" என்றான் அமைதியாய்.

தடுமாறிப் போனான் கிஷோர். "அது... அது... இவ்வளவு காலையில எப்படி ஸார் போன் பண்ண முடியும்? அவ காலேஜுக்குப் போக வேண்டாமா? நாங்க தினமும்

சாயங்காலம்தான் மீட் பண்ணுவோம்!" பெரிய இடத்துப் பெண். எப்படியும் கல்லூரியில்தான் படித்துக் கொண் டிருப்பாள் என்ற எண்ணத்தில் கிஷோர் வார்த்தையை விட, ஆனந்த் புன்னகைத்தான்.

ரகுவைப் பார்த்து, "ரொம்ப நல்லவரா இருக்காருப்பா! வெத்திலை, பாக்கு மாத்திடலாமா?" என்றான் கண்சிமிட் டியவாறு!

"கண்டிப்பா! அதற்குத்தானே வந்திருக்கிறோம். இரு. நல்ல நேரம் வரட்டும்!" என்றவாறு தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான் ரகு.

அதற்குள் தயக்கமாய் வாசலில் வந்து நின்றாள் ஹேமா. மற்ற இரு ஆண்களையும் கவனியாததுபோல், "ஹாய் கிஷோர்! என்னடா இது? எவ்வளவு நேரம் உனக்காக வெயிட் பண்றது? என்ன பண்ணிட்டு இருக்கே?" என்றவாறு வீட்டினுள் நுழைந்தாள்.

கிஷோர் திருதிருவென விழித்தான். யாரிந்தப் பெண்? புதிதாய் சுண்டியிழுக்கும் அழகோடு, நேரம் காலம் தெரியாமல் வந்து நிற்கிறாளே! சம்பந்தம் கூடி வரும் நேரம் கெடுத்துவிடுவாள் போலிருக்கிறதே! இவளை இதற்கு முன் பார்த்ததே இல்லையே! யோசித்தவனின் பார்வையில் மற்ற ஆண்களின் புரியாத பார்வை பட்டுவிடப் பதறினான்.

"என்ன மிஸ்டர் கிஷோர்! யார் இது?" மிரட்டலாய் ஒலித்த ரகுவின் குரலில் தடுமாறினான் கிஷோர்.

"எனக்குத் தெரியாது ஸார்! ஏய் யாரும்மா நீ?"

ஹேமா போலியாய்த் திடுக்கிட்டாள். "என்ன கிஷோர்! இப்படிக் கேட்கிறே? ஆமா இவங்க யாரு? என்னைத்



தெரியாது என்று ஏன் இவர்களிடம் பொய் சொல்கிறாய்?" என்றாள் கோபமாய்.

"ஏய்! நீ யாரென்றே எனக்குத் தெரியாது. நீ இப்படி நேரம் கெட்ட நேரத்தில் ஏன் வந்து நிற்கிறாய்? போ... வெளியே போ. நாங்க முக்கியமான விஷயம் பேசிக் கொண்டிருக்கிறோம்."

"என்னை வரச் சொல்லிவிட்டு இவர்களுடன் என்ன பேச்சு உனக்கு?"

"கிஷோர்! என்ன நடக்கிறது? யார் இந்தப் பெண்? இவளுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?"

"ஸார்! ஸார்! என்னை நம்புங்கள் ஸார். எனக்கு இவளை யாரென்றே தெரியாது ஸார்! இதுவரைக்கும் நான் இவளைப் பார்த்ததுகூடக் கிடையாது ஸார். இவளை நம்பாதீர்கள்... இது யாரோ செய்த சதி!"

"அப்படியா? இவளை யாரென்றே தெரியாதா?" ரகு வியந்தான்.

"சத்தியமாச் சொல்றேன் ஸார். இவளை நான் இதற்கு முன் பார்த்ததே கிடையாது. இவள் யாருன்னு தெரியவும் செய்யாது!" உறுதியாய்க் கூறினான்.

ஆனந்தும் ரகுவும் கைகளைத் தட்டினர். "வெரிகுட். உண்மையை உன் வாயால் சொன்னதற்கு நன்றி. இவள் யாருன்னு எங்களுக்குத் தெரியும்!" இருவரும் ஒரே குரலில் சொல்லத் திடுக்கிட்டான் கிஷோர்.

"ஸார்! என்ன சொல்றீங்க? இவ யாருன்னு தெரியுமா? யார்?"

ஆனந்த் ஹேமாவின் அருகே சென்று அவளைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டான்.

"மிஸ்டர் கிஷோர்! மீட் மை வொய்ஃப் ஹேமா!" என்றான்.

அதிர்ந்து நின்றான் கிஷோர். அதிர்ச்சியில் பேச்சு எழவில்லை.

"என்னடா முழிக்கிற! உனக்கு இங்கிலீஷ் தெரியாதா? இது அவன் மனைவி. என்னோட தங்கை. பேர் ஹேமா... ஹே...மா...!" ரகு அழுத்தமாய்ச் சொல்ல, மிரண்டு போனான் கிஷோர்.

ஏதோ தன்னைச் சுற்றி வலை பின்னப்படுகிறது என்ற எண்ணம் தோன்றியவுடன் சட்டென வாசலை நோக்கிப் பாய்ந்தான். கப்பென அவனைப் பற்றி இழுத்துப் பளாரென அறை விட்டான் ரகு. அவன் தலை சுற்றிப் போய் ஆனந்திடம் விழ, அவனது கழுத்தைப் பற்றினான் ஆனந்த்.

"ஏன்டா! பொறுக்கிப் பொறம்போக்கு நாயே! யாருன்னே தெரியாத ஒரு பொண்ணை எத்தனை துணிச்சலாய் உன் லவ்வர் என்பாய். உனக்குச் சம்பந்தம் பேச வேண்டுமா? வெற்றிலை பாக்கு மாற்ற வேண்டுமா? இப்போது நாங்கள் போடுகிற போடில் உன் வாய் வெற்றிலை பாக்குப் போடப் போகிறது பார்!" முகத்தில் நாலு அறைவிட இரண்டு பற்கள் இரத்தத்தோடு வெளியே வந்து விழுந்தன.

"ஐயோ! என் பல்லு... எவ்ளோ இரத்தம். ஸார் விட்டுடுங்க ஸார்! எனக்கும் இதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை ஸார்!" கையெடுத்துக் கும்பிட்டான் கிஷோர்.



மீண்டும் ஓர் அறைவிட்டான் ரகு. "பொய்யா பேசுறே ராஸ்கல்! எந்தச் சம்பந்தமும் இல்லாம எப்படிடா இவ்வளவு சரளமா பொய் சொல்ல முடியும்? சொல்லுடா! யார் சொல்லி நீ இப்படிச் சொன்னே? உண்மையைச் சொல்லு. இல்லே! இங்கேயே இப்பவே உன்னைக் கொன்னு போட்டுட்டு போயிட்டே இருப்பேன். சொல்லுடா நாயே!" என்றவாறு தாடையில் ஒரு குத்து விட்டான்.

கொழகொழவென இரத்தம் கொட்டியது.

"ஸார்... சொல்லிடுறேன் ஸார்! இதெல்லாம் நானா பண்ணலை ஸார். என் ஃபிரண்டு சொன்னதால செய்தேன்!"

"யாருடா அந்த ஃப்ரெண்டு. சொல்லு!" உலுக்கினான் ரகு.

"ஸார்! நான் பண்ணியது தப்புதான். ஏதோ போதையில பண்ணிட்டேன். என்னை மன்னிச்சு விட்டுடுங்க ஸார். அவ பேரைச் சொன்னா என்னைக் கொன்றே விடுவாள். அவள் ரொம்ப பொல்லாதவ ஸார்!"

"நாங்க அதை விடப் பொல்லாதவங்க. சொல்லவில்லையென்றால் உன்னை உயிரோடு விடப் போவதில்லை!"

"ஸார்!" தயக்கமாய் இழுத்தான் கிஷோர்.

"இவன் சரிப்பட மாட்டான் ரகு. இவனைத் தலையைத் திருகிடலாமா?"

"ஸார்... வேண்டாம் ஸார்! சொல்லிடுறேன் ஸார்."

"ம்... சொல்லு... சீக்கிரம்!"

"ஸார்... அது வந்து... அவ என்கூட ரொம்ப வருஷமா பழகினவ. அவ எது சொன்னாலும் செய்வேன். அவளும் எனக்காக நிறையச் செய்வா. இதோ இந்தப் போன்கூட அவதான் வாங்கித் தந்தா. இன்னும் ஒரு வாரத்தில் ஒரு புது ஃபிளாட் வாங்கித் தந்திடுறேன்னு சொல்லியிருக்கா!"

"ஏய்! நாங்க என்ன அவ புராணம் பாடவா சொன்னோம். அவ யாருன்னு சொல்லுடா? எதுக்காக இப்படிப் பண்ணச் சொன்னா?" முகத்தில் இடித்தான் ஆனந்த்.

"அவளுக்கும் இந்தப் பொண்ணுக்கும் என்ன பிரச்சனைன்னு தெரியாது ஸார். ஒரு நாள் போன் பண்ணி ஹேமான்னு உனக்கு ஒரு லவ்வர் இருக்கான்னு யார் கேட்டாலும் சொல்லுன்னு சொன்னா... போன் பண்ணிக் கேட்டாலும் சொல்லிடுன்னு சொன்னா. என் போன் நம்பரையும் கொடுத்திருக்கிறதா சொன்னா? நானும் அவளுக்காகச் சரின்னு சொன்னேன்."

"ஏன்? எதுக்குன்னு கேட்கலை நீ?"

"அப்படியெல்லாம் அவகிட்ட கேட்க முடியாது ஸார். கேட்டாலும் சொல்ல மாட்டா. அவ சொல்றதைச் செய்திடணும்!"

"அப்போ அடியாள்னு சொல்லு. யாருடா அவ? எருமை மாடு மாதிரி இருக்கிற உன்னையே அடிமை மாதிரி வெச்சிருக்காளே!"

"ஆமா ஸார். அப்படித்தான் என்னை நினைச்சிருக்கா. என்னை ரொம்பக் கேவலப்படுத்தியிருக்கா. ஆனாலும் நான் ஒரு காரணத்துக்காகத்தான் எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு இருக்கேன்."



"அண்ணா! எனக்கு இங்க நிற்கவே அசிங்கமா இருக்கு. நீங்க ரெண்டு பேரும் கதை பேசிட்டு நிற்கிறீர்களா? வாங்க போலாம். அவ யாரா வேணா இருந்திட்டுப் போகட்டும்!" வெடித்தாள் ஹேமா.

"டேய்! நீ என்ன பேச்சைத் திசை திருப்பிக்கிட்டே இருக்கே. முதல்ல அவ யாரு? எங்கே இருக்கான்னு சொல்லு. என்ன? எங்களுக்கே டிமிக்கி கொடுக்கலாம்னு பார்க்கிறியா? சொல்லுடா!" மீண்டும் அவனது கழுத்தைப் பிடித்தான் ஆனந்த்.

"வேண்டாம் ஸார்! அவ யாருன்னு உங்களுக்குத் தெரியாம இருப்பதே நல்லது!"

"பல்லைப் பேத்துடுவேன். அவ யாருடா?"

"ஸார்! அவ இந்தப் பொண்ணைத் தன்னோட நாத்தனாருன்னு சொன்னா ஸார். உங்க சொந்தக்காரப் பொண்ணாத்தான் இருக்கும்னு நினைக்கிறேன்."

மூவரும் திக்கென அதிர்ந்தனர். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஹேமாவிற்குக் கண்கள் கலங்கின. உடல் நடுங்கியது.

"அண்ணா...! ஒருவேளை... கீர்த்தனாவாக இருக்குமோ...?"

"ஆமா மேடம்! அவதான். அவதான் அப்படிச் சொன்னா...!" கிஷோர் சொன்ன பதிலில் மற்றவர்கள் ஆடிப் போய்விட, ரகுவின் முகம் கோபத்தில் இரத்தமெனச் சிவந்தது.

# 15

ரோஜாவே!
உன்னை
மண்ணில் உதிர்ந்து
சருகாக விடமாட்டேன்!
என் உதிரத்தை உனக்களித்து
நீ வாடாமல் காத்து நிற்பேன்!

தாமரைச்செல்வன் தந்தையின் உதவியோடு எழுந்து நின்றான். தாயும் தந்தையும் மகனைத் தாங்கிப் பிடித்தவாறு மெதுவாக நடக்க வைத்து முன்னே செல்ல, மருத்துவ மனையில் வைத்திருந்த பொருட்களைப் பையில் அடைத்துக் கொண்டு மல்லிகை தாயின் பின்னே சென்றாள்.

ரோஜா தனது கைப்பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணினாள். சாரதியின் அறைக்குள் நுழைந்தாள். "குட்மார்னிங் டாக்டர்!"

"வாங்க ரோஜா! செல்வா கிளம்பியாச்சா?"

"ம்... இப்பத்தான் டாக்டர் கிளம்பிப் போறாங்க. டாக்ஸி பிடிச்சு வீட்டுக்குப் போயிடுவாங்க. நான் இப்படியே வேலைக்குக் கிளம்பணும்."

"ஓ.கே. பதினைந்து நாள் கழிச்சு ஒருமுறை கூட்டிட்டு வாங்க. நல்லா சாப்பிட்டு மருந்து, மாத்திரை சாப்பிடச் சொல்லுங்க. தினமும் கொஞ்ச நேரம் வாக் பண்ணச் சொல்லுங்க. கொஞ்ச நாளைக்குக் குனிந்து நிமிர வேண்டாம்."

"ஓ.கே. டாக்டர்! அப்புறம்... இந்தாங்க டாக்டர்!" என்றவாறு தன் கையிலிருந்த பணத்தை அவன் முன்னே இருந்த டேபிளில் வைத்தாள்.



"என்ன ரோஜா? வாட் இஸ் திஸ்?"

"ஸார்... உங்க ஃபிரெண்ட் கலெக்ஷன் பண்ணின காசில ஆபரேஷன் செலவு போக மிச்சம் இதில இருக்கு. அதோட என்னோட பணம் ரெண்டாயிரம் சேர்த்து வெச்சிருக்கேன். மொத்தம் நாற்பத்தாறாயிரம் இருக்கு ஸார்!"

"இது... எதுக்கு?"

"ஸார்! அண்ணனுக்கு ஆன செலவை மொத்தமா எழுதிக் கொடுங்க ஸார். நான் கொஞ்சம் கொஞ்சமாய் அடைச்சிடுறேன்!" என்றாள் மெதுவாய்.

"என்னாச்சு ரோஜா! ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க? இப்ப இதுக்கு என்ன அவசியம்?"

"அவசியம்தான் ஸார்! எங்க கஷ்டத்துக்கு அடுத்தவங்க ஏன் நஷ்டப்படணும்? பணத்தோட அருமை எனக்கும் தெரியும் ஸார். இந்தப் பணத்தை அவர் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்திருப்பார் என்று தெரியும். அதை ஏன் எனக்காகச் செலவழிக்க வேண்டும்?"

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதீங்க ரோஜா! இது ரகுவோட பணம் மட்டும் இல்லை. எத்தனையோ பணக்கார நண்பர்கள் தங்களால முடிஞ்ச ஒரு உதவின்னு செய்திருக்காங்க. இப்ப நீங்க பேசுறது அவங்க எல்லோரையும் அவமானப்படுத்தற மாதிரி இருக்கு."

"ஐயோ! ஸார்... நான் அப்படிச் சொல்லலை!" பதறினாள்.

"பின்னே... ரோஜா! எல்லோருக்குமே தயாள குணம் இருக்கு. அவசியப்படும்போது ஹெல்ப் பண்றாங்க. அதுவும் ரகுவிற்கு அந்தக் குணம் அதிகமாகவே இருக்கு. அவன் ஒன்றும் உங்களுக்காகச் செலவழிக்கவில்லை. இன்ஃபாக்ட் உங்கள் அண்ணனுக்கு ரத்தம் கொடுத்தது... ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணியது... அவரை எழுந்து நடமாட வெச்சது எல்லாம் ஒரு மனிதாபிமானச் செயல்தான். அதை நீங்கள் இப்படிக் கொச்சைப்படுத்த வேண்டாம்!"

"ஸார்! பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீர்கள்!"

"நீங்கள் மட்டும் இப்படிப் பேசலாமா? நீங்கள் சொன்னதை மட்டும் அவன் கேட்டிருந்தால் அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் தெரியுமா! அவனைப் பற்றி என்ன தெரியும் உங்களுக்கு? அவன் என் நண்பன். என் உயிர் நண்பன்."

"ஸார்! நான் அவரைப் பற்றி ஒரு குறையும் சொல்லவில்லையே!"

"சொன்னீர்கள். உங்களுக்காக என் நண்பன் பணத்தைச் செலவழித்தான் என்றீர்களே! அப்படியென்றால் அதற்கு என்ன அர்த்தம்? உங்கள் அழகில் மயங்கி உங்களை இம்ப்ரஸ் பண்ணத்தான் இந்த உதவியைச் செய்தான் என்றுதானே அர்த்தம்!"

"டாக்டர்! என்ன இது? நான் சாதாரணமாய்ச் சொன்ன ஒரு வார்த்தைக்கு இத்தனை அர்த்தம் கண்டு பிடிக்கிறீர்களே! இந்தப் பணத்தை நான் அவரிடம்தான் கொடுக்க வேண்டும் என்றிருந்தேன். அவர் இங்கு வருவதே இல்லையே! அதனால்தான் உங்களிடம் தந்தேன். யாரிடமும் கடனாளியாய் நிற்கக் கூடாது என்றுதான் கணக்கைக் கேட்டேன். மற்றப்படி நீங்கள் நினைப்பதுபோல் தவறாக நினைத்துப் பேசவில்லை!" ரோஜா தணிவாகவே பேச சாரதி சற்று அமைதியானான்.



"மிஸ் ரோஜா! இதைக் கடன் என்று ஏன் நினைக்கிறீர்கள்? தெருவில் போகும் பிச்சைக்காரர் களுக்குக் காசு போடுவோம். சாப்பாடு போடுவோம். கொஞ்சம் வசதியானவர்கள் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகம், சீருடை வழங்குவார்கள். சிலர் இலவசத் திருமணம் செய்து வைப்பார்கள். சிலர் அநாதை விடுதி களுக்குத் தங்கள் பணத்தில் ஒரு பங்கைக் கொடுப்பார்கள். இப்படி ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்வார்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உதவி பெற்றவர்கள் எல்லாரும் கடனாளிகளா?"

ரோஜா பேச்சற்றுப் போய் நின்றாள்.

"உங்க அண்ணன் இடத்தில் யார் இருந்தாலும் ரகு உதவியிருப்பான். ஆனால் அதற்கு இன்னொரு காரணமும் உண்டு!" என நிறுத்தினான்.

"என்ன... என்ன காரணம்?" தவிப்பாய்க் கேட்டாள்.

"அதை நான் சொல்வதைவிட அவன் சொன்னால் தான் சரியாக இருக்கும்."

"பரவாயில்லை டாக்டர்! நீங்களே சொல்லிடுங்க." அவள் கண்களில் தோன்றிய தவிப்பைக் கண்டதும் மென்மையாய்ச் சிரித்துக் கொண்டான்.

"ஒரு ரெண்டு நாள் பொறுத்துக்கங்க. உங்களுக்கே புரியும்!"

"பிளீஸ் டாக்டர்! இப்பவே சொல்லுங்களேன்."

அவன் வாயைத் திறக்கும் முன் நர்ஸ் வந்து நின்றாள். "ஸார்! பேஷண்ட்டை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போயாச்சு!"

சட்டென எழுந்து கொண்டான் சாரதி. "இதோ வந்திட்டேன். ஸாரி ரோஜா. ஒரு அர்ஜெண்ட் ஆபரேஷன். நான் கிளம்பறேன். முதலில் பணத்தை எடுத்து பேக்கில் வையுங்கள். இந்தக் கணக்கு வழக்கையெல்லாம் ரகுவிடம் கேட்டு விடாதீர்கள். ஒன்றுக்குள் ஒன்றாக வாழப் போகிற வர்களுக்குள் கணக்கு வழக்குத் தேவையா? வரட்டுமா!" எனப் புறப்பட்டான்.

ஒன்றுக்குள் ஒன்றா? அப்படியென்றால்... அவன் பேச்சின் அர்த்தம் புரிவதற்குள் சாரதி அறையைவிட்டுப் போயிருந்தான். மௌனமாய்ப் பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

மனம் பலவிதமாய் எண்ணிக் கலங்கியது. ஓடி ஓடி உதவி செய்தவன் திடீரென ஏன் காணாமல் போனான்? எவளோ ஒருத்தி வந்து தன்னிடமே மட்டமாகப் பேசிவிட்டுப் போகிறாள். தனக்கும் அவனுக்கும் திருமணம். அது உன்னதால்தான் தடைப்படுகிறது என்றாள். அப்படி என்ன நான் தடையாக நின்றேன்.

இன்று வரை அவனை முழுதாய் நின்று நிதானமாய்ப் பார்த்ததில்லையே! பிறகேன் அவள் அப்படிச் சொன்னாள்! அவள் அப்படிச் சொன்னதைக் கேட்டுச் சகித்துக் கொண்டு இங்கே வந்தால்... அதுவரை கூடவே நின்று உதவி செய்தவன் கண்ணிலே படாமல் மறைந்து விட்டானே! ஒருமுறைகூட வந்து எட்டிப் பார்க்கவில்லையே!



ஆபரேஷன் முடிந்தது முதல் இன்று காலை டிஸ்சார்ஜ் ஆகும் வரை எத்தனை முறை கேட்டான் அண்ணன். ரகு ஸார் வந்தாரா? ஏன் வரவில்லை என்று நூறு முறையாவது கேட்டு ஓய்ந்திருப்பானே! பெரிதாய் ஆயிரம் அட்வைஸ் செய்தானே! பிறகேன் பார்க்க வரவில்லை?

அவரை என்ன உன்னைப் போல் சம்பளத்திற்கு நிற்பவர் என்று நினைத்தாயா? - அன்று அவள் சொன்ன வார்த்தை நினைவில் மோதியது. சரியாகத்தான் சொன்னாள். அவனுக்கு ஆயிரம் வேலை இருக்கும். நம்மைப் பார்க்க ஓடிவர அவனுக்கு என்ன அவசியம்? ஏதோ உதவி செய்ய வேண்டும் என்று தோன்றியதே! அதுவே பெரிய விஷயம்.

இல்லையென்றால்... படுக்கையிலேயே வாழ்க்கையை முடித்து விடுவானோ என்று எண்ணி அஞ்சிய அண்ணன் இன்று காலூன்றி நடந்திருக்கிறானே... இதற்காகவேனும் அந்த ரகுவிற்கு நன்றி சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஆனால் ஒருமுறையேனும் அவன் என் கண்ணில் படவே இல்லையே! பட்டால்தானே நன்றி உரைக்க முடியும். 'நன்றி உரைக்க மட்டும்தான் மனம் அவனைத் தேடுகிறதோ!' எனத் தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள். வேறென்ன? வேறு ஒன்றும் இல்லை. புத்தியைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு சாலையோரமாகப் போய்க் கொண்டிருந்தவளின் கண்களில் அந்தக் காட்சி பட்டது.

சாலையில் கூட்டமாய்த் தெரிய அம்மாவின் புடவையும் தெரியப் பதறி ஓடினாள். அண்ணனுக்காக ஏற்பாடு செய்த டாக்ஸி அல்லவா இது. ஐயோ! எதிரே இன்னொரு கார் மோதியிருக்கிறதே! என்ன ஆயிற்று?

உடலும் உள்ளமும் பதறித் துடிக்க ஓடிச் சென்று தாயை, தந்தையை, அண்ணனை முழுதாய்ப் பார்த்தபின்பே மூச்சு வாங்கியது. நிம்மதியாய்ப் பார்வையைத் திருப்பினாள். காரின் முன் பகுதி லேசாய் நொறுங்கியிருக்க, டிராபிக் போலீஸிடம் டிரைவர் பொறுமையாய்ச் சொல்லிக் கொண் டிருந்தார்.

"சார்! காருக்குள்ளே ஆஸ்பத்திரியிலே இருந்து ஏத்திட்டு வந்த பேஷண்ட் இருக்காங்க ஸார். அதனால நான் ரொம்ப ஸ்லோவாத்தான் வந்தேன் ஸார். இந்தப் பொண்ணுதான் போன் பேசிகிட்டே காரை ஓட்டிட்டு வந்து மேலே இடிச்சது. இப்ப எம்மேல பழி போடுது. எம்மேல எந்தத் தப்பும் இல்லை சார்!"

"யோவ்! பொய் சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறியா? நான் போன் பேசிட்டு வந்ததை நீ பார்த்தியா? அப்போ நீ ரோட்டைப் பார்த்து காரை ஓட்டல்ல. பார்த்தீங்களா ஸார்! உண்மையை அவன் வாயாலேயே சொல்லிட்டான். இப்படி கார்ல, பைக்ல போற பொண்ணுங்களைப் பார்த்திட்டு வண்டியை ஓட்ட வேண்டியது. ஓரமாய்ப் போகிற வண்டியிலே மோதிவிட்டு பணக்கார இடம் என்று தெரிந்தால் பணத்தைக் கறந்துவிட வேண்டியது!" அவள் சரமாரியாய்க் குற்றச்சாட்டை அள்ளி வீச, அந்த நடுத்தர வயதுடைய ஓட்டுநர் பதறினார்.

"ஏம்மா! இப்படிப் பழி போடுறே! இது அந்த ஆண்டவனுக்கே அடுக்காது. காரை ஓட்டும்போது ரோடை மட்டும் பார்க்க முடியாதும்மா. இது நாலு ரோடு சந்திக்கிற இடம். எந்தப் பக்கம் எந்த வண்டி வருதுன்னு பார்த்திட்டுத்



தான் கிராஸ் பண்ணணும். அப்படிப் பார்க்கும்போதுதான் உன்னைப் பார்த்தேன். இப்படி தப்புத் தப்பா பேசாதேம்மா!"

"ஏய்! செய்யுற தப்பை நீ செய்துட்டு எம்மேலே பாயுறியா? ராஸ்கல்! உன்னையெல்லாம் சும்மா விடக் கூடாது. ஸார்! நீங்க கேஸ் போடுங்க. இவனை உண்டு இல்லையென்று ஆக்கிவிடுகிறேன்!" அவள் ஆவேசமாய்க் கூற, ரோஜா பதறிப் போனாள். அண்ணனைப் பார்த்தாள்.

காருக்குள் சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண் டிருந்த தாமரைச்செல்வன் களைப்பாய்க் கண்களைத் திறந்தான். சாலை நெரிசலைக் கண்டு இறங்க முயற்சித் தவனை அருகில் அமர்ந்திருந்த மல்லிகை பற்றிக் கொண்டாள்.

"அண்ணா! நீ கீழே இறங்க வேண்டாம். ஏதோ சின்னப் பிரச்சனை. அவங்களைப் போலீஸ்காரங்க பார்த்துப்பாங்க. நீ இப்ப இறங்கினா கூட்டத்தில யாராவது இடிச்சிடப் போறாங்க!" என்றாள் பரிவாய்.

"சரிம்மா! அந்த கிளாஸையாவது இறக்கிவிடேன். ரொம்ப புழுக்கமா இருக்கு. கொஞ்சம் காற்று வரட்டும்!"

"சரிண்ணா!" என்றவாறு ஜன்னல்களை இறக்கி விட்டாள். காற்றுடன் சேர்ந்து வெளியே கேட்ட சண்டை சச்சரவும் உள்ளே நுழைந்தது.

"இந்தாம்மா! சும்மா ஏன் எகிறிக் குதிக்கிறீங்க. நான்தான் கேட்டுட்டு இருக்கேனில்ல... டிரைவர் வந்த சைடு சரிதான். நீங்கதான் ஏடாகூடமா கிராஸ் பண்ணியிருக்கீங்க. கார் ஓட்டத் தெரியுமா? தெரியாதா?" போலீஸ்காரர் கேட்டதும் சிலிர்த்துக் கொண்டாள் கீர்த்தனா.

"என்ன ஸார்? என்ன பேசுறீங்க! நான் யார்னு தெரியுமா? என் ஸ்டேட்டஸ் என்னன்னு தெரியுமா?"

"நீ யாரா இருந்தா எனக்கென்னம்மா? ரூல்ஸ்படி வராம இந்தக் கார் மேல இடிச்சிட்டு அவர் மேலயே தப்புன்னு எகிறிக் குதிக்கிறியே!"

"லுக் ஆபீஸர்! உங்க இஷ்டத்துக்குப் பேசாதீங்க."

"என்னம்மா! கொஞ்சமும் மரியாதை இல்லாம பேசுறே!"

"நோ. இனி உங்ககிட்ட பேசி பிரயோஜனம் இல்லை. நான் கமிஷனர்கிட்டே பேசிக்கிறேன். எனக்கு எல்லா இடத்திலேயும் செல்வாக்கு உண்டு."

"போம்மா... போய்ப் பேசு. அவர் என்ன உன்னை மாதிரி வேலை வெட்டி இல்லாம இருப்பாருன்னு நினைச்சியா? அவருக்கு ஆயிரம் வேலை இருக்கு!" அவரும் நக்கலாகவே பதில் சொல்ல, கொதித்துப் போனாள்.

"ஹேய்! என்னையா அவமானப்படுத்துகிறாய்! என்னை யாரென்று நினைத்தாய்? நான் நினைத்தால்..." என சீறியவளிடம் ரோஜா ஓடிச் சென்று தடுத்தாள்.

"மேடம்! பிளீஸ் மேடம்...!" எனத் தொடங்கியவள் சட்டென அதிர்ந்தாள். இவளா? இவள் அவளல்லவா? - திகைத்துப் போய் நின்றவளை அலட்சியமாய்ப் பார்த்தாள் கீர்த்தனா.

"நீயா? நீ என்ன இங்கே? உன்னை யாரும் பஞ்சாயத்துக்குக் கூப்பிடலையே!" என்றாள் வெடுக்கென.

"நீ யாரும்மா? இடையில் வந்து நிற்கிறாய்?" என்ற காவலரைப் பார்த்து, "ஸார்! கார்ல இருக்கிறது என்



அண்ணன்தான் ஸார். பெரிய ஆபரேஷன் பண்ணி இப்பத்தான் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறோம். ரொம்ப நேரம் உட்காரக் கூடாது. இந்தப் பிரச்சனையைச் சீக்கிரமா கிளியர் பண்ணி காரைப் போக விடுங்க ஸார். அண்ணன் ரொம்ப சிரமப்படுது. பிளீஸ் ஸார்!" என்றாள் பணிவும் பதட்டமுமாய்.

"ஆமா ஸார்! எம் புள்ளை ரொம்ப நேரம் உட்கார்ந்திருக்க முடியாது ஸார். வீட்ல போய் மருந்து கொடுத்துப் படுக்க வைக்கணும்!" மாணிக்கமும் சொல்ல, காவலர் காரை நெருங்கி வந்து எட்டிப் பார்த்தார்.

உள்ளே தாமரைச்செல்வன் சரியாக உட்கார முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். டிரைவரை அழைத்தார் காவலர்.

"டிரைவர்! நீங்க வண்டியை எடுங்க. டிராஃபிக்கை கிளியர் பண்ணணும்!" என்றதும் டிரைவர் ஓடிவந்து காரில் ஏறினார். மாணிக்கமும் சகுந்தலையும் காரினுள் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது.

ஆத்திரமாய் வந்து காரை மறித்தாள் கீர்த்தனா. "என்ன ஸார்? நான் ஒருத்தி இங்கே நிற்கிறதையே மறந்து போயிட்டீங்களா? ஒரு பொண்ணு வந்து கேட்டவுடன் காரை அனுப்புறீங்க. என் காரோட கிளாஸ் உடைஞ்சிருக்கு. முன் பக்கம் டேமேஜ் ஆகியிருக்கு. இதுக்குப் பதில் சொல்லாம காரை நகரவிட மாட்டேன்!" ஆங்காரமாய்க் குரல் கொடுத்தாள்.

"இதோ பாரும்மா! நீ வேணும்னே தகராறு பண்ணிட்டே இருக்கே. பேசாம கிளம்பு. பொதுமக்களுக்கு இடையூறு பண்ணினன்னு சொல்லி கேஸ் புக் பண்ணிடுவேன். கிளம்பும்மா!"

"நான் யாருன்னு தெரியாம பேசிட்டு இருக்கீங்க ஸார். இது...!" பேசிக்கொண்டே காரை அவள் நெருங்க, சலிப்பாய் நிமிர்ந்து பார்த்த தாமரைச்செல்வன் தீயை மிதித்தாற்போல் துள்ளி எழுந்தான். காரின் மேற்கூரை இடித்துவிடச் சட்டென அமர்ந்தான்.

"அண்ணா! என்ன அண்ணா! ஏன் எழுந்திருக்கிற?" பதறினாள் மல்லிகை.

"மல்லி! கதவைத் திற. நான் இவளைக் கொல்ல வேண்டும். நகரு... கதவைத் திற. சீக்கிரம்!" வெறிவந்தவன் போல் கத்தினான்.

பெற்றவர்கள் மனம் பதறித் தடுக்க, "விடுங்கம்மா! இவ... இவ யாருன்னு தெரியுதா? சதிகாரி. என்னை ஆசை காட்டி மோசம் செய்த நயவஞ்சகி. இவதான்... இவளைத்தான் நான் தேடிட்டு இருந்தேன். இத்தனை வருஷமா ஒரு பொணமா கிடக்க வைத்தாளே, இவளை நான் பிணமாக்க வேண்டும். கதவைத் திறங்க!" தாயைத் தாண்டிக் கதவைத் திறக்க முயற்சித்தான் தாமரைச்செல்வன்.

அனைவரும் அதிர்ந்து வெளியில் நோக்க, அந்தப் பெண் இன்னும் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். அவள் உடையையும் கலர் கலரான அலங்காரத்தையும் பார்த்து வெறுப்பாய் முகத்தைச் சுழித்தனர்.

"இவளையா விரும்பினாய்? போயும் போயும் இவளுக்காகவா உயிரைவிடத் துணிந்தாய்! பொண்ணாடா இவ? உன் கண்ணு என்ன குருடா? முட்டாப் பயலே!" கடிந்து கொண்டார் மாணிக்கம்.

"ஒதுங்கிப் போன என்னை விரட்டி விரட்டி விரும்பினாப்பா. நானும் குருடாத்தான் இருந்திட்டேன்.



என்னை விரட்டியது, விரும்பினது எல்லாமே அவளுக்குப் பொழுதுபோக்குன்னு எனக்குத் தெரியாமப் போச்சே. என் தங்கைகளோட வாழ்க்கையையும் பெத்தவங்களோட உழைப்பையும் மறந்து போயிட்டேனே... எல்லாத்தையும் மறக்க வெச்சி பைத்தியமாக்கி ஒரேயடியா முடக்கிப் போட்டுட்டாளே! அவளை விடக்கூடாதுப்பா. என்னை வெளியே விடுங்க!" திமிறினான்.

"ஐயோ! உடம்பை வருத்திக்காதே ராஜா! ஆபரேஷன் செய்த உடம்பு. கொஞ்சம் பொறுமையா இருப்பா. டிரைவரண்ணே! நீங்க காரை எடுங்களேன்!"

"எங்கேம்மா எடுக்கிறது? அந்தப் பொண்ணுதான் பொம்பளை ரௌடி மாதிரி குறுக்கே வந்து நிற்கிறாளே... பொண்ணா இவ...?"

"இதோ பாருங்க! உங்களுக்குப் பொழுது போகலைன்னா வேற எங்கேயாவது போய் வம்பிழுங்க. இப்ப காரைப் போக விடுங்க!" விரல் நீட்டி எச்சரித்தாள் ரோஜா.

"ஏய்! யார்கிட்ட கை நீட்டிப் பேசுற? பிச்சைக்கார நாயே!" என்றவாறு கையை ஓங்கினாள்.

ஓங்கிய கையை வலிய கரம் ஒன்று பற்றியது. அவளைப் பலமாய்த் தன்புறம் திருப்பிப் பளாரென அறைந்தது. அரண்டு போனாள் கீர்த்தனா. தன்னை அறைந்தவனைக் கண்டதும் மிரண்டு சட்டெனப் பின் வாங்கினாள்.

# 16

ரோஜாவே!
இதமான தென்றலில்
அசைந்தாடுகிறாய் - புயல்
வீசும்போது போராடுகிறாய்!
என் இதயத்திற்குள் வந்துவிடு
உன்னை - என் மனதிற்குள்
பொக்கிஷமாய்ப் பாதுகாப்பேன்!

கண்கள் இரத்தமெனச் சிவக்க கோபமாய் நின்றிருந்த ரகுவைக் கண்டதும் ஆடிப்போனாள் கீர்த்தனா. ரகுவின் அருகே ஆனந்தும் ஹேமாவும் நிற்க. ஆனந்தின் இறுக்கமான பிடியில் நின்றிருந்த கிஷோரைக் கண்டதும் உடல் மொத்தமும் ஆட்டம் கண்டது.

ஹேமா வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொள்ள, ஆனந்தின் கோபத்தை அவன் முகமே காட்டிக் கொடுத்தது. அலட்சியமான பார்வையோடு நின்ற கிஷோரை எரித்து விடுவதைப்போல் பார்த்தாள் கீர்த்தனா.

அதற்குள் காரைவிட்டு இறங்கியவர்கள் ரகுவைக் கண்டதும் ஒரு நிம்மதியோடு மூச்சுவிட, ரோஜா பிரமித்து நின்றாள். ரகுவின் முகத்தைவிட்டுப் பார்வையை விலக்க முடியவில்லை.

தனக்காகவா இவளை அடித்தான்? இத்தனைநாள் காணாத கண்கள் திடீரென அவனைக் கண்டதும் பனித்தன. தன்னையும் மீறி இதழ்கள் புன்னகைத்தன.

ரோஜாவின் முகத்தைக் கண்டதும் கீர்த்தனாவிற்கு எரிந்தது. இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்? இவளுக்காக இத்தனை பேர் முன்னிலையில் நடுரோட்டில் என்னைக்



கைநீட்டி அறைகிறானே, என்ன நெஞ்சழுத்தம் இவனுக்கு? ரகுவைக் கோபமாய் நிமிர்ந்து பார்த்தாள் கீர்த்தனா.

"ராம், ஒரு பிச்சைக்காரிக்காக நீ என்னையே அடித்தாயா? இவள் யார் உனக்கு?" - ஆங்காரமாய்க் கேட்டாள்.

"ஏய்... வாயை மூடு. யார் மீது கை வைக்கப் போனாய்? அவளை யாரென்று நினைத்தாய்?" - கர்ஜித்தான் ரகு.

"அதுதான் நானும் கேட்கிறேன். யார் இவள்?"

சற்றும் தாமதியாமல் சொன்னான். "என் மனைவியாகப் போகிறவள். என் மனைவி மீது கைவைக்க நினைத்த உன்னைச் சும்மா விட முடியுமா?" என்று கேட்டு மீண்டும் ஒரு அறை விட்டான்.

சர்வமும் ஒடுங்கிப் போனாள் கீர்த்தனா. அடிபட்டதால் மட்டுமல்ல. அவன் சொன்ன வார்த்தையாலும்தான். மற்றவர்கள் அதிர்ந்து நிற்க, அவர்களை விலக்கிவிட்டு முன்னே வந்தான் தாமரைச்செல்வன்.

"ரகு ஸார்... இவளை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் இவளைக் கொல்ல வேண்டும். இவளைத் துண்டு துண்டாய் வெட்டியெறிய வேண்டும்!" - என்றவாறு கண்களில் கொலை வெறியோடு வந்து அவளது கூந்தலைக் கெட்டியாகப் பிடித்து இழுத்தான். ரகு குழப்பமாய் அவனை ஏறிட்டான்.

வலியில் அலறியபடி திரும்பிய கீர்த்தனா பேயைக் கண்டது போல் மிரண்டாள். இவனா? இவன் எங்கிருந்து வந்தான். இன்னும் உயிரோடுதான் இருக்கிறானா? கண்களில் பயம் தோன்றியது.

"என்னடி பார்க்கிற? இவன் இன்னும் சாகவில்லையா என்று நினைக்கிறாயா? எத்தனையோ பாவங்களைச் செய்து விட்டு நீயெல்லாம் உயிரோடு நடமாடும்போது நான் மரிப்பேனா? உன் உயிரை எடுக்கத்தான் அந்தக் கடவுள் என் உயிரைக் காப்பாற்றினார் என்று நினைக்கிறேன். உன் சாவு என் கையிலதான்டி!" - என அவள் கழுத்தைப் பற்றி பலம் கொண்ட மட்டும் நெரிக்கத் தொடங்கினான்.

சுற்றியிருந்தவர்கள் பதறித் தடுக்க, கீர்த்தனா மூச்சுக்குத் திணறினாள். காவலர் இடையில் புகுந்து அவர்களைப் பிரித்தார்.

"ஏய்... என்னப்பா, நடுரோட்ல நின்று டிராமா போடுறீங்களா? ஏய் நீ நோயாளின்னு பார்த்தா என் கண்ணு முன்னாலயே கொலை செய்யப் பார்க்கிறீயே. என்ன துணிச்சல் உனக்கு?"

"ஸார்... என்னை நோயாளியா படுக்க வெச்சதே இவதான் ஸார். படிப்பு மட்டுமே குறிக்கோளா நினைச்ச என்னை இவ விளையாட்டுக்காக ஆசை வார்த்தை காட்டி என்னைப் பைத்தியக்காரனாக்கி எங்க காலேஜ் மாடியில இருந்து விழச்சொன்னா. அப்படி விழுந்து முடமானவன் தான் நான். கிட்டத்தட்ட மூணு வருஷமா படுக்கையிலே எல்லாமா... அவமானத்தால கூனிக் குறுகி, என்னால என் தங்கைகளோட வாழ்க்கையும் தொலைந்துபோய் இப்போ இந்த நிலைமைக்கு நிற்கிறேன்னா அதுக்கு இவ... இவதான் ஸார் காரணம். இவளை எப்படிச் சும்மா விட முடியும்?" - ஆத்திரமாய்க் கேட்டான் தாமரைச்செல்வன்.

ரோஜா இடியை நேரிடையாய்த் தலையில் வாங்கியது போல் அதிர்ந்து போனாள். தன் அண்ணனின் இந்த



நிலைக்கு இவளா காரணம்? இப்போது புரிகிறது. இதற்காகத்தான் இவன் ஓடிவந்து உதவி செய்தானா?

மாமன் மகள் செய்த பாவத்திற்கு இவன் பரிகாரம் செய்தானோ? என்ன துணிச்சலாய் இந்த விஷயத்தை நம்மிடம் மறைத்து விட்டான். டாக்டர் சொன்ன இன்னொரு காரணம் இதுதானா? நினைக்கையில் நெஞ்சும் கசந்தது.

"ஏம்பா... படிக்கிற காலத்தில படிக்க மட்டும்தான் கல்லூரிக்குப் போகணும். துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பார்களே. அதைப் போல் இந்தப் பெண்ணைப் பார்த்ததுமே நீ விலகிப் போயிருக்க வேண்டும். உன் படிப்பில் கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். அதை விட்டுட்டு நீயும்தான் இவளை நம்பி ஏமாந்தாய். இனி மேலாவது புத்திசாலித்தனமாய்ப் பிழைத்துக் கொள். இவளைக் கொன்றுவிட்டுச் சிறையில் கிடந்தால் உன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது. போப்பா... போய் உடம்பைக் கவனி.

"ஏம்மா... உனக்குத் தனியாகச் சொல்லணுமா. போம்மா. வாயடக்கமாக வாழப் பழகிக்கோ. பொண்ணாச் சேன்னு இதோட விடுகிறேன். போங்க.... போங்க... டிராஃபிக் எவ்ளோ நேரமா ஜாமாகி நிக்குது. போங்க. மத்ததெல்லாம் வீட்ல போய்ப் பேசுங்க!" - என அவர் தன் கடமையைத் தொடங்க அவரவர் வாகனத்தில் ஏறினர்.

"அம்மா! இன்னிக்கு என்னால வேலைக்குப் போக முடியாது. நான் வீட்டுக்கு வந்திடுறேன்," - என்றவாறு ரோஜாவும் ஏறிக்கொள்ள, கார் புறப்பட்டது.

செல்வாவின் நிலைக்கு இவள்தான் காரணம் என்று தெரிந்ததும் நொந்து போன ரகு, "ஆனந்த், நான் இவ

கார்ல வர்றேன். நீங்க இந்தக் காரை ஃபாலோ பண்ணுங்க. ஏறு கார்ல!" - என்றவாறு மிரட்டியதும் கீர்த்தனா பின் இருக்கையில் ஏறிக்கொள்ளத் தானே காரை ஓட்டினான் ரகு. கிஷோரையும் ஏற்றிக் கொண்டு ரகுவைத் தொடர்ந்தான் ஆனந்த். ஹேமா அதிர்ச்சியில் வாயைத் திறக்கவே இல்லை.

காரை ஓட்டிக் கொண்டே தனது செல்லை எடுத்துத் தந்தையைத் தொடர்பு கொண்டான். "அப்பா, அம்மாவைக் கூட்டிட்டு ஆதிநகர் வாங்கப்பா. கார்னர்ல இருக்கிற முத்துமாரியம்மன் கோயில் வாசல்ல நில்லுங்க. நாங்க அங்கதான் வர்றோம்."

"என்னப்பா.. என்ன விஷயம்? ஏன் திடீர்னு அங்கே வரச்சொல்ற?" - கோசல்ராம் பதட்டமாகக் கேட்டார்.

"எல்லாம் சொல்றேம்பா. முதல்ல நீங்க கிளம்பி வாங்க!" - என்றவாறு போனை கட் பண்ணிவிட்டு ரோஜாவின் குடும்பம் சென்ற காரைப் பின் தொடர்ந்தான்.

அதுவரை அமைதியாய் இருந்த கீர்த்தனா கோபமாய் வாயைத் திறந்தாள்.

"ராம்! நாம இப்ப எங்கே போறோம்? நான் வீட்டுக்குப் போகணும். காரை வீட்டுக்குத் திருப்பு."

"இரு. இரு. உன் திருவிளையாடல்கள் எல்லோருக்கும் தெரிய வேண்டாமா? போக வேண்டிய இடத்திற்குத்தான் போகிறோம். வாயை மூடிக் கொண்டு வா!" - அலட்சியமாகச் சொன்னான் ரகு.

"வேண்டாம் ராம். என்னைச் சீண்டாதே. நான் என்ன செய்தேன்? யார் என்ன சொன்னாலும் நம்பி விடுவாயா? அவன் யாருன்னே தெரியாது."



"நீ எதுவும் பேசாதே. செல்வாவை விட நான்தான் ரொம்ப வெறியோடு இருக்கிறேன். பொது இடம் என்பதால் இரண்டு அறையோடு விட்டேன். இல்லை யென்றால் நடந்திருப்பதே வேறு."

"நான்தான் உன் மீது வெறியோடு இருக்கிறேன். நமக்குக் கல்யாணம்னு முடிவு பண்ணி வெச்சிருக்கு. நீ பாட்டுக்கு எவளையோ ஒருத்தியைக் காட்டி உன் மனைவியாகப் போகிறவள் என்கிறாய். அதுவும் அத்தனை பேர் முன்னிலையில்..."

"ஏய் நிறுத்து... உன்னை மணப்பதாக நான் சொன்னேனா?"

"நீ சொல்லாவிட்டால் என்ன? என் அத்தை சொல்லியிருக்கிறார்கள். இப்போதல்ல, பல வருடங்களுக்கு முன்னால் என் அப்பாவிடம்."

"வாழப்போவது நான். நான் சொல்ல வேண்டும். எனக்கு உன் மேல ஒருபோதும் விருப்பம் கிடையாது. ஏதோ மாமாவிற்காக உன்னை ஒதுக்காமல் நான் விலகிப் போனேன். ஆனால், இன்று காலை கேட்ட தகவலுக்குப் பின் உன் மீது வெறுப்பும் அருவருப்பும்தான் தோன்றுகிறது!" - கடுத்த முகத்துடன் ரகுராம் சொல்ல அவமானத்தால் முகம் கன்றிப் போனாள்.

"உன்னையும் எங்கள் வீட்டில் ஒருத்தியாக எண்ணினோமே. அதற்கு நல்ல கைம்மாறு செய்திருக்கிறாய். ஹேமா என்ன பாவம் செய்தாள் என்று உன் விஷப் புத்தியைக் காட்டினாய். சொல்லுடி."

"முட்டாள் மாதிரி பேசாதே ராம். ஒரு பொறுக்கிப்பய சொன்னதை நம்பி நீ என்னைச் சந்தேகப்படுவாயா? அவனே ஒரு ஸ்திரீலோலன். அவனுக்கு எப்படி ஹேமாவைத் தெரியும் என்றே எனக்குத் தெரியாது. வேலை வெட்டி இல்லாத சோம்பேறிப்பய. உங்களை மிரட்டிப் பணம் பறிக்கலாம் என்றுகூட ஆனந்திடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லியிருப்பான். அதற்கு என் மீது பழி போடுவியா?" - ஆத்திரத்தில் என்ன பேசுகிறோம் என்று சிந்திக்காமல் கீர்த்தனா பேசிக் கொண்டே போனாள்.

"சபாஷ், எல்லாத்தையும் இப்படியே சொல்லிடு. விசாரணை பண்ற வேலையாவது எனக்கு மிஞ்சும்!" - கேலியாய் ரகு சொல்லத் திக்கென அதிர்ந்தாள்.

"நான் உன்னிடம் எதையும் கேட்கவில்லை. என்ன பிரச்சனை என்றும் சொல்லவில்லை. நீயே உன் வாயால் சொல்லி விட்டாயே என் அப்பன் குதிருக்குள் இல்லை யென்று."

கீர்த்தனா வேகமாகச் சிந்தித்தாள். இவனிடம் பேசி மாட்டிக் கொள்வதைவிட இதிலிருந்து தப்பிக்க வழியைத் தேட வேண்டும். அந்த வீட்டில் தன் மீது அக்கறையும் அன்பும் கொண்ட ஒரே ஜீவன் அத்தைதான். அத்தையை வைத்துத் தான் அங்கு சென்று வாழ முடியும்.

ஆனால், இந்தக் கிஷோர் எப்படி மாட்டினான் என்று தெரியவில்லையே. இடியட்... எதையெல்லாம் உளறிக் கொட்டினானோ. தன் மகளுக்குக் களங்கம் கற்பித்தவளை எந்தத் தாய் தன் வீட்டு மருமகளாய் ஏற்றுக்கொள்வாள். அத்தையிடம் இவர்கள் உண்மையைச் சொல்லிவிட்டால் அத்தையும் தன்னை வெறுத்து விடுவார்.



பிறகு மகனின் விருப்பம் போல் அவளையே மண முடித்து வைத்தாலும் ஆச்சர்யம் இல்லை. விடமாட்டேன். இத்தனை வருடமாய் நான் ஒற்றைக் காலில் நின்று காத்திருக்க, நேற்று வந்த ஒருத்திக்கு ராமைக் கொடுக்க விடுவேனா? முதலில் கிஷோரைத் தப்பிக்கச் சொல்ல வேண்டும். அவன் தப்பித்துவிட்டால் போதும்.

பிரச்சனையைச் சுலபமாய்த் திசை திருப்பிவிட முடியும். வேறொரு பெண்ணை மணப்பதற்காக அண்ணனும் தங்கையும் தன் மீது வீண் பழி சுமத்துகின்றனர் என்று கண்ணீர் சிந்தினால் போதும். அத்தை நம்பிவிடுவார்கள். இதுதான் சரியான வழி.

எண்ணம் தோன்றியதும் அவசரமாய் தனது செல்லை உயிர்ப்பித்துக் கிஷோரை அழைத்தாள். ரகுவிற்குக் கேட்காத தொனியில் அவள் தன் திட்டத்தை விவரிக்க, மறுமுனையில் பலமாய் மறுத்தான் கிஷோர்.

"சான்ஸே இல்ல கீத்து. கைதி மாதிரி கூடவே வெச்சிருக்கார் ஆனந்த் ஸார். என்னால தப்பிக்க முடியாது."

"முட்டாள். கார் கதவைத் திறந்து குதித்தாவது தப்பிவிடு."

"இது ரிமோட் லாக் கீர்த்து. அவரே திறந்தால்தான் உண்டு. அப்படியே திறந்தாலும் உயிரைப் பணயம் வைத்து என்னால் குதிக்க முடியாது. இது நோகாமல் வளர்ந்த உடம்பு. ஏற்கெனவே காலங்கார்த்தால வந்து புரட்டி எடுத்திட்டாங்க. ரெண்டு பல்லுகூட கொட்டிப் போச்சு, தெரியுமா?"

"கதை அளக்காதே. எனக்கு டயம் ரொம்ப கம்மியா இருக்கு. சரி அவனுங்ககிட்ட என்னவெல்லாம் உளறி வெச்ச. அதை மட்டும் சொல்லு. தப்பிக்க ஏதும் வழி இருக்கான்னு பார்க்கிறேன்."

"ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். ப்ளாட் ஏற்பாடு பண்ணினதுவரை. சொல்லாமல் விட்டால் என்னைக் கொன்றே போட்டிருப்பார்கள். அடியா அது? ஒவ்வொண்ணும் இடி மாதிரி இறங்கிச்சு."

"உடம்பை வளர்த்து வெச்சிருக்கே தடிமாடு மாதிரி. நீயும் திருப்பி அடிக்க வேண்டியதுதானே. உனக்குக் கை இல்ல?" - அடிக் குரலில் சீறினாள்.

"என்ன நீ? எனக்குச் சமாதி கட்டணும்னு முடிவே பண்ணிட்டியா? ஏதோ எனக்குச் செலவு பண்ற, சாப்பாடு போடுறன்றதுக்காக நீ சொல்றதைச் செய்தேன். அதுக்காக உசுரையே கொடுக்கற அளவுக்கு நான் என்ன மடையனா? சும்மா விளையாடாதே கீர்த்து."

அவள் பதில் பேசும் முன் குரல் கொடுத்தான் ரகு. கார் தன் வேகத்தைக் குறைத்து அந்தத் தெருவினுள் நுழைந்தது.

"போதும்... அவன் உன்னைப் போல் நரிப் புத்தி உள்ளவன் இல்லை. அதனால அவனை நம்பி எதுவும் கோட்டை கட்டாதே. அம்மாவிடம் நீ எந்தக் கதையைச் சொன்னாலும் நம்ப மாட்டார்கள். உன் சாயம் இப்போ வெளுத்துவிடும்!" என்றான்.

பயத்தில் கீர்த்தனாவின் முகம் வெளிறிப் போயிற்று.

தன் வீட்டின் முன் தங்களைத் தொடர்ந்து வந்த கார்களைப் பார்த்து ஆச்சர்யமானாள் மல்லிகை. "ஹை...



அக்கா... இங்கே பாரேன் மாப்பிள்ளை ஸார் நம்மை ஃபாலோ பண்ணி நம்ம வீட்டுக்கே வந்திட்டார். அம்மா, பாருங்களேன்."

"ஏய்... வாயை மூடுடி. அதென்ன மாப்பிள்ளை ஸார்..." என்றவாறு சகுந்தலா பார்க்க, ரகு தன் காரைவிட்டு இறங்கினான். தொடர்ந்து அடுத்தடுத்த கார்களும் நின்று மற்றவர்களும் இறங்க, ரோஜா கோபமாய் முன்னே வந்தாள்.

"என்ன? நடுரோட்ல வெச்சு கேவலப்படுத்தினது போதாதுன்னு வீடு தேடி வந்திட்டீங்களா? இது கௌரவமா குடும்பம் நடத்துற இடம். இங்க வந்து அதைக் கெடுத் திடாதீங்க. ஏற்கெனவே எங்க அண்ணனால நாங்க பட்ட கஷ்டம் போதும். இனிமே உங்க யார் முகத்திலயும் விழிக்க விரும்பல. போயிடுங்க!" - வெடித்தாள்.

"ரோஜா, தயவு செய்து நான் சொல்லப் போறதைக் கேளுங்கள் ப்ளீஸ். நீங்கள் நினைப்பதுபோல் நாங்கள் பிரச்சனை பண்ண வரவில்லை. மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறோம்!" - என்றான் ரகு.

"மன்னிப்பா? எதற்கு? இத்தனை நாளாய் நீங்கள் யாரென்று சொல்லாமல் மறைத்தீர்களே, அதற்காகவா? வேண்டாம் ஸார். இப்பத்தான் எல்லாம் தெரிஞ்சு போச்சே. இனி எதற்காக மன்னிப்பு?" - வெறுப்பாய்ப் புன்னகைத்தாள்.

"நான்கூட என் அண்ணன்மேல் உள்ள பரிதாபத்தால் தான் இந்த உதவியைச் செய்தீர்கள் என்று நினைத்தேன். இப்போதுதானே புரிகிறது. உங்கள் வருங்கால மனைவி செய்த தவறுக்கு நீங்கள் நஷ்ட ஈடு தந்து இருக்கீங்கன்னு.

எங்களை யாருன்னே தெரியாத மாதிரி பர்ஃபெக்டா நடிச்சீங்க பாருங்க. நானே பிரமிச்சுப் போயிட்டேன். இப்படி ஒரு நல்லவர் உண்டான்னு நாங்க அடிக்கடி பேசிப்போம். ஆனா அது எப்படிப்பட்ட நடிப்பு! இவள் நடிப்பைக் கண்டு என் அண்ணன் மட்டும்தான் ஏமாந்தான். உங்கள் நடிப்பில் நாங்க மொத்தமாய் ஏமாந்து போனோம். இனி உங்களுக்கு இங்கு என்ன வேலை? கிளம்புங்கள்!" – ரோஜாவின் முகம் கோபத்தில் சிவக்க, ஹேமா அவளருகே வந்தாள்.

"அண்ணி, தயவு செய்து கோபப்படாமல் நான் சொல்வதைக் கேளுங்கள். அண்ணனுக்குக் கீர்த்தனாவின் வேலைகள் எதுவும் தெரியாது. எனக்கு... எனக்கு மட்டும் தான் தெரியும். ஆனால், இவர் உங்கள் அண்ணன் என்று எனக்குத் தெரியாது."

"அண்ணியா? இதென்ன புதிய உறவு?" கடுப்பாய்க் கேட்டாள் ரோஜா.

"எல்லாம் பேச வேண்டும். ஆனால், தெருவில் வேண்டாமே. வீட்டிற்குள் போய்ப் பேசுவோமே. ஆன்ட்டி... நாங்களும் கௌரவமாய் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான். கீர்த்தனா செய்த தவறுக்காக நாங்கள் அனைவருமே தவறானவர்கள் என்று எண்ண வேண்டாம்!" – ஹேமா மென்மையாய்க் கூறியதும் சகுந்தலா வேகமாய்க் கதவைத் திறந்து அனைவரையும் உள்ளே அழைத்தாள்.

மற்றவர்கள் உள்ளே செல்ல, ரோஜா மட்டும் வெளியே நின்றாள். ரகுவும் பத்மாவதியும் அவளை நெருங்கினர். தயக்கமாக அன்னையை ஏறிட்டான் ரகு. பார்வையால் இறைஞ்சினான். சின்னத் தலையசைப்போடு ரோஜாவின் தோளைப் பற்றினாள் பத்மாவதி.



"ராஜாத்தி! இப்போ இங்கே என்ன பிரச்சனைன்னு எனக்குத் தெரியலம்மா. ஆனா எம்புள்ளைய மட்டும் தப்பா நினைச்சுக்காதேம்மா. உன்னை அந்தக் கோவில்ல வெச்சு எப்போ பார்த்தோமோ அப்பவே நீதான் எங்க வீட்டு மருமகன்னு முடிவு பண்ணிட்டோம். உன் அண்ணன் குணமானதும் பேசலாம்னு இருந்தோம்."

பத்மாவதி சொல்ல, நம்ப முடியாத அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள் ரோஜா.

## 17

ரோஜாவே!
நீ என்னதான் அழகென்றாலும்
என்னவளின் முன் உன்னால்
நிற்க முடியாது! – என்னவள்
ரோஜாக்களின் ராணி!

**ஹே**மா சொன்னவற்றைக் கேட்டு ஆடிப்போனாள் பத்மாவதி. மனம் முழுக்கப் பதறியது. அண்ணன் மகள் தாயில்லாப் பெண் என்ற கனிவு மறைந்து முகத்தில் வெறுப்புப் படர்ந்தது. அத்தையின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கீர்த்தனாவின் முகம் வெளிறியது. அவசரமாய்ப் பத்மாவதியை நெருங்கினாள்.

"அத்தே! நம்பாதீர்கள். ஹேமா சொல்வது பொய். என்னை ரகுவிடம் சேர விடாமல் தடுக்கத்தான் இப்படி நாடகமாடுகிறார்கள். இவன் எங்கூடப் படிச்சவன்தான். ஆனா இவன் குடிச்சிட்டு மாடியில இருந்து விழுந்தா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?" – சொல்லி முடிக்கும் முன் பளாரென அறைந்தான் தாமரைச்செல்வன்.

"என்ன பொண்ணுடி நீ. நீ தப்பிக்க அடுத்தவர் மேல் எப்படியெல்லாம் பழி போடுறியே. ச்சே... நான் குடிகாரனா? இதுவரை அதன் வாடை படாமல் வளர்ந்தவன் நான். எனக்கே குடிகாரப் பட்டம் சூட்டுகிறாயே. உன்னைப் போய் விரும்பினேனே. அப்பா, என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா. உங்களையெல்லாம் தவிக்கவிட்டு போயும் போயும் ஒரு சதிகாரிக்காக என் உயிரைவிடத் துணிந்தேனே. எத்தனை பெரிய மடத்தனம்! என்னால் நம் குடும்பத்திற்கு எத்தனை அவமானம்! பொருள் இழப்பு... மன உளைச்சல்... துன்பம்... என்னால்தானே அப்பா. என்னை மன்னித்து விடுங்கள் அப்பா..." - தந்தையின் கையைப் பற்றிக் கதறினான்.

"வேண்டாம்யா. அழாதே. உடம்பை வருத்திக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காருல்ல. அழாதேய்யா. உட்காரு. பெரியவங்க எதுக்கு வந்திருக்காங்கன்னு கேட்போம். அமைதியா இருய்யா!" - மகனைச் சமாதானம் செய்து சாய்வு நாற்காலியில் அமர வைத்து விட்டுக் கோசல்ராமை நெருங்கினார் மாணிக்கம்.

"ஐயா, இது பழைய குப்பை. குப்பையைக் கிளறினா நாற்றம்தான் மிஞ்சும். ஏன் நம்மையே நாம நாறடிக்கணும். விட்டுடுங்க. எங்க புள்ளை பொழைச்சு வந்தது போதும் எங்களுக்கு. வேற எதையும் பேசி அவன் மனசை ரண மாக்க வேண்டாம். இனிமேலாவது இந்தப் பொண்ணு இன்னொருத்தன் வாழ்க்கையில விளையாடாம பார்த்துக் கங்க. கிளம்புங்க!" என்றார் மெதுவாய்.

"மிஸ்டர் மாணிக்கம், என் மனைவியின் அண்ணன் ரொம்ப நல்ல மனிதர். அவருக்கு இப்படி ஒரு பெண் பிறந்தது துரதிர்ஷ்டம்தான். இவளைப் பற்றித் தெரிந்ததால்



தான் அவர் சீக்கிரமே கண்ணை மூடி விட்டார். இவள் சார்பாக உங்கள் குடும்பத்தாரிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். மன்னித்துவிடுங்கள்!" - கைகூப்பினார் கோசல்ராம்.

பத்மாவதி தடுத்தாள். "வேண்டாங்க... நான்தான் மன்னிப்புக் கேட்கணும். நான்தானே இவளைப் பற்றித் தெரியாமல் இவளுக்குப் பரிந்து பேசினேன். பெற்ற மகளாய்ப் பார்த்துக் கொண்டேன் நான். ஆனால் இவள் பால் வார்த்த எனக்கே நஞ்சைக் கக்கிவிட்டாளே. என் மகள் புனிதமானவள். அவள் மீது எத்தனை பெரிய பழியைச் சுமத்தியிருக்கிறாள். கடவுளே, என் மாப்பிள்ளை மட்டும் அதை நம்பியிருந்தால்..." - நடுங்கினாள் பத்மாவதி.

"அத்தே, எனக்கு ஹேமா மீது நம்பிக்கை இருக்கு. யார் என்ன சொன்னாலும் நான் நம்ப மாட்டேன். கீர்த்தனாவின் மேல் லேசா ஒரு டவுட் இருந்தது. அதை கிளியர் பண்ணிட்டு ஹாஸ்பிடல் போய் மிஸ்டர் தாமரைச் செல்வனைப் பார்க்க வேண்டும் என்று இருந்தோம். அதற்குள் ஏதேதோ நடந்துவிட்டது!" - பெருமூச்சு விட்டான்.

தாமரைச் செல்வனை நெருங்கினான் ரகுராம். "செல்வா, உங்களின் நிலைக்கு இவதான் காரணம்னு சத்தியமா எனக்குத் தெரியாது. முதன் முதலாய் உங்களுக்கு பிளட் கொடுக்க வந்தபோது நீங்கள் யாரென்றே தெரியாது. ஒரு இளைஞன் தன் குடும்பத்தை நிர்கதியாய் விட்டுவிட்டு உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடாதே என்றுதான் உங்களைக் காப்பாற்ற முன் வந்தேன். வேறெந்தக் காரணமும் கிடையாது. என்னை நம்புங்கள் செல்வா!" - தொண்டை அடைக்கப் பேசினான்.

"ரகு ஸார்... நீங்க ஏன் ஃபீல் பண்றீங்க? உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும் ஸார். உங்களைப் பார்த்த பின்தான் எனக்கு வாழும் ஆசையே வந்தது. உங்கள் வார்த்தைதான் எனக்கு நம்பிக்கையூட்டியது. உங்களைப் பார்க்காமல் ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன் ஸார்."

"ஸாரி செல்வா. அன்னிக்கு உங்களை ஆபரேஷன் தியேட்டருக்குள்ள கூட்டிட்டுப் போனதும் எங்க மாமா ரொம்ப சீரியஸா இருக்காங்கன்னு போன் வந்தது. உங்க அப்பா அம்மாகிட்ட சொல்லிட்டுத்தான் போனேன்."

"ஆமா ஸார், சொன்னாங்க."

"நான் அப்படி ஓடிப்போயும் என் மாமாவைக் காப்பாத்த முடியல்ல செல்வா. எம் மாமா இந்தக் கையிலதான்... என் முகத்தைப் பார்த்திட்டேதான் உயிரை விட்டாங்க!" - சொல்லும்போதே கண் கலங்கினான்.

பெற்றவர்களோடு ரோஜாவும் திகைத்துப் போனாள். அப்படி யென்றால் இவன் சும்மா காணாமல் போக வில்லையா? கடவுளே, இவனைப் பற்றி என்னவெல்லாம் பேசிவிட்டோம். அன்றுதானே இவளும் நம் வீட்டிற்கு வந்தாள். அன்று இவள் சொன்னதையெல்லாம் உண்மை என்று நம்பினோமே. கூடவே வளர்ந்த ஹேமாவைப் பற்றி அவள் கணவனிடமே அவதூறாகப் பேசியவள். இவள் சொன்னதை எப்படி நம்ப முடியும்?

ரகு இன்னும் பேசிக் கொண்டிருந்தான். "மாமா ரொம்ப நல்லவர் செல்வா. ஆண் பிள்ளை இல்லாதவர். அவருடைய பிள்ளையாய் இருந்து அவரது இறுதிச்சடங்கை நான்தான் செய்ய வேண்டும் என்று என்னிடம் சத்தியம்



வாங்கிக் கொண்டார். அந்த நொடியே அவர் உயிர் போயிற்று.

அவர் மகள் இதோ இந்தக் கீர்த்தனா அப்போது ஊரில் இல்லை. பாண்டிச்சேரியில் இருந்தாள்."

ரோஜா வியப்பாய்க் கீர்த்தனாவைப் பார்க்க, அவள் கூனிக் குறுகிப் போய் அமர்ந்திருந்தாள். அன்று இரவுவரை கிஷோருடன் ஊரைச் சுற்றிவிட்டு நள்ளிரவில் தானே வீட்டிற்குத் திரும்பினாள். தந்தையின் உடலைக் கண்ணாடிப் பேழைக்குள் தானே பார்க்க முடிந்தது.

"நான்தான் மாமா காரியங்களைச் செய்தேன். பிறகு காரியம்வரை எங்கும் செல்ல முடியாதபடி வேலை. அத்தனை இடைஞ்சலிலும் ஹாஸ்பிடலுக்கு டெய்லி போன் பண்ணி உங்களைப் பற்றி விசாரிப்பேன். உங்கள் உடல் நிலை தேறி வருவதை யறிந்து ரொம்ப சந்தோஷப்பட்டேன். உங்களைப் பற்றி வீட்டில் அனைவரிடமும் சொல்லி யிருந்தேன். இன்று காலையில் உங்களைப் பார்க்க வருவதாக முடிவு பண்ணியிருந்தோம்.

"அதற்குள் இந்த கிஷோர் மேட்டரில் இறங்கியதில் நேரம் போய்விட்டது. அப்போதே இவளை ஒருவழி செய்துவிட வேண்டும் என்றுதான் வந்தேன். ஆனால் ரோட்டில் நின்று பஜாரித்தனம் பண்ணிக் கொண்டிருந் தவளை ரெண்டு அறைதான் விடமுடிந்தது.

"செல்வா, இவள் எத்தனை மோசமானவளாய் இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியவில்லையே செல்வா. என் மாமா ரொம்ப பாவம். இவள் அவருக்கு மகளாய்ப் பிறந்திருக்கக் கூடாது. இப்போ இவளை என்ன செய்தாலும்

அது என் மாமாவிற்கு நாங்கள் செய்யும் துரோகம் ஆகி விடுமே. இறந்துபோன ஆன்மாவை வதைக்கக் கூடாதே செல்வா. அதனால்தான் அமைதியாக இருக்கிறேன். மற்றப்படி இவள் மீது தப்பு என்று எனக்கு முன்பே தெரியாது. நான் உனக்குச் செய்த உதவி முழுக்க முழுக்க மனிதாபிமானம் மட்டும்தான். நஷ்ட ஈடு கிடையாது. நஷ்ட ஈடு அளிக்கும் பாவத்தையா இவள் செய்திருக்கிறாள். பாவத்திற்குத் துணை போகிறவன் நானில்லை செல்வா. என்னை நம்புங்கள்."

"ஸார், உங்களை நம்பாமல் வேறு யாரை நம்புவேன். ஏதோ வேலையாக வெளியூர் போயிருப்பீர்கள் என்றுதான் நினைத்தேன். மற்றப்படி உங்களைத் தவறாக ஒரு போதும் எண்ணவில்லை!" - என்று ரகுவை அணைத்துக் கொண்டான் தாமரைச் செல்வன்.

தங்கையை அழைத்தான். "ரோஜா, ஒருத்தரைப் பத்திப் புரிஞ்சுக்காம தப்பா பேசக் கூடாதுன்னு சொன்னேன்ல. பாரு, ஸார் எவ்வளவு வருத்தப்படுறாரு. ஸாரி கேள். ம்..."

பதறித் தடுத்தான் ரகு.

"ஸாரியெல்லாம் வேண்டாம் செல்வா. என் மீது தப்பில்லை என்று புரிந்து கொண்டால் போதும்."

"இல்ல ஸார். நான், மல்லி எல்லோரும் சொன்னோம். இதுதான் உங்களை நம்பவே யில்லை. உங்களுக்குக் கல்யாணம் என்றுகூடச் சொன்னா!" செல்வா சொன்னதும் ஆச்சர்யமாய்த் திரும்பினான் ரகு.

"எனக்குக் கல்யாணமா? யார்? யார் சொன்னது?" - ரகு கேட்டதும் ரோஜா தயக்கமாய்க் கீர்த்தனாவைப் பார்த்தாள். உறைந்துபோய் நின்றாள் அவள். பரிதாப மாய்த்தான் இருந்தது.



ஒரே நாளில் எல்லாப் பிழைகளிலும் மாட்டிக் கொண்டிருக்கிறாள். இதில் தன் பங்கிற்கும் அவளை ஏன் வதைக்க வேண்டும்? சொன்னாலும் அதை நினைத்து இந்தக் குடும்பத்திற்கு இவள் மீது இன்னும் வெறுப்புத்தானே கூடும்?

"அது... யாரும் சொல்லவில்லை. அன்று கோவிலில் உங்கள் அம்மா சொன்னார்களே... பரிகாரம்கூடச் செய்தீர்களே. அதனால் திருமணம் கூடியிருக்கும் என்று நினைத்தேன்!" - சமாளித்தாள் ரோஜா. திக்கென நிமிர்ந்தாள் கீர்த்தனா. அவள் பார்வையில் நன்றி இருந்தது.

"அட, அப்போ நீங்களும் எங்களை மறக்கலையா?" - உற்சாகமாய்க் கேட்டாள் ஹேமா. மற்றவர்களும் புன்னகையோடு அவளையே பார்க்க, சட்டெனக் குழம் பினாள் ரோஜா.

"நீங்களும்னா..."

"ஆமாம் அண்ணி, அன்னிக்குக் கோவில்ல உங்களைப் பார்த்தவுடனே எங்களுக்கெல்லாம் ரொம்பப் புடிச்சுப்போச்சு. அதுவும் என் குழந்தையைத் தாங்கிப் பிடிச்சீங்களே, அப்பவே நீங்கதான் எங்க அண்ணின்னு நான் முடிவு பண்ணிட்டேன்."

பத்மாவதியும் வாய் திறந்தாள். "ஆமாம்மா, உன்னை எங்க கண்ல காட்டினதே அந்த தெய்வம்தான். நீதான் எங்க வீட்டுக்கு மருமகளா வரணும்னு அப்பவே முடிவு பண்ணிட்டோம்."

ரோஜாவின் மனம் உறுத்த, "அப்ப.. இவங்க?" என்றாள் கீர்த்தனாவைக் காட்டி. பத்மாவதி வாயடைத்துப் போய்விட, ரகு வாயைத் திறக்கும் முன் கீர்த்தனாவே பேசினாள்.

"என்னைப் பத்தி கவலைப்பட வேண்டாம் ரோஜா. என் தந்தைக்கு மகனாய் நின்று காரியம் செய்தவனை நான் எப்படி மணக்க முடியும்? உறவே மாறிப் போய்விடுமே!" - கீர்த்தனாவின் வார்த்தையில் அனைவருமே அயர்ந்தனர்.

"அதோடு நான் அசிங்கமானவள். கேவலமானவள். என்னைக் கட்டிக் கொண்டு ரகுவின் புனிதம் கெட வேண்டாம். ரகு கங்கை. நான் சாக்கடை. நான் மோசமான பிறவி. என்னை நினைத்தால் எனக்கே வெறுப்பாக இருக்கிறது!" - முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

ஹேமாவும் பத்மாவும் மனம் தாளாமல் அவளை அணைத்து ஆறுதல் சொல்ல, இன்னும் அழுதாள் கீர்த்தனா.

"ஹேமா, நீ எவ்வளவு நல்லவள்! உன்னைப் போய்ப் பழிவாங்கத் துடித்தேனே. இன்னும்கூட நீங்கள் என்னை வெறுக்கவில்லையா?"

"கீர்த்து, நீ எப்போதும் என் மாமாவின் மகள்தான். உன்னை எப்படி வெறுக்க முடியும்?" - என்றாள் ஹேமா.

"ஐயோ, பாவி, நான் பாவி. உங்களுக்கெல்லாம் என் அப்பாவின் மேலிருந்த அன்பும் மரியாதையும் எனக்கில்லாமல் போயிற்றே. அதனால்தான் என்னைக் காணப்பிடிக்காமல் நான் வரும்முன் கண்ணை மூடிவிட்டார். என் புத்தி தெரிந்தும் யாரும் என்னை வெறுக்கவில்லையே.



இதுவே என்னைக் கொல்கிறது. இந்தக் குற்ற உணர்ச்சி என்னை அரித்தே கொன்றுவிடும். செல்வா, நான் உனக்குச் செய்தது மிகப்பெரிய பாவம். நீ சொன்னதுபோல உன் கையால் என்னைக் கொன்றுவிடு. என்னைக் கொன்றுவிடு செல்வா. அப்பத்தான் என் பாவம் தீரும்!" - எனத் தாமரைச் செல்வனின் காலில் போய் விழுந்தாள்.

ரகுகூட வியந்து பின் வாங்கினான். தாமரைச் செல்வனின் முகம் மட்டும் துளியும் மாறவில்லை. கல்லாய் இருந்தது.

"ரகு ஸார், தயவு செய்து இவளைப் போகச் சொல்லுங்கள். கடைசிவரை இவள் என் முகத்தில் விழிக்காமல் இருந்தாலே போதும். ஒருமுறை முட்டாளாய் இருந்து நான் செய்த காரியத்தால் என் குடும்பமே தடுமாறிப் போய்விட்டது. நான் தேறி வந்து உழைத்து என் குடும்பத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும். என் தங்கைகளுக்கு நல்ல வாழ்வை அமைத்துத் தர வேண்டும். அதுவரை என் மனம் வேறு எதிலும் ஈடுபடாது. இவளைப் போகச் சொல்லுங்கள் ரகு ஸார்."

"செல்வா, நான் கேட்கிறேன் என்று தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. உங்களுக்கு... உங்கள் மனதில்..." - ரகு தயக்கமாய் இருக்க.

"சத்தியமாய் இவள் இல்லை ஸார். மாடியிலிருந்து விழுந்து என் எலும்புகள் நொறுங்கிப் போய்க் கிடந்த நிலையிலும் இவள் என்னைப் பார்த்து ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்தாளே, அதை என் வாழ்நாள் முழுக்க மறக்க முடியாது. அப்பவே என் மனமும் நொறுங்கிப் போச்சு. இனி அதை எந்த பிளேட் போட்டும் ஒட்ட முடியாது. எனக்கு

நல்லது செய்யணும்னு இவ நினைச்சா எம் முன்னால வராம இருந்தாலே போதும்!" - என்றான் கசப்பாய்.

கீர்த்தனா மெல்ல எழுந்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். "இல்லை செல்வா, இனி உன் கண்ணில் பட மாட்டேன். யார் முகத்திலும் விழிக்க எனக்கு அருகதை இல்லை. நான் பாவப்பட்ட ஜென்மம். என்னைப் பார்க்க யாருக்குமே பிடிக்காது."

"எனக்குப் பிடிக்கும் கீத்து!" - கிஷோரிடம் இருந்து பதில் வந்தது.

சட்டெனத் திரும்பினாள் கீர்த்தனா. "ஆமாம் கீத்து. நாம ரெண்டு பேருமே எவ்வளவோ தப்பு செய்திருக்கோம். ஆனா, உன்னை எப்பவுமே நான் வெறுக்க மாட்டேன் கீத்து. என்னை உனக்குப் பிடிக்காதா?" என்றான்.

கீர்த்தனா பதிலின்றி அவனையே பார்த்தாள். எத்தனை முறை அடித்தாலும் திட்டினாலும் தன் காலையே சுற்றி வரும் நாய்க்குட்டி. தன் பேச்சு எதுவாக இருந்தாலும் அப்படியே ஏற்றுச் செய்து முடிப்பவன். என்ன, கொஞ்சம் தண்ணியடிப்பான். நான் எப்படிப்பட்டவள். என் மனமே மாறியிருக்கும்போது இவன் மாற மாட்டானா? மாறுவான். நான் மாற்றுவேன்.

ஒரு முடிவுடன் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். "தேங்க்யூ கிஷோர். நீ கூட என்னை வெறுத்துடுவியோன்னு பயந்திட்டேன்."

"அதெப்படி? எல்லாத் தப்பையும் சேர்ந்தே செய் தோம். இனியும் சேர்ந்தே இருப்போம். எந்தத் தப்பும் செய்யாம வாழுவோம். தண்ணியக்கூட கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக்கிறேன்!" - என்றான் இயல்பாய்.



"சரிதான், ஜாடிக்கேத்த மூடின்ற மாதிரி ரெண்டு பேரும் ஒண்ணாச் சேர்ந்திட்டீங்க போல. இதுவும் சந்தோஷம் தான். ரகு! உன் ரூட் கிளியர். இனி நீ ஜமாய்!" - என்றான் ஆனந்த் கேலியாய்.

ரகு வியப்பும் சந்தோஷமுமாய்த் தாயைப் பார்த்தான். ஹேமாவும் உற்சாகமாய்த் தந்தையின் அருகே சென்று அவர் தோளில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"அப்பா, போங்க. அம்மாகூடச் சேர்ந்து சம்பந்தம் பேசுங்க. பிரச்சனையா இருப்பான்னு பார்த்த கீர்த்தனாவே ஒதுங்கிட்டா. இனி என்ன தயக்கம்? போங்க, அம்மாகிட்ட போங்க!" - மெல்லிய குரலில் மகள் சொன்னதும் மனைவியை நெருங்கினார் கோசல்ராம்.

"மாணிக்கம், இப்ப பிரச்சனை எல்லாம் முடிஞ்சு போச்சு. இப்ப எங்க மனசுல உள்ளதைத் தயங்காம கேட்கலாமா?"

மாணிக்கம் புன்னகைத்தார். "சொல்லுங்க ஸார், என்ன விஷயம்?"

"அது... எங்க பையன் ரகுவிற்கு உங்க மூத்த பெண்ணைப் பெண் கேட்கிறோம். தருவீர்களா?" - கோசல் ராம் கேட்டதும் அனைவரின் முகங்களும் ஆனந்தமாய் அதிர்ந்தன.

"என்னங்க? என்ன சொல்றீங்க? இது நிஜமா?" - சகுந்தலா வியப்பாய்க் கேட்டாள்.

"ஆமா ஆன்ட்டி. நாங்க எப்பவோ முடிவு பண்ணிட்டோம். உங்க பையன் குணமாகட்டும்னுதான்

வெயிட் பண்ணினோம். எங்க அண்ணனை உங்களுக்குப் பிடிச்சிருக்கா? உங்க மாப்பிள்ளையா ஏத்துப்பீங்களா?" - ஹேமா கேட்டதும் மல்லிகை துள்ளிவிட்டாள்.

"என்ன கேட்கறீங்க? மாப்பிள்ளை சாரை எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். அவரைப் போய் வேண்டாம்னு சொல்வோமா?"

"மல்லி, பெரிய மனுஷியாட்டம் பேசக்கூடாது. நாங்கள் பேசுவோம்!" - என்ற மாணிக்கம் ரோஜாவைப் பார்த்தார். அவள் தலையைக் குனிந்தபடியே நின்றிருக்க, கோசல் ராமை ஏறிட்டார்.

"ஸார், நான் சொல்றேன்னு நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது. எம் பொண்ணுக்கு ஏற்கெனவே ஒரு இடத்துல சம்பந்தம் பேசி முடிச்சு கிட்டத்தட்ட கல்யாண நாள் நெருங்கும்போதுதான் என் மகன் அடிபட்டு ஆஸ்பத்திரியில இருந்தான். அவனோட மருத்துவச் செலவுக்காக எம் பொண்ணோட நகைகளை எல்லாம் வித்திட்டோம். அது தெரிஞ்ச மாப்பிள்ளை வீட்டுக்காரங்க, கல்யாணத்தை நிறுத்திட்டாங்க!" - என அவர் நிறுத்த தாமரைச் செல்வனின் முகம் வேதனையாய்ச் சுருங்கியது.

"முதல் கல்யாணம் நின்னதால எம்பொண்ணுக்குக் கல்யாண ராசி இல்லைன்னு எல்லோரும் பேச ஆரம்பிச் சிட்டாங்க. அதுக்கப்புறம் அவ கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கவும் இல்லை. அதனால அவ முடிவுதான் எங்க முடிவு!" - என்றார் தீர்மானமாய்.

"இந்தப் பிரச்சனைக்கெல்லாம் ஆணி வேர் எங்க வீட்டுப் பெண்தான். அதானல அதை யெல்லாம்



மறந்திடும்மா. எம்புள்ளய உனக்குப் பிடிச்சிருக்காம்மா?" - என்றாள் பத்மாவதி.

ரோஜா தயக்கமாய் நிமிர்ந்து ரகுவைப் பார்த்தாள். ஆவலும் பதட்டமுமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் ரகுராம். ரோஜா தொண்டையைச் செருமிக் கொண்டாள்.

"உங்களுக்கெல்லாம் என்னைப் பிடிச்சிருக்கு. ஆனா உங்க பிள்ளைக்கு என்னைப் பிடிச்சிருக்கான்னு தெரியாம நான் எப்படி?" - ரோஜா தயங்க, அவளருகே ஓடி வந்தான் ரகுராம்.

அவளது வலக்கரத்தை எடுத்துத் தன் இதயத்தில் வைத்துக் கொண்டான். "உன்னை இங்கே வைத்திருக் கிறேன் ரோஜா. என்னைப் பிடிக்கவில்லை என்று மட்டும் சொல்லிவிடாதே!" - என்றான் பரிதாபமாய்.

வெட்கமாய்க் கையை உருவிக் கொண்டாள் ரோஜா. அவனை நிமிர்ந்தும் பாராமல் ஒரு வெட்கப் புன்னகையைப் பதிலாக்கிவிட்டு வீட்டினுள் ஓடினாள்.

"ஏ, பொண்ணு சம்மதம் சொல்லிடுச்சு!" - ஆனந்த் உற்சாகமாய்க் குரல் கொடுக்க, அந்த உற்சாகம் அனை வரையும் தொற்றிக் கொண்டது.

"எனக்கு அப்பவே தெரியும். மாப்பிள்ளை ஸார், எங்க அக்காகிட்ட மாலையைக் கொடுத்திட்டுப் போயிட்டீங்களே, அது இன்னும் ரொம்ப பத்திரமா இருக்கு தெரியுமா?" - மல்லிகை ரகசியம்போலச் சொல்ல, ஆனந்த் சத்தமாய்ச் சிரித்தான்.

"ஹேய் ரகு, இது ஒரு கை ஓசையில்லை. ரெண்டு கை ஓசைதான். பி ஹேப்பி!" - என உற்சாகமாய்க் கை குலுக்கினான்.

"அது என்ன ஸார் ரெண்டு கை ஓசை?" - புரியாமல் கேட்டான் கிஷோர்.

"ஸாரி கிஷோர், இது எங்களுக்குள் பர்சனல்..." - எனக் கண்ணடித்துச் சிரிக்க, அனைவரும் மனம் நிறைந்து சிரித்தனர். அறை ஜன்னல் வழியே ரகுவைப் பார்த்த ரோஜாவின் முகம் வெட்கத்தால் சிகப்பு ரோஜாவாய் மாறியது.